# சுடர்

FILE




MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR MADRAS

மலர் 10

## தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாத ஐயர் மலர்

தில்லித் தமிழ்ச் சங்கம்

30

(1961)

# A joy to ride - to own a pride




It is smooth riding all the way, when you mount a **STEELSONS,** for every one of these superb cycles is thoroughly tested in our factory - to give you maximum pleasure a n d comfort.

**You ride safest of all on a STEELSONS because it is covered by a "FREE SERVICE GUARANTEE"**

# Steelsons

*India's Quality Bicycle*

**STEELSONS PRIVATE LTD., Govindpuri, Modinagar (U.P.)**

S/16

இந்த மலர்

கடலும் தீயும் கொண்டது போக எஞ்சி
யிருந்த தமிழ் இலக்கியப் புதையலைத்
தேடிப் பதிப்பித்து உலகுக் களித்த
பெருவள்ளல்

**டாக்டர் சாமிநாதையர் அவர்கள்**

நினைவுக்கு

தில்லித் தமிழ்ச் சங்கம்

1961

*With Best Compliments*

*of*

THE EAST ASIATIC CO.
(INDIA) PRIVATE LTD.

BOMBAY - CALCUTTA - MADRAS - NEW DELHI



" பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்குவாயே !"




டாக்டர் சர். கே. எஸ். கிருஷ்ணன்

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் ஒப்பற்ற தலைவராயிருந்து நிரப்ப முடியாத வெளியிடத்தை விட்டுச் சென்றவர் டாக்டர் கிருஷ்ணன். அவருக்குச் சங்கத்தின் அஞ்சலியை இக் கட்டுரை வாயிலாக முதற்கண் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர் குழு.

# எங்கள் தலைவர்

எஸ். ஸ்ரீநிவாசன்

'ஆம்பல் முகம் மலரவரும் வெண்ணிலாவே—உனக்கு
அம்புயம் செய் தீங்கெதுவோ வெண்ணிலாவே'

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடுகிறார். இதே போல் சூரியன் வந்தால் தாமரை மலர்வதாயும் அல்லி வாடுவதாயும் கவிஞர்கள் கூறுகிறார்கள்.

'அதிகாலை எழுகின்ற கதிரோன் தன் உறவால்
அலர்கின்ற மலர்போலப் புதுவாழ்வு பெறுவோம்'

என்று நம் நாமக்கல் கவிஞர் பாடுகிறாரே. அல்லி மலர் சந்திரனைக் கண்டு விரியும்; சூரியனைக் கண்டு கூம்பும்; தாமரையும் சூரியனைக் கண்டு மலரும்; சந்திரன் வந்தால் குவியும் என்று நம் நாட்டுக் கவிஞர்கள் பாடுகிறார்களே! இதில் விஞ்ஞான உண்மை எவ்வளவு இருக்கிறது?

*   *   *   *   *

இப்படிப்பட்ட கேள்வி ஒன்றைத்தான் நான் முதல் முதலில் உலகம் போற்றும் விஞ்ஞானியாகிய டாக்டர் கிருஷ்ணன் அவர்களைக் கேட்கத் துணிந்தது. அது சுமார் 15, 16 வருஷங்களுக்கு முன்னர்; கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தில்.

ஏதோ சாமர்த்தியமாகக் கேட்டுவிட்டதாகப் பெருமிதம் கொண்டிருந்தேன். ஆர அமரப் பதில் சொன்னார்: "பிரான்ஸ் நாட்டில் அகராதி எழுதுகின்றவர் ஒருவர் 'நண்டு' என்பதற்கு "பின்புறமாக நடக்கும் ஒரு சிறிய சிவந்த மீன்" என்று பொருள் எழுதியிருந்தார். இதில் திருப்தியடையாமல் ஒருவர் உயிர் நூல் புலவரான கூவியர் என்பவரிடம் 'சரிதானா இந்த அர்த்தம்'. என்று கேட்டார். அதற்குக் கூவியர் "அர்த்தம் நிரம்ப அழகாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் நண்டு மீனுமில்லை; அது பின்புறமாக நடக்கவும் முடியாது; வேகவைத்தால்

தான் சிவப்பாக இருக்கும் ; சிறியதாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமும் கிடையாது ! இந்தச் செய்திகளையெல்லாம் விட்டுவிட்டுப் பார்த்தால் அகராதியில் எழுதியிருக்கும் பொருள் முற்றிலும் சரியானதாகும் என்று சிரித்துக்கொண்டு கூறினர். அதேமாதிரி தான் இதுவும். அல்லி மலர் சந்திரன் வராமலும் விரியும், சூரியன் வந்தால் குவியாமலும் இருக்கும்" என்று யாவரும் ஸ்தம்பித்துப் போகும் வண்ணம் ஆடாமல் அசையாமல் போட்டாரே போடு.

"அப்படியானல் அல்லி இரவில் விரிவதற்கும் பகலில் குவிவதற்கும் காரணம்?"

"தட்பமும் வெப்பமும் தான் காரணம்" என்றார்.

இது மாத்திரமல்ல. இப்படி எத்தனையோ அறிவுச் சுடர்களைச் சிந்திய வண்ணம் எம்மிடைத் திகழ்ந்தவர் டாக்டர் சர். கே. எஸ். கிருஷ்ணன்.

* * * * *

ஆண்டாள் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூரை அடுத்த வற்றுயிருப்பு (வத்திராயிருப்பு) என்னும் சிற்றூரில் 1898-இல் ஸ்ரீகிருஷ்ணன் பிறந்தார். கரியமாணிக்கம் ஸ்ரீநிவாஸ கிருஷ்ணன் என்பது அவர் முழுப் பெயர். அவருடைய தந்தையார் வடமொழி தென் மொழிகளிலும், சமய நூல்களிலும் ஆழ்ந்த பயிற்சி உடையவர்.

அவர் இளமையில் வற்றுயிருப்பிலும், பின்னர் மதுரையிலும் கல்வி கற்றார். பின்னர், சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலையில் சேர்ந்து, பௌதிக நூல் நுட்பங்களை ஆவலோடு படித்துப் பட்டம் பெற்றார். வான நூலிலும் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. கலாசாலைப் படிப்பு முடிந்ததும், அதே இடத்தில் சோதனைச்சாலைப் பயிற்சிப் போதகராகவும், சிற்றுரை ஆசிரியராகவும் பணியாற்றினர். அங்கு சின்னுட்கள் தங்கி, பிறகு கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து எம். எஸ்.ஸி. பட்டம் பெற வேண்டுமென்று படித்து வந்தார். அவரது மனம் பௌதிகத் துறை ஆராய்ச்சியையே பெரிதும் நாடிச் சென்றதால் அந்தத் தேர்வில் அவர் பங்கு கொள்ளவில்லை.

கல்கத்தாவில் அப்போது நிறுவப்பட்டிருந்த இந்திய விஞ்ஞான வளர்ப்புப் பண்ணையில் டாக்டர் சி. வி. இராமன் தம் ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார். கிருஷ்ணனுடைய கூரிய அறிவையும் சலியா உழைப்பையும் கண்ட இராமன் அவரைத் தனது சீடராகவும், துணைவராகவும் ஏற்றுக்கொண்டார். அங்கு அவர் 1923-ஆம் ஆண்டு முதல் 1928-ஆம் ஆண்டு வரை எத்தனையோ ஆராய்ச்சிகளைச் செம்மையாகச் செய்து வந்தார்.

அக்காலத்தில் டாக்டர் இராமனுக்கு, 'ஒளி இயல்' (Optics), மூலக்கூற்றுப் பௌதிகம் (Molecular Physics) போன்ற

கூர்ந்த ஆராய்ச்சிகளில் உறுதுணையாக நின்றவர் ஸ்ரீகிருஷ்ணன். மூலக் கூறுகளால் ஏற்படும் ஒளிச் சிதறலையும் (Scattering of Light) எக்ஸ்-ரேயின் பற்பல வகையான பண்புகளையும், மூலக் கூறுகளும் பற்பல படிகங்களும் எல்லாத் திசைகளிலும் சம அளவுள்ள காந்தத் தன்மையை உடையவைகளாக இராமல், வெவ்வேறு திசைகளில் வெவ்வேறு அளவுள்ள காந்தத் தன்மைகளை உடையவைகளாக இருப்பதையும் (Magnetic Anisotrophy of Molecules and Crystals) இன்னும் இவை போன்றவற்றையும் அப்போது இராமனும் கிருஷ்ணனும் அந்த விஞ்ஞானப் பண்ணையில் ஆராய்ந்து வந்தார்கள். இவர்களுடைய நுண்ணறிவாலும் சலியா உழைப்பினாலும் விளைந்த விளைவுதான் உலகம் போற்றும் 'இராமன்-விளைவு' (Raman Effect) என்று இப்போது அறிஞர் உலகத்தில் உலவி வருவது.

விஞ்ஞானி ஸம்மர் பெல்டு என்னும் ஜெர்மானியார் ஒருவர் 1928-இல் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தாரின் அழைப்பின் பேரில், ஒளித் துகள் கொள்கையைப் (Quantum theory) பற்றிச் சில பேருரைகளை நிகழ்த்தினர். அவருடைய உரைகளுக்குக் கிருஷ்ணன் மிகவும் நுட்பமாகக் குறிப்பெடுத்து, தமது தனித் திறமையால் சிற்சில விளக்கங்களையும் அவற்றோடு இணைத்து, அந்தப் பல்கலைக் கழகத்தின் மூலம் உலகறிய வெளிப்படுத்தினர்.

1929-இல் கல்கத்தாவை விட்டு டாக்காவிலுள்ள பல்கலைக் கழகத்து ஆராய்ச்சி நிலையத்தில் சேர்ந்து தாமாகவே திட்டமிட்ட பல அரிய சோதனைகளை நடத்தி வந்தார். படிகத்தில் திசைக்குத் திசை வேறுபடும் காந்தத் தன்மைகளை மேன்மேலும் ஊன்றி ஆராய்ந்து பல அரிய உண்மைகளை வெளியிட்டார். இங்கிலாந்தில் உள்ள 'ராயல் சொசைட்டியின்' (Royal Society) வெளியீடுகளாக அவை வெளி வந்தன.

1933-இல் இராமன் கல்கத்தாவை விட்டுச் சென்றபின், அந்தச் சோதனைச் சாலையில் கிருஷ்ணன் நியமிக்கப்பட்டார். ஒளித் துறையிலும், வெப்பத் துறையிலும், காந்தத் துறையிலும் ஆராய்ச்சிகளை நிகழ்த்தினர். அரிய மண்கள் (Rare earths) எனப்படும் மூலகப் பொருள்களாலோ, அயம் (Iron) ஆகியவற்றாலோ அமைந்த உப்புக்களின் காந்த சக்திகளைக் கவனித்தார். தமது ஆராய்ச்சிகளின் முடிவுகளை விஞ்ஞானப் பத்திரிகைகளில் வெளியிட்டார்.

1937-இல் இங்கிலாந்திலுள்ள காவெண்டிஷ் சோதனைக் கூடத்திலும், அரசாங்க நிலையத்திலும், பின்னர், ஐரோப்பாவிலும் பிற நாடுகளிலும் விரிவுரைகளை நிகழ்த்தினர். 1940-இல் 'ராயல் சொசைட்டி' அங்கத்தினராகத் (F. R. S.–Fellow of the Royal Society) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1941-இல் சென்னைக்கு விஜயம் செய்தபோது 'பூமியின் வயது என்ன'; 'சூரியனின் அபார சக்தி' போன்ற விஷயங்களைக் குறித்துத் தமிழில், அரசாங்கக் கல்லூரியின் தமிழ்ப் பிரிவில் விரிவுரை நிகழ்த்தினர். அடுத்த ஆண்டில் (1942) அலஹாபாத் பல்கலைக் கழகத்தில் பௌதிகப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அங்கும் சிறந்த ஆராய்ச்சிகளையும் தெளிவான விரிவுரைகளையும் நிகழ்த்தி வந்தார்.

1947-இல் நம் நாடு சுதந்திரமடைந்தபோது நிறுவப்பட்ட தேசீய பௌதீகச் சோதனைக் கூடத்தில் (National Physical Laboratory) இயக்குநராக அவர் நியமிக்கப்பட்டார். ஸ்ரீராமனைக் கல்யாண குணங்கள் தேடி வந்தடைந்தனபோல், ஸ்ரீகிருஷ்ணனைப் பட்டம், பதவி, புகழ் இவை தேடி வந்தடைந்தன.

தமிழ் மொழியில் ஸ்ரீகிருஷ்ணனுக்கு இருந்து வந்த பற்று அளவில்லாதது. 1942 முதல் கல்கத்தா பாரதித் தமிழ்ச் சங்கத்தின் நிரந்தரத் தலைவராக அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டார். தில்லித் தமிழ்ச் சங்கமும் அவர் உள்ள வரை 'வேறொருவரைக் கைபிடிப்பதில்லை' என்று அவரைத் தன் தலைவராகக் கொண்டது.

கம்ப இராமாயணம், ஆழ்வார்களின் பாசுரங்கள், ஈடில்லா ஈடு, உபநிஷத்துக்கள் முதலியவற்றில் அவருக்கிருந்த ஈடுபாடு சொல்லும் தரமன்று. மிகவும் தெளிவாக, மெள்ள, அழகாக ஆனால் ஆணித்தரமாகக் கருத்துக்களைத் தெரிவிப்பதில் ஸ்ரீகிருஷ்ணனுக்கு இணை ஸ்ரீகிருஷ்ணன் தான். அவரது புலமை அவரது பேச்சுக்கு மணம் அளிக்கும்.

விஞ்ஞானத்தால் மட்டும் உலகப் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது என்று உணர்ந்தவர் அவர். சமயத்தையும் விஞ்ஞானத்தையும் இழைத்து, அறிவு உணர்ச்சி, தேச பக்தி, தெய்வ பக்தி ஆகியவற்றை ஒன்றாகப் பின்னிச் சிறந்த வாழ்க்கை நடத்திக் காட்டியவர். தமது உயர்வால் நாட்டை உயர்த்தியவர். அறிவு உயர உயர அடக்கம் மிகுந்து வரும் அரிய பண்பை உடையவர். 'பூர்வபாஷி—மிருதுபாஷி' என்ற இரு அருங் குணங்களையும் நாள்தோறும் பயில்பவர். விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் இரண்டையும் ஒன்றாக இணைத்துவந்த அபூர்வ ஞானி.

தில்லித் தமிழ்ச் சங்கம் தனது ஒப்பற்ற தலைவரை இழந்து நிற்கின்றது. இவரை யொப்பாரை 'எப்பிறப்பில் காண்போம் இனி'?

சுடர்

மலர் 10

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| தமிழ்த் தாத்தா மலர் | | ... 17 |
| நம் தமிழ்ச் சங்கம் | | ... 18 |
| ஏடு தேடிய கால்கள் | தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை | ... 19 |
| தியாகராச விலாசம் | க. சுப்பிரமணியன் | ... 21 |
| வாழ்க ! தமிழ்த் தாத்தா ! | ஏ. டி. என். இராமசாமி | ... 26 |
| தமிழ்ப் பாட்டனார் | தி. சா. ராஜு | ... 29 |
| தமிழ் வளர்த்த செம்மல் | வித்வான் சு. பாலசாரநாதன் | ... 33 |
| ஐயரவர்களிடம் நான் கேட்ட பாடம் | பெ. நா. அப்புஸ்வாமி | ... 37 |
| இரண்டு நிகழ்ச்சிகள் | கி. வா. ஜகந்நாதன் | ... 43 |
| ஐயரவர்களின் திருப்புகழ் சேவை | ஏ. வி. குப்புஸ்வாமி | ... 51 |
| ஐயரவர்களும் பிள்ளையவர்களும் | பாலகவி வயிநாகரம் திரு. வே. இராமநாதன் | ... 55 |
| பெரியோர்களுடன் பேட்டி | எஸ். நாகலக்ஷ்மி | ... 61 |
| தமிழ் காத்த செம்மல் | சொக்கு சுப்பிரமணியன் | ... 66 |
| வாழ்த்துச் செய்திகள் | | 67–74 |

## பொதுப் பகுதி


| | | பக்கம் |
|---|---|---|
| அருளவேண்டும் தாயே ! | இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் ... | 77 |
| சீடன் | மாயாவி ... | 79 |
| அமுதப்பாவை | சாலை இளந்திரையன் ... | 85 |
| தமிழின் சொல் வளம் | கி. ஆ. பெ. விசுவநாதம் ... | 87 |
| பாத்திரங்கள் ! | அவ்வை தி. க. சண்முகம் ... | 91 |
| காற்றுடி | வண்ணை முத்து ... | 94 |
| தமிழ் வளர்ந்து விட்டது ? | எம். எஸ்பி. சண்முகம் ... | 95 |
| பிறர் நன்மை பேணும் பெரியார்கள் | இராஜலெட்சுமி இராகவன் ... | 103 |
| பழி ஓரிடம் பாவம் ஓரிடம் | தி. மாணிக்கவாசகம் ... | 109 |
| வாழத் தெரிந்தவள் | 'பாலகி' ... | 113 |
| இயற்கை உணர்த்தும் பண்பாடு | பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் ... | 119 |
| ஜனநாயகியம்மன் தேர் உலா | திருலோக சீதாராம் ... | 125 |
| குற்றத்தின் நான்கு நிலைகள் | வி. செ. கந்தசாமி ... | 127 |
| ரட்சை | ராஜம் ராமச்சந்திரன் ... | 135 |
| பிரிவு | குமாரி. வி. சுந்தரி ... | 141 |
| நூல் நிலைய இயல் | ஸி. எஸ். கிருஷ்ணமூர்த்தி ... | 149 |
| தாரகபுர நாடகம் | "தூன்" ... | 153 |
| தேவாரப் பாடல்கள் | வி. ஆறுமுகம் பிள்ளை ... | 159 |
| இந்தியாவின் வண்ண நகரம் | கண்ணம்மா சர்மா ... | 165 |
| எனது கலை வாழ்க்கை | ஓவியமணி சி. கொண்டைய ராஜு ... | 169 |


சுடரில் காணும் கதை கட்டுரைகளுக்குள் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவைகள் யாரையும் குறிப்பிடுவன அல்ல. கட்டுரைகளில் தெரிவிக்கப் பட்டிருக்கும் கருத்துக்களும் அவற்றை எழுதியோரின் கருத்துக்களேயன்றிச் சங்கத்தின் கருத்துக்கள் அல்ல.


Edited and Published by Sri T. G. Anantaswami for
*The Delhi Tamil Sangam*, New Delhi.
Printed at Kabeer Printing Works, Triplicane, Madras-5.

# INDEX TO ADVERTISERS


| | Page |
|---|---|
| Ambal & Co. | ... 173 |
| Amrutanjan Ltd. | ... 89 |
| Anaimalai Bus Transport (Private) Ltd. | ... 124 |
| Arvind Laboratories | ... 122 |
| Arumugam Pillai, N. | ... 101 |
| Bajaj Electricals Ltd. | ... 175 |
| Balusserry Benefit Chit Fund (Private) Ltd. | ... 102 |
| Banaras Art House Pvt. Ltd. | ... 108 |
| Bapalal & Co. | ... 140 |
| Britannia Biscuits | ... 131 |
| Brooke Bond Tea | ... 84 |
| Buckingham & Carnatic Co., Ltd. | ... 25 |
| Central News Agency | ... 146 |
| Chakravarti, R. | ... 58 |
| Chennimalai Weavers' Co-operative Society Ltd. | ... 90 |
| Chokshi Bros. Private Ltd. | ... 147 |
| Coimbatore Pioneer Mills Ltd. | (Outer cover) |
| Devi Films Pvt. Ltd. | ... 132 |
| Dyer Meakin Breweries Ltd. | (3rd cover) |
| East Asiatic Co. (India) Private Ltd. | ... 2 |
| Fertilizers & Chemicals Travancore Ltd. | ... 158 |
| Global Chit Fund Private Ltd. | ... 173 |
| Gwalior Rayon Silk Mfg. (Wvg.) Co., Ltd. | ... 76 |
| Handlooms (Govt. of India) | ... 112 |
| Hindustan Lever | ... 117 |

| | Page |
|---|---|
| Imperial Tobacco Co. of India Ltd. ... | 133 |
| India Cements Ltd. ... | 174 |
| Indian Overseas Bank Ltd. ... | 134 |
| Iris Ink ... | 65 |
| Jay Engineering Works Ltd. ... | 27 |
| Kalaimagal ... | 148 |
| Khetarpal's Dental Clinic ... | 150 |
| Laljee Godhoo & Co. ... | 93 |
| Lifco ... | 152 |
| Madras Pencil Factory ... | 48 |
| Nalli Chinnaswamy Chetty & Co. ... | 164 |
| Northern Railway ... | 151 |
| Pandyan Insurance Co., Ltd. ... | 78 |
| Radhakrishna Jewellery ... | 20 |
| Ramanujam's ... | 163 |
| Somasundaram Chettiar & Co., A. S. S. M. ... | 118 |
| Steelsons Private Ltd. | (2nd cover) |
| Swarajya ... | 139 |
| Thiru Arooran Sugars Ltd. ... | 123 |
| T. I. Cycles of India ... | 163 |
| Vummidiars ... | 15 |

We thank all the Advertisers for their ready and generous assistance and wish them all success in their undertakings during the year.

—The Editor, "CHUDAR"

"சுடர்" ஆசிரியர் குழு:

பேராசிரியர் கே. சுவாமிநாதன்
திரு. பி. ஏ. கிருஷ்ணமூர்த்தி
வித்வான் பாலசாரநாதன்

பொறுப்பாசிரியர்:

திரு. எம். எஸ்பி. சண்முகம்

நிர்வாக ஆசிரியர்:

திரு. டி. ஜி. அனந்தஸ்வாமி

*

"சுடர்" விளம்பரக் குழு:

திரு. அ. வி. குப்புஸ்வாமி
திரு. எம். பாலசுப்பிரமணியம்
ஏ. என். நாகராஜன்

# சங்கப் பொறுப்பாளர்கள் 1961

★

தலைவர் (முன்னாள்) :

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

நிர்வாக உபதலைவர் :

திரு. கே. ஆறுமுகம்

உபதலைவர் :

டாக்டர் பா. நடராஜன்

செயலாளர் :

திரு. ஆர். எஸ். வெங்கடேசன்

இணைச் செயலாளர் :

திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி

பொருளாளர் :

திரு. லெ. இராமமுத்து

நூல் நிலைய நிர்வாகி :

திரு. சி. என். ரங்கநாதன்

செயற்குழு உறுப்பினர்கள் :

திரு. ஏ. என். நாகராஜன்
திரு. எஸ். ஸ்ரீநிவாசன்
திரு. அ. வி. குப்புஸ்வாமி
திரு. சாலை இளந்திரையன்
திரு. எம். எஸ்பி. சண்முகம்
திரு. எம். என். சுப்பிரமணியன்
திருமதி தர்மாம்பாள்

கணக்குத் தணிக்கையாளர்கள் :

திரு. டி. வி. நாராயணஸ்வாமி
திரு. என். கிருஷ்ணமூர்த்தி


"வைரங்களின் குணாதிசயங்களை அறியாத
வைரவியாபாரிகளை நம்பவே கூடாது
உம்மிடியாரின் கடைக்கு
போ. வைரங்களைப்பற்றி
அவர்களுக்கு தெரியாத
விஷயமே கிடையாது"
என்று என் அப்பா
அடிக்கடி கூறுவார்.
உம்மிடியார்
உம்மிடி ராமய்யா செட்டி
குருஸ்வாமி செட்டி அண்ட் கோ.
23 லிருந்து 25, என்.எஸ்.ஸி. போஸ் ரோடு, மதருஸ் 1,
கிளை: எல்.ஐ.ஸி. பில்டிங், மவுண்ட்ரோட், மதருஸ் 2.
VR 813



மகா வித்துவான், திராவிட வித்யாபூஷணம்,
மகா மகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

**(1855—1942)**

# தமிழ்த் தாத்தா மலர்

தில்லித் தமிழ்ச் சங்கம் தனது "சுடர்" பத்தாவது மலரைத் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் மலராக வெளி யிடுவதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறது. டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள் தமிழை வாழ்விக்கவென்று வந்து தோன்றிய வள்ளல் என்றால் அது மிகையாகாது. கடலாலும், தீயாலும், தீயவர்களாலும் கொள்ளப்பட்டது போக எஞ்சி நின்ற பண்டைத் தமிழ் இலக்கிய நூல்கள் எங்கெங்கோ செல்வர்கள் வீட்டுப் பரணிகளிலும், மூலை முடுக்கில் சிற்சில புலவர்கள் வீடுகளிலும் சுவடி வடிவில் ஒளித்துக் கிடந்தன. அவற்றைத் தேடிப் பிடித்து வெளிக் கொணர்ந்து அத்தனை இலக்கியங்களையும் அச்சேற்றி யாவரும் இன்று படித்து இன்புறும் வண்ணம் செய்த பெருமை ஐயர் அவர்களுடையதாகும். ஒரு பல்கலைக் கழகம் பல ஆண்டுகள் பெரும் பொருள் செலவு செய்து நிறைவேற்றக் கூடிய வேலையை அவர் ஒருவரே தனித்து நின்று பிரதிப் பயன் எதையும் கருதாமல் தமிழ்த் தொண்டு ஒன்றே குறிக் கோளாகக் கொண்டு செய்து முடித்திருக்கிறார். அப்பணியில் அவர் அடைந்த அல்லல்கள் பல. நடந்தும் ஊர்திகளில் ஊர்ந்தும் சென்ற தூரங்கள் மிகப்பல. விழித்தும், பசித்தும் சிந்தனையோடு தனித்தும் இருந்த நேரங்களும் அளவிட்டுரைக்க இயலாது. அப்படி ஐயர் அவர்கள் தமிழுக்குச் செய்த பெருந் தொண்டுக்கு நாம் கௌரவம் செய்ய நினைத்து இப்போது கொண்டுவரும் இந்தச் சிறு மலர் எவ்வகை யிலும் ஈடாகாது. எனினும் அவருடைய தொண்டினை மக்களுக்கு நினைவூட்டுவதற்கு மட்டுமாவது இது உதவும் என்று நம்புகிறோம்.

தமிழ்த் தாத்தா அவர்கள் தமிழுக்கு மனமுவந்து சேவை செய்தது போலவே அவர்களுடைய பேரர் திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் இந்த நினைவு மலர் அழகாக அச்சாகி வெளி வருவதற்கு எல்லா உதவிகளையும் செய்தார்கள். தமிழுக்குத் தொண்டு செய் வதையே ஐயர் அவர்கள் பரம்பரை, தம் குடிப்பண்பாகக் கொண்டு விட்டதென்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். இந்த உதவிக்காகக் தமிழ்ச் சங்கம் முதற்கண் அவருக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட் டிருக்கிறது.

மலர் சிறப்புற வெளிவர உள்ளூர் வெளியூர் அன்பர்கள் பலர் கட்டுரை, கதை, கவிதைகள் வழங்கி உதவினார்கள். அரசாங்கத் தினரும் வணிகத்துறைப் பெருமக்களும் தொழிலதிபர்கள் பலரும் விளம்பரங்கள் தந்தார்கள். இந்த விளம்பரங்களை விளம்பரக்

குழுவினரோடு சேர்ந்து திரு. எஸ். இராமசாமி, பால சுப்பிரமணியம் ஆகிய இருவரும் மிகுந்த முயற்சியும் ஊக்கமும் காட்டிச் சேகரித்துக் கொடுத்தார்கள். ஒப்பற்ற வண்ணங்களில் ஓவியந் தீட்டித் தென்னுட்டில் கலை வளர்ச்சிக்குப் பெருந் தொண்டு புரிந்து வரும் ஓவியர் மணி திரு. சி. கொண்டைய ராஜு அவர்கள் அழகான முகப்புப்படம் வரைந்து அளித்தார்கள். இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த திரு. ராஜ் அவர்கள் உள் பக்கச் சித்திரங்கள் சிலவற்றை எழுதினுர்கள். கபீர் அச்சகத்தினர் குறைந்த கால அளவில் நிறைந்த ஒத்துழைப்புக் காட்டி மலரை அழகாக அச்சிட்டுக் கொடுத்தார்கள். இவ்விதம் "சுடர் தமிழ்த் தாத்தா மலர்" வெற்றியுடன் வெளி வருவதற்குப் பலவகையாலும் துணை புரிந்த அனைவர்க்கும் உள்ளங் கலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## நம் தமிழ்ச் சங்கம்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தலைநகரில் தமிழ் அன்பர்கள் சிலரது முயற்சியால் தில்லித் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது; அது தோன்றிய நாள்முதல் தில்லிவாழ் தமிழ் மக்கள் தமிழின் பெருமையை உணரும் வகையில் பேரறிஞர்களைக் கொண்டு இலக்கியக் கூட்டங்களைக் கூட்டியும் பொங்கல் விழா, புத்தாண்டு விழா முதலிய விழாக்களையும் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியும் தமிழ்ப் பணியில் மேலோங்கிய தலைவர் பெருமக்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் வரவேற்பு முதலியன நடத்திப் பெருமைப் படுத்தியும் பல்லாற்ருனும் அரிய தொண்டுகள் செய்து நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

தமிழ்ச் சங்கம் செய்த தமிழ்ப் பணியில் வ. வெ. சு. ஐயரின் கம்ப ராமாயணம், திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் இரண்டையும் பதிப்பித்ததனைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். காலஞ் சென்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களின் பெயரால் நூல் நிலையம் ஒன்றைத் தமிழ்ச் சங்கம் நிறுவி நடத்தி வருகிறது. தில்லியில் வேறு எங்கும் இல்லாத அளவு எல்லாத் துறைகளிலும் தமிழ்ப் புத்தகங்களை இந்த நூல் நிலையம் கொண்டிருக்கிறது. ஆண்டுதோறும் "சுடர்" இலக்கிய ஏடும் வெளியிடப்பெற்று வருகிறது.

இந்தியத் தலைநகரில் இவ்விதம் தமிழ்த் தொண்டு புரிந்து வரும் தமிழ்ச் சங்கத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டிடம் வேண்டுமென்று அண்மையில் இவண் போந்த தருமையாதீனகர்த்தர் கயிலைக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நல்லாசி கூறி 1001 வெண் பொற்காசுகளும் வழங்கினுர்கள். இந்தியப் போக்குவரத்துத் துறை அமைச்சரும், தமிழ்ச் சங்கத்தின் பேராதரவாளர்களில் முதல்வருமான டாக்டர் ப. சுப்பராயன் அவர்களும் அதே போல ஒரு பெருந் தொகை வழங்கினுர்கள். இந்த இரு பெரியார்களது ஆசியும் விருப்பமும் நிறைவு பெற்றுத் தமிழ்ச் சங்கம் புதிய கட்டிடங் காணச் செய்யவேண்டிய பிறவற்றை விரைந்து உதவவேண்டியது தமிழ் அன்பர்களின் கடமையாகும். தலைநகரில் தமிழ்ப்பணி என்றும் இனிது நடந்துகொண்டிருக்கத் தமிழகத்திலும் வெளியிடங்களிலும் உள்ள தமிழன்பர்கள் உதவவேண்டுமென்று வேண்டுகோள்-விடுக்கின்றோம்.

—சுடர் ஆசிரியர் குழு

# ஏடு தேடிய கால்கள்

தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை

"தமிழ் நூல்கள் அழிந்து போகாமல் இருக்கத் தமிழ்க்கடவுளான முருகப்பெருமானுல் அனுப்பிவைக்கப் பெற்ற அவதார புருஷரே மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாத ஐயர்" என்கிருர் தணிகைமணி.

—ஆசிரியர்.

தமிழ்த் தெய்வமாகிய முருகக் கடவுள் முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவர்; அவர் தமிழ்க் கடவுள்; தமிழ்ப் புலவர்; தமிழ் விநோதர்; தமிழ்க்குரு; தமிழ்ப் பிரியர்; தமிழ்ப் பித்தர். தமிழில் இத்துணைச் சொந்தமும் ஆர்வமும் கொண்ட முருகப்பெருமான் ஓலை ஏட்டிலுள்ள அருமைச் சங்க நூலாகிய தமிழ் நூல்கள் அழிந்து போதலைக் கண்டு வாளா இருப்பாரா? இரார். அவரால் இருக்க முடியாது. அதனுல் அவர் என்செய்தாரெனின் ஓரருமைத் தமிழ்த் தவச் செல்வரைத் தமிழ் நாட்டிற்கு "நீ போய் எமக்கு விருப்புள தமிழ் நூல்கள் என்றும் நிலைபெறச் செய்யவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்" எனக்கட்டளையிட்டு இம்மண்ணுலகிற்கு, (தமிழ் நாட்டிற்கு) அனுப்பினுர். அத்தகைய ஆணையைப் பெற்று நம்மிடையே வந்த ஓர் அவதார புருஷரே மகா மகோபாத்யாய உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள். கடவுளின் ஆணையால் வந்தவராதலால் அவர் தமது இளம் பருவ முதல் இறுதிநாள் வரையில் தமிழ் ஓலைச் சுவடிகளைத் தேடுவதையும், போற்றுவதையும், ஆராய்வதையும், அச்சிட்டு வெளியிடுவதையும் தமது வாழ்நாட் குறிக்கோளாகக் கொண்டனர். கடவுளும், அக்குறிக்கோளை அவர் நன்கு முடிப்பதற்கு வேண்டிய பலவித உதவிகளையும் அப்போதைக்கப்போது தக்க சமயத்தில் தந்து, அவருக்கு நீண்ட ஆயுளையும் கொடுத்து உதவினுர். அன்றெழுந்த சங்க நூல் முதல் அண்மையில் எழுந்த பிரபந்த நூல் வகை வரை எண்ணில ஆய்ந்து அச்சிட்டு அவர் வெளியிட்டுள்ளார். இவைகளுள் திருப்பூவணவுலா எனது தந்தையார் விருப்பத்தின் படியும், திருக்கழுக்குன்ற உலா எனது தமையனுர் விருப்பத்தின்படியும், தணிகாசல புராணம், வில்லைப் புராணம் என்பன எனது விருப்பத்தின் படியும் வெளிவந்த நூல்களாம். நூல் மாத்திரமா அவர் வெளியிட்டார்? நூலிலுள்ள பாடல்களின் முதற்குறிப்பென்ன! அரும்பத வுரையென்ன! விசேடக் குறிப்பென்ன! நூற்கருத்தென்ன! ஒப்புமைப் பகுதியென்ன! எனப் பல திறத்த அநுபந்தக் குறிப்புகளையும் அவர் வெளியிட்ட ஒவ்வொரு நூலிலும்

காணலாகும். அத்தகைய குறிப்புக்கள் தமிழ் மாணவர்கட்கு உற்றுழி உதவும் அருநிதிச் சேமப்பொருளாய்த் திகழ்கின்றன. அதனாலன்றோ அவரைத் "தமிழ்த் தாத்தா" என்றும், அவர் அளித்த தமிழ்ப் பிச்சையே இப்பொழுதுள்ள புலவர்கட்கு அட்சய பாத்திரப் பிச்சையாய் விளங்குகிறதென்றும், செந்நெறிப் புலவர்கள் அவரை இன்றும் கொண்டாடுகின்றனர். இனியும் என்றுங் கொண்டாடுவர். அவரது புகழ் தமிழ் எல்லை தாண்டிக் கடல் கடந்தும் விளங்கிற்று. அவர் வெளியிட்ட சிலப்பதிகாரப் பதிப்பைக் கண்டு வெளிதேசத் தவருங்கூடப் பாராட்டியிருக்கின்றனர். ஐயரது இறுதி நாட்களில் அவர் படுத்த படுக்கையிலிருந்தபோது அடியேன் அவரைக் கண்டு தரிசிக்கும் பேறு பெற்றேன். அவர் எனது இரு கைகளையும் அணைத்து "சிவஸ்தல மஞ்சரிச் சிற்றுராய்ச்சி" எழுதின கையல்லவா இது" என்று கூறித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். அடியேனும் அவரது இருபாதங்களையும் எனது கையாற்றொட்டு "ஏடு தேடின கால்களல்லவா இவை" என்று கும்பிட்டு வணங்கி விடைபெற்று வந்தேன். அப்பெரியாரையும் அந்நிகழ்ச்சியையும் இன்று நினைத்தாலும் என் மனம் இன்பப் போதையடைகின்றது.

தண்ணார் இன்தமிழ்த் தாதாவின் புகழ்
என்றும் உலகில் நின்று நிலவுக.

---


OUR SEAL OF
'RK' GUARANTEED

PHONE NO.
2140

FOR GOLD JEWELS & SILVER WARES

*VISIT OR CONTACT*

**RADHAKRISHNA JEWELLERY**

BIG BAZAAR STREET, COIMBATORE

*Prop*: S. T. RADHAKRISHNAN

ORDERS FROM OUTSIDE-STATIONS ARE
EXECUTED PROMPTLY & CAREFULLY

# தியாகராாச விலாசம்

க. சுப்பிரமணியன், பி.ஏ.

ஐயர் அவர்கள் 'தமிழ்த் தாத்தா' ஆவதற்கு முன்பே அவர்களைத் தாத்தா என்று அழைக்கும் உறவும் உரிமையும் பெற்றவர் திரு. க. சுப்பிரமணியம் அவர்கள். தன்னுடைய தாத்தாவின் சிறப்பியல்புகளைப் பற்றி அவர் தரும் குறிப்புக்கள் ஐயர் அவர்களை நமக்கு நேரில் பார்ப்பதுபோல் அறிமுகப்படுத்துகின்றன.

—ஆசிரியர்.

"சூரிய மூலை" என்னும் கிராமத்தில் பிறந்த ஐயரவர்கள் சூரியனைப்போல் வாழ்க்கையில் விளங்கினுர்கள் என்பதற்கேற்ப, "சுடர்" ஆண்டு மலரை இவ்வாண்டில் அவர்கள் பெயரால் வெளியிட முன்வந்த தில்லித் தமிழ்ச் சங்கத்தாரின் கலாபிமானம் பாராட்டற்பாலது.

டாக்டர் ஐயரவர்கள் கும்பகோணம் காலேஜில் தமிழாசிரியராக இருந்து பின்னர் சென்னைக்கு மாற்றப்பட்டுச் சென்னை சேர்ந்தவுடன் குடிபுகுந்த இல்லத்தையே பின்பு விலைக்கு வாங்கினுர்களாம். அந்த இல்லத்திற்குத் தியாகராச விலாசம் என்று பெயரிட்டார்கள்—தமக்கு வேலை செய்து வைத்த ஸ்ரீதியாகராச செட்டியாரவர்கள் நினைவாக. அவர்களுக்கு அறுபது வயது நிரம்பிய பின்னரே நான் தியாகராச விலாசத்தில் பிறந்தேன். ஆதலின் எனது இளமைப் பருவத்தில் அவர்களுக்குச் சிறு பணிவிடைகள் செய்யும் பேறு பெற்றேன். குறிப்பறிந்து செய்வதையே அவர் பெரிதும் ரஸிப்பார். தமக்குத் தேவையான பொருளைச் சொல்லும் வழக்கம் அவரிடம் பெரும்பாலும் இல்லை. சொல்லிலும் செயலிலும் நிதானத்தையே அவரிடம் காண முடியும். எதிலும் குறைவைக் காணுமல் நிறைவையே கண்டார். இதனுல்தான் அவர்கள் வாழ்க்கை அமைதியாகவும் சிறப்பாகவும் விளங்கியது.

1922-ஆம் வருஷம் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு விஜயம் செய்தபொழுது, என் தாத்தாவுக்கு ஒரு தங்கத் தோடா (கில்லத்) வழங்கினுர். அப்பொழுது வேறு சிலருக்கும் பரிசுகள் வழங்கப் பெற்றன. மதுரையிலிருந்த திரு. நாராயண ஐயங்காரவர்களும் பரிசு பெற்றுர். கோச் (Coach)



சென்னை, திருவேட்டீசுவரன் பேட்டையிலுள்ள

டாக்டர் ஐயரவர்களின் இல்லமாகிய " தியாகராச விலாசம் "

வண்டியில் எனது பாட்டனுரவர்களுடன் ஸெனட் மண்டபத்தில் நடந்த பரிசளிப்பு விழாவுக்குப் போய் வந்த நினைவு வருகிறது. எனது 7-ஆவது பிராயத்தில் நடந்த நிகழ்ச்சி இது.

தியாகராச விலாசத்தின் மாடியிலேயே டாக்டர் ஐயரவர்கள் தமது தமிழ்ப் பதிப்பு வேலையை நடத்தி வந்தார்கள். காலையில் சந்தியாவந்தனம் செய்த பின்னர் தேவாரபாராயணம் செய்யும் ஐயரவர்கள் கையிலுள்ள பென்ஸிலால் தேவாரப் புத்தகத்தில் ஏதாவது அடையாளம் செய்து வருவார். ஒத்த கருத்து, பிரதிபேதம், பொருள் இவை சம்பந்தமான குறியீடுகள் அவருக்கும் உடன் பழகும் புலவர்களுக்குமே புரியும். பாராயணம், ஆராய்ச்சி இரண்டும் இவ்வகையில் இடம் பெறும். பதிப்பு சம்பந்தமான வேலைகள் சுமார் காலை 10 மணி வரை நடைபெறும். பின்னர் நீராடல், சிவபூஜை முதலியன நியமமாக நடத்துவார். தமது தந்தை

யாரவர்கள் சிவபூஜை செய்த தன் பலனே தம்முடைய நலனுக்குக் காரணம் என்று அடிக்கடி சொல்லி இன்புறுவார்கள். நிவேதனம் செய்த உணவையே அருந்துவார்கள். போஜனத்திற்குப் பின், பகலில் சுமார் அரை மணி ஓய்வெடுத்துக் கொள்வார். அந்தச் சமயத்தில்தான் சுதேசமித்திரன் பத்திரிகையைத் தம் மாணவர் மூலம் படிக்கச் செய்து செய்திகளறிவார்.

சில சமயங்களில் என் தமக்கைகளைப் பாடச் சொல்லிக் கேட்டு இன்புறுவதோடு திருத்தமாகப் பாடவேண்டிய விதத்தை இசையோடு கற்பிப்பார்கள். "சடையாயெனுமால்" என்ற தேவாரத்தை அடிக்கடி பாடச் சொல்லுவார். என் சகோதரிகளுக்கு இளமைக் காலத்தில், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்களைச் சில நாட்களில் போதிப்பதுண்டு. "அலர்மேலு" என்பதுதான் திருத்தமான பெயரென்று என் தமக்கையின் புத்தகத்தில் பெயரெழுதிக் கொடுத்தது நினைவுக்கு வருகிறது. 'டா,' 'டி' என்ற ஏகவசன விகுதிகளைக் கையாளாமல் சிறுவர்களை அவர் அழைக்கும் முறை விநோதமாக இருக்கும்.

பிற்பகலில் மாணவருக்குப் பாடம் சொல்லுவது வழக்கம். சுமார் இரண்டு மணி நேரம் நிதானமாகப் பாடம் நடைபெறும். வரும் கடிதங்களுக்குப் பதில் எழுதும் பணியைப் பெரும்பாலும் எனது தந்தையாரவர்களே கவனித்து வந்தார்கள். புத்தகங்களுக்கு அபிப்பிராயம் எழுதுவதையும் ஐயரவர்கள் கட்டளைப்படி என் தகப்பனாரவர்களே கவனித்து வருவார்கள். மாலையில் ஏதாவதொரு ஆலயத்திற்குச் செல்வது வழக்கம். மாணவரும் பாடபுத்தகத்துடன் உடன் செல்வார். நடந்து செல்லும் இடமாக இருந்தால், போகும் பொழுதுதிருப்பாடல்களை ஓதிக் கொண்டும், பொருள் விளக்கம் செய்து கொண்டும், மாணவருடன் சம்பாஷித்துக் கொண்டும் செல்வார்கள்.

தமிழாராய்ச்சி, மாணவர்களுக்குப் பாடம் சொல்லுதல் இவை இரண்டுமே அவருடைய வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றன. சந்தர்ப்பத்திற் கேற்பத் தமது இளமையனுபவங்கள், திருவாவடுதுறைக் காட்சிகள், பிள்ளையவர்களிடம் தாம் பாடம் கேட்ட முறை, பெரியோர்களிடம் பழக வேண்டிய முறை, மற்றவர்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியதை எவ்வண்ணம் தெரிந்து கொள்ளவேண்டும், என்ற வகையாக எதையும் நிதானமாகச் சொல்லி அறிவு புகட்டும் அவரது முறை மிக ஆச்சரியமாக இருக்கும்.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் மதுரையில் ஸ்ரீ டி.ஸி. சீனிவாச ஐயங்காரவர்கள் முயற்சியால் ஸர். சி. பி. இராமசாமி ஐயரவர்கள் தலைமையில் எனது பாட்டனாரவர்களுக்குப் பொற்கிழி அளிக்கப் பெற்றது. ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அவர்களால் "தாக்ஷிணாத்ய கலா



4596—2

நிதி '' என்ற பட்டம் வழங்கப் பெற்றமை முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1924 முதல் 1927 வரை மூன்ருண்டுகள் சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி தமிழ்க் கல்லூரித் தலைவராக ஐயரவர்கள் பணி புரிந்தார்கள். சிதம்பரத்தில் அவருக்கு ஒரு தனி வீடு அமைக்கப்பெற்றது. ஸ்ரீகோதண்டராமையர் என்ற மாணவர் ஐயரவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வந்தார். முதிர்ச்சியடைந்த ஒருவர் சமையல் வேலை செய்யும் பணியைப் பார்த்து வந்தார். அவருக்குச் சில பற்களேயிருந்தன. ஐயரவர்கள் அவரைப் பற்றிக் குறிப்பிடும்போது "நகையிலி" என்று ஹாஸ்யமாகச் சொல்லுவார்கள். உணவருந்தும் போதும் நிதானமாகச் சுவை பார்த்து அருந்துவார்கள். எப்படிச் செய்தால் பக்குவமாக அமையும் என்பதை மிகவும் பக்குவமாகச் சொல்லுவார். நன்ருக இல்லையென்று சொல்வதைவிட, இப்படிச் செய்தால் நன்ருக இருக்கும் என்று சொல்லி அறிவுறுத்துவதே அவர் கையாளும் முறை. மீனாட்சி தமிழ்க் காலேஜில் பணியாளனாக வேலை பார்த்த ஒருவன் பெயர் 'பரமசிவன்' என்பது. அவனைக் கூப்பிடும் போதெல்லாம் ஐயரவர்கள் இன்பமடைவார்கள். "நல்ல பெயர். பெயர் சொல்லியழைப்பதால் சொல்லுபவர்களுக்குப் பயனுண்டு. நீ நல்ல பிள்ளை" என்று அவனுடன் இனிமையாகப் பேசுவார். அதனால் ஐயரவர்களிடம் அவனுக்குப் பக்தி அதிகமாயிற்று. எந்தப் பணியையும் முகமலர்ச்சியுடன் செய்து வந்தான்.

புலவர்களிடத்தும், அன்பர்களிடத்தும், மாணவர்களிடத்தும், பணியாளர்களிடத்தும் மிக அன்புடன் பழகி வந்தமையாலேயே வாழ்க்கையில் ஐயரவர்கள் வெற்றி கண்டார்கள். இந்த அன்புமுறைக்குக் காரணமாக இருந்தது ஐயரவர்கள் இளமையில் பெற்ற பழக்கங்களேயாகும். அவருடைய ஆசிரியப் பெருந்தகையார் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தாம் கண்ட அனுபவங்கள், திருவாவடுதுறை ஆதீனத்தில் தாம் பெற்ற அனுபவங்கள் இவையனைத்தும், வாழ்க்கையில் உறுதுணையாக இருந்தன. அன்பும் அமைதியும் அவர் மேற்கொண்ட பணிகளை யெல்லாம் நன்கு நிறைவேற்றி வைத்தன.

ஐயரவர்கள் ஆராய்ச்சித் திறன், புலமை, பெற்ற சிறப்புக்கள், சிறப்பான பண்புகள் இவற்றைப் பற்றி எண்ணற்ற வகையில் எழுதலாம். அவர்கள் எழுதியுள்ள "என் சரித்திர"த்தின் மூலம் பல அரிய செய்திகள் தெரியவரும். சரித்திரம் முழுவதும் வெளிவரவில்லையே என்று அன்பர்கள் வருந்துகிருர்கள். பிற்பகுதியும் விரைவில் வெளிவரத் திருவருள் கூட்டுவிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.



# "So soft, so cool, so wonderful... I wish I could wear it myself"



SORRY, BUT BINNY'S snow-white Conqueror shirting and petal-smooth Consul satin drill are strictly for men. How distinguished and elegant they'll look on them! Both the fabrics are strong and last for years.

**CONSUL***
**-white satin drill**

**CONQUEROR***
**-fine poplin shirting**




*Buy your requirements of BINNY'S fabrics at controlled rates from authorised BINNY Stockists who display this sign board.*

* *'SANFORIZED'* Registered Trade Mark of CLUETT, PEABODY & CO. INC., U. S. A.

**THE BUCKINGHAM & CARNATIC COMPANY LIMITED**
A Subsidiary of BINNY & CO. (MADRAS) LTD.

JWT/BC/CC/1304a

# வாழ்க ! தமிழ்த் தாத்தா !

(ஏ. டி. என். இராமசாமி)

★

உணர்ச்சிதனை அறிவிக்க ஒலியேயாகி
உயிரான எழுத்தாகி உலகுதன்னில்
கணக்காகு(ம்) பல நூறு மொழிகள் தம்முள்
கருத்துடைய தமிழ் சிறந்த மொழியதாகும்
கணக்காயர் நூல்தொகுத்து வகுத்தமேலோர்
கருதுமொரு வரிசைதனில் வந்தசீலன்
வணக்கமுடன் தமிழ்த்தாய்க்குப் பணிபுரிந்த
வள்ளல்தமிழ்த் தாத்தாவை வாழ்த்துவோமே !

எழுத்தாணிக் கூரதனில் இருந்து ஏட்டில்
எழில்விளங்க மூவேந்தர் வளர்த்தசெல்வம்
பழுக்காத கல்மனத்தைக் கனியவைக்கும்
பண்புள்ள செந்தமிழைக் காக்கநாளும்
ஒழுங்காகச் சிற்றூர்கள் சென்றுசென்று
ஓய்வின்றி ஏடுகளைப் பொறுக்கி(ச்) சேர்த்து
வருங்கால மக்களுக்கு அச்சிலேற்றி
வகைசெய்த சாமிநாத வள்ளல்வாழ்க !

அவ்வைக்குச் சுட்டபழம் தந்தமைந்தன்
அவதரித்த தமிழ்நாட்டில் பிறந்தசெல்வன்
செவ்வையுடன் ஏடுகளை(த்) தேடும்போது
செகந்நாதன் சமைத்திட்டுக் குழைந்தசோறு
பவ்வியமாய் உண்டுதமிழ் இனிக்குதென்று
பலகாலும் சரிபார்த்து அரும்பதங்கள்
திவ்வியமாய் எழுதியுடன் அச்சிலேற்றித்
திருப்பணிகள் செய்ததமிழ்த் தாத்தாவாழ்க !




Why the new trend is
towards giving Sewing
Machines as gifts on festive occasions ?

**Is it because your family will cherish them and praise them ?**
Is it because your loved ones will admire, **love and live with them ?**

Precisely yes. And, what's more these are **symbols of plenty**, symbols of prosperity. Just the GIFTS for the **occasion**—
FOR YOUR FAMILY.

**And this year surprise your family with the new USHA STREAM LINED MODEL**—acclaimed in over forty foreign **countries for their elegant design and efficient performance.**

**Now being marketed for the first time in India.**

# USHA

**SEWING MACHINES**

JAY ENGINEERING WORKS LTD., CALCUTTA-31

JESM/79



டாக்டர் ஐயரவர்கள் தமிழ்ப் பணியில் ஈடுபட்டிருக்கும் காட்சி

# தமிழ்ப் பாட்டனர்

தி. சா. ராஜு

மஹா மஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் தம்முடைய ஆசிரியரான மஹாவித்து வான் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வரலாற்றை எழுதும்போது 'அன்னாருடைய பெயரைக் குறிப்பிடவே தயக்கமாக இருக் கிறது', என்று வரைகிறார். தமிழ்த் தாத்தாவைக் குறித்து எழுதப் புகும் எனக்கும் இந்தத் தயக்கம் தோன்றவே செய்கிறது. எத்தகைய உணர்ச்சி நிலையில் இருந்து அவர் அந்தச் சொற்களை எழுதியிருக்க வேண்டும் என்று புரிகிறது. எண்ணும்போதே பரவச உணர்ச்சியை ஊட்டும் ஒருவரைக் குறித்து அந்த உணர்ச்சிகள் சொல்லில் பிரதிபலிக்கும்படி எழுதிவிடுவது அவ்வளவு எளிதல்ல.

சமுதாய வரலாற்றை ஆராய்ந்து பார்த்தோமானால் ஒவ் வொரு காலத்திலும் சமூகம் தன்னுடைய நற்பண்புகளையும் இலக்கியக் கருவூலங்களையும் இழந்துவிடும் என்ற நிலைமை ஏற்படும்போதெல்லாம் அவற்றைக் காப்பாற்ற யாராவது ஒருவர் தோன்றிவிடுவார் என்பது தெரியவரும். சில சமயங்களில் அவ் வாறு நிகழாமல் போவதும் உண்டு. என்றாலும் பொதுவாக இதை உண்மை என்றே கொள்ளவேண்டும்.

தமிழ் மொழியின் தலைச்சங்க, இடைச்சங்க நூல்கள் குறித் தும், அவைகளை இயற்றிய ஆசிரியர்களின் வாழ்க்கையைக் குறித் தும் நமக்கு எதுவுமே தெரியவில்லை. தொன்மையான ஒரு பெருங்குடியின் வரலாறே நமக்குத் தெரியாமல் போய்விட்டது. தமிழிலே நாடக இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. நாடகத்துக்கு இலக்கணம் எழுதும் அளவிற்கு அந்தத் துறையில் வளர்ச்சி இருந்திருந்தும் மூல நாடகங்களைக் கடலும் கரையானும் அழித்துவிட்டன. நடிப்பு என்ற சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லான "மெய்ப்பாடு" என்பதே நமக்குப் புதிதாகத் தோன்றுகிறது.

கடைச்சங்க நூல்களில் ஒன்றான சிலப்பதிகாரம் பலகாலம் நாடகமாக நடிக்கப்பட்டு, அதில் தோற்றுவிக்கப்பட்ட நிகழ்ச்சி விசித்திரங்களும் பெயர் மாற்றங்களும் நாம் அறிந்தனவேயாம். கண்ணகி—கர்ணகி ஆனாள். அவள் பாண்டியனின் வயிற்றைக் கிழித்து அவன் குடலை மாலையாக அணிந்துகொள்ளும் காட்டு மிராண்டியாக ஆக்கப்பட்டாள். மாதவி—மாதகி—காதகி— பாதகி, என்று மோனையுடன் அழைக்கப்பட்டாள். கோவலன்— கோவிலன்; அவன் கழுத்தில் கழற்ற முடியாத மாலை ஒன்று விழும். 'மண்தேய்த்த புகழினான்' திருக்கடையூர் வீதிகளில் 'சாந்தினி சௌக்கின்' காலிகளைப்போல அலைவான்.

இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்ருல், பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் நூல்களை இயற்றியவர்களுக்கு ஒரு குறிக்கோள் இருந்தது. நூல்கள், மக்களை நல்வழிப்படுத்த வேண்டும், அவர்களைச் சிந்திக்கத் தூண்டி உள்ளத்தால் உயர்ந்தோர்களாக்க வேண்டும் என அவற்றை எழுதியவர்கள் விரும்பினர்கள். அவைகளைக் காசு கொடுத்து விலைக்கு வாங்க முடியாது. அத்தகைய நூல்கள் நமது சமுதாயத்தின் உயர் பண்பினை உலகுக்கு என்றென்றும் விளக்கும் கருவூலங்கள். அவைகளை மாற்றுவதோ, அல்லது அவற்றில் மலிவான கற்பனைகளைக் கலப்பதோ இழிதக்க செயல். அவைகளின் தூய தன்மையைக் காப்பது தமிழனின் கடமை.

இன்று தமிழ் நர்ட்டில் மொழிப்பற்று மிகுந்திருக்கிறது. தமிழன் தன் மொழியைக் குறித்தும் அதில் இருக்கும் இலக்கியங்களைப் பற்றியும் பெருமைப்படுகிருன். பற்பல வண்ண அட்டைகளுடன் கவர்ச்சிகரமான முறையில் அச்சாகியுள்ள அரிய நூல்கள் மலிவு விலைக்கு வெளிவருகின்றன. இதைக் குறித்து நாம் பெருமை கொள்ளலாம். கூடவே அந்த அரிய செயலை இன்று சாத்தியமாக்கித் தந்த டாக்டர் அவர்களையும் நினைவு கூர்ந்து கொள்ளுவது நலம்.

தமிழ் அறிவு புறக்கணிக்கப்பட்டு, ஏளனம் செய்யப்பட்டு, தமிழன் தமிழிலே பேசுவதையே அவமானமாகக் கருதிய ஒரு காலத்தில் பொருள் வசதி ஏதுமற்ற ஒரு எளிய கல்லூரித் தமிழ் ஆசிரியர் ஊரூராகத் திரிந்து ஏட்டுப் பிரதிகளைத் தேடிப்பெற்று, அவைகளில் பலவற்றை ஒப்பிட்டுப் பிழை திருத்தி, பாடபேதங்களைப் பரிசீலனை செய்தார். அவற்றில் இருந்த வழக்கொழிந்து போன சொற் பிரயோகங்களின் பொருளை அறிவதற்காகப் புத்த தரும நூல்களை ஆராய்ந்தார். சமண மதத்தினரை நாடினர். பலரைக் கெஞ்சி, வணங்கிப் பொருள் உதவி பெற்று அந்தத் தொன்மையான தமிழ் நூல்களுக்கு அச்சு வடிவம் கொடுத்தார். இவ்வளவு கடினமான உழைப்பை மேற்கொண்ட பிறகும் அந் நூல்கள் பிரசுரகர்த்தர்களிடமே உறங்கின. என்ருலும் அவைகள் அழியாத, மாருத உருவம் பெற்றுவிட்டதில் அவருக்குப் பெருமகிழ்ச்சி. எத்தனை இரவுகள் அச்சுப் பிரதிகளைச் சரிபார்த்து விட்டுச் சோர்வு மிகுதியினுல் அவைகளின் மேலேயே சாய்ந்து படுத்திருப்பார்? அச்சகத்திலேயே உறங்கியிருப்பார்?

இவ்வளவு பெருமுயற்சிகளை மேற்கொண்டு அந்த நூல்களைப் பதிப்பித்த பிறகு, 'சைவர் ஒருவர் சமண இலக்கியங்களைப் பதிப்பித்துப் பரப்புவது தகாது' என்று அவரை ஆரம்ப காலத்தில் ஆதரித்து வந்த ஆதீன மடங்கள் சீறின. அங்கே காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. ஐயரவர்கள் எல்லாவற்றையும் அமைதியுடன் சகித்துக் கொண்டார், தமிழ் மொழியின் மீதுள்ள பேரன்பு காரணமாக.

ஐயரவர்களின் வாழ்க்கையில் ஒரு முழுமையைக் காண்கிறோம். ‘இவன் தந்தை என்னோற்றான் கொல்’ என்று கருதக் கூடிய நன்மகன்; ஆசிரியர் மெச்சும் தலை மாணாக்கன்; அன்புடைய கணவர்; கண்டிப்பான தந்தை; மிகச் சிறந்த ஆசிரியர்; சீரிய நண்பர்; பிறரிடம் குறை காணாத பண்டிதர்; பாமரர்களுக்கும் விளங்கக்கூடிய முறையில் எழுதக் கூடிய எழுத்தாளர்; இசை வல்லுனர்; தனி வாழ்வில் சீலமும், ஒழுக்கமும் நிறைந்தவர்; தெய்வ பக்தர்; சுருங்கக் கூறின் குறையற்ற தமிழ் வடிவம். இத்தகைய பூரண மனிதராக இவர் ஆனதற்குக் காரணம் இவருடைய தமிழ்ப்பற்றும் நுண்ணுணர்வுமே ஆமோ?

டாக்டர் அவர்கள் தம் சுய சரிதையை ஒவ்வொரு கிழமையும் தவறாமல் தொடர்ச்சியாக எழுதி வந்தார். அவருடைய கதையை மட்டும் நாம் அதில் காணவில்லை. சற்றேறக்குறைய சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த சமுதாயத்தின் வரலாற்றை அங்குக் காண்கிறோம். அந்த மக்களின் எண்ணங்கள், அபிலாஷைகள், அந்நாளைய கிராமச் சூழ்நிலை எல்லாம் நிழற்படக் காட்சிகளைப்போல அழகான முறையில் அதில் காணக் கிடக்கின்றன. அந்தக் கட்டுரைகளில் சமுதாய சாரமும் மனிதாபிமான தத்துவமும் மிகுந்திருந்தன. பண்டிதர்கள் காயாமல் பாமரருக்கு விளங்கக்கூடிய வகையில் அவர் எழுதியுள்ள சிறுகதைகளும், நிகழ்ச்சிக் கோவைகளும், தமிழ் இலக்கியத்தில் நிரந்தரமாக இடம்பெறத் தக்கவை.

பேரறிஞர் ஒருவர் தம் நாளிலேயே, தாம் வாழ்ந்த சமுதாயத்தினராலேயே கௌரவிக்கப்படுவதென்பது மிகவும் அரிய செயல். அவர் அந்தப் பெரும்பேற்றை அடைந்தபோது அமரகவி பாரதியார் வாழ்ந்திருந்தார். அந்த நிகழ்ச்சியைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தார். அதைப் பாடலாகவும் இயற்றினார்.

அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி அறியாதார்
இன்றெம்மை ஆள்வாரேனும்
பன்னியசீர் மஹா மஹோபாத்தியா
யப் பதவி பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர் சாமிநா
தன்றனக்குப் புகழ்செய் வாரேல்
முன்னிவளப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்
இவன் பெருமை மொழியலாமோ?

தம்முடைய இனத்திற்கும், மொழிக்கும் வாழ்வளித்த பெரியோர்களைப் போற்றி நினைவு படுத்திக் கொள்வது மிகவும் சிறந்ததொரு செயல். அந்த நன்மரபை ஒட்டிப் பணிபுரியும் தலைநகரத் தமிழர்கள் வணக்கத்திற்குரியவர்கள்.

வாழ்க ஐயரவர்கள் திருநாமம், வளர்க அவர்கள் புகழ்!



ஐயரவர்களும் திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயரும்
விருந்தொன்றின்போது அளவளாவி நிற்கின்றனர்

# தமிழ் வளர்த்த செம்மல்

வித்வான் சு. பாலசாரநாதன்

இருபதாம் நூற்றுண்டிலே தமிழ்த் தாய்க்கு அரும் பெருந் தொண்டு செய்த புலவர்களில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் முதலிடம் பெறத்தக்கவராவார். ஐயரவர்கள் சிதறிக்கிடந்த சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய தமிழேடுகளை ஒன்று சேர்த்து அரும்பெரும் முயற்சியால் அச்சிட்டுப் புத்தக உருவில் என்றும் அழியாவண்ணம் செய்தார். அதற்காகத் தன் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு இடமாகச் சென்று அலைந்து ஓலைச் சுவடிகளைத் தேடியெடுத்து ஆராய்ச்சிசெய்து சிறந்தமுறையில் பதிப்பித்தார். இளமை முதற்கொண்டே தமிழார்வ மிகுதியினுல் தக்க ஆசிரியர்களிடம் சென்றுஐயந்திரிபறத் தமிழைக் கற்று மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் தலைசிறந்த முதன் மாணவராய் விளங்கினுர். ஆழ்ந்த அறிவும் சிறந்த ஆராய்ச்சி நோக்கும் அமையப் பெற்ற ஐயரவர்கள் நம் முன்னேர்கள் வைத்திருந்த தமிழ்ப்புதையலைத் தேடி நம்மிடையே இன்று நிலவிவரச் செய்தார்.

ஐயரவர்கள் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தியாகராசச் செட்டியாரின் முயற்சியால் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்றுப் பணி புரியுங்காலை, இராமசாமி முதலியாரவர்களால் தூண்டப் பெற்றுப் பழமையும் பெருமதிப்பும் உடைய தண்டமிழ் இலக்கியங்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய நூல்களை ஆராயலானுர். அக் காலத்தில் அவைகளின் ஏட்டுப் பிரதிகள்கூடச் சரியாகக் கிடைக்கவில்லை. பல இடங்களில் தேடி அலைந்து படித்துப் பாட பேதங்களையுணர்ந்து வரலானுர். சிந்தாமணி ஜைன நூலானதால் அம் மத சம்பந்தமான விஷயங்களையும், சம்பிரதாயங்களையும் விருப்பத்துடன் அறிந்துகொண்டு சிந்தாமணியை ஆராய்ச்சி செய்தார். செந்தமிழ்க் காவியங்களுக்கெல்லாம் மூலாதாரமான சிந்தாமணியைச் சிறந்த முறையில் வெளியிட வேண்டும் என்ற இராமசாமி முதலியார் அவர்களின் கோரிக்கைக்கிணங்கி அதனை ஆராயலானுர். இடைவிடா முயற்சியின் பயனுகச் சிந்தாமணியைப் பல கனவான்களின் பொருளுதவி கொண்டு 1886-ஆம் ஆண்டு அழகிய முறையில் பதிப்பித்துத் தமிழுலகிற்கு ஈந்தார். தமிழ்த்தாய்தன் புதல்வன் அளித்த சிந்தாமணியை அணிந்து மகிழ்ந்தாள்.

சிந்தாமணி பதிப்பிற்குப் பிறகு ஐயரவர்கள் பத்துப் பாட்டை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினுர்கள். பல இடை யூறுகளின் நடுவே அதன் ஏட் டுப் பிரதிகளைத் தேடி அலைந்து கண்டுபிடித்தார். ஏட்டுப் பிரதி களெல்லாம் இராமபாணப்பூச்சி களால் அரிக்கப்பட்டு இருந் தன. சுவடிகளைத் தேடப்போன இடத்தில் ஒருவர் சுவடிகளை யெல்லாம் ஆடிமாதம் பதினெட் டாந்தேதி வாய்க்காலில் போட்டு விட்டேன் என்று பெருமை யோடு சொன்னுர். அவ்விஷ யத்தைக் கேட்டதும் ஐயரவர் களின் மனம் சுருங்கியது. இங் ஙனம் அழிந்த ஏடுகள் கணக் கிலடங்கா. சில இடங்களில் தமிழ்ச் சுவையை எலிகளும், பாச்சைகளும் உண்டு களித் தன. ஐயரவர்கள் மிக்க சிரமத் துடன் அவைகளையெல்லாம் வைத்துக் கொண்டு ஆராய்ந்து திருத்தமான முறையில் 1889-ஆம் ஆண்டு, பத்துப்பாட் டைப் பதிப்பித்தார். ஐயரவர் களுடைய பதிப்பு முறைக்கு ஒப்புமை கூற வேண்டுமெனின் ஐயரவர்களையே கூற வேண்டு மேயன்றி வேறு ஒருவரை யும் ஒப்புமை கூற இயலாது. அவர் அமைத்திருக்கும் முக வுரையிலிருந்து நூலைப்பற்றி நன்கு அறிந்து கொள்ளலாம்.

பின்னர் தமிழன்னையின் உயிர்நாடியாக விளங்கும் சிலப் பதிகார ஆராய்ச்சியைத் துவங் கினுர். அதனை ஆராய்வதில் ஐயரவர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டது. ஹிருதயாலய மரு தப்பத் தேவர் ஐயரவர்களை உபசரித்துத் தனக்குள்ள தமிழ் ஆர்வத்தை வெளிப்படுத்தி அதற்கான உதவிகளைச் செய்ய இசைந்தார். சிலப்பதிகாரம் அரிய சரித்திரச் செய்திகளைத் தன்னகத்தே கொண்டது. பண் டைத் தமிழின் கலைப்பரப்பின் சிறப்பையும், பண்டைத் தமிழ் நாட்டின் இயல்பையும் அறிவ தற்குச் சிலப்பதிகாரம் இன்றி யமையாததாக இருந்தது. இந் நூல் எல்லோருடைய கவனத் தையும் தன்னகத்தே இழுத்துக் கொண்டது. சில அன்பர்களின் தூண்டுதலினுல் தனக்குக் கிடைத்த ஒரு பிரதியை வைத் துக்கொண்டு நன்கு பரிசோ தித்து 1892ஆம் வருஷத்தில் வெளிப்படுத்தினுர்.

தமிழாபரணங்களை அணிந்து மகிழ்வெய்திய அன் னைக்கு மேலும் ஒப்பனை செய் வதற்குப் புறநானூற்றை எடுத்துக் கொண்டார். சங்க கால நூலாகிய புறநானூற்றை ஆராய்வது எளிதல்ல. சங்க காலத்து மரபையும், புலவர் களின் வரலாற்றையும் அறியப் புகுவது மிகவும் கடினம். ஐய ரவர்கள் புறநானூற்றைப் புதுப் புது முறையிலே பதிப்பிக்க வேண்டும் என்று நினைத்து அதற்கு வேண்டிய ஆயத்தங் களைச் செய்து கொண்டார். தந்தையார் குடும்ப சம்பந்த மான எந்தப் பொறுப்பையும் ஐயரவர்களுக்குக் கொடுக்க வில்லை. எக் கவலையுமின்றி மெய்வருத்தம் பாராமல், தமிழ்ப் பணியே தலையாய பணியாகக் கொண்டு மேன் மேலும் தமிழிலக்கியங்களில் உலவி அதன் சுவையைப் பருகி ஆனந்தித்துப் பிறருக்

கும் அவ்வானந்தத்தை அடைவித்தார். தமிழானந்தம் பெற்ற தமிழ்ப் பேரன்பர்கள் அவரை மேன்மேலும் ஊக்குவித்துக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு நூலிலும் ஐயரவர்கள் தந்திருக்கும் முகவுரை, அரும்பதவுரை, மேற்கோள் அகராதி, புலவர் புரவலர்களின் வரலாறுகள் மிகவும் போற்றற்குரியவை. தற்காலத்தில் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு ஐயரவர்களுடைய பதிப்புக்கள் வழி காட்டியாக இருக்கின்றன. அவர் தான் அடைந்த துன்பம் தமக்குப் பின்வரும் தமிழன்பர்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகப் பாட பேதங்களை அவ்வப்படியே எடுத்துத் தெளிவாக விளக்கியுள்ளார். ஆராய்ச்சி செய்து தெளிவுறாத விஷயங்களைத் தனக்குப் பின் வரும் தமிழ்ப்பற்று மிக்கோர் தெளிவுறச் செய்யலாம் என்ற எண்ணத்துடன் சுவடிகளில் ஆங்காங்கு விடப்பட்டுள்ளவற்றை அப்படியே பதிப்பித்துள்ளார். இப்பொழுது தமிழுக்குத் தொண்டு செய்வதாகச் சொல்கின்றவர்கள் ஐயரவர்கள் பதிப்பில் விடப்பட்டுள்ளதைக் கண்டு பிடிக்காமல் அப்படியே பதிப்பிக்கின்றனர்.

ஐயரவர்கள் உலாக்கள், பிள்ளைத் தமிழ், புறப்பொருள் வெண்பா மாலை போன்ற பல நூல்களைப் பழமை போற்றும் பண்பு கொண்டு அச்சிற்பதிப்பித்து என்றும் அழியா வண்ணம் செய்தார். எம் மதத்தையும் நன்மதமெனக் கொண்டு அதில் பொதிந்துள்ள உண்மைகளையும், கருத்துக்களையும் வரவேற்றார். ஜைனமதம் 'பவ்ய ஜீவன்' என்றும், பௌத்த மதம் 'பௌத்த சமய பிரபந்தப் பிரவர்த்தனாசாரியார்' என்றும் ஐயரவர்களுக்குப் பட்டப்பெயர்களை வழங்கின.

இத்தகைய சிறப்புக்களைப் பெற்றும் ஐயரவர்களிடையே எளிய சுபாவமே மேலோங்கி விளங்கியது. இடையறாத கடவுள் பக்தியும் கொண்டு விளங்கினார். தாய் தந்தையரிடம் சிறந்த மதிப்பும் பக்தியும் கொண்டு வாழ்ந்தார். அவருடைய உரைநடை நூல்கள் எளிய நடையைக் கொண்டு மிளிர்கின்றன. அடுக்குத் தொடரிலே பொருளில்லாத சொன்மாரிகள் பொழிய அவர் விரும்பியதில்லை. சிறு குழந்தைக்கும் விளங்கும்படியாக இனிக்க இனிக்க நகைச்சுவை ஒழுக எழுதுவதில் விருப்பம் கொண்டவர். அத்தகைய தமிழ் வளர்த்த செம்மலின் சந்ததியார் இன்றும் அவருடைய தமிழ்ச் செல்வங்களைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். அவர் பதிப்பித்தவைகளை மேன்மேலும் பதிப்பித்து எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்து வருகின்றனர். ஐயரவர்களுடைய பெயர் தமிழ்மொழி உள்ளவரை அழியாப் பெருமை பெற்று மங்காப் புகழ் கொண்டு விளங்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.



உத்தமதானபுரத்திலுள்ள ஐயரவர்களுடைய இல்லம்.
அவர் தாயாரின் பெயரால் "சரஸ்வதி விலாசம்"
என வழங்கப் பெற்று வருகிறது.

# ஐயரவர்களிடம் நான் கேட்ட பாடம்

பெ. நா. அப்புஸ்வாமி

"இலக்கியங்களை ஆராயும்போது இக்காலத்தில் நிலவும் கொள்கைகளுக்கு இணங்கப் பொருள் கொள்ளலாகாது. பழைய பொருளைத் தேடிக்காண்பதே நல்லது என்பது ஐயர் அவர்களின் அழுத்தமான கொள்கை......."

பிறப்பால் மட்டும் அன்றிச் சூழ்நிலையாலும் ஒருவனுடைய வாழ்க்கை அமைந்தும் மாறியும் வருகிறது என்பது உயிரியல் விஞ்ஞானிகள் கூறும் ஓர் உண்மை. இதன் உண்மையை ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் காணலாம்.

சுவாமிநாதையரவர்கள், 1907ஆம் ஆண்டிலும் பின்பும், சென்னை அரசாங்கக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த காலத்தில், நான் அங்கு ஒரு மாணவனாக இருந்தேன். ஆனால், வடமொழியை இரண்டாவது மொழியாக நான் எடுத்துக் கொண்டிருந்தபடியால், ஐயரவர்களிடம் பாடம் கேட்கும் வாய்ப்பு எனக்கு அப்போது இல்லை. ஆயினும், சிற்சில வேளைகளில் அவர்கள் நடத்தும் வகுப்புக்கு வெளியில் நின்றுகொண்டு, அவர்கள் தமிழைக் கற்பிப்பதையும், தமிழ்ப் பாடல்களை இசையோடும் கருத்து விளங்குமாறும் படிக்கச் செய்வதையும், ஆவலோடு கேட்டதுண்டு. கா. சுப்பிரமணிய பிள்ளையும், ஜனாப் தாவுத் ஷாவும் என் வகுப்பில் உடன் படித்தவர்கள் ; எனது நெருங்கிய நண்பர்கள். தங்கள் தமிழ் வகுப்பில் நடக்கும் சுவையான நிகழ்ச்சிகளை அவர்கள் என்னிடம் அடிக்கடி சொல்லுவார்கள். இன்ன இன்ன நயங்களை ஐயரவர்கள் இன்ன இன்னவாறு விளக்கினார்கள் என்பார்கள். தாங்கள் வகுப்பில் எழுதிய கட்டுரைகளையும், அவற்றில் ஐயரவர்கள் செய்துள்ள திருத்தங்களையும் காட்டு

வார்கள். ஆகையால், நானும் ஐயரவர்களின் இரண்டாம்படி மாணவனாக என்னைக் கருதி வந்தேன்.

ஒரு சில காலத்திற்குப்பின், தமிழர்நேசன், கலைமகள் என்னும் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் இருந்ததும், ஆனந்த விகடன் ஆசிரியர்களோடு நட்புக் கொண்டிருந்ததும், தமிழ் அன்பர் மாநாடு, சுதேசமித்திரன் பொன்விழா, சுவாமிநாத ஐயரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா முதலியவற்றின் காரியதரிசியாக இருந்ததும், தமிழ் அகராதியின் நிர்வாகக் குழுத் தலைவர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரோடும் அதன் ஆசிரியர் வையாபுரிப் பிள்ளையோடும் நெருங்கிய நட்பும் தொடர்பும் கொண்டிருந்ததும், என் திறமையைப்பற்றிச் சிறிதும் எண்ணாமல் தமிழ் இலக்கியச் செல்வங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டும் என்னும் பேரவாக் கொண்டதும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் பாடவிதிப்புக் கழகத்தின் உறுப்பினனாக இருந்ததும், ஐயரவர்களைக் காணவும் அவர்களோடு நெருங்கிப் பழகவும் பல வாய்ப்புக்களை எனக்கு அளித்தன. அப்போது ஒரு முறை அவர்களிடம் சென்று ஒருவகையாகப் 'பாடம் கேட்கவும்' நேர்ந்தது. ஐயரவர்கள் தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதிலும், அவற்றுக்குப் பொருள் காணுவதிலும், பின்பற்றி வந்த நேர்மை நெறியை அந்த நிகழ்ச்சி விளக்குவதாக உள்ளது.

* * * *

கோப்பெருஞ் சோழன் உறையூர் என்னும் தலைநகரிலிருந்து ஆண்டுவந்த ஒரு சோழ மன்னன். கல்வி கேள்விகளில் சிறந்தவன். புலவர்களை ஆதரித்தவன். புலவர்களுடைய நட்புக்கு உரியவனாகி, அவர்களால் தம் உயிரைப்போல் மதிக்கப்பட்டவன். ஒரு சமயம் அவனுக்கும் அவனுடைய மக்களுக்கும் இடையே மனவேற்றுமை உண்டாயிற்று. வேற்றுமை பகையாக முதிர்ந்தது. இரு திறத்தாரும் போரிட முற்பட்டார்கள். குடும்பப் பகையே அன்னியப் பகையினும் மிகக் கொடிது.

அப்போது அரசனது சபையைச் சார்ந்த புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர், அவனை நோக்கி, 'அரசனே, நீ யாரோடு போர் செய்ய எண்ணியிருக்கிறாய் என்பதை நினைத்துப் பார். அவர்கள் சேரரும் அல்லர், பாண்டியரும் அல்லர். உனக்கும் அவருக்கும் எவ்விதப் பகைமையும் இல்லை. உனக்குப் பின் அரசு பெற வேண்டியவர்கள் அல்லவா அவர்கள்? அவர்கள் தோற்றால் உன் அரசை யாருக்குக் கொடுக்கப் போகிறாய்? நீ தோற்றாலோ உன் பகைவர்கள் உன்னை இகழ்வார்கள். ஆதலால் உடனே போரை நிறுத்து. நற்செயலைத் தெரிந்து செய்ய விரைந்து முற்படு' என்று விளக்கி, அறிவுரை கூறினார்.

அதைக் கேட்ட அரசன் பின்னர்ச் சொல்லியதாக அடுத்த பாட்டு (புறநானூறு : 214) அமைந்திருக்கிறது. அது வருமாறு :

‘ செய்குவம் கொல்லோ, நல்வினை ?’ எனவே
ஐயம் அறாஅர், கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே ;
யானை வேட்டுவன் யானையும் பெறுமே ;
குறும்பூழ் வேட்டுவன் வறுங் கையும் வருமே ;
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசினோர்க்கு,
செய்வினை மருங்கின் எய்தல் உண்டு எனின்,
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும் ;
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்எனின்,
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும் ;
மாறிப் பிறவார் ஆயினும், இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம்இசை நட்டு,
தீதுஇல் யாக்கையொடு மாய்தல் தவத் தலையே.’

இதன் பொருள் சுருக்கமாக வருமாறு: ‘தம் மனத்தில் தெளிவு இல்லாமல் இருப்பவர்களே நாம் நற்செயலைச் செய்வோமா, வேண்டாமா என்று ஐயப்படுவார்கள். யானையை நாடினால் அது கிடைத்தாலும் கிடைக்கும். சிறு பறவையை நாடினால் அதுவும் கிடைக்காமல் போய்விடலாம். (ஆதலால் உயர்ந்த நோக்கம் கொள்ளவேண்டும் என்பது கருத்து). மேலும், உயர்ந்த நோக்கம் உடைய மேலோர்கள், தங்களுடைய நற்செயல்களின் பயனாக, சுவர்க்க லோகத்தில் இனிமையாக வாழ்வார்கள். அப்படி ஒரு வாழ்வே கிடையாது என்றால், மறு பிறப்பில் அவர்கள் இன்மை பெறுவார்கள். மறு பிறப்பு என்பதே இல்லை என்றால், இப் பிறப்பில் அவர்கள் மிக உயர்ந்த புகழைப் பெறுவார்கள்.’

இந்தப் பாட்டை மொழி பெயர்க்க முயன்றபோது, ஒவ்வொரு சொல்லின் பொருளையும் பொருத்தத்தையும் நன்கு தெரிந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தப் பாட்டில் வரும் ஒரு சொல்லின் பொருளும், ஒரு வரியின் பொருத்தமும் எனக்கு விளங்கவில்லை. ‘இன்மை’ என்பது அந்தச் சொல்; ‘மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்’ என்பது அந்தவரி. அதற்குப் பழைய உரையாசிரியர் ‘மாறிப் பிறத்தலிலே கூடும் பிறப்பின் கண் இன்மை எய்தலும் கூடும்’ என்று பொருள் கூறியிருக்கிறார். அதில் ‘இன்மை என்ற சொல்லை விளக்க வில்லை. ‘இன்மை’ என்ற சொல்லுக்கு ‘இல்லாமை’, ‘வறுமை’ என்பவை பொருள்கள். ‘ஒருவன் நற்செயலைப் புரிந்தால் மறு பிறப்பில் அவன் ஏழையாக இருப்பான்’ என்று சொல்வது இடத்துக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை.

ஆகவே, நான் ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், மதுரை திரு நாராயணையங்கார், வையாபுரிப் பிள்ளை முதலிய நண்பர்களைக் கேட்டேன். அவர்களும் ஊன்றிப் பார்த்து, 'பொருள் நன்கு அமையவில்லை' என்றார்கள். ஒருநாள் சுவாமிநாத ஐயரவர்களிடம் சென்று, பாட்டைக் குறிப்பிட்டுப் பொருள் தெளிய வந்தேன் என்று சொன்னேன்.

எனது நண்பர்களில் சிலர் பழைய பாட்டுகளுக்குப் புதிய பொருளைப் புகுத்த முயலுகிறார்கள் என்பது ஐயரவர்களின் எண்ணம். 'பாட்டு இயற்றப்பட்ட காலத்தில் உள்ள சூழ்நிலை, அப்போது உலவிய கருத்துக்கள், பாடிய புலவரின் கொள்கைகள், முதலியவற்றையும், அப்புலவர்கள் வாழ்ந்த காலத்துக்கு நம்மைக் காட்டிலும் நெருங்கியவர்களான உரையாசிரியர்களின் விளக்கங்களையும், தீரத் தெரிந்து கொள்ளாமல், இக்காலத்தில் நிலவும் கொள்கைகளுக்கு இணங்கப் பொருள் கொள்ளலாகாது. பழைய பொருளைத் தேடிக் காணுவதே நல்லது' என்று எச்சரிக்கை செய்தார்கள். "புறநானூறு ஒரு சிறந்த தொகுப்பு. ஆதலால், மிகச் சிறந்த பாடல்களே அதில் இடம் பெற உரியவை; இடம் பெற்றிருப்பவை. நற்செயல் செய்வதால் உண்டாகும் விளைவுகளைக் குறிப்பிடும் இந்தப் பாடலை ஊன்றிப் பார்க்க வேண்டும்" என்றார்கள். அன்று படிப்படியாக, அவர்கள் கேட்கக் கேட்க, நான் விடை சொல்லி வந்த விவரங்களைக் குறித்தால் பெருகும். ஆதலால், நிகழ்ந்ததைச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

'இது பொறுக்கி எடுத்த பாட்டாக உள்ளது என்ற நம்பிக்கையினால்தான் எனக்குச் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. அரசன் நற்செயல்களின் விளைவுகளாக இருக்கக்கூடியவை இன்ன என்று வரிசைப் படுத்திக் கூறுவதாகப் பாட்டு அமைந்திருக்கிறது. இறந்தபின் சுவர்க்க போகம், அல்லது மறு பிறப்பில் இனிய வாழ்க்கை, அல்லது இப் பிறப்பில் பெரும் புகழ்—என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும். மறு பிறப்பில் 'இன்மை' அதாவது "வறுமை" கிடைக்கும் என்று கூறுவது நற்செயலைத் தூண்டச் செய்வது அன்று. அது பொருத்தமாக இல்லை. மறு பிறப்பே இல்லை என்று பொருள் சொல்லவோ வழி இல்லை. முதலாவதாக, பழைய உரையாசிரியர் "மாறிப் பிறத்தலிலே கூடும் பிறப்பின்கண்" என்று இருமுறை ஏழாம் வேற்றுமைப் பொருளை அழுத்திக் கூறுகிறார். ஆகையால், "மறு பிறப்பினுடைய இன்மை" என்றும் ஆறும் வேற்றுமைப் பொருளைக் கொள்ள இடம் இல்லை. இரண்டாவதாக, அப்படிப்பட்ட மோட்சப் பொருளை அது குறிப்பதாயிருந்தால், மோட்சம் சுவர்க்க போகத்துக்கும் மேலானது; ஆகையால் அதையே முதலில் கூறியிருக்க வேண்டும். ஆதலால், "இன்மை" என்பதற்கு வேறு ஏதேனும் பொருள் உண்டா என்று தேடினேன். பொறுத்தமான பொருள் காண முடியவில்லை. ஒருசில ஆசிரியர்கள்

அந்தப் பாடத்தை அப்படியே வைத்துக் கொண்டு, "இன்மை" என்பது "இனிமை" என்று இருப்பதுபோல் பொருள் கொண்டிருக்கிருர்கள்.

"ஐயமுடையோனுக்கு இவ் உலகும் இல்லை; மேல் உலகும் இல்லை; இன்பமும் இல்லை என்று பகவத் கீதையில் கூறியது இதற்குப் பொருத்தமாயிருக்கிறது" என்றேன்.

அதுவரை ஐயத்தோடு கேட்டுவந்த ஐயரவர்கள் நான் சொல்வதில் ஏதோ இருப்பதாக எண்ணிஞர்கள். ஆதலால் நான் தொடர்ந்து, 'இன்மை என்பதற்கு வேறு பொருள் உண்டா? இங்கு இனிமை என்ற பாடம் பொருந்துமா? அது எழுதுவோரின் பிழையாக இருக்கலாமா?' என்றேன்.

"வேறு பாடம் பொருந்துமா? என்று பார்ப்பதற்கு முன், வேறு பாடத்துக்கு ஏதாவது ஆதாரம் உண்டா என்று பழைய பிரதிகளில் தேடவேண்டும்."

'தங்கள் பதிப்பிலேயே இந்த இடத்தில் "வன்மை" என்று ஒரு பாடபேதம் கொடுத்திருக்கிறது. "இன்மை" என்பது அவ்வளவு பொருத்தமில்லை என்று முன்னுல் ஒருவன் செய்த திருத்தமா அது? அல்லது, அவனுக்கு வேறு ஏதேனும் ஆதாரம் இருந்ததா? அந்தச் சொல்லும் இங்கே அவ்வளவு பொருத்தமாக இல்லை. மேலும் மூலத்திலும் உரையிலும் "இன்மை" என்ற சொல்லே காண்கிறது' என்றேன்.

"ஆம். "வன்மை" என்ற சொல்லும் பொருத்தம் இல்லை. அதனுல்தான் அதைக் கீழே கொடுத்திருக்கிறேன். வேறு ஏதாவது பாடம் அகப்படுகிறதா என்று பார்க்கச் செய்கிறேன்" என்று குறித்துக் கொண்டார்கள். "வேறு பாடம் கிடைக்கும் வரையில் இதை மாற்றலாகாது. அந்த உரிமை நமக்கு இல்லை. மனம்போல் பழைய பாடங்களை மாற்றுவது முறை அன்று. வேறு எங்கேயாவது விளக்கம் கிடைக்கலாம். ஆகையால் நான் ஒன்றையும் "திருத்துவது" இல்லை" என்ருர்கள்.

'முன்னுல் உங்களிடம் பாடம் கேட்க வழியில்லை. இன்று கேட்டேன்' என்று பெருமையோடு சொன்னேன்.

'ஆம். நீங்கள் கேட்டதும் "பாடம்" தான் என்று அழுத்திச் சொல்லவே, அதன் சிலேடைப் பொருளையும் அவர்கள் குறித்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

'இந் நாளை என் வாழ்க்கையில் ஒரு நன்னுளாகக் கருதுகிறேன்' என்று சொல்லி விடைபெற்று வந்தேன்.



4596—3



**சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரித் தமிழ் இலக்கியக் கழகம்**

திரு. சற்குணர் பேச, ஐயரவர்கள் தலைமை வகித்தார்கள்

ஐயரவர்களின் தொண்டர்களாகிய
திரு. வி. மு. சுப்பிரமணிய ஐயரும், திரு. கி. வா. ஜகந்நாதனும்
இரண்டு ஓரங்களில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்

# இரண்டு நிகழ்ச்சிகள்

கி. வா. ஜகந்நாதன்

இராமநாதபுரத்தில் ஸ்ரீ சண்முக இராஜேசுவர சேதுபதி அவர்களின் முடிசூட்டு விழா நடைபெற்றது. ஐயரவர்களுக்கு அழைப்பு வந்தது. அதற்குப் புறப்பட்டார்கள். நானும் உடன் சென்றேன். முடிசூட்டு விழா மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. பிறகு இராமேசுவரம் சென்று வரலாம் என்று ஐயரவர்கள் விரும்பினர்கள். அங்கே சென்று அப்படியே தனுஷ்கோடி சென்று சேதுவில் நீராடி வரலாமென்று புறப்பட்டார்கள்.

தனுஷ்கோடிக்கு நாங்கள் காலையில் போனேம். நீராடும் துறைக்கு நடந்துசென்று வர வேண்டும். அதற்கு நெடு நேரம் ஆகும். ஆகையால், அன்று நண்பகல் உணவுக்கு இராமேசுவரத்துக்கு வர இயலாதென்று தோன்றியது. ஆதலால். தனுஷ்கோடியிலேயே உணவுகொள்வதுதான் நல்லது என்று எண்ணிஞர்கள். இரயில்வே நிலையத்துக்கு அருகில் உள்ள ஓர் உணவுச் சாலையில் இரண்டுபேருக்கு உணவு வேண்டுமென்று சொல்லி முன் பணம் கொடுத்தோம். கூட்டம் வராத பருவமாதலால், முன் கூட்டியே ஏற்பாடு செய்யாவிட்டால் உணவு கிடைப்பது அரிதென்று தெரிந்ததனுல் அப்படிச் செய்தோம்.

சேதுத் துறையில் நீராடச் சென்ருேம். இரண்டு மைலுக்கு மேல் இருந்தமையால் அங்கே செல்வதற்கு நேரமாயிற்று. மெல்லச் சென்று நீராடி விட்டுத் திரும்பினேம்.

நீராடவந்தவர்களுடன் பேசிக்கொண்டே வந்தபோது தனுஷ்கோடியில் அன்னதான சத்திரம் ஒன்று இருப்பதாகத் தெரிய வந்தது. ஐயரவர்கள் தாம் இன்னர் என்பதைத் தெரிவிக்காமலே யாவருடனும் பேசிச் செய்தியைத் தெரிந்து கொண்டார்கள். "இந்தத் தூய இடத்துக்கு வந்து ஸ்நானம் செய்தோம்; ஹோட்டலில் சாப்பிட்டு அந்தத் தூய்மையைக் கெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறதே என்று எண்ணினேன். "நல்லவேளை!

அன்னசத்திரம் இருக்கும் செய்தி தெரிய வந்தது. அங்கே போய் ஆகாரம் செய்துகொள்ள லாம்'' என்று என்னிடம் சொன்னார்கள்.

"அங்கே முன் பணம் கொடுத்துவிட்டு வந்திருக்கி ருேமே!'' என்றேன் நான்.

"முன்பணந்தானே கொடுத் தோம்? முறியெழுதிக் கொடுக்கவில்லையே! பணம் போனால் போகிறது. சுத்த மான ஆகாரத்தை உண்ண லாம்'' என்று அவர்கள் கூறினர்கள்.

சத்திரம் எங்கே இருக்கிற தென்று தேடிச் சென்றோம். நாங்கள் போவதற்கும் இலை போடுவதற்கும் சரியாக இருந் தது. அங்கே உண்ணச் 'செல் பவர்கள் ஒவ்வொருவருடைய ஊரையும் பேரையும் ஒரு கணக்கப்பிள்ளை பதிவு செய்து கொண்டார். நல்லவேளையாக அங்கே ஐயரவர்களைத் தெரிந் தவர் யாரும் இல்லை. அவர் கள், "வேங்கடராமன், சென்னை'' என்று தம் பேரை யும் ஊரையும் சொன்னர்கள். அவர்களுக்கு இளமையில் வழங்கிய பெயர் அது என்பது அவர்களுடைய வரலாற்றைப் படித்தவர்கள் அறிவார்கள். அங்கே உணவு கொண்டோம். படாடோபமான உணவாக இல்லாவிட்டாலும், தூயதாக இருந்தது.

உண்ணும்பொழுது எனக்கு ஏதேதோ எண்ணங்கள் எழுந் தன. 'இந்தத் தலத்துக்கு வந்து பிறர் தானம் செய்யும் உணவை உண்ணுகிருர்களே! இங்கே ஏழைபோல அல்லவா புகுந்து எல்லோரோடும் ஒருவராக அமர்ந்து, தம் பெருமையைச் சிறிதும் உணராதவர்களிடை யிலே இருந்து உண்ணுகிருர் கள்?' என்று நினைத்தேன்.

அன்ன சத்திரத்தில் நிதான மாக உணவு வழங்கினர்கள். மெல்ல இருந்து உணவு கொண் டோம். உணவு கொண்ட பிறகு அங்கே இருந்த கணக்கப் பிள்ளையிடம், அந்தச் சத்திரம் யார் வைத்து நடத்துகிருர்கள் என்று கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். "மிகவும் பெரிய உபகாரம். இங்கே வந்து ஸ்நானம் செய்கிறவர்கள் அடைகிற புண்ணியத்தைவிட இந்தச் சத்திரம் வைத்தவர் அடைவது எவ்வளவோ மடங்கு பெரியது'' என்று சொல்லிப் பாராட்டிவிட்டுப் புறப்பட்டார் கள். "ஆம்! இந்தப் பெரு மான் வந்து உண்ணும்படி யான பேறு இந்தச் சத்திரத் துக்குக் கிடைத்ததே! இதை விடப் பெரிய புண்ணியம் ஒன்று உண்டா!'' என்று நான் மனத்தில் சொல்லிக் கொண் டேன்.

சத்திரத்தை விட்டு வெளியே வந்து நடந்தோம். "இன்று சேதுவில் நீராடியதைவிட இங்கே உண்டதனல் அடைந்த புண்ணியம் பெரிது'' என்றுர் கள்.

எனக்கு வியப்பாக இருந் தது. சத்திரம் வைத்தவர்கள் பெற்ற புண்ணியம் என்று நான் நினைக்க, அவர்கள் தம் முடைய புண்ணியமாக அல் லவோ சொல்கிருர்கள்?

"ஆம்; இன்று அந்த ஹோட்டலில் சாப்பிடாமல் இங்கே ஆகாரம் கொண்டது பெரிய புண்ணியம். இந்த அன்ன சத்திரத்தில் எத்தனையோ ஏழைகள் உண்டு வருகிருர்கள். அவர்களில் யாரேனும் சில மகான்களும் உண்டிருப்பார்கள். அதனுல் இது மிக்க பெருமையை உடையதாகி விட்டது. கோயில் பிரசாதத்தைக் கொடுப்பவர்களுக்கு அதிகப் புண்ணியமா? வாங்கி உண்டவர்களுக்கு அதிகப் புண்ணியமா? வாங்கி உண்டவர்களுக்குத் தான் அல்லவா? அதுபோல் நமக்கு இன்று புண்ணியம் கிடைத்தது."

அவர்கள் எந்தக் கோணத்திலிருந்து இதைப் பார்க்கிருர்கள் என்பதை எண்ணி வியப்பில் மூழ்கினேன். மறுபடியும் அவர்கள் பேசினுர்கள்.

"மற்ருெரு விஷயம். நம்மிடம் பணம் இருக்கிறது; ஹோட்டலில் சாப்பிடலாம் என்று நினைத்தோம். நம் நிலைக்கு அன்ன சத்திரத்தில் சாப்பிடுவதாவது என்ற அகங்காரங் கூடத் தலைகாட்ட இடம் உண்டு. அதை அடக்கி நாமும் ஏழைகளில் ஒருவராக நின்று, பணிவுடன் உணவு கொண்டோமே! அதுவே ஒரு தவம் என்று நான் நினைக்கிறேன்."

தமிழ்த் தெய்வம் கூறிய இந்த வார்த்தைகள் என் அறிவிலே புகுந்து தெளிவுண்டாக்கியது பெரிது அன்று; அது என் இதயத்தை இயக்கி உணர்ச்சியை எழுப்பிக் கண்களில் துளிகளைப் புறப்படவிட்டது. 'ஏழையாக இருப்பதும் ஒரு பாக்கியம்' என்ற உன்னதமான கருத்தையல்லவா அவர்கள் சொன்னுர்கள்? சொல்வது மட்டுமா? அப்படியே நடந்து காட்டினுர்கள்!

* * *

திருவண்ணுமலைக்குப் போயிருந்தோம். அருணுசலேசுவரர் பேசாத பெருமான். பேசும் பெருமானுகிய ஸ்ரீரமண முனிவர் பிரானும் அப்போது அருள் பாலித்துக் கொண்டிருந்தார். அப்பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு ரமணுசிரமம் சென்ருேம். ஐயரவர்கள் முன்பும் ஒருமுறை ஆசிரமம் சென்று ரமண பகவானைத் தரிசித்துக் கொண்டதுண்டு. இந்த முறை அவர்களுடைய வரவைக் கண்டவுடன் அங்கிருந்தவர்கள் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பகவானிடம் அழைத்துச் சென்ருர்கள். பழுத்த பழமாகிய ஐயரவர்கள் பகவானுக்கு முன் வீழ்ந்து வணங்கி எழுந்தார்கள். பகவான் அவர்களை அமரச் சொல்ல, முன்னே அமர்ந்தார்கள். கன்றினிடம் அன்பு காட்டும் தாயைப் போல அம்முனிவர் பிரான் அருள் நிரம்பிய சில சொற்களால் தமிழ் வள்ளலை விசாரித்து அன்பு காட்டினுர்.

"எல்லாவற்றையும் துறந்து விட நான் சித்தமாக இருக்கிறேன். ஆனுல் இந்தத் தமிழ் நூல்களைத் துறக்க மனம் வரவில்லை; என்ன செய்வது?" என்று ஐயரவர்கள் சொன்னுர்கள்.

"அது தமிழ் நாட்டின் பாக்கியம்" என்று முனிவர்பிரான் கூறினர்.

நெடுநேரம் அங்கே தங்கி ரமண பகவானுடைய திருவுருவக் காட்சியையும் இன்னுரைக் கேள்வியையும் பெற்ருர்கள். பிறகு விடைபெற்றுப் புறப்பட்டார்கள்.

உண்ணுமுலை உமையாளொடும் உடனுகிய ஒருவனைத் தரிசனம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு திருக்கோயிலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தோம்.

உடன் வந்த அன்பர் ஒருவர் திருவண்ணுமலையின் சிறப்பைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தார். பேச்சினிடையே ஒரு பரதேசியைப் பற்றிச் சொன்னுர். அவர் நாள்தோறும் ஆலயத்தைச் சுற்றி ஒரு முறை அங்கப் பிரதட்சிணம் செய்கிருர் என்ருர். "அப்படியா? இவ்வளவு பெரிய கோயிலைச் சுற்றியா அங்கப் பிரதட்சிணம் செய்கிருர்!" என்று ஐயரவர்கள் கேட்டார்கள்.

"ஆம்; வெளிப் பிராகாரத்தில் ஒரு நாள் தவருமல் அங்கப் பிரதட்சிணம் செய்கிருர்" என்ருர் அவர்.

"அவருக்கு எவ்வளவு வயசு இருக்கும்?"

"கிட்டத் தட்ட எழுபது வயசு இருக்கும்."

"அவரை நான் பார்க்க வேண்டுமே! எங்கே இருக்கிருர், தெரியுமா?" என்று ஐயரவர்கள் கேட்டார்கள்.

"இந்தக் கோயில் பக்கந்தான் இருப்பார். சொல்லி அனுப்பினுல் வருவார்" என்ருர் அன்பர்.

"சொல்லி அனுப்புவதா? அவர் இருக்கும் இடத்துக்கு நாமே போக வேண்டும். சுவாமி தரிசனம் கூடப் பிறகு செய்து கொள்ளலாம். அந்த மகானை முதலில் பார்க்க வேண்டும்."

ஐயரவர்களுக்கு இருந்த வேகத்தைக் கண்டு, 'அவரை ரமண பகவானைப் போன்ற பெரிய ஞானியென்று அவர்கள் எண்ணிக் கொண்டார்கள் போலும்!' என்ற நினைவினுல் அந்த வேகத்தைத் தணிக்கக் கருதினுர் அன்பர்; "அவர் சாதாரணப் பரதேசி; அவருக்குப் படிப்போ, வேறு மகிமையோ இல்லை. அங்கப் பிரதட்சிணம் செய்வார். கோயிலிலோ வெளியிடங்களிலோ கிடைக்கும் உணவை உண்ணுவார். அவர் பெரிய மகான் அல்ல" என்ருர்.

"அவர் அங்கப் பிரதட்சிணம் செய்வது உண்மைதானே?" என்று ஐயரவர்கள் கேட்டார்கள்.

"அது என்னவோ, உண்மை."

"அப்படியானுல் அவரைப் பார்க்கத்தான் வேண்டும்."

அப்போது மாலை ஐந்துமணி இருக்கும். அன்பர் எங்களை அழைத்துக்கொண்டு சென்ருர். கோயிலின் வாயில்களில் ஒன்றுக் கருகே போய்க்கொண்டிருந்தோம். அப்போது அங்கே அந்தப் பரதேசி வந்துகொண்டிருந்தார்.

"இவர்தாம் நான் சொன்னவர்" என்று அன்பர் கூறினரோ இல்லையோ, ஐயரவர்கள் அவரருகில் சென்றூர்கள். கோயிலுக்குப் போகும் கோலத்தில் இடுப்பில் அங்கவஸ்திரத்தைக் கட்டிக் கொண்டிருந்த அவர்கள் அப்படியே அந்தப் பரதேசியின் காலில் விழுந்தார்கள்.

எழுபது வயசு மதிக்கத்தக்க அவர் சடைமுடியுடன் விளங்கினர். அவர் அடியின்கீழ் எண்பது ஆண்டுகள் நிரம்ப இருக்கும் தமிழ்ப் பழம் நெடுஞ் சாண் கிடையாக விழுந்தது. பரதேசி திடுக்கிட்டார். அன்பர், ஐயரவர்களைப்பற்றி அவருக்குச் சொன்னர். அவருக்கு அது எத்தனை தூரம் விளங்கிற்றோ தெரியவில்லை. எங்களுக்கு இந்தக் காட்சி, புல்லரிப்பை உண்டாகியது.

ஐயரவர்கள் மெல்ல எழுந்தார்கள். அவர்கள் கண்களில் நீர் துளும்பியது. வீதி மண் உடம்பில் ஒட்டியிருந்தது. பேசமுடியாமல் தழுதழுத்தார்கள். "நீங்கள் பாக்கியசாலிகள். தேசத்தை மறந்தவர்கள்" என்று சில சொற்களைச் சொல்வதற்கே அவர்கள் தடுமாறினர்கள்.

உடன் வந்த அன்பர் ஒன்றும் புரியாமல் விழித்தார். 'இந்தப் பரதேசியிடம் எதைக் கண்டு இந்தப் பெரியவர்கள் வணங்கினர்கள்?' என்ற கேள்வியை அவர் உள்ளம் எழுப்பியிருக்கவேண்டும்.

பரதேசி அதிகமாகப் பேசவில்லை. அவர் தம்வழியே போய்விட்டார்.

நாங்கள் கோயிலை நோக்கிச் சென்றோம்.

ஐயரவர்கள் ஒருவாறு அமைதி பெற்றுப் பேசலானர்கள்; "இந்த வயசில் இவ்வளவு பெரிய கோயிலைச் சுற்றிப் புரண்டு அங்கப்பிரதட்சிணம் செய்வது எளிய காரியமா? இந்த உடம்பை நாம் எவ்வளவு கவனித்துப் பாதுகாக்கிறோம்? தேகாபிமானம் எளிதிலே நீங்குவதில்லையே! இவர் உடல் நினைவே இல்லாமல் அங்கப்பிரதட்சிணம் செய்வது பெரிய தவம்" என்றூர்கள். பிறகு ஒன்று சொன்னர்கள்; "எனக்கு இப்படி அங்கப்பிரதட்சிணம் செய்ய வேண்டும் என்று எவ்வளவோ ஆசை! ஆனல் என்னல் அது முடியுமா? முடிந்தாலும் மற்றவர்கள் செய்ய விடுவார்களா? இன்று இவர் காலில் விழுந்ததனல் ஓரளவு அங்கப்பிரதட்சிணம் செய்ததாக எண்ணித் திருப்தி அடைகிறேன்."

உலகம் போற்றும் ரமண பகவானை வணங்கிய அந்தப் புனிதத் திருமேனி யாரும் அறியாத அந்த ஏழைப் பரதேசியின் காலிலும் விழுந்தது. 'அகந்தையின்றி ஏழையரில் ஏழையாக இருப்பது பாக்கியம்' என்ற கருத்தையே மறுபடியும் எண்ணி உருகி நின்றேன்.

---

# THE CHOICE

## MPF

# Pencils




**MERCURY**
BLACK LEAD

**IMPERIAL**
COPYING

**ACCOUNTANT**
COLOUR

**CHECKING**
COLOUR

**SPECTRUM**
12, COLOURS

*Manufactured by*
**THE MADRAS PENCIL FACTORY**

**3, STRINGER STREET, MADRAS.I,**

" In technical collaboration with L. & C. Hardtmuth (Great Britain) Ltd., KOH-I-NOOR Pencil Factory, England ".



## தமிழன்பர் மகாநாடு

கே. வி. கிருஷ்ணசாமி ஐயர்
பி. எஸ். சிவஸ்வாமி ஐயர்
ராமநாதபுரம் ராஜா
வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார்
ராஜா ஸர் அண்ணுமலைச் செட்டியார்
ஸி. ஆர். ஸ்ரீநிவாசன்
பெ. நா. அப்புசாமி ஐயர்

ரா. ராகவையங்கார்
பஷீர் அகமத்
டி. ஸி. ஸ்ரீநிவாசையங்கார்
டி. கே. சிதம்பரநாத முதலியார்
ஆ. லக்ஷ்மணசாமி முதலியார்
கா. நமச்சிவாய முதலியார்
ரா. விசுவநாதையர்

எஸ். கலியாணசுந்தரையர் முதலியோரைக் காணலாம்

[1933]



மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை

வெள்ளி விழா

மகா வித்துவான் ரா. இராகவையங்காரையும்
பண்டிதமணி கதிரேசன் செட்டியாரையும் காணலாம்

[1933]

# ஐயரவர்களின் திருப்புகழ் சேவை

ஏ. வி. குப்புஸ்வாமி

தமிழ்த் தெய்வமான முருகப் பெருமானின் புகழைச் சந்தத் தமிழிலே பாடியுள்ள பெரியார் அருணகிரி நாதர். தமிழிற் சந்தப் பாக்களுக்கு அவர்தான் ஆதிகர்த்தா. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தவராஜயோகி அவர். பதினாறு ஆயிரம் திருப்புகழ்ப் பாக்களை அவர் பாடியதாகக் கூறுகிறது மரபுச்செய்தி. மற்றும், செந்தமிழ் மணங்கமழும் கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி என்னும் மூன்று பக்திரச இயற்றமிழ் நூல்களையும் அவர் இயற்றியுள்ளார்.

அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழ்ப் பாக்கள், எழுத்தாணி, ஏடு, முதலியன கொண்டு, யோசித்து எழுதுதலின்றி உடனுக்குடன் பேசுவது போல "ஆசு" கவிகளாகத் தோன்றியவை.

திருவண்ணாமலை யென்னும் திவ்யத் திருப்பதியில் அவர் கடுந்தவமிருந்தார். முருகப்பெருமான் தன் பெருமையைத் சந்தத் தமிழில் பாடுமாறு அவரைப் பணித்து,

"முத்தைத் தருபத்தித் திருநகை
அத்திக்கிரை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோது,"

என்ற அடியை அசரீரியாக எடுத்துக் கொடுத்தார். "எனவோது" என்ற இந்த சொற்றொடர் பாட்டுக்கு ஒரு அழகிய தொங்கல் போல் அமைந்துள்ளது.

தனக்கு அடி எடுத்துக் கொடுத்த ஆண்டவன் ஆணையைச் சிரமேற்கொண்டு, தென்னாட்டின் பல தலங்களுக்கும் சென்று குருபரன் புகழை ஆயிரக்கணக்கான பாக்களில் அருணை முனிவர் பாடினார். வயலூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள பொய்யாக் கணபதி, இவரது கனவில் தோன்றி, இவரது பாடல்களுக்குத் திருப்புகழ் என்ற பெயரை யளித்தார்.

திருப்புகழ் என்னும் இச் சொற்றொடர் நான்கு சமயாசாரியர்களுள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களால் இறைவன் புகழைக் குறிக்கும் சொல்லாகத் தேவாரத்தில் கையாளப்

பட்டுள்ளது. இதை, சுந்தரமூர்த்திகள் பாடியுள்ள திருமுல்லை வாயில் தேவாரத்தில், "திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன் படுதுயர் களையாய்", என்பதால் கவனிக்கலாம். பொதுவில் குறிப்பிடப்பட்ட இச்சொல் பின்னர் அருணகிரியாரது சந்தப் பாடல்களுக்குச் சிறப்புப் பெயராக அமைந்து விட்டது.

இன்றைய செந்தமிழ்ச் சோலையிலே அருணகிரிநாதர் அருளியுள்ள திருப்புகழ்ப் பாக்கள் ஓர் இன்பப் பூங்கா. அவர் பாடிய திருப்புகழ்ப் பாட்டுகள் 16,000 என்று முன்னோர் கூறுவர். இதைக் குறிப்பிடும் ஓர் தனிப்பாட்டு :—

> "அருணகிரிநாதர் பதினாறாயிரமென்
> றுரைசெய் திருப்புகழை ஓதீர்—பரகதிக்கஃ
> தேணி; அருட் கடலுக் கேற்றம்; மனத்தளர்ச்சிக்
> காணி; பிறவிக் கரம்".

அருணகிரி நாதரின் செய்யுள் நடையும், கருத்தாழமும், சொல்லடுக்கழகும் அவருக் கென்றே அமைந்தவை. அவரது நடைக்கு இணை அவருக்கு முன்பும் இல்லை, பின்பும் இல்லை. கால வழக்கில் நமக்குக் கிடைத்துள்ள அவரது திருப்புகழ் பாட்டு கள் 1307 தான். இவையும் சென்ற ஐம்பது ஆண்டுகளிலே தேடிச் சேர்க்கப்பட்டவை. திருப்புகழ் ஓலை ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்து, ஆய்ந்து, 1300 பாடல்களை உலகுக்கு உதவிய தமிழறிஞர் (1909ல், தமது அறுபத்தி மூன்றாம் வயதில்) காலஞ் சென்ற வ. த. சுப்பிரமணிய பிள்ளை என்ற பெரியாராவர். அவரது அரும்பணிக்கு ஊன்றுகோலாக இருந்து, திருப்புகழ் என்ற இலக்கியத்தை அச்சு உருவாக்கி உலகுக்கு அளித்த பெரும் பங்கு தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயரவர்களுக்கும் சேரும்.

தலைமுறை தலைமுறையாகத் திருத்தணி முருகப்பெருமா னுக்கு அடிமைப்பட்ட குடும்பத்தினர் சுப்பிரமணிய பிள்ளை. அவர் சென்னை அரசாங்கத்தில் ஜில்லா முனுசீபு உத்தியோகம் பார்த்து வந்தவர். சிறந்த தமிழறிஞர். சைவ சமய நூல்களிலே மிகுதியான ஆராய்ச்சியுள்ளவர். அக்காலத்திலே, வழக்கில் இருந்து வந்த திருப்புகழ் பாட்டுகள் ஒரு சிலவே: அவை சுப்பிரமணியப் பிள்ளையவர்களின் கருத்தைக் கவர்ந்தன. வழக்கில் இல்லாத திருப்புகழ் பாக்களையும் தேடித்தருவதைத் தமது பணியாக ஏற்றுக் கொண்டார் அவர். தான் போகுமிடந் தோறும் இதே நோக்கத்துடன், திருப்புகழ் ஓலைச் சுவடிகளைப் பற்றி விசாரிப்பார். ஏடுகள் கிடைத்தால் அவைகளை ஆய்ந்து திருப்புகழ்ப் பாட்டுகளைச் சேகரிப்பார். பல ஏடுகளை ஒப்பிட்டுத் திருத்தங்கள் செய்வார். தாம் செய்த திருத்தங்களைத் தமது நெருங்கிய நண்பரான மகாமகோபாத்தியாய அய்யர் அவர் களுக்குக் காட்டி அவரது அங்கீகாரம் பெற்ற பின்புதான் அத்

திருத்தங்களைத் தீர்மானிப்பார். பிள்ளையவர்கள் இவ்வாறு பல வருஷங்களாகத் தேடிச் சேகரித்த பாட்டுக்களை முதன் முதலாக 1901–ஆம் வருஷத்திலே புத்தகமாக வெளியிட்டார். "புரூப்" முழுதும் ஐயரவர்களுக்குக் காட்டி அன்னாரின் அநுமதி பெற்ற பின்புதான் அது புத்தகமாக வெளியிடப்பட்டது.

ஐயரவர்கள், "என் சரித்திரம்" என்ற தமது நூலில் சுப்பிரமணிய பிள்ளையவர்களுடன் தமக்கிருந்த தொடர்பைப் பற்றி எழுதியிருக்கிருர்.

> "திருத்தருப் பூண்டியில் அப்போது ஜில்லா முனுசீப்பாக இருந்தவர், வடக்குப்பட்டு வ. த. சுப்பிரமணியப் பிள்ளை என்பவர். அவர் முருகக் கடவுளிடத்தில் அளவற்ற பக்தியுடையவர். அக்காலத்தில் அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் அங்கங்கே வழங்கி வந்தது. திருப்புகழ்ச் சுவடிகளைச் சிலர் வைத்திருந்தனர். அருணகிரிநாதர் வாக்கிலே ஈடுபட்ட சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், திருப்புகழ்ப் பாடல்களைத் திரட்டி வெளியிட வேண்டுமென்று தீவிரமாக முயற்சி செய்யத் தொடங்கினர். தாம் உத்தியோகம் பார்த்து வந்த இடங்களிலும் அவற்றைச் சார்ந்த இடங்களிலும் விசாரித்து விசாரித்துத் திருப்புகழ்ப் பாடல்களைச் சேகரித்தார்; ஏடுகளைத் தொகுத்தார்; பாடுகின்றவர்களிடமிருந்து கேட்டு எழுதிக் கொண்டார். எனக்குக் கிடைத்த சில சுவடிகளையும் நான் அவரிடம் கொடுத்தேன். அவர் மிகவும் சிரத்தையுடன் தொகுத்து வந்ததை யறிந்து அவர்பால் எனக்குப் பற்றுதல் உண்டாயிற்று. அவர் அடிக்கடி கடிதம் எழுதுவார். திருப்புகழ்ப் புத்தகத்தைப் பதிப்பிக்கத் தொடங்கிய பின்பு, "புரூபை" எனக்கு அனுப்பி வைத்தார். நான் பார்த்துத் திருத்தி அனுப்புவேன். புறநானூறு பதிப்பித்து வந்த காலத்தில், இந்தத் திருப்புகழ் கைங்கரியம், எனக்கு முருகப்பிரான் தியானத்தால் உண்டாகும் பயனையும் நெஞ்சத்திண்மையையும் கிடைக்கச் செய்தது"

[என் சரித்திரம்—பக். 990–991]

பொறுப்பு வாய்ந்த ஒரு நியாயாதிபதிப் பதவியை வகித்தும் கூட தன் ஒழிவு நேரம் எல்லாம் திருப்புகழ்ப் பணிக்கென அர்ப்பணித்த பெரியார் சுப்பிரமணிய பிள்ளையவர்களின் விடா முயற்சியால் 1892-ஆம் வருஷத்திற்குள்ளேயே 1200 பாடல்கள் கிடைத்து விட்டன.

திருப்புகழ் அச்சிட்ட காலத்தில் பிள்ளையவர்களுக்குத் தமிழ்த்தாத்தா எழுதிய ஒரு கடிதத்தில், "பல வருஷங்களாக முயன்று விசாரித்துத் தாங்கள் விளங்க அறிந்த அரிய பெரிய விஷயங்களைச் சிவநேசச் செல்வர்கள் அறிந்து உய்யும் வண்ணம்...வெளிப்படுத்திய மகோபகார விஷயத்தில் இந்தத் தமிழ் நாடு மிகவும் நன்றி பாராட்டற்குறியது," என்று எழுதியிருந்தார். மற்றும் ஒரு முறை "திருப்புகழ் பலவும் யாவரும் பெறச் செய்த சுப்பிரமணிய வேந்தல் சீர், இயம்பற் பாற்றே," எனவும் பாராட்டிக் கூறியுள்ளார்.

திரு. சுப்பிரமணிய பிள்ளை உலகுக்கு உதவிய திருப்புகழ் நிதியை, பிரசங்கம், பாட்டு, உபதேசம் வழியாக வாரி உலகுக்கு வழங்கினர் ஓர் அருள்ஞானி. அவரே திருப்புகழ் வள்ளல் வள்ளி மலைச் சச்சிதானந்த சுவாமிகள். தமது அரிய தவத்தின் அநுபோக விளைவாக அப்பெரியார், திருப்புகழ்ப் பாராயணத் திற்கு ஒரு தவநெறி முறையை உலகுக்கு அருளியுள்ளார். 1934-ஆம் வருஷத்தில் முதன் முதலாக அத்தவ நெறிமுறை புத்தகம் வெளிவந்தது. அப்பாராயண முறையைக் கண்ணுற்ற அய்யரவர்கள் அதை வியந்து அதற்கும் ஒரு சிறப்புப் பாயிரம் வழங்கினர். அது 4–4–1926ல் பாடப்பட்டது.

**அன்புடையார்க் கெளியன் எனும்**
**அறுமுகன் பொற்றுளில்**
**அருணகிரிப் பெரியார் முன்**
**அணிந்த திருப்புகழில்**
**இன்புறு பாராயணத்திற் கேற்ற**
**வற்றைத் திரட்டி யளித்தான்**
**—அவன் யாவன் என்னின்**
**என்புருகத் திருப்புகழைப்**
**பாடியும் பாடுவித்தும்**
**இலகு திருப்புகழ்ச் சாமி எனும்**
**பெயர் பெற்றொளிர்வோன்**
**துன்பகற்று வள்ளிமலை வாழ்பவை மணிசீர்**
**துன்று சச்சிதானந்தா யென்னுமுனிவரனே.**

இங்ஙனம், திருப்புகழ் நூல் வெளிவருவதற்கும், பின்னர் அந்த 1300 திருப்புகழ்ப் பாட்டுக்களினின்றும் தவ வலிமையால் கடைந்து எடுத்த பாராயணத் தவநெறித் திருமுறைக்கும் தமிழ்த் தாத்தா அவர்கள் அளித்துள்ள உயர்ந்த சேவைக்குத் திருப்புகழ் உலகம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளதன்றோ!

# ஐயரவர்களும் பிள்ளையவர்களும்

தருமையாதீன வித்வான்
பாலகவி வயிநாகரம் திரு. வே. இராமநாதன்

ஆவடுதண் டுறைமடத்தி லமர்ந்தமகா
வித்துவா னடைந்தோர்க் கெல்லாம்
நாவடுவில் லாதபடி தமிழ்ப்பயிற்றி
நூல்கள்பல நன்கு யாத்த
பாவலவன் மீனுட்சி சுந்தரனென்
றெல்லாரும் பகர்ந்து போற்றும்
நாவலனே பிள்ளையென நானிலத்தோர்
புகழ்ந்துரைக்கும் நல்லோ னவான். (1)

சீராருத் தமதான புரத்துதித்துத்
தமிழமுதைத் தெவிட்ட வுண்டு
பேராரும் பெரும்பேரா சிரியன்முதற்
பலவான பேர்கள் பெற்று
நேரான தமிழ்நூல்கள் பலவாய்ந்தச்
சிற்பதித்து நிலவுஞ் சீர்த்தி
சாராசான் சாமிநா தையரையே
ஐயரெனச் சாற்று வாரே. (2)

பலநூல்கள் யாத்தளித்த மீனுட்சி
சுந்தரப்பேர்ப் பாவ லோன்பாற்
பலநூல்கள் பதித்தளித்த சாமிநா
தப்பெரியோன் பயிலப் போந்த
நலமேவு நிகழ்ச்சியினை நறுந்தமிழ்யாப்
பினினுட்டி நயஞ்சேர் தில்லித்
தலமேவும் சுடரிதழின் வழியாகத்
தமிழருக்குச் சாற்று வேனே. (3)

மாயூரத் திருத்தலத்தில் மகாவித்து
வான்பிள்ளை வாழ்ந்த நாளில்
மீயூறும் பெரும்புகழ்சேர் சாமிநா
தப்புலவர் விரும்பி யென்றும்
சேயூருஞ் சிவனடிக்கே தொண்டுசெயும்
தந்தையுடன் சென்று ரந்நாள்
தாயூரு மன்புடனே வரவேற்ற
கலைத்தந்தை தகவு கேண்மின் ! (4)

களிறொன்று மேலசைந்து வந்தாற்போற்
பீடுநடை காமர் சேர்ந்து
வெளிஒன்ற வளர்தோற்றம் விளங்குமிளந்
தொந்தியெழில் மேவ நீண்டு
தளிரொன்று முழங்காலைச் சார்கரங்கள்
பரந்தநெற்றி சாய்ந்து பின்பு
துளியொன்று சிறுகுடுமி தூவெள்ளை
யாடையிவை தோன்று மாலோ (5)

இவ்வாறு காட்சிதந்த வினியதமிழ்ப்
பெரும்புலவ னேற்ற யெங்குஞ்
செவ்வேசெல் உ.வே.சா. தனைத்தனது
மாணவனுத்தேர்ந்து கொண்ட
அவ்வேளை நைடதத்தில் ஒருபாடல்
சொல்கவென அன்பாற் கூற
எவ்வாறு சொல்வனென மனநடுங்கி
உடல்பதறி இளைத்தா ராஞர் (6)

பலபாடல் நைடதத்தில் படித்தவரென்
றுலுமுதற் பாட லான
நலமாகுந் தழைவிரியாம் பாடலையே
ஆசான்முன் நவின்று ரென்றுல்
வலமான ஆசிரியர் முன்னே நன்
மாணவர்தாம் மன்னும் மாண்பைத்
தலமாரு மனைவோரு மறிவதற்குச்
சான்றிதுவாய்த் தழைத்த தன்றே. (7)

காப்பியத்தின் சுவைமல்கக் கன்னிநாட்
டரசனுய்க் கவிஞு ரேருய்
மீப்பொலிந்த அதிவீர ராமபாண்
டியன்யாத்த மேன்மைச் செய்யுள்
நாப்பொலியப் பாடியதா னன்னிகண்டி
னீராறு தொகுதி நாடிக்
காப்புடனே கற்றதனுல் பிள்ளையின்மா
ணவரானுர் கவின்சே ரையர் (8)

மீனுட்சி சுந்தரநா வலன்பாற்செந்
தமிழ்பயின்ற மேன்மை யாலே
தேனுட்சி செயுங்கொன்றைச் சிவபெருமான்
திருவடிக்கே சேர்ந்த நெஞ்சும்
வானுட்சி செயுந்தமிழ்த்தாய் வளத்தையெலா
முலகினுக்கு வழங்கும் வாய்ப்பும்
தானுட்சி யாக்கொண்டார் சாமிநா
தையரெனச் சாற்ற லாமே. (9)

தில்லித் தமிழ்ச் சங்கத்தின்

தமிழ்த் தாத்தா

"சுடர்" இதழுக்கு

வாழ்த்துக்கள்

★

தி மேட்டூர்
கெமிகல் அண்ட் இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்,
மேட்டூர் டாம், ஆர். எஸ்.

★

தில்லி பிரதிநிதி:

ஆர். சக்ரவர்த்தி,

3/1, ராணி ஜான்சி ரோட்

புது டில்லி–1



ஐயரவர்களும் அவருடைய திருக்குமாரர் திரு. கலியாணசுந்தரையரும்



ஐயரவர்களின்
சதாபிஷேகப் பரிசுப் பொருள்களின் காட்சி
[6-3-1935]

# பெரியோர்களுடன் பேட்டி

குமாரி எஸ். நாகலக்ஷ்மி

உலகத்தில் எந்த விஷயம் பற்றியும் பெரியவர்களுடைய கருத்து என்ன என்றறிவதில் மக்கள் மிகுந்த ஆசையுடையவர்களாய் இருப்பார்கள். இதனாலேயே பத்திரிகைக்காரர்கள் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் தலைவர்களிடம் ஓடோடிச் சென்று பேட்டி கண்டு சுடச்சுடக் கருத்துக்கள் வெளியிடுகிறார்கள். எனக்கோ பத்திரிகைத் துறையில் அவ்வளவு அனுபவம் கிடையாது. இருப்பினும் தில்லித் தமிழ்ச் சங்கம் 'சுடர்' இதழை டாக்டர் சுவாமிநாத ஐயர் மலராக வெளியிடப் போகிறதென்ற செய்தி கேட்டதும் நானும் சில பெரியோர்களைப் பேட்டி கண்டேன். நேரில் சென்று பேட்டி காணமுடியாத அப்பெரியார்களிடம் சாமிநாத ஐயர் அவர்களைப் பற்றிப் பேட்டி கண்டு செய்திகளை இங்கே எப்படித் தந்திருக்கிறேன் என்று நீங்கள் உணர்ந்து கொள்கிறீர்களோ முடியாதோ எனக்குத் தெரியாது. ஆனாலும் தமிழ்த் தாத்தாவின் குணாதிசயங்களைப் பற்றி ஒவ்வொரு கோணத்தில் படம் பிடித்துக் காட்டும் அப்பெரியார்களின் உண்மைக் கருத்துக்கள் உங்களுக்குச் சுவையாக இருக்கும் என்று நம்புகிறேன். பேட்டி கண்ட விவரங்களை விவரித்தால் நீளும் ஆதலால் அவரவர் கருத்துக்களை மட்டும் சுருக்கமாகத் தருகிறேன்.

**எஸ். சத்தியமூர்த்தி, எம். எல். ஏ.**

மஹாமஹோபாத்தியாயா அவர்களை அறிந்திருக்கும் பேறு பெற்றவன் நான். அவர்களை அறிந்தவர்கள் அவர்களுடைய அன்புக்கு வசமாகாமல் இருக்க முடியாது. படாடோபம் என்பதை அறியாதவர். கம்பீர முகத் தோற்றமுடையவர். இன்சொல்லே உரைப்பவர். நாலு பேருடன் அளவளாவிக் கொண்டிருப்பதில் பிரியமுள்ளவர். முதல்தரமான பேச்சுக்காரர். ஆழ்ந்த சிந்தனையாளர். சில பெரியார்களைப் போல் எப்போதும் தம்மைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிராமல் பிறர் நலத்திலும் கவலை கொள்ளுகிறவர்.

தென்னிந்தியர்களின் அறிவுச் சிறப்புக்குக் காரணமான ஆரிய திராவிடக் கலைகளின் அவதாரமென்றே ஐயர் அவர்களைச் சொல்லலாம். டாக்டர் சாமிநாதையர் அவர்கள் வைதிக ஆசார சீலர். அவர் தமிழிடம் கொண்டிருக்கும் காதலுக்கு வேறெந்தக் காதலையும் ஒப்பிட்டுக் கூற முடியாது.

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

ஐயரவர்கள் தமிழ்ப் புலவருள் தலைமணியாக விளங்குகின்றவர்கள். துறைசையாதீனத்துக் கவிச் சக்கரவர்த்தியாக விளங்கிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்பால் முறையாகத் தமிழ் பயின்று அரசினர் கலாசாலைகளில் பல்லாண்டுகளாகச் சிறந்த தமிழாசிரியராக வீற்றிருந்து பன்னூறு மாணவர்களுக்குத் தமிழுணவளித்தார்கள். தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த பல ஊர்களுக்குச் சென்று பல அரிய தமிழ்நூற் சுவடிகளையெல்லாம் தொகுத்துச் செவ்விய முறையின் ஆராய்ந்து பலவகைக் குறிப்புக்களுடன் மேலை தேசத்து நூல் வெளியீடுகளுக்கு எவ்வகையினுந் தாழாது சிறந்த முறையில் அந்நூல்களை வெளியிட்டவர்கள். இத்துறையில் இவர்களை யொப்பார் இதுகாறும் யாரும் இல்லை.

எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

ஐயரவர்களுக்குத் தமிழ் மொழியைத் தவிர வேறு தெய்வம் கிடையாது. இது எல்லோருக்கும் தெரிந்த பரம ரகசியம். ஆகவே, தமிழைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்ற கொள்கையோடு, பகுத்தறிவு ஏற்பட்ட காலந் தொடங்கித் தமிழ்த் தெய்வத்தையே அவர்கள் ஓயாது பூசித்து வந்தார்கள். கேவலம் ஒரு பாஷையை (அது தாய் மொழியாய் இருந்தால் என்ன ?) தெய்வம் என்று கொண்டாடி அந்தத் தெய்வ நாயகத்தை இரவும் பகலும் போற்றி வந்து அதற்குத் தொண்டு புரிவதிலேயே வாணாளைச் செலவு செய்த ஐயரவர்கள் ஒரு பெரும் பிடிவாதக்காரர் என்பதில் சந்தேகம் என்ன ? இந்தப் பிடிவாத குணமே அவருடைய பெருமைக்கு ஒரு காரணமாகும்.

ஐயரவர்கள் தாம் மேற்கொண்டிருப்பது எவ்வகையான நூலாராய்ச்சியாய் இருந்தாலும் சரி, எவ்வகையான கல்வி முயற்சியாயிருந்தாலும் சரி, அதைத் தாமே நேரில் செய்வார்கள். வேறொருவர் எத்தனை தகுதி வாய்ந்தவராயிருந்தாலும் அவரிடம் ஒப்பித்துவிட்டு மேற்பார்வையோடு ஐயரவர்கள் திருப்தியடைந்து விடுவதில்லை. அவர்கள் எத்தனை அரிய நூல்களை நுணுகி ஆராய்ந்து பதிப்பித்திருக்கிறார்கள். அவர்கள் நேரிலே பார்வையிடாத ஒரு வரியாவது ஒரெழுத்தாவது அந்த நூல்களிலே உண்டா? ஒருவரிடத்தாவது வேலை முழுவதையும் ஒப்பித்துவிட்டு 'ஹாய்' ஆக இருந்து மேற்பார்வை உத்தியோகம் பார்த்திருக்கிறார்களா ? தன் காரிய முழுவதும் தானே செய்யும் 'ஸ்வகாரிய துரந்தரர்' என்று இவர்களைச் சொன்னால், அதை அவர்கள் ஒப்புக்கொண்டு தானே தீரவேண்டும்.

ந. மு. வேங்கடசாமி நாட்டார்

பன்னாட் பயிற்சியால் அவர்பாற் கண்டறிந்த அரிய குணமொன்றை ஈண்டு குறிப்பிடுதல் பொருந்தும். அதுதான் பொறுமை என்பது. "பொறைக் கயிற்றிற் புகழைப்" பிணித்த

பெரியார்களில் ஐயரவர்கள் முதற்பத்தியில் நிற்றற் குறியராவர். காரணமுள்வழியும் அவர்பாற் சினமுண்டாக யாண்டும் யாம் கண்டதில்லை.

**கே. வி. கிருஷ்ணசாமி ஐயர்**

ஐயர் அவர்கள் வேலை செய்யும்பொழுது மிகவும் ஆழ்ந்த கவனத்துடன் வேலை செய்வார்கள். அவர்கள் படித்துக்கொண் டிருக்கும்போது யாராவது வருவார்கள். வேலை தடைப்படும். அவர்கள் பேசிவிட்டுப் போன மறு க்ஷணமே அவர்கள் முழு மனதும் வேலையில் ஆழ்ந்துவிடும். அவர்கள் எவ்வளவு முக்கிய மான வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் சரி, தம்மைப் பார்க்க வேண்டுமென்று வருபவர்களை மிகவும் உற்சாகத்துடன் வரவேற்று மிகவும் பிரியமாகப் பேசுவார்கள். துளிக்கூட மனச் சலிப்பு அடையமாட்டார்கள். அவரிடம் பேச வந்தோரும் லகு வில் எழுந்திருந்து போகமாட்டார்கள். போக மனம் வராது. அவருடைய பேச்சின் நயமும் சுவையும் அப்படி இருக்கும். நேரம் போவதே தெரியாது. ஒவ்வொரு நிமிஷமும் புதிது புதி தாக ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

**வே. நாராயணையர், எம்.ஏ., எம்.எல்.**

ஐயரவர்கள் பிராயத்தாலும் ஞானத்தாலும் சீலத்தாலும் நோன்பினாலும் முதிர்ச்சி பெற்றவர்கள். முதுமைக்குக் கடலை உவமிப்பது மரபு, ஆக்கவும் அழிக்கவும் அளிக்கவும் வல்ல முந்நீ ரானது தன் வேலையை அதிக்கிரமியாது அமைவது போன்று ஐயரவர்களும் முதிர்ச்சி பெறாத பிறர்பலரும் செய்யும் ஆரவாரங் களையெல்லாம் பொருட்படுத்தாமல் அடங்கியிருக்கும் இயல்புடை யவர்கள். நூற்றுறையிலே இக்குணம் மிகவும் வேண்டப்படுவ தாகும். அச்சு முதலிய சாதனங்களாலே நூல்கள் மலிந்துள்ள இக்காலத்திலே, நா காத்தலும் பேனா காத்தலும் அருங்குணங் களாம். வெறுமனே எழுதி அச்சிற்கண்டு மகிழ்வதிலும் தான் கண்ட நல்லது உண்டானால் மட்டுமே எழுத முன்வருவது மேல். எவ்வளவு பழைய நூல்கள், எவ்வளவு சிறந்த நூல்கள், கற்போ ரற்று ஓலைச் சுவடிகளாகக் கிடந்தன. இன்னும் கிடக்கின்றன. அவற்றைத் தம்மால் இயன்றவரை மடிவுறுவண்ணம் காத்து, தாம் பட்ட பாடெல்லாம் பிறர் படாதவாறு, சுத்தமான பதிப்புக் களாய் வெளியிடுவதிலே தமிழருக்குக் காலத்தாற் செய்யும் உதவி என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பேயே நிச்சயித்து அந் நிச்சயப்படியே காலத்தையெல்லாம் தமிழ் நூலாய்ந்து பதிப்பித் தலிலேயே போக்கிய பெருமை ஐயரவர்களதேயாம்.

**கே. சுவாமிநாதன், பி.ஏ., பி.எல்.**

நான் பிரெஸிடென்ஸி காலேஜில் சேர்ந்தபோது ஐயரவர்கள் தான் தமிழ்ப் பண்டிதர். இவருடைய ஆழ்ந்த படிப்பும்,

தமிழிலக்கியத்துக்கு இவர் செய்துள்ள 'ராக்ஷஸ' காரியங்களும், முதல் வகுப்பு மாணவருக்கு எப்படித் தெரியும்?

கழுத்தை மறைக்கும் சட்டையும், சுவரைப் பாரென்றால் கதவைப் பார்க்கும் (சற்றுத்துவண்ட) தலைப்பாகையும், படபட வென்று இங்கிலீஷ் பேசாமையும், ஒருவரிடம் ஒன்று சேர்ந்தால் இவரை மதிப்பதெப்படி?

இதெல்லாம் போகட்டும்; தமிழ்கூட இந்த ஆசாமிக்கு நன்றாய்த் தெரியாதோ என்ற சந்தேகமும் உண்டாயிற்று. அது வரை எங்களுக்குத் தெரிந்த தமிழ்ப் பண்டிதர்கள் ஒருவித கம்பீர மரன, பொருளற்ற தமிழைப் பேசி, ஒட்டக்கூத்தர், காளமேகம் முதலிய பெரியார்களின் பல்லொடிக்கச் செய்யும், உதடு ஒட்டாத செய்யுள், சிலேடை மிகுந்த செய்யுள் இவற்றைக் கக்கி, எங்களைப் பிரமிக்கச் செய்ததுண்டு; தமிழ் வகுப்பில் இந்த இடிமுழக்கத் தைக் கேட்டுச் சிலராவது பயபக்தியுடன் நடந்ததுண்டு. (இதெல்லாம் பழைய சரித்திரம். இப்பொழுது தமிழ்ப் பண்டிதர் களுங்கூட வெள்ளைத் தமிழ் பேசுவதாகக் கேள்வி).

ஆனால் இந்தக் கிழவரோ (நான் படித்த காலத்திலேயே இவர் கிழவர்தான்) மெதுவாக, மிக எளிய இனிய நடையில் எல்லோ ருக்கும் பொருள் விளங்கிவிடும் வகையில் பேசினர்; கரடு முரடான பழைய செய்யுட்களை எங்கள்மேல் வீசியெறிந்து, எங் களை ஹிம்ஸித்து, பயமுறுத்தச் சக்தியற்றவர் போலிருந்தார். உண்மையில் செந்தமிழ் தெரிந்தவராயின் இப்படி 'அப்பாவி' யாய் இருப்பாரா? இவ்வித 'சாதாரணப் பேச்சு' இருப்பானேன்?

அந்த வருஷம் ஜுலை மாதம் இரண்டாம் வாரம் புதன்கிழமை காலை 10–30 மணிக்கு, செங்கோடையனும் நானும் ஒரு முடிவு செய்தோம். அதாவது 'இவர் சுத்த பிரயோசனமில்லை' என்பதே. (இங்கிலீஷில் எங்கள் இருவருக்கும் நல்ல மார்க்கு வந்துவிட்டதால் எங்களுக்குள் சுயமதிப்பும் பரஸ்பர கௌரவமும் அதிகம்).

ஆனல் வெகு சீக்கிரத்தில் இந்த முடிவு மாறுதல் அடைந்தது. முதலாவது, ஹண்ட்டர் துரை இவருக்குக் காட்டும் மரியாதை யைப் பார்த்ததில், இந்தப் பண்டிதரிடம் ஏதோ சரக்கு இருக்கும் என்ற நம்பிக்கை பிறந்தது. மேலும், தமிழ்ப் பண்டிதர்களிடம் நாங்கள் எதிர்பார்த்த குணங்கள் இவரிடம் காணவில்லை என்ற லும் இங்கிலீஷ் அல்லது சரித்திர வாத்தியார்களுக்குக் கூட இல்லாத சாதுர்யமும், கேலிப் பேச்சும், லௌகிக அறிவும் இவ ரிடம் புலப்பட்டன. மாணவர் ஒவ்வொருவரின் பேர் ஊர், குடும் பம் முதலிய வரலாறுகளைக் கேட்டு, ஒவ்வொருவருடைய தகப்ப ஞர், சிற்றப்பா, பெரியப்பா, தாத்தா முதலியவர்களைப்பற்றியும், அவர்கள் ஊரோ, கிராமமோ சரித்திரத்திலும் பாட்டிலும் பெற்ற பேரைப் பற்றியும் இன்னும் என்ன என்னவோ ஸ்வாரஸ்யமான விஷயங்களைப்பற்றியும் அவிழ்த்து விட்டார். திவான் சேஷையா

சாஸ்திரி முதல், மாங்குடிக்கு நாலுமைல் தூரத்திலுள்ள சூரைக் காயூர் கிராம முனிஸீப் முத்துசாமி பிள்ளைவரை, நாங்கள் பேர் சொன்ன நபர்கள் எல்லோரும் தமக்கு நெருங்கிய சிநேகிதர் என்றும், தமிழ்நாடு முழுவதிலும் தமக்குத் தெரியாத கிராமமாவது, மிராசுதாரராவது, உத்தியோகஸ்தராவது இல்லை, இருந்திருக்கவும் முடியாது என்றும் சந்தேகம் தீர நிரூபித்து விட்டார். புத்தியுள்ள மாணவர்கள் இதை உணர்ந்து அன்று முதல் இவர் வகுப்பில் வெகு மரியாதையாய் நடந்து கொண்டார்கள்.

ஐயரவர்கள் வெளியிட்டிருக்கும் தமிழ் நூல்களின் தொகையையும் அவற்றின் இலக்கியச் சிறப்பையும் அவற்றினுள் பொதிந்து கிடக்கும் சரித்திரச் சாக்ஷியங்களையும் கருதுங்கால் தமிழுக்கு இவர் ஒருவர் செய்திருக்கும் தொண்டு எவரும் எந்தப் பாஷைக்கும் எக்காலத்திலும் செய்ததில்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம். கான்ஸ்டான்டிநோபில் நகரிலிருந்து தப்பியோடும் கிரேக்க சாஸ்திரிகள் இத்தாலியா தேசத்துக்குக் கொணர்ந்த ஏடுகளே ஐரோப்பா புனர்ஜன்மம் பெற்றதற்கு ஒரு முக்கிய காரணமென்பர். பாரதியாருக்குக் கவிதையிலும், தமிழரனைவருக்குமே வாழ்க்கையிலும் உயிரும், உத்ஸாகமும் ஊட்டத் தமிழ்நாட்டுக்கு புனர்ஜன்மம் அளித்தவர் இவரே. எத்தனையோ புலவர்களும் கல்விக்கழகங்களும் அரச குடும்பங்களும் ஒன்று சேர்ந்து நூறு வருஷ காலத்தில் ஐரோப்பாவில் நடத்திவைத்த ஒரு பெரிய காரியத்தை இந்தத் தமிழர் ஒருவராகச் செய்து முடித்திருக்கிறார். ✱




# தமிழ் காத்த செம்மல்

(சொக்கு சுப்பிரமணியன், எம். ஏ.)

இலக்கிய உலகம் வாட்டும்
இருளினில் இருந்த போது
விலக்கிடும் கதிரோ னாக
விரைந்திவண் வந்து காத்துத்
துலக்கிய தமிழின் தாத்தா
துய்யபேர்ச் சாமி நாதர்
கலக்கமில் மொழியின் தந்தை ;
கனிதமிழ் காத்த செம்மல் !

வாடிய பயிர்க்கு நல்ல
வளர்மழை யாக வந்தார் ;
நீடிய கவிதைக் கோயில்
நிலைபெற நிறுத்தி வைத்தார்
நாடிய செய்கை எல்லாம்
நலத்துடன் முடியும் மட்டும்
ஓடிய வாறி ருந்தார் ;
ஒண்டமிழ்த் தாத்தா ஆனார் !

கலைநிலா பொழியும் மட்டும்
கதிரொளி இலங்கும் மட்டும்
அலைதவழ் உலகில் நந்தம்
அருந்தமிழ் இருக்கும் மட்டும்
சிலையதில் எங்கள் நெஞ்சச்
சிலையதில் நிலைத்த அன்னார்
நிலையுறு புகழும் வாழ்க!
நெடிதுநாள் சிறந்து வாழ்க !

*Sri-La-Sri*
*Subramania Pandarasannadhi Avl.*
Adhinakarthar
TIRUVAVADUTHURAI MUTT

TIRUVAVADUTHURAI
(TANJORE DT.)

29—11—61

மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் நமது ஆதீனத்தில் ஆதீனவித்துவானுக விளங்கியவர். அவர் ஒரு நடமாடும் பல்கலைக் கழகம். நமது ஆதீனச் சார்பிலேயே பல இடங்களில் பல ஆண்டு பாடஞ்சொல்லி யும் இலக்கியங்கள் இயற்றியும் வாழ்ந்தவர். நூற்றுக் கணக்கான மாணவர்கள் அவரிடம் படிப்பாரும் படிப் பவர்களிடம் படிப்பாருமாக விளங்கினுர்கள். ஆகவே பிள்ளையவர்களின் கல்விக் குடும்பமும் மிகப் பெரிது என்னலாம்.

பிள்ளையவர்களுடைய செல்லப்பிள்ளையும் சிறப்பான பிள்ளையும் நமது ஐயரவர்கள். மேலகரம் மகாசந்நி தானம் அவர்களிடமும் பிள்ளையவர்களிடமும் பாடம் கேட்கும் திருவருள் வாய்ப்பு ஐயரவர்களுக்கு வாய்த்தது. அதனுல் ஐயரவர்களுக்குச் சீரும் செல்வாக்கும் பெருகுவ தாயிற்று. நமது ஆதீனம் சரஸ்வதி மகாலாகிய ஞானக் களஞ்சியத்திலுள்ள பல ஏட்டுச் சுவடிகள் அவர்க ளுடைய சங்க இலக்கிய வெளியீட்டுப் பணிக்குப் பெரி தும் உதவின. சைவத் தமிழுலகம் அவர்களை என்றும் மறவாது போற்றிப் புகழக் கடமைப்பட்டுள்ளது.

ஐயரவர்களை நமது ஆதீனம் கல்வி நிர்வாகம் இவற் றில் தக்க இடம் அளித்து மதித்து வந்தது. அவர்களும் நமது ஆதீனத்தைத் தன் தாயகமாகவே எண்ணி அன் போடு வந்து போவார்கள். அந்தப் பண்பாடு அவர்கள் பரம்பரையில் வளர்ந்துகொண்டே வருகிறது.

இவ்வண்ணம் என்றும் எதனுலும் மாருத நன்றிப் பேருள்ளம் படைத்த ஐயரவர்கள் தமிழுலகுக்குச் செய்த பெருநன்றியை மறவாது, தில்லித் தமிழ்ச் சங்கம் அவர் களுக்கு ஞானமலர் சூட்டுவதைக் கேட்டு மகிழ்கின்றோம். ஸ்ரீ ஞானமா நடராஜப்பெருமான் திருவருள் அனைவர்க் கும் என்றும் நின்று நிலவுவதாக.

நமசிவாயம்

குருபாதம்

தருமபுர ஆதீனம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்,
மாயூரம் P. O.

29—11—1961

தமிழ், இலக்கிய வளம் சான்ற இனிய தெய்வீக மொழி. காலத்தால் மூத்த பெரு மொழி. அருளாளர் களின் நறுமொழிகளால் செழித்து நிற்கும் திருமொழி. தமிழைக் கம்ப நாடார்,

“ என்றுமுள தென்றமிழ் ”
“ தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் ”

என்றெல்லாம் சிறப்பிப்பார் ; சேக்கிழார்,

“ ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ் ”

என்று ஏத்துவார். இவ்வாறு சான்றோர் பலராலும் நலம் பாராட்டப்பெற்ற தமிழ், சங்க இலக்கியங்களையும், காப் பியங்களையும், திருமுறைச் செல்வங்களையும் திருவாய் மொழித் தேனமுதையும் பெற்றுக் கனிந்து சிறக்கின்றது.

இன்று தமிழ் உலகம் தமிழ் நூல்களைச் செப்பமாகப் பெற்றுக் கற்றுப் பயனெய்துவதற்கு இந் நூற்றாண்டின் சிறந்த பதிப்பாசிரியராக விளங்கிய டாக்டர் திரு. உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் காரணமாவார். இந்தத் தமிழ்ப் புலவர் அயராதுழைத்து நாடெங்கும் தேடி, நல்ல சுவடிகளை ஆராய்ந்து பதிப்பித்தார். இத் தலைசிறந்த பெருமை இம் முதுபெரும் புலவர்க்கு என்றும் உண்டு.

‘ஐயர் பதிப்பு’ என்று புகழ்ந்து சொல்லக்கூடிய ஒரு பெருமதிப்பைத் தமிழ் உலகில் பெற்றிருக்கும் புலவர் திரு. சாமிநாத ஐயர்.

நம் செந்தமிழ்ச் செல்வர் திரு கி. வா. ஜகந்நா தையரைப் போன்ற பல தமிழ்ப் புலவர்களைக் கல்விக் களஞ்சியமாக்கிவிட்ட டாக்டர் திரு. சாமிநாத ஐயரின் தமிழ்த் தொண்டுகள் என்றும் மறையாத மாண்புள்ளவை.

பல நல்ல செயல்களை அடக்கமுடன் புரிந்துவரும் தில்லித் தமிழ்ச் சங்கத்தினர், “சுடர்” சிறப்பிதழாகத் தமிழறிஞர் சாமிநாத ஐயரின் பணிகளைப் பாராட்டு முகத்தான் வெளியிடும் இவ்விதழ் நன்கு சிறந்து ஓங்கு மாக! செந்தமிழ்ச் சொக்கர் திருவருளால் தமிழ்ச் சங்கம் நீடு வாழ்க! வாழ்க உலகெலாம்!

---

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் அவர்கள்

திருப்பனந்தாள்
(தஞ்சாவூர் ஜில்லா)
11–12–1961

நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளிய ஆலவாய் விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த குமர வேளும் முதலானோர் ஆய்ந்த தண்டமிழ் மொழியை வழி வழி வளர்த்த பரம்பரையில் தோன்றியவர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் ஆவர். அவர்கள் தமிழ் நாடெங்கணும் அலைந்து திரிந்து ஓலைச்சுவடிகள் பலவற்றையும் சேமித்து ஆய்ந்து, சங்க நூல்களையும் பிற்கால நூல்களையும் செம்மையான திருந்திய முறையில் வெளியிட்டுள்ளமை தமிழுலகு அறிந்ததொன்று. பேச்சிலும் எழுத்திலும் தமக்கென்று தனிநடை அமைத்துக் கொண்டு தமிழை வளர்த்த பழுத்த தமிழ்ப் புலவராகிய டாக்டர் ஐயர் அவர்கள் சிறந்த சிவபக்திமானாகத் திகழ்ந்தவர்கள். சிவ பூசையும் தேவார பாராயணமும் நித்தலும் நியமமாகப் பூண்ட ஐயரவர்கள் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற சமண காவியங்களையும், மணிமேகலை ஆகிய பௌத்த காவியத்தையும் யும், அவ்வச் சமயத்தவரும் வியக்கும் வண்ணம் வெளியிட்டிருப் பது அவர்களுடைய சமய நடுவு நிலைமையைத் தெற்றென விளக் கும். இலக்கிய இலக்கணக் கடலெனத் திகழ்ந்து, தாக்ஷிணாத்யகலா நிதி திராவிட வித்யாபூஷணம் முதலாகிய பட்டங்களை யெய்தித் தம் வாழ்நாள் முழுவதையும் தமிழ்த் தொண்டிலேயே ஈடுபடுத்திய டாக்டர் ஐயர் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றி நினைவு கூர்தற் பொருட்டுத் தில்லித் தமிழ்ச் சங்கத்தார் சுடரை வெளியிட்டிருப்பது சாலச் சிறப்புடையதாகும். இச்சுடர் வெளி வருவதற்கு ஐயர் அவர்களுடைய பேரனார் திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் முன்னின்று பணிபுரிந்தமை பாராட்டற்குரியது.

சுடரின் புகழ் ஓங்கி வளர்க !

சிவ சிவ

# தமிழ்த் தலைவர்

## (குன்றக்குடி அடிகளார்)

தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தமிழ்த்தலைவர், தமிழர்களின் தலைவர். ஐயர் என்ற சொல்லுக்கு அரும்பொருளாகத் திகழ்ந்தவர். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரைத் தமிழ் ஐயர் எனப் பாராட்டும்–போற்றும். சாமிநாத ஐயர் அவர்கள் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் மட்டுமல்ல. கால வெள்ளத்தில் அழிந்து போகாமல் தமிழைக் காப்பாற்றியவருங்கூட. ஐயர் அவர்கள் நஞ்சை கொழிக்கும் தஞ்சையில் பிறந்தவராயினும், நற்றமிழ் நாட்டுக்கே உரியவரானார். உயர்ந்த கல்வியும், ஞானமும் வேற்றுமைகளைக் கடந்தன என்பதற்கு ஐயரவர்களின் வாழ்க்கை வரலாறு சான்றாகும். ஐயரவர்கள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணக்கர். தியாகராாசன் செட்டியார் அவர்களின் அன்பிற்கு உரியர். இது ஒன்றே ஐயரவர்களின் விரிந்த மனப்பான்மைக்குக் காரணம் கூறும். ஐயரவர்கள் தமிழகத்தில் பழங்காலப் புலவர்களுக்கு எல்லாம் கிடைக்காத ஒரு பெருமையைப் பெற்றிருந்தார். அது என்ன பெருமை? பழங் காலத்தில் பெரும்பாலும் ஓர் அரசவையைச் சேர்ந்த புலவரை இன்னொரு அரசவை ஏற்றுப் போற்றுவதில்லை. ஆனால் ஐயரவர் களோ தமிழகக் குறுநில மன்னர்கள் அத்துணை பேரின் ஆதரவை யும் பெற்றுத் திகழ்ந்தார். அவ்வளவோடமையாது தமிழகத்தின் திருமடங்கள் அனைத்தின் ஆதரவையும் ஒருங்கே பெற்றிருந்தார். ஏன்? அவருடைய தமிழ்க் காதலும், புலமையும் வளர, திருவாவடு துறைத் திருமடம் உறுதுணையாக விளங்கியது. குன்றக்குடி, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய திருமடங்களின் தலைவர்கள்

அவ்வப்போது ஐயரவர்களை அழைத்துப் பாராட்டிப் பரிசுகள் வழங்கியுள்ளனர். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தில் 39ஆவது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக தேசிகர் அவர்கள் வடமொழியும், தென்மொழியும் முழுதுணர்ந்த புலமைச் செல்வர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும், ஐயரவர்களும் தேசிகர் அவர்களும் ஒன்றாக உடனிருந்து பாடம் கேட்டவர்கள். ஐயரவர்களின் சிலப்பதிகாரப் பதிப்புக்கு உரிய ஏட்டுச் சுவடியைத் தந்ததினும், பொருளுதவி வழங்கியதினும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்குக் கணிசமான பங்குண்டு. அதை ஐயரவர்களே தமது சிலப்பதிகாரப் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். காலத்தால் மூத்த நமது தமிழ், கருத்தால் சிறந்த பல்வேறு இலக்கியங்களைக் காலத்திற்குக் காலம் பெற்றிருந்தும் அவற்றைப் பேணிக் காக்கும் திறனின்மை காரணமாகப் பல அழிந்துபட்டன. இன்று தமிழர்கள் தங்கள் பெருமையைப் பறைசாற்றிக் கொள்ளத் துணையாக இருக்கும் சங்க இலக்கியங்களை நாடெலாம் தேடிக் கொணர்ந்து அச்சிட்டு வழங்கிய பெருமை ஐயர் அவர்களுக்கேயுண்டு. ஐயர் அவர்களின் பதிப்பு ஆராய்ச்சியாளர்கட்குரிய முறையில் அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. ஐயரவர்கள் தமிழ் நாட்டில் பிறவாதிருப்பாரானால் தமிழின் "கதி" என்னவாயிருக்கும்? என்று எண்ணிப் பார்த்தாலேயே ஐயரவர்களின் பெருமை தெள்ளிதிற் புலனாகும். ஐயர் தமிழால் வளர்ந்தார். தமிழ் ஐயரால் வளர்ந்து வாழ்கிறது. தக்க தருணத்தில் தமிழைக் காத்துத் தந்த ஐயரவர்களைத் தமிழ்த் தலைவர் என்று கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

MINISTER OF
TRANSPORT & COMMUNICATIONS
INDIA
புது தில்லி, 6-12-1961

ஆண்டுதோறும் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு மலர் 'சுடர்' தில்லிவாழ் தமிழ் மக்களிடையே உலவி வருகிறது. இவ்வாண்டும் 'சுடர்' தில்லி வாழ் தமிழ் மக்களுக்குத் தமிழ் விருந்தாய் வெளி வருவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்ச் சங்கம் தலைநகரில் நூல்கள் வினியோகித்தும் கூட்டங்கள் கூட்டியும் இன்ன பிற தமிழ்த் தொண்டாற்றியும் வருவது யாவரும் அறிந்ததே. அத்துடன் ஆண்டுதோறும் ஒரு தமிழ்ச் "சுடர்" இதனையும் தமிழன்னையின் காலடியில் சமர்ப்பித்துத் தொண்டு புரிந்து வருவது போற்றுதற்குரிய செயலாகும். இம்மலர் அடுத்துவரும் ஆண்டுகளிலும் மலர்ந்து மணம் வீச எனது ஆசிகளை அனுப்பியுள்ளேன்.

ப. சுப்பராயன்

M. BHAKTAVATSALAM
*Home Minister*

FORT ST. GEORGE
MADRAS
30-9-1962

தங்கள் 18ந் தேதிக் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி. தங்கள் "சுடருக்கு" என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
எம். பக்தவத்ஸலம்

C. SUBRAMANIAM
*Minister for*
*Finance and Education*

FORT ST. GEORGE
MADRAS
6–10–1961

மனிதனின் நாகரிக வளர்ச்சிக்கு மொழி உறுதுணையாக இருந்து வந்துள்ளது. பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள், தாய் மொழியின்பால் கொண்டுள்ள பாசத்தால் இணைக்கப்படுவது இயற்கையே. தானும் வாழ வேண்டும், பிற மக்களும் வாழ வேண்டும் என்ற பரந்த மனப்பான்மை தமிழரின் பண்பாட்டின் முக்கிய அம்சமாகும்.

பிற மாநிலங்களில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் அன்னையை மறவாது சங்கம் அமைத்து, ஒன்றுபடுவது மகிழ்ச்சி தருவதாகும். அங்குள்ள மக்களுடன் நீங்கள் பரஸ்பரமாகவும், ஒற்றுமையாகவும் வாழவேண்டும். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பது நமது மரபாகும். நாட்டின் நலத்தையும், ஒற்றுமையையும் காப்பது உங்கள் கடமையாகும். நினைவு இதழ் சிறந்த முறையில் அமையவும், உங்கள் முயற்சி வெற்றி பெறவும் என் நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
**சி. சுப்பிரமணியம்**

'சுடர்' 1961

# பொதுப் பகுதி

*With Best Compliments*

*from*

# GWALIOR RAYON SILK MFG. (Wvg.) CO., LTD.

BIRLAGRAM

NACODA



## அருளவேண்டும் தாயே!

(இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்)

*

இராகம்: சாரமதி] [தாளம்: ரூபகம்

(பல்லவி)

அருள வேண்டும் தாயே
அங்கயற் கண்ணி நீயே எனக்கு (அருள)

(அநுபல்லவி)

பொருளும் புகழும் பொருந்திவாழப்
புவியில் நான் தலைசிறந்து வாழ (அருள)

(சரணம்)

கலைகள் கற்கவும் கற்பனைசெய்யவும்
காலங்கட வாமல் கருத்தைத்திருத்தவும்
உலகிலே நல்ல உண்மைகள் பேசவும்
உன்னை நினைக்கவும் உறுதியாய் வாழவும்
(அருள)



4596—5

*With the Best Compliments*
*from*

# PANDYAN
## INSURANCE COMPANY LTD.

FOR ALL CLASSES OF
GENERAL INSURANCE BUSINESS

*Head Office:*
PANDYAN BUILDING, MADURAI

*Branch Office:*
INDRA PALACE, CONNAUGHT PLACE,
NEW DELHI-1

Phone No. 45503 Grams: 'PANDYAN'

*

*Other branches at:*
BOMBAY, MADRAS, CALCUTTA etc.

# சீடன்

மாயாவி

"ஆனந்த்!"

"என்ன ஸுஜாதா!"

"தங்கள் உள்ளம் இன்னும் இந்த ஏழைபால் இரக்கம் கொள்ளவில்லையா?"

"ஸுஜாதா! என்னைச் சோதித்தது போதும், சோதரி. ஏன் இவ்வாறு உன் வாயினின்று வரத்தகாத சொற்களை உதிர்க்கிறாய்?"

"இது சோதனை அல்ல, ஸ்வாமி. என் பிரேமையின் சமர்ப்பணம். சற்றே தங்கள் அகக்கண்களைத் திறந்து இந்தப் பேதையின் உள்ளத் துடிப்பைப் பாருங்கள். ஆனந்த்! இளமையின் வளர்பிறைப் பருவத்திலிருக்கும் நமக்கும் துறவுக்கும் வெகு தூரம். அதைத் தங்களுடன் பழகப் பழக நான் நன்கு உணருகிறேன். தேவா! உங்கள் வனப்பு என்னுள் காதல் தீயைக் கொழுந்துவிட்டு எரியச் செய்து வருகிறது. அதன் வேகத்தை என்னால் தாங்க முடியவில்லை. அழகாகச் சுருண்டு, கருநாகம் போலவும், நீலத்திரைக் கடலின் மெல்லிய அலை அடுக்குகளைப் போலவும், அமைந்துள்ள உங்கள் சிகை முதல்........."

"போதும், ஸுஜாதா. கேட்கச் சகிக்கவில்லையே. இது என்ன பேதமை சகோதரி! புத்த தேவரிடம் சிஷ்யையாகி, பிக்ஷுணிக் கோலம் பூண்டிருக்கும் உன்னிடமிருந்து, உலக போகத்தில் ஆசையும், அநித்தியமான உடல்மீது மோகமும் வெளிப்படுவதை என்னால் நம்பவே முடியவில்லையே! வேண்டாம், சோதரி. இவ்வுடலும், அதற்கு அழகைத் தரும் ஒவ்வோர் அங்கமும் அழிவுள்ளவை என்பதை நீ அறியாயா? அவற்றின்மீது நாட்டம் கொண்டு, என்னையும் அழித்து, உன்னையும் அழித்துக் கொள்ள ஏன் முயலுகிறாய்?"

"நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள், ஸ்வாமி. ஆனால் பீறிட்டு வழியும் என் பிரேமை ஊற்றை உங்கள் வேதாந்தப் பேச்சு வற்றடித்துவிட முடியாது. மனித உடல் அழியக்கூடியது தான். இதோ என்னை உங்களிடம் மயங்க வைத்துவரும், உங்களது கார்மேகக் கூந்தல் கூட மூப்படைந்து உருமாறி அழியக் கூடியதே. ஆயினும், அழுகிப் போகுமுன் கனியைப் புசித்து விடுவதல்லவா அறி

வாளியின் செயல்? அதுபோல், நமது உடல், அதை மூடியுள்ள இளமை, என்னைக் கிறங்க வைக்கும் தங்கள் பட்டுச் சிகை, இவற்றை மூப்பு வந்து மூடி, அழிப்பதற்கு முன் அநுப வித்துவிட ஏங்கித் தவிக்கி றேன், ஸ்வாமி.''

'' ஐயோ ஸுனதா! ஏன் இப்படி என் மனத்தின் வைராக் கியத்தைக் குலைக்கிறாய்?''

'' அப்படியானால் நான் மனம் உடைந்து, பிரேமைக் கனலால் எரிக்கப்பட்டுச் சாம்பராக வேண்டியதுதானா? ஆனந்த்! நமது சுற்றுப் பிரயாணத்தின் தொடக்கத்தில் குருநாதர் தங்க ளிடம் கூறிய மொழிகளைச் சற்றே நினைத்துப் பாருங்கள். என் மனம் நோகத் தாங்கள் நடந்து கொள்ளலாகாது என்று அவர் உபதேசிக்கவில்லையா?''

'' ஆம், ஸுனதா. ஆனால் நீ விரும்புவது.........''

'' ஆம், நான் விரும்புவது, இதோ இந்த, மனத்தை மயக் கும் அழகிய சிகையும், அதற்கு உடையவருந்தான்!''

'' போதும், ஸுனதா. தயை செய்து எனக்குச் சிந்திக்க அவ காசம் அளி. நாளைக் காலைக் குள்......''

'' நாளைக் காலைக்குள் என்னு டையவர் ஆக இசைந்து விடு வீர்கள் அல்லவா? காத்திருக் கிறேன், ஸ்வாமி. ஒரு நாள் என்ன? ஒரு மாதம் வேண்டு மானாலும் உங்கள் உடலை என்னுடையதாக்கிக் கொள்ளக் காத்திருக்கிறேன்.

* * *

முதுமை, நோய், சாவு, இவற்றிலிருந்து மனித குலத்தை மீட்க வழி தேடி, அரசகுமாரர் சித்தார்த்தர் அரண்மனையைத் துறந்து, கானகம் ஏகிக் கடுந்தவம் புரிந் தார். போதி மரத்தடியில் அன்ன ஆகாரமின்றி நெடுங் காலமாகத் தியானத்தில் ஆழ்ந் திருந்த அவரை ஸுஜாதை என்ற யாதவ மங்கை கண் டாள். இந்த அகோரத் தவத் தினால் அவருடைய உடல் அழிந்துவிடுமே என்று அஞ் சிய அவள், வட்டிலில் பாலன் னத்தைப் பிசைந்து எடுத்து வந்து தன் மகவுக்கு ஊட்டுவது போல் அண்ணலுக்கு ஊட்டி னாள். அந்த அன்புப் பருக்கை ஐயனின் அடிவயிற்றை அடைந்ததும், அவருக்கு ஞான போதம் உண்டாயிற்று. அந்த அறிவொளியில், அன்பே உலகை ஆக்கும் கருவி என் றும், ஆசையே அழிவின் ஆணிவேர் என்றும் அவர் கண்டு கொண்டார்.

மனித குலம் ஆசைக்குப் பலியாகி அழிந்து போகாமல், அன்புப் பாதையில் சென்று இன்புற்று வாழவேண்டி போதி சத்துவர் ஊர் ஊராகச் சுற்றி இவ்வுண்மையைப் பிரசாரம் செய்து வந்தார். புத்தபகவா னின் தத்துவ மேன்மையை உணர்ந்து ஆயிரக்கணக்கான ஆண்-பெண்கள் அவருடைய மதத்தைப் பின் பற்றினர். அண்ணலின் அடியாராகி அவ ருடனே பௌத்த மதப் பிரசா ரத்தில் ஈடுபட்டனர்.

தமது தத்துவம் உலகெங் கும் பரவி, மனிதகுலம் உய்ய

வேண்டும் என்பதே கௌதமரின் விருப்பம். ஆயினும் தமது சீடராக விரும்பிய ஒவ்வொருவரையும் அவர் கடுமையான பரிசோதனைகளுக்கு உட்படுத்தி, அதில் தேர்ச்சி பெற்றவர்களையே ஏற்றுக் கொண்டார்.

இவ்வாறு தேர்ந்தெடுத்த உத்தமச் சீடர்களுடன் புத்த பகவான் தமது பிரசாரப் பணியில் ஈடுபட்டு ஓர் ஊருக்கு வந்து சேர்ந்தபோது, அழகும், இளமையும் உடைய காளைப் பிராயத்தான் ஒருவன், ஒரு நாள் அவரைக் காண வந்தான்.

தம்மை வணங்கி எழுந்த அவனிடம், "உன் விருப்பம் யாது, வத்ஸ?" என்று வினவினார் போதிசத்துவர்.

"தேவ! என்னையும் தங்கள் சீடர்களில் ஒருவனாக்கிக் கொள்ள வேண்டுகிறேன்," என்று பணிவோடு விண்ணப்பித்தான் ஆனந்த் என்ற அந்த இளைஞன்.

"குழந்தாய்! நீ இளமையின் துடிப்பான பிராயத்தில் இருக்கிறாய். அழகு உன்னை அணி செய்திருக்கிறது. ஆதலால், இவ்வயதில் நீ துறவு பூண்டு, கடுமையான கட்டுப்பாடுகளுடைய என் சீடர் குழாத்தில் ஒருவனாவது இயலாத காரியம். எத்தனை உறுதி உனக்கு இருந்தாலும், இளமையும், அழகும் உனக்குப் பகையாகி உன் உறுதியைக் குலைத்து விடும்."

"இல்லை, ஸ்வாமி. எந்நிலையிலும், எவராலும் என் உறுதியைக் குலைக்க முடியாது. அழிவுள்ள இந்த இளமைக்கும், அழகுக்கும் எந்த விதமான முக்கியத்துவமும் அளிக்காமல், தங்கள் தத்துவமே என் குறிக்கோளாகக் கொண்டு, எல்லாக் கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி நடந்து வருவேன். என்னை ஏற்றருள வேண்டும், தேவா," என்று மன்றாடினான் ஆனந்த்.

புத்தர் பிரான் இளஞ்சிரிப்புச் சிரித்தார். பின்னர் சொன்னார்: "சரி, என்னுடனே சில நாட்கள் தங்கியிரு. பிறகு பார்க்கலாம்."

* * *

சீடராவதற்குரிய சோதனைக் காலத்தில் இருக்கிறோம் என்பதை ஆனந்த் உணர்ந்திருந்தானே, என்னவோ, அவனது பக்குவமடையாத இளமை மனம் கௌதமரின் முதற் சோதனையில் அவனைத் தோல்வியுறச் செய்துவிட்டது.

ஒரு பகலில், சீடர் குழாம் தங்கியிருந்த ஆசிரம விடுதியிலிருந்து விலகி, ஆற்றுக்குச் செல்லும் வழியில் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தான், அவன். அவ்வழியே பெண் சீடர்களான பிக்ஷுணிகள் சிலர் தண்ணீர் எடுத்துச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களுள் மிக வனப்புடைய பிக்ஷுணி ஒருத்தி வேண்டுமென்றே போகும் போதும், வரும்போதும் ஆனந்தனை நோக்கி மருட்சி நிறைந்த பார்வையை வீசினாள். அப்பார்வை ஆனந்தனின் இளமை உள்ளத்தைத் தாக்கி விட்டது. அவன் தன் நிலையை மறந்து, அந்தப் பிக்ஷுணியை ஆவல் ததும்பும் கண்களுடன் இமை அசையாது பார்த்துக் கொண்டிருந்தான்.

"யாரை அவ்வளவு ஆவ

லுடன் நோக்குகிருய், வத்ஸா?'' என்ற குரல் கேட்டு அவன் திடுக்கிட்டுத் திரும்பினன். அவன் பின்னுல் புத்த தேவர் குறுநகையுடன் நின்ருர். வெட்கத்தாலும், அச்சத்தாலும் ஆனந்தன் தலை குனிந்தது. அவன் பேச வாயிழந்து நின்ருன்.

புத்தர் அவனை அன்புடன் தடவியவாறு சொன்னுர்: "உன் உள்ளம் துறவை ஏற்கும் பக்குவ நிலையை இன்னும் அடையவில்லை, வத்ஸ. எவளிடம் உன் மனம் உன்னையும் அறியாமல் லயித்ததோ, அவளுடனே நீ ஓராண்டு சுற்றுப் பிரயாணம் செய்து திரும்ப வேண்டும். அதன் பிறகும் உன் உள்ளம் நிலைதவருதிருக்குமானுல் நீ எனது சீடனுவாய்.''

குருநாதரின் கட்டளையை ஏற்று ஆனந்த், ஸுனதா என்ற அந்த இளம் பிக்ஷுணியுடன் சுற்றுப்பயணம் புறப்பட்டான். புறப்படுமுன் அவர்கள் தம்மை வந்து வணங்கிய போது புத்தர் பெருமான் ஆனந்திடம் சொன்னுர்: "இந்த ஓராண்டும் உன் சோதனைக் காலம் என்பதை நன்ருக நினைவில் வைத்துக்கொள், வத்ஸ. உன்னுடன் வருபவள் நெருப்பு என்பதும் நினைவிருக்கட்டும். அந்த நெருப்பின் முன் உன் மனமாகிய பஞ்சு எரிந்து சாம்பராகாமல் இருந்தால், நீ என் சீடனுகும் தகுதியைப் பெறுவாய். அதற்காக அந்த நெருப்பைத் தண்ணீரைக் கொட்டி அணைத்துவிடவும் கூடாது. எக்காரணத்தை முன்னிட்டும் ஸுனதாவின் மனம் நோகும்படி நீ நடந்து கொள்ளலாகாது.''

"ஆக்ஞைப்படி நடந்து கொள்ளுகிறேன், ஸ்வாமி'' என்ருன் ஆனந்த்.

* * *

புத்த பகவான் எச்சரித்தவாறு, சோதனைக் காலம், ஆனந்துக்கு அந்தச் சுற்றுப் பிரயாணத்தின் தொடக்கத்திலிருந்தே தொடங்கிவிட்டது. அவனைச் சோதிப்பதற்காகவே உடன் வந்திருந்த ஸுனதா, தன் கோலத்தை மறந்து அவன் மீது காதல் உற்றவள்போல் நடிக்கலானுள். வெறும் பேச்சாலும், நடிப்பாலும், அவனுடைய உறுதியை அசைக்க முடியாமற்போன பிறகு, அவள் இன்னும் கடுமையான சோதனைகளில் இறங்கினுள். அந்தச் சோதனையின் முதற்படியாகவே, கதையின் தொடக்கத்தில் விவரித்த விவாதம் அவர்களிடையே நடந்தது.

* * *

மறுநாட் காலையில் ஆனந்த் ஸ்னனத்துக்குச் சென்று திரும்பியபோது அவன் கோலத்தைக் கண்டு பிக்ஷுணி ஸுனதா உள்ளத்துக்குள்ளே நகைத்துக் கொண்டாள். ஆயினும் திடுக்கிட்டவள்போல், "ஐயோ! இது என்ன ஸ்வாமி? உங்கள் பேரழகின் சிகரமாக விளங்கிய சிகையை அகற்றி விட்டீர்களே!'' என்ருள்.

"ஆம் சகோதரி. அது உன்னையும், என்னையும் பாவப் படுகுழியில் தள்ளக் காரணமாகி நிற்கிறது என்று அறிந்த பின்னர், என் உடலில் அதற்கு

இடம் அளிக்க விரும்பவில்லை. பிறர் இச்சிக்கும் பொருளைத் தன்னகத்தே உடையவன் துறவியாக மாட்டான் என்று நம் ஆசிரியர் பெருமான் கூறியிருக்கவில்லையா? ஆகவே, நீ இச்சித்த அதை உனக்காக அகற்றிக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தா, பெற்றுக் கொள்.''

ஸுனதா நகைத்தாள். "மனிதனின் உடலில் இருக்கும் வரையில் தான் இதற்கு அழகும், கவர்ச்சியும், ஸ்வாமி. இனி இது கழிவுப் பொருள்! எனக்கு எதற்கு இந்தக் கழிவுப் பொருள்? என்னவாயினும், நீங்கள் இந்தக் கோலத்திலும் என்னைக் கவருபவராகவே விளங்குகிறீர்கள். சிகை போய் விட்டால் என்ன? மோனத்தை உமிழும் உங்கள் தாமரை விழிகள் இரண்டும் போதுமே, ஸ்வாமி, என்னை எந்நாளும் உங்களிடம் மயங்கிக் கிடக்கச் செய்ய?''

"அந்தோ! இன்னுமா உன் உள்ளம் தடுமாறுகிறது? இன்னுமா உன்னைக் கவரும் பொருள் என்னிடம் இருக்கிறது? இது என்ன கொடுஞ் சோதனை, தேவா!'' என்று புலம்பினான் ஆனந்த்.

* * *

குறிப்பிட்ட ஓராண்டுக்குப் பிறகு சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு புத்தர் பிரானிடம் திரும்பி வந்தனர், ஆனந்தும், ஸுனதாவும்.

தம்மை வணங்கி எழுந்த ஆனந்தைப் பார்த்த போதிசத்துவர் புன்சிரிப்புடன், "வத்ஸ! இது என்ன கோலம்? உன் சிகை எங்கே? கண்கள் எங்கே?'' என்று கேட்டார்.

"ஸ்வாமி அவை என் துறவு நிலைக்கு ஊறாக நின்றதால், இச்சித்தவருக்குத் தத்தம் செய்து விட்டேன். புறக் கண்களை இழந்த பின்னர் தான் என் அகக் கண்கள் ஞான ஒளி பெற்றன,'' என்றான் ஆனந்த் சிறிதும் சலனமின்றி.

கருணைக் கடலின் முகத் தாமரை மலர்ந்தது. "சோதனையில் வெற்றி பெற்று விட்டாய், வத்ஸா. இனி நீ எனது சீடன்,'' என்றார் அவர். ✱

---

வாணிகம்–1

## எது வியாபாரம்?

இருக்குமிடத்தில் வாங்கி, இல்லாத விடத்தில் விற்பது வியாபாரம். கிடைக்குங் காலத்தில் வாங்கிக் கிடைக்காத காலத்தில் கொடுப்பது வியாபாரம். விளையும் ஊரில் வாங்கி விளையாத ஊரில் வழங்குவது வியாபாரம். விற்க விரும்புகிறவர்களிடம் வாங்கி, வாங்க விரும்புகிறவர்களிடம் விற்பது வியாபாரம்.

ஏற்றுமதியைப் பெருக்கி உள்நாட்டுத் தொழிலை வளர்ப்பது வியாபாரம். வெளிநாட்டுப் பொருள்களைக் கொணர்ந்து உள்நாட்டுத் தேவையை நிரப்புவது வியாபாரம்.

கி. ஆ. பெ. விசுவநாதம்


Supremely Yours
Brooke Bond
SUPREME
Darjeeling Tea

# அமுதப் பாவை

(சாலை இளந்திரையன்)

*

காந்தியின் மலர்போல் வட்டக்
கவினுறும் மேடை மீதில்
சாந்தமாய் வந்த மங்கை,
தகதகென்(று) ஆடு கின்ருள் ;
சூழ்ந்துள்ள " காண்போர் " நெஞ்சில்
துள்ளியே உலவு கின்ருள் !
மாந்தரில் ஒருத்தி ;—அந்த
மலர்க்கொடி நளினம் என்னே !

*

செந்தமிழ்ப் பாட லோடு
திகழ்சுவை அமுதப் பாவை
சுந்தர மாகச் சேர்ந்து
சுழலுதல் போலே, மங்கை
வந்தநல் இசையைக் கைகால்
மேனியின் இயக்கத் தாலே
தந்தனள் ;—கவிதைப் பாட்டின்
தனிப்பொரு ளாயே நின்ருள் !

*

விழியிலே ஒளியை வைத்தாள் ;
விரலிலோர் நெளிவை வைத்தாள் ;
எழிலிலே எழில்பூத்(து) ஓங்கும்
இன்முகம் தனிலே பூத்த
அழகிய இதழோ ரத்தே
அரும்புமோர் நகையை வைத்தாள் ;
வழிந்தது கலையின் தேறல் ;
மங்கையோ பொங்கும் திங்கள் !

*

காலடி வைக்க வைக்க,
கவியடி ஓசை போலே,
மேலெழும் சிலம்பின் ஓசை
மிதந்த(து)எம் இதய வானில் !
நாலடி நடப்பாள் ; நின்றே
நளினமாய் நெளிவாள் : "சாவா
நூலடீ, உன்றன் ஆட்டம்!"
என்றனர், நூறு பேர்கள்.

*

ஆடினள் ; அரங்கின் மீதே
ஆடினள் ! கண்டோர் நெஞ்சில்
ஓடினள் ; உலவி னள் ; பின்
உணர்ச்சியின் பிழம்பாய் நின்றாள் !
பாடினேன், பாடி னேன் நான் ;
பாட்டிலே பிடிப டாமல்,
ஆடிய கோலத் தோ(டு) என்
அகத்திலே நிலைத்து விட்டாள் !

# தமிழின் சொல் வளம்

கி. ஆ. பெ. விசுவநாதம்

உலகின் ஐந்து கண்டங்களிலும் உள்ள 250 கோடி மக்களால் பேசப்படுகின்ற மொழிகள் சற்றேறத்தாழ 2000 ஆகும். அவற்றுள், எழுத எழுத்துக்களைப் பெற்ற மொழிகள் 900த்திற்கு உட்பட்டவையே. இவற்றுள்ளும் இலக்கிய இலக்கணச் சிறப்பு உள்ள மொழிகள் 216. இவைகளுள் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழ் மொழி ஒன்றிற்கு மட்டுமே உள்ளது. அதுவும் ஒன்றல்ல, பல.

அவை, பழமைச் சிறப்பு, இளமைச் சிறப்பு, இனிமைச் சிறப்பு, தனிமைச் சிறப்பு, எளிமைச் சிறப்பு, வளமைச் சிறப்பு, ஒலிச்சிறப்பு, சுழிச் சிறப்பு, எழுத்துச்சிறப்பு, சொற்சிறப்பு, பொருட்சிறப்பு, நூற்சிறப்பு, கவிதைச்சிறப்பு, உவமைச்சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு எனப் பதினாறும்.

இவற்றை விரிக்கிற் பெருகும். இதனடியில் விளக்குவது தமிழின் வளமைச்சிறப்பு ஒன்று மட்டுமே. இதனைச் "சொல் வளம்" என்பர் அறிஞர். தமிழிற் காணப்படுகின்ற இச்சொல் வளத்தைப் பிற மொழிகள் எவற்றிலும் காண இயலாது. எடுத்துக்காட்டாக "இலை" என்பதையே பார்ப்போம்.

இதை "லீப்" என்பர் ஆங்கிலேயர். "பத்திரம்" என்பர் வடமொழியாளர். இதற்குத் தமிழில் உள்ள சொல் வளத்தைப் பாருங்கள். தமிழில் எல்லா இலைகளையும் "இலை" என்பதில்லை.

ஆல், அரசு, அத்தி, வாழை, மா, பலா முதலியவற்றின் இலைகளுக்கு மட்டுமே "இலை" என்று பெயர்.

அகத்தி, பசலி முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "கீரை".

மண்ணிலே படர்கின்ற கொடி வகை இலைகளின் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "பூண்டு".

அறுகு, கோரை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "புல்".

நெல், வரகு முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "தாள்".

மலையிலே விளைகின்ற உசிலை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "தழை".

சப்பாத்தி, தாழை முதலிய வற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "மடல்".

கரும்பு, நாணல் முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "தோகை".

தென்னை, பனை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "ஓலை".

இவை அனைத்திற்கும் "பத்திரம்" என்ற வடமொழிச் சொல்லோ "லீப்" என்ற ஆங்கிலச் சொல்லோ பொருந்துமா என்று பாருங்கள். அப்பொழுதுதான் தமிழ்மொழியின் சொல்வளம் நன்கு விளங்கும்.

இச்சொல்வளத்திலும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது இலையின் உருவத்தோடு அதன் பருவத்தையும் சேர்த்துக் காட்டுவதாகும். குழந்தைப் பருவ இலையைத் "தளிர்" என்றும், இளமைப் பருவ இலையைக் "கொழுந்து" என்றும், நடுப்பருவ இலையை "இலை" என்றும், முதுமைப் பருவ இலையைப் "பழுப்பு" என்றும், இறுதிப்பருவ இலையைச் "சருகு" என்றும் கூறுவர். என்னே தமிழின் சொல்வளம்!

இன்னும் மனிதனின் வாயசைப்பிற்குத் தமிழில் உள்ள சொல் வளத்தைக் காணுங்கள். அலறினான், அழுதான், ஆ வென்றான், இளித்தான், ஈ யென்றான், உறுமினான், ஊளையிட்டான், எக்களித்தான். ஒலித்தான், ஓ வென்றான், ஓதினான், கத்தினான், கனைத்தான், கீச்சிட்டான், குசுகுசு வென்றான், கூவினான், கொக்கரித்தான், கோ வென்றான், சிரித்தான், சீறினான், சே யென்றான், சொன்னான், திக்கினான், திட்டினான், படித்தான், பழித்தான், பாடினான், பிதற்றினான், பேசினான், மொழிந்தான், போதித்தான், விளக்கினான், வீறிட்டான், வைதான், வாழ்த்தினான் என்ற இவை மட்டுமோ? இன்னும் எத்தனையோ?

இச்சொற்கள் வாயின் அசைப்பை மட்டுந்தானா காட்டுகின்றன? அசைவின் ஒலியையும், ஒலியின் தரத்தையும், ஒலிப்பவனது முகத்தையும், அவன் உள்ளத்தையுங் கூடக் காட்டிக்கொண்டிருக்கின்றன. காணுங்கள். இவை அனைத்திற்கும் "சப்தித்தான்" "கர்ஜித்தான்" என்ற வடமொழிச் சொற்கள் பொருந்துமா என்று பாருங்கள். அனைத்திற்கும் ஆங்கிலத்தில் சொற்களுண்டா என ஆராய்ந்து கூறுங்கள். இவற்றில் சிலவற்றிற்கேனும் இந்தியில் சொற்களிருக்குமா என்று எண்ணிப் பாருங்கள். அப்பொழுதுதான் விளங்கும் தமிழின் சொல்வளம்.

இவை தமிழின் சொல்வளத்தைக் காட்டப் போதுமானவை என எண்ணுகிறேன்.


தலை வலியா?
உடனே சிறிதளவு
அமிர்தாஞ்சனம்
தடவுங்கள்
அது விரைவில் குணமளிக்கும்
ஜலதோஷம், ஜுரம், வாயுப் பிடிப்பு போன்ற உபாதைகளிலிருந்து உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள். ஒவ்வொரு முறையும் சிறிதளவே அமிர்தாஞ்சனம் உபயோகிக்க வேண்டியிருப்பதால் ஒரு பாட்டில் நெடுநாள் வரை நீடிக்கிறது.
அமிர்தாஞ்சனம் லிமிடெட், மதருஸ்-4
பம்பாய்-1, கல்கத்தா-1, புதுடெல்லி-1
AMRUTANJAN
The Pain Balm
Amrutanjan Limited
JWT-AM-1429

# Chentex

## HANDLOOM FABRICS

### in the world market

Recipients of the Govt.
FIRST PRIZE AWARDS
from 1955 to 1960

*fine quality*
*fancy designs*
*fast colours*
*fair price*



**Bed Sheets**
**Furnishing Fabrics**
**Towels**
**Table Covers**
**Household Linen**

*Also available at all Co-optex Emporia & Handloom Houses in India & abroad (Aden. Colombo. Kolalampur, Singapore, Bankok)*

THE CHENNIMALAI WEAVERS' CO-OPERATIVE SOCIETY LTD.,
CHENNIMALAI S. INDIA.

GRAMS: "CHENTEX" PHONE: 32 & 38

# பாத்திரங்கள்!

அவ்வை தி. க. சண்முகம்

'பாத்திரங்கள்' என்றவுடன் உங்களுக்கு என்ன நினைவுக்கு வருகிறது? நமது பெண் தெய்வங்கள் பார்க்கும் போதெல்லாம் வாங்கி வைக்க விரும்பும் சமையல் பாத்திரங்கள் தானே? நான் சொல்லப் போவது வேறு பாத்திரங்கள்—நாடகப் பாத்திரங்கள்.

ஆம்; மண், பித்தளை, செம்பு, ஈயம், வெண்கலம், வெள்ளி, இப்போது எங்கும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் எவர் சில்வர் இப்படிப் பட்ட பல்வேறு பாத்திரங்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களல்லவா? அது போல் தான் நாடகத்திலும் பல பாத்திரங்களைப் பார்க்கலாம்; உயிரோடு.

குழம்பு, ரசம், கூட்டு, அவியல், பச்சடி இப்படிப் பல பதார்த்தங்களைப் பாத்திரங்களிலே வைக்கிறார்கள் நம் தாய்மார்கள். ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி ருசி; இனிப்பு, கைப்பு, புளிப்பு இன்னும் அறு சுவை என்று ஏதேதோ சொல்லுகிறார்களே!.........மனிதப் பாத்திரங்களிலும் அப்படித் தான். பல்வேறு குணச் சித்திரங்கள் உண்டு.

வீடகப் பாத்திரங்களில் வைக்கும் பதார்த்தங்களைத் தயாரிப்பதற்கு மிளகாய், உப்பு, புளி முதலிய பல பொருள்கள் தேவை. நாடகப் பாத்திரங்களில் வைக்கும் குணச்சித்திரங்களைத் தயாரிப்பதற்கு சிந்தனை, காகிதம், பேனா இவை போதும்.

மகாத்மா காந்தியடிகள் மக்களின் அன்புக்குப் பாத்திரமானார் என்கிறோம், அன்புக்குத் தகுதியான பாத்திரமாகக் காந்தியடிகள் வாழ்ந்ததால்.

பண்டித நேரு உலகத்தின் புகழுக்குப் பாத்திரமானார் என்கிறோம். ஆம்; புகழுக்கு உரிய பாத்திரமாக நேருஜீ இருப்பதால்.

"பாத்திரம் அறிந்து பிச்சையிடு" என்று சொல்லுகிறார்கள், அதன் கருத்து என்ன? "காரியம் செய்யுமுன் அந்த மனிதப் பாத்திரத்தின் தகுதியைத் தெரிந்து கொள்" என்பது தான்.

வெவ்வேறு பதார்த்தங்களை நிறைத்து வைக்கும் பாண்டத்திற்குப் பாத்திரம் என்று பெயர் வைத்தார்கள். வெவ்வேறு குணங்களை நிரப்பி வைக்கும் மனித உருவத்திற்கும் அந்தப் பெயரையே வைத்தான் ஆசிரியன்.

சமையல் பாத்திரங்களில் நமது தாய்மார்கள் உடலுக்கு உணவு தருகிறார்கள். நாடகப் பாத்திரங்களின் மூலம் ஆசிரியன் நம் அறிவுக்கு உணவு தருகிறான்.

பாத்திரப் படைப்பு ஒரு நாடகத்தின் முக்கிய அம்சம்.

நாடகம் ஒரு முழு உருவம். கண், காது, மூக்கு முதலிய உறுப்புக்கள் பாத்திரங்கள்.

அதாவது; ஒரு கதைக்குத் தலைவன், தலைவி, மற்றும் கதை நிகழ்ச்சிகளில் தொடர்புடையவர் இவர்கள் தாம் பாத்திரங்கள்; அல்லது உறுப்பினர்கள்.

உறுப்புக்களில் ஊன மிருந்தால் உருவம் அழகா யிருக்குமா? அதுபோல, உறுப்பினர்களின் படைப்புச் சரியாக அமையா விட்டால் நாடகம் அழகு பெறாது.

பல கோடி மனிதர்கள் உலகத்தில். ஆனால் ஒருவரைப் போல் மற்றொருவர் இருப்பதில்லை. பொதுவாகப் பார்த்தால் எல்லோரும் ஒரே தோற்றம்!...... அடேயப்பா! எத்தனை எத்தனையோ மாறுபாடுகள்!!

மனிதனுடைய புறத் தோற்றத்தில் மட்டுமா?.......அகத் தோற்றத்திலும் ஆயிரம் மாறுதல்கள்! உருவம் நமக்குத் தெரிகிறது. உள்ளே யிருக்கும் உள்ளம் தெரிவதில்லை. அதைத் தெரிந்து கொள்ள அறிவுக்கண் வேண்டும்.

அந்த அறிவுக் கண்ணைப் பெற்றவன் தான் நாடகாசிரியன்.

உங்கள் மனத்தையும் என் மனத்தையும் அவன் அறிவுக் கண்களால் ஊடுருவிப் பார்த்து விடுகிறான். நம்மைப் போல் சாதாரண மனிதனா அவன்? இல்லை: இல்லை.

"ஐயப்படாஅது அகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்"

ஆம்; வள்ளுவரே கூறி விட்டார் அவன் தெய்வத்திற்கு ஒப்பானவன் என்று, அதற்கு மேல் தீர்ப்பேது?

நல்லவனும் கெட்டவனும் சேர்ந்து வாழும் உலகம் இது. நல்லவன் யார்?...கெட்டவன் யார்?...இதை நாம் எப்படித் தெரிந்து கொள்வது? அந்தப் புண்ணியத்தைத் தான் செய்கிறான் நாடகாசிரியன்.

நல்லவன் தீயவன் எல்லோருடைய வேடங்களையும் கிழித்து வெட்ட வெளிச்சமாக்கி நாடக மேடையில் சந்தி சிரிக்க வைக்கிறான்.

நாடகாசிரியன், பாத்திரப் படைப்பில் நன்கு கவனம் செலுத்த வேண்டும். இல்லா விட்டால் பாத்திரங்கள் ஒட்டையாகி விடும்.

தேவைக்கு மேல் பாத்திரங்களை வாங்கி அடுக்கி யடுக்கி வைத்து அழகு பார்க்கிறார்களே பெண்கள்! நாடகத்திலும் அப்படித் தேவையில்லாத பாத்திரங்களைப் படைத்து விட்டு அவர்களுக்குப் பொருத்தமான வேலை கொடுக்க முடியாமல் திணறுவார் ஆசிரியர்.

அவசியமில்லாத சில நகைச் சுவைப் பாத்திரங்களை அழகாகப் படைத்திருப்பார் ஆசிரியர். ஆனால் அவர்கள் கதையின் நிகழ்ச்சிகளோடு கலந்து போகாமல் ஒதுங்கியே நிற்பார்கள். பயனென்ன? பாத்திரங்கள் நிகழ்ச்சிகளோடு இரண்டறக் கலந்து நிற்க வேண்டும்.

ஒவ்வொரு நடிகனும் தான் எடுத்துக் கொண்ட பாத்திரம் எப்படிப் பட்டது? அதன் குணப் பண்புகள் என்ன? இவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

பதார்த்தங்களைச் சுவையறிந்து சாப்பிடுகிறோமல்லவா? அதைப் போல, உப்போ உறைப்போ குறைவது போல் தோன்றுமானால் ஆசிரியரோடு விவாதிக்க வேண்டும்.

ஒத்திகை பார்க்கும்போது ஒரு நடிகன் தான் எந்த அளவுக்குப் பாத்திரத்தைப் புரிந்து கொண்டிருக்கிறானோ அதன்படி நடித்துக் காட்ட வேண்டும். பாத்திரத்திற்கேற்ற மனோபாவம் நடிகனுக்கு வரவேண்டும்.

உருவத்தையும் உடையையும் மாற்றினால் போதாது. நேற்றுக் குமரன்; இன்று கிழவன்—இன்று அரசன்; நாளை ஆண்டி—பேச்சு, நடை, குரல், உணர்ச்சி, பாவம் எல்லாம் மாற வேண்டும். பாத்திரங்களுக்கு ஏற்ப இவையெல்லாம் மாறாவிட்டால் குணச் சித்திர நடிகன் எனப் புகழ் பெற இயலாது.

எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம். அதில் முக்கிய உறுப்பு கண். நடிப்பில் உயிர் வேண்டுமா? பாவம் கண்களில் தெரிய வேண்டும். விருப்பையும் வெறுப்பையும் கண்களே காட்டிவிடும். "பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்" என்கிறார் வள்ளுவர். அவர் எதைத் தான் சொல்லவில்லை?

நாடகாசிரியன் பாத்திரங்களை அழகுறப் படைக்கவேண்டும். நடிகர்கள் அவற்றின் அருமையறிந்து நடிக்க வேண்டும். அப்போது தான் நாடகம் சிறப்படையும். ✱

*The name and mark that distinguish*

L. G. COMPOUNDED ASAFOETIDA

FOR

LASTING FLAVOUR AND GENUINE EXCELLENCE

*Remember to ask for L. G. and Insist on it*

LALJEE GODHOO & CO.

SOWCARPET : MADRAS–1

Telegrams : **SWASTI**

## காற்ருடி

*

காற்றும் நூலும் உயிராகும்
காகிதம் என்ற உடலாகும்
சாற்றும் மூங்கில் என்எலும்பாம்
சகத்தில் எங்கும் யானுள்ளேன் !

தோற்றம் நிறமும் பலபலவாம்
சுற்றும் இடமோ ஆகாயம்
மாற்ருன் எனக்கு மழை மரமாம்
மாணவர் சிறுவர் எனைவளர்ப்போர் !

காற்ருல் உயரப் பறந்தாலும்
ககனம் எங்கும் சென்ருலும்
வேற்றுமை இன்றி நூல்பிடித்தோன்
விருப்பம் போலே ஆடிடுவேன் !

போற்ரு மக்கள் இலைஇங்கே
புசிப்பே இன்றி எனைப்பார்ப்பார்
நேற்ருே இன்ருே வரவில்லை
நீண்ட நாளாய் வாழ்கின்றேன் !

—வண்ணை முத்து

# தமிழ் வளர்ந்துவிட்டது?

எம். எஸ்பி. சண்முகம், எம்.ஏ.

தமிழ் வளர்ந்து விட்டது என்று சொல்லிக்கொள்வதற்கு நமக்கெல்லாம் மிகுந்த ஆசையாகத்தான் இருக்கிறது. அப்படிச் சொல்லிக் கொள்வது பெருமையாகவும் இருக்கிறது. இருபதாம் நூற்றுண்டில் தமிழ்ப் பற்றும், தமிழ் உணர்ச்சியும் மக்களிடையே மிகுதியாகக் காணப்படுகிற தென்றும் எல்லாத் துறைகளிலும் தமிழ் வளர்ந்து வருகிறதென்றும் பலராலும் நம்பப்பட்டுவருகிறது. நானுங்கூட இதுவரை அப்படித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனுல் வர வர அந்த என் எண்ணத்தில் ஐயம் புகுந்து வருகிறது. சமீபத்தில் உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஒரு பையனை இரண்டு பக்கம் தமிழில் எழுதச் சொன்னேன். சொந்தக் கற்பனையாக ஏதும் எழுதச் சொன்னதாக நினைத்துக் கொண்டுவிடாதீர்கள். நான் பாரதியார் பாடலொன்றை வாசித்தேன். அவன் எழுதினுன்.

" பரவர் ரோடு குறவருக்கும்
மரவருக்கும் விடுதலை
திறமைக் கொண்டத் தீமை யற்றத்
தொழில் புறிந்து யாவரும்,
தேர்ந்தக் கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே"

என்று அந்த பையன் அழுத்தந்திருத்தமாகவும் உச்சரிப்புப் புரியும்படியும் பிரித்துப் பிரித்து எழுதியிருந்தான்?! அந்த வரிகளுக்குப் பொருள் எழுதச் சொன்னபோது மறவர்களோடு என்று தொடங்கினுன். அதைப் பார்த்ததும், "தம்பி 'ளோ' என்ற எழுத்தை இப்படிப் போட்டிருக்கிருயே, பள்ளிக்கூடத்தில் தமிழா ஹிந்தியா" என்று கேட்டேன். "தமிழ் தான் சார்; தமிழில் 60 'மார்க்' வாங்கினேன். மாணவர் மன்றப் பரீட்சையிலும் அதிக 'மார்க்' வாங்கித் தேறியிருக்கிறேன்" என்றுன். அந்தப் பையன் தமிழை இந்த அளவோடு விட்டானே என்று எனக்குத் தோன்றியது. முன்பெல்லாம் பள்ளிக்கூடங்களில் தமிழ் ஆசிரியர்கள் கருமித்தனமாக 'மார்க்' போடுவார்கள் என்ற கெட்ட பெயர் வாங்கியிருந்தார்கள். இப்போது அவர்கள் தமிழின் தகுதியை உயர்த்துவதற்காக மிகவும் தாராளமாக நடந்து கொள்கிருர்கள்



4596—6

போலும் என்று நினைத்துக் கொண்டேன்.

* * *

அன்றொரு நாள் நான் முடி திருத்தும் கடையொன்றுக்குப் போனேன். "முத்தமிழ் முடி திருத்தகம்" என்று தலைவாயிலில் பலகையொன்று தொங்கிக் கொண்டிருந்தது. நாட்டில் எல்லாத்தரத்தினரிடத்தும் ஏற்பட்டிருக்கும் தமிழுணர்ச்சியை நினைந்து மகிழ்ந்த வண்ணம் உள்ளே நுழைந்தேன். நான் பத்திரிகை ஆசிரியராயிருக்கிறேனென்று அந்த முத்தமிழ் முடி திருத்தகத்தின் தலைவனுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. என்னை அவன் அகமும், முகமும் மலர வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி உலக விஷயங்கள் பலவற்றை விரிவாக அலசி ஆராய்ந்தான். நிறையச் செய்திகளை என்னிடம் புகுத்திய பிறகு அவன், "சார் நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்" என்ருன். கத்தியும் கையுமாக நிற்கும் அவனிடம் மாட்டேனென்று சொல்லத் துணிவு வருமா? "என்ன விஷயம்" என்றேன். "நான் 150, 160, பக்கங்களில் ஒரு சிறு கதை எழுதி வைத்திருக்கிறேன். அடிக்கடி பத்திரிகைகளைப் படித்து நிறையக் கதைகள் எழுதியிருக்கிறேன். "புருக் கூடு" பத்திரிகையில் கூட என் கவிதை ஒன்றை அதன் ஆசிரியர் போட்டார். எப்படியாவது சினிமாவில் என் கதை வந்துவிட வேண்டுமென்று எனக்கு ரொம்ப நாளாக ஆசை. என் கதையைக் கொஞ்சம் போட்டு முதலில் நீங்கள் ஊக்கம் கொடுத்தால் அப்புறம் முன்னுக்கு வந்து விடலாம்" என்ருன். பள்ளிக்கூடத்தில் அதிகம் படிக்கவில்லையென்பதையும் அவன் இடையில் தெரிவித்துக் கொண்டான். யாரோ ஒரு தமிழ் எழுத்தாளர் எழுதியதுபோல் இன்று "ஆடு குட்டி" என்று எழுதுபவர்கள் எல்லாம் தமிழ் அறிஞர்களாக உலவுகிருர்கள். சந்திரன் மேல் வானத்தில் தோன்றியதும் தாமரை நங்கை மலர்க்கரம் விரித்து வரவேற்ருள் என்று பாட்டுக் கட்டிப் பலர் கவிஞர்களாகிவிட்டார்கள். அப்படியிருக்கும்போது பள்ளிக்கூடத்திலேயே படிக்காத மேதையான இந்த முத்தமிழ் முடிதிருத்தகத்தின் தலைவரும் தன் மழலைத் தமிழ்த் திறமையால் திரை வசனகர்த்தாவாகப் பிரகாசிக்க நினைப்பதில் தவறு ஒன்றுமில்லைதான். ஆனல் தமிழைப் படிக்காமலேயே மேதைகளாகி விடலாம் என்ற எண்ணம் பொது மக்களிடத்திலிருந்து வருவதை நினைக்கும்போது தான் மனத்துக்கு என்னவோ போலிருக்கிறது.

* * *

மேல் நாட்டுப் புத்தக வெளியீட்டாளர்களைப் பற்றி நான் ஒரு முறை ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் ஒரு புத்தகத்தைக் குறிப்பிட்டு, "இந்தப் புத்தகத்தில் பல நூறு பக்கங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒரு பிழைகூடப் பார்க்க முடியாது. எந்தப் பக்கத்திலாவது ஓரிடத்தில் ஓர் உடைந்த எழுத்தேனும் இருக்

கிறதா என்று பாருங்கள்'' என்ருர். அநேகமாக வெளி நாட்டுப் புத்தக வெளியீட்டாளர்களுடைய புத்தகங்களில் பிழைகள் கண்டுபிடிப்பது சிறிது கடினம்தான். பைபிள் போன்ற சமய வெளியீடுகள் இன்னும் மிகச் சிறப்பாக இருக்கும். புனித வெளியீடுகள் என்ருல் அவற்றில் எல்லாவகையிலும் அப்புனிதத்தைக் காணலாம். தமிழ் நாட்டிலோ சமய வெளியீடுகளுக்குக்கூட மலிவான காகிதத்தையே தேர்ந்தெடுக்கிருர்கள். காகிதம் மட்டிலும் மலிவாயிருந்தாலும் பரவாயில்லை. ஆனுல் நூலிலும் பிழைகள் மலிந்து காணப்படுவது தான் அதில் வருந்துதற்குரிய செய்தியாகும். தனிப்பட்ட புத்தக வெளியீட்டாளர்கள் இப்படிச் செய்வதைத் தடுக்க வழியில்லை. ஏனெனில் அவர்கள் புத்தகம் வெளியிடுவது வியாபாரத்திற்காகவேயன்றித் தமிழ்த் தொண்டு கருதியல்லவென்று வாதாடலாம். ஆனுல் அரசினரின் உதவியோடு தமிழ் வளர்ச்சி கருதி ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு வெளியிடப்படும் சில தமிழ்ப் புத்தகங்களிலும் இப்படிப்பிழைகள் மலிந்திருந்தால் அதை என்னென்பது? இந்த நூற்ருண்டில் வெளியிடப் பெற்ற மாபெரும் தமிழ் வெளியீடொன்றை நான் புரட்டினேன். அதில் காணப்பட்ட பொருட் பிழை, வாக்கியப் பிழை, எழுத்துப் பிழைகளின் மீது ஆராய்ச்சி நடத்திஞல் ஒரு டாக்டர் பட்டமே பெற்று விடலாம் போல் அவ்வளவு பிழைகள் அதில் காணப்பட்டன. அதை நினைத்த பிறகு தான் ''தமிழ் வளர்ந்து விட்டது'' என்னும் இக்கட்டுரைத் தலைப்பில் ஒரு கொக்கி அடையாளத்தையும் சேர்த்துத் தமிழ்ப் பற்றுடையவர்களின் கருத்தைத் திருப்ப வேண்டுமென்ற எண்ணம் எனக்கு எழுந்தது.

தமிழ் மறுமலர்ச்சி அடைந்து விட்டதென்றும் ஆயிரக்கணக்கான நூல்கள் வெளி வந்திருக்கின்றன என்றும் பலர் மேடைகளில் ஏறிப் பேசுகிருர்கள். இளைஞர்களிடத்தில் தமிழார்வம் மிகுதியாக உண்டாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனுல் இன்று ஆயிரக்கணக்கில் வெளி வந்து கொண்டிருக்கும் புத்தகங்களும், மாணவர்கள் அதிகமாக விரும்பிப் படிக்கும் புத்தகங்களும் எந்த ரகத்தைச் சேர்ந்தவை? மர்மக் கதைகள், துப்பறியும் தமிழ்க் கொலை நவீனங்கள், கட்சிப் பிரசாரப் புத்தகங்கள், தமிழ் இலக்கிய இலக்கண மரபைத் தகர்த்தெறியும் மறுமலர்ச்சி நூல்கள், பேரிலக்கியங்களுக்கு ஒவ்வொருவர் தத்தம்க்குத் தெரிந்த விளக்கங்களைக் கூறும் உரைகள், கலைகளின் பெயரால் பிறந்தமேனி அழகை வர்ணித்து விலையாக்கும் கவர்ச்சிப் புத்தகங்கள் இப்படி இவைகள் இந்த நூற்ருண்டில் ஆயிரமாயிரம் வெளியாகியிருக்கின்றன. மாணவர்கள் விடுதிகளைப் போய்ப் பார்வையிட்டாலும் இப்படிப்பட்ட நூல்களையே நாம் ஏராளமாகக் காண முடிகிறது. ஆனுல் இறவாத புது நூல்களென்று குறிப்பிடத்தக்க புத்தகங்களோ, அறிவியல், நில இயல், தாவர இயல், விலங்கு

இயல், பொருள் இயல் என்ற பொது அறிவுத் துறைகளில் (ஒரு சில பாடப் புத்தகங்களைத் தவிர) பெரிய நூல்களோ ஏதேனும் இந்த நூற்றுண்டில் தோன்றியிருக்கின்றனவா என்றால் விரல் விட்டெண்ணக்கூடப் புத்தகங்கள் இல்லை.

புத்தகம் எழுதுவதில் தீரரான ஒருவரைப் பொது அறிவுத் துறைகளில் ஏதேனும் பெரிய நூலொன்றை எழுதக் கூடாதா என்று ஒரு சமயம் கேட்டேன். "அவற்றை யார் வாங்குவார்கள்" என்று அவர் என்னைத் திருப்பிக் கேட்டார். "யாரும் வாங்காவிட்டாலும் அது தமிழுக்குச் செய்த நிரந்தரத் தொண்டாக இருக்குமாதலால் தமிழ் உள்ள அளவும் பெயர் நிலைத்திருக்காதா" என்றேன். "இறந்த பிறகு வாழ்வது யாருக்கு வேண்டும். இங்கு இருக்கும்போது வயிறு வாழ்வதற்கு ஏற்ற நூல்களை எழுதுபவனல்லவோ அறிவாளி" என்றார் அத்தமிழ்ப் பெரியவர். இப்போது அப்படிப்பட்ட நூல்களைத்தான் பலரும் எழுதுகின்றார்கள். இதனால் பல அறிவியல் துறைகளில் இன்னும் புத்தகங்கள் பெருமைப்படத் தக்க அளவில் வெளிவரவில்லை. வெளி நாட்டறிஞர்கள் தமிழ் மொழிக்குச் செய்துவைத்த பல அருமையான நூல்களுங் கூடப் பேணிக் காக்கப் பெருமல் அழிந்து வருகின்றன.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு பத்திரிகை படிப்பவர்களுடைய தொகை தமிழ் நாட்டில் பெருகியிருக்கிறது. தினசரிப் பத்திரிகைகளும், வார மாத ஏடுகளும் இப்போது நிறையத் தோன்றியிருக்கின்றன. ஆனால் இந்த வளர்ச்சியைப் பற்றி இந்தியப் பத்திரிகைப் பதிவாளர் தயாரித்து வெளியிட்ட அறிக்கையிலிருந்து இங்கு எடுத்துத் தந்துள்ள சில உண்மைகளைப் பாருங்கள். இரவு இராணிகளின் செய்திகளை அதிக விரிவாகத் தரும் ஒரு தமிழ்த் தினசரிதான் இந்தியாவிலேயே இந்திய மொழி நாளிதழ்களுக்குள் மிகப் பெரியது; அது நாளொன்றுக்கு ஒரு லட்சத்துப் பதினேழாயிரத்திற்கு மேற்பட்ட பிரதிகளை விற்கிறது. (இது ஓராண்டுக்கு முந்திய புள்ளி விவரம். இப்போது இன்னும் கூடியிருக்கலாம்.) இதை வேறு விதமாகச் சொன்னால் மஞ்சள் பத்திரிகை படிப்பவர்களின் தொகை தமிழ் நாட்டில் தான் அதிகம். அடுத்தபடியாகக் கலைகளின் பெயராலும் சுகாதாரத் தொண்டு செய்வதாகக் கூறிக்கொண்டும் வெளிவரக் கூடிய இன்பக் கலைப் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் வேறு எந்த மாநிலத்தையும் விடத் தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் தான் அதிகம். திரைப்படத் தொழிலுக்கு மட்டும் தனியாக வெளியாகும் மாத, வார, தினசரி ஏடுகள் தமிழ் நாட்டில் 47 இருக்கின்றன. பம்பாய், கல்கத்தா முதலான இடங்களில் திரைப்படத் தொழில் சிறப்பாக இருந்த போதிலும், அங்கு அத்தொழில் பற்றி உள்ள பத்திரிகைகளின் எண்ணிக்கை தமிழ் நாட்டில் உள்ள அளவினும் மிகக் குறைவாக இருக்கிறது. திரைப்படத் தொழில் பற்றிச் செய்தி தரும்

தமிழ் நாளிதழ் ஒன்றும் சென்னையில் இருக்கிறது. வேறு எந்த மொழியிலும் திரைப்படத்திற்கென்று தனித் தினசரி கிடையாது. இப்படி இத்தொழிலுக்குத் தனிப்பட ஏராளமான ஏடுகள் இருப்பதோடு பொதுச் செய்திக்காக நடத்தப்படும் இதர மாத, வார, தினசரி ஏடுகளும், திரைப்படச் செய்தி விமரிசனம், கேள்வி-பதில் ஆகிய இவற்றிற்காக அதிகமான பக்கங்களை ஒதுக்குகின்றன. திரைப்படத் தொழிலுக்கு இத்தனை பத்திரிகைகள் தோன்றியிருப்பதை ஒரு குறையாக நான் இங்குக் கூறவில்லை. ஆனால், அதற்கு ஏற்றாற்போல் தொழில், வாணிபம், அறிவியல், விளையாட்டு இப்படிப்பட்ட பொது அறிவுத் துறைகளிலும், தமிழில் ஒரு சில இதழ்களாவது தோன்றியிருப்பின் தமிழ் நாட்டின் பத்திரிகை வளர்ச்சிபற்றி நாம் பெருமை கொள்ளலாம். இத்துறைகளில் (அரசினர் வெளியிடும் மிகச் சில ஏடுகளைத் தவிர வேறு) தனிப்பட்ட ஏடுகள் ஒன்றுகூடத் தமிழ்நாட்டில் இல்லை. எந்தத் திரைப்பட நடிகை இந்த வாரம் எந்தக் கடற்கரையில் உலவப் போனாள் என்பதைத் தெரிவிக்கும் பத்திரிகைகளும் அப்பத்திரிகைகளுக்கு வாசகர்களும் மலிந்து வருவதை நாம் தமிழ் வளர்ச்சி யென்றோ அன்றித் தொழில் வளர்ச்சியென்றோ கூறிக் கொள்ள முடியுமா?

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாரதியார் குரல் எழுப்பினார். அவர் கூறியதுபோல் நம் மொழியின் அருமை பெருமைகளையும் நமது இலக்கியங்களின் சிறப்பையும் வெளியிடத்தவர்களுக்கு உணர்த்த இந்த நூற்றாண்டில் என்ன செய்யப்பட்டிருக்கிறது? பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் ஓரளவு நம் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருந்த போதிலும் நமது மொழிச்சிறப்பை வெளியார்க்கு உணர்த்தும் பணி ஒன்றுகூட நடைபெறவில்லை. நமது அண்டை மாநிலத்தில் உள்ளவர்கள் கூடத் தமிழைப் பற்றியும் தமிழ் இலக்கியங்களின் சிறப்பைப் பற்றியும் நல்ல முறையில் தெரிந்திருக்கவில்லையென்பதற்குச் செல்லும் இடங்களில் எல்லாம் சான்றுகள் தென்படுகின்றன. திறமான புலமையெனில் பிற நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும். உலகம் போற்றும் நூல்கள் தமிழில் தோன்ற வேண்டும். இந்த வகையில் இன்று தமிழின் நிலை என்னவென்று சற்று எண்ணிப் பாருங்கள்.

தமிழின் வளர்ச்சியை ஒரு சார்பாக நான் காட்டிவிட்டதாகச் சிலர் எண்ணலாம். தமிழில் பிழையற நூல் பதிப்பித்து அளித்த டாக்டர் சாமிநாத ஐயர் போன்றவர்கள் தொண்டினை நாம் மறந்து விடுவதற்கில்லைதான். ஆனால் அவருக்குப்பின் அவர் செய்தது போன்ற அருந்தொண்டைச் செய்ய இன்னும் நம் தலைமுறையில் யாரையுமே காணோமே! கால்டுவெல், வாஷிங்டன், வீரமாமுனிவர், வின்ஸ்லோ, போப்

ஐயர் முதலானோர் தமிழுக்கு அளித்த நூல்கள் இன்று பதிப்பிப்பார் இல்லாமல் மக்களிடையே பரவாமலிருக்கின்றன. லூஷிங்டன் என்பார் தமிழ் நாட்டின் செடி கொடிகள் மரங்களைத் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தியில் காணப்படும் பெயர்களுடன் வரிசைப்படுத்தி ஆயிரக்கணக்கான பக்கங்களில் தந்த புத்தகமொன்றை நூல் நிலையம் ஒன்றில் கண்டேன். அது புதிதாகப் பதிப்பிப்பாரின்றித் துண்டு துண்டாகக் கையில் ஒட்டிக்கொண்டு வரும் நிலையில் இருந்ததைக் கண்ட போது என் மனம் மிகுந்த வேதனைப்பட்டது. பல வருடங்கள் முயன்று ஆக்கிய அப்படிப்பட்ட அரிய நூல்களை அழிவுறாமல் புதுப்பித்துத் தரச் சாமிநாதய்யர்தான் மீண்டும் அவதாரம் எடுக்கவேண்டும் போலும்!

இதுகாறும் மாணவர்களின் தரம், தமிழ் அறிஞர்களின் தரம், லட்சக்கணக்கில் வெளியாகும் தமிழ்ப் புத்தகங்களின் தன்மை தமிழ் ஏடுகளின் நிலை முதலியவற்றை வைத்துத் தமிழ் வளர்ந்துவிட்டதா என்பதை இங்கே மதிப்பிட்டோம். ஆனால் இந்த முறையில் மதிப்பிடுவதைப் பலர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். முன்பெல்லாம் சோப், கூந்தல் வளரும் தைலம், அலங்காரப் பொருள்கள் முதலியவற்றுக்குத் திரைப்பட நட்சத்திரங்கள் சான்றிதழ் கொடுப்பது வழக்கம். நாளடைவில் நடிகை பரிமளா தேவி என்ன புடைவை கட்டுகிறாள்; எப்படி நகை போடுகிறாள் என்று பார்த்து மக்கள் பின்பற்றினார்கள். இப்போது நாடு முன்னேறிவிட்டபடியால் நடிகை மந்தாகினிக்குப் பிடித்த இலக்கியம் திருக்குறளா சிலப்பதிகாரமா என்று பத்திரிகைகளில் கேள்வியும் பதிலும் போடத் தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே, தமிழ் வளர்ந்துவிட்டதா; இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டுமானால் அதற்கும் யாரேனும் ஒரு தேவியார்தான் வந்து பதில் சொல்லவேண்டும். அப்போதுதான் ஒரு வேளை இன்றைய தமிழுலகம் ஏற்றுக்கொள்ளும்! ✱

---

வாணிகம்–2

## இதுவா ஏற்றுமதி?

ஆந்திராவிலிருந்து ரஷ்யாவிற்குப் புகையிலை ஏற்றுமதி செய்தார்கள். அதில் 27. மூட்டைகளில் வாழையிலை சருகுகள் இருந்தனவாம். மலையாளத்திலிருந்து அமெரிக்காவிற்கு மிளகு ஏற்றுமதி செய்தார்கள். அதில் 17. வீதம் பப்பாளி விதைகள் இருந்தனவாம். தமிழகத்திலிருந்து மலாயாவிற்கு நெய் ஏற்றுமதி செய்தார்கள். அதில் 20. வீதம் கொழுப்புக் கலந்திருந்ததாம். ஏற்றுமதி செய்பவர்கள் அவசரத்தில் தங்களின் மதியையும் ஏற்றுமதி செய்துவிடுகிறார்கள். இதுவா ஏற்றுமதி?

கி. ஆ. பெ.


அருணகிரி
விலாஸ்
சீயக்காய் பவுடர்
காரைக்குடி
ARUNAGIRI VILAS
SOAP NUT POWDER,
KARAIKUDI.
BS


GOLD
FOR BEAUTIFUL LOOKS
THANGABASPAM
FOR CHEERFUL LOOKS
தங்கபஸ்பம்
புகையிலை
THANGABASPAM TOBACCO.
MILD SCENTED. NO.8939.
N. ஆறுமுகம்பிள்ளை
காரைக்குடி

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

**பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு பிரைவேட் லிமிடெட்**

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

**3, சிங்காராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி**

தபால் பெட்டி நெ. 414

**மதராஸ்–5**

தந்தி "EVERMANS" போன்: **85834**

*

**தில்லி கிளை அலுவலகங்கள்:**

(1) "கான்ஸன் ஹவுஸ்"
1/24, அஸப் அலி ரோட், புது தில்லி–1

(2) "பாலுஸேரி பில்டிங்"
14-A/4, W.E.A., கரோல் பாக்
புது தில்லி–5

(3) 198, முதல் மாடி, ஜோர் பாக் நர்ஸரி,
புது தில்லி–3

*

**பெங்களூர் கிளை அலுவலகம்:**

185, முதல் மாடி, ஆருவது (கிராஸ்),
காந்தி நகர், பெங்களூர்–9

*

**பம்பாய் கிளை அலுவலகம்:**

"வீணு விகார்"
17-A, ஸயான்-மாதுங்கா எஸ்டேட்,
(கிங்ஸ் சர்க்கிள் ரெயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்)
பம்பாய்–22

*

**கல்கத்தா கிளை அலுவலகம்:**

48, லேக் ப்ளேஸ், கல்கத்தா–29

# பிறர் நன்மை பேணும் பெரியார்கள்

இந்தி மூலம் :
**கோபால பிரஸாத்வியாஸ்**

தமிழாக்கம் :
**இராஜலெட்சுமி இராகவன்**

சிங்கத்தினிடம் நான் பயப்படுவதில்லை. எதற்காகப் பயப்பட வேண்டும். பட்டணவாசம் செய்கிறேன். வேட்டையாடுகிறதில்லை. எப்பொழுதாவது திறந்த வெளியில் சிங்கத்தைப் பார்க்கக் கூடிய அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ ஏற்பட்டிருந்தால் தானே அதைப் பார்த்துப் பிரியப்படவோ அதனிடம் பயப்படவோ அவசியம் வரும். எப்பொழுதாவது சிங்கத்தைக் கூண்டிற்குள் பார்க்கிறோம்; அல்லது படத்தில் பார்க்கிறோம். அதில் பயப்படுவதற்கு என்ன இருக்கிறது?

முதலில் பாம்பினிடம் எனக்கு ரொம்ப பயம் இருந்தது. பாம்பும் மனிதனைக் கண்டு பயப்படுகிறது என்றும், எல்லாப் பாம்பும் விஷமுள்ளதாக இருக்காது என்றும் பாம்பின் விஷம் மனிதனுடைய நாவில் இறங்கியிருக்கிறது என்றும் கேட்டதிலிருந்து எனக்கு நாக தேவதையிடமிருந்த பயமும் நீங்கிவிட்டது.

பூதம், பிரேதம், ராக்ஷசன், பிசாசு முதலியவைகளெல்லாம் இந்துஸ்தானத்தில் இரயில் வண்டியின் ஓட்டம் ஆரம்பித்தவுடன் கண்ணால் பார்க்கவே அரிதாய்விட்டது. அதைப்பற்றிப் பேசுவதுகூட நின்றுவிட்டது. பூதங்கள் இருந்துதான் என்ன செய்யும்? பண்பின் பெயரிலும், விமர்சனம் என்னும் பெயரிலும் எப்பொழுது பூத காலத்திற்கு மகத்துவம் கொடுப்பது ஆரம்பமாயிற்றோ, பயிரிடுவதற்குப் பூமியைப் பெறுவதற்காக எருக்கும் கள்ளியும் மாத்திரமல்ல, பூதங்களுடைய இருப்பிடமான அரசமரம், புளியமரம் முதலிய மரங்களுங்கூட வெட்டப்பட்டதோ அப்பொழுதிருந்தே பரிதாப நிலையில் பூதங்கள் அவ்விடங்களை விட்டுப் போனால் போதும் என்று புறப்படும் நிலை உண்டாகி விட்டதே?

ஆமாம், நான் சிங்கத்திடமும், பாம்பிடமும், பூதத்திடமும் பயப்படுவதில்லை யென்று சொன்னேனோ? அதற்காக எனக்கு யாரிடமும் பயமில்லை யென்று நினைந்துவிடாதீர்கள். ஒரு வார்த்தை வெளிப்படையாகச் சொல்கிறேன். நான் எப்படியிருந்த போதிலும் தனக்குத் தானே பயப்பட்டுக் கொள்கிறனே அந்தத் தத்துவ ஞானியின் வர்க்கத்தைச் சேர்ந்தவனல்ல. காரணமில்லாமலே

பயப்பட வேண்டுமென்று பயப் படுகிற குறிப்பிட்ட மாதிரியான சிந்தனையாளனுமல்ல.

சொல்லி விடட்டுமா என் எண்ணத்தை உங்களுக்கு? "அசையும் பொருள்களையும், அசையாத பொருள்களையும் குணத்தினாலும் பாபத்தினாலும் நிறைந்திருக்கச் செய்த கடவுட் படைப்பில் எனக்கு எந்த உயிர்களிடத்தும் பயமில்லை. எப்பொழுதிலிருந்து இரயிலும், தந்தியும், தபாலும், விமானமும் தோன்றியதால் பூமியின் பரப்புச் சிறியதாகிவிட்டதோ அதுபோல் இடம், பொருள், ஏவல், சூழ்நிலைகளிலும் நாகரிகத்திலும் ஒற்றுமையேற்பட ஆரம்பித்ததிலிருந்து பல சமாசாரங்களைக் கேட்டுக் கேட்டு நான் பாப புண்யத்திற்குக்கூட பயப்படுவதை விட்டுவிட்டேன். உண்மையாகச் சொன்னால் பிறவியில் வைஷ்ணவனான நான், இப்பொழுது தப்பித் தவறிக் கூட ஈச்வரனுடைய பெயரைப் பயந்தும் சொல்வதில்லை. ஆனால் நான் பயப்படுகிறேன்! பயப்படுகிறேன்!! யாருக்கு? "கேவலம் என்னைப் போலவே இரண்டு கை, இரண்டு கால், கண், மூக்கு, புத்தியிருக்கிற மனிதனுக்குத்தான் நான் பயப்படுகிறேன். ஏனென்றால் உலகத்தில் பலமுள்ள எல்லோரையும் வசப்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் இந்த அறிவு பலத்தின்மேல் நிற்கிறானே மனிதன், அவன் மட்டிலும் எப்பொழுது என்ன செய்வான் என்பதைப் பற்றி நம்மால் நிதானிக்கவே முடியாது. அவனை நம்பவும் முடியாது.

ஒருவன் உங்களுக்குப் பகைவனாயிருந்தாலும் அவ்விடத்தில் கூட நீங்கள் பயப்பட வேண்டுமென்று நான் யோசனை சொல்லமாட்டேன். ஆனால் தனக்குத்தானே சிநேகிதனென்றோ, அல்லது நன்மையைக் கோருபவனென்றோ ஒருவன் உங்களிடம் வந்து சொன்னால், அபாயம் தூரத்தில் இல்லை உங்கள் தலைமேல் ஏறிக் கொண்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளுங்கள். இப்படிக் கேலியாகக் கூறுகிறேனே என்று நீங்கள் யோசிக்கலாம்.

கேலி செய்வது என்னுடைய வழக்கமாயிருக்கிறது. ஆனால் இப்பொழுது நான் அந்த மனப்பான்மையில் சொல்லவில்லை. மேற்சொன்னவைகளெல்லாம் எல்லோருக்கும் பொதுவாயிருக்கிறது. என் விஷயத்தில் தான் என்னவென்று உங்களுக்கெல்லாம் தெரியுமே! உலகத்தில் யாரிடத்திலேனும் பயப்படுகிறேனென்றால் அது என் மனைவி ஒருத்தியிடத்தில் தான். பிறர் நன்மையைக் கோருபவன் என்ற பிராணியிருக்கிறதே, அதைச் சீர் தூக்கிப் பார்த்தோமானால், மனைவிமார்களைவிட அது பயங்கரமானது. மனைவிமார்களோ தங்கள் கணவன்மார்களுடன் பழகும்போது இகபரத்தையாவது கொஞ்சம் எண்ணிப் பார்ப்பார்கள். ஆனால் மேற்சொன்ன மகானுபாவர்களுக்கு இகமுமில்லை; பரமுமில்லை.

வேறு மனிதர்களுடைய உதாரணங்களைக் காட்டுவதில் ஒன்றும் லாபமில்லை. நான் என்னுடைய சொந்த அனுபவத்

தைச் சொல்கிறேனே. சின்ன வயதில் ஒரு முறை கண்வலி வந்தது. காவி அரைத்துப் பட்டி போடச் சொன்னார் ஒருவர். என் அம்மா காவியைத் தேய்க்க ஆரம்பித்தாள். இன்னொருவர்—பிறர் நன்மையைக் கோருபவர்—"பாருங்கோ, கண்ணுக்கு ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. இரண்டு கண்களின் பக்கவாட்டிலும் கொஞ்சம் சுண்ணம்பு தடவுங்கள். விடிவதற்குள் காளவாயைப்போல் கண் திறந்து கொள்ளும்" என்றார். இரவெல்லாம் விட்டு விட்டு வலியும், தொந்தரவும் மிகுதியாயிருந்தது. வீட்டிலுள்ளவர்கள் கலவரமடைந்தனர். இன்னொருவர் பால் ஏட்டைக் கண்ணில் நிறைய அப்பிப் பட்டி கட்டுங்கள் என்றார். ஆனால் அதே சமயத்தில் எங்கிருந்துதான் இன்னொருவர் வந்து குதித்தாரோ தெரியவில்லை. "அடே அப்பா, நான் சொல்வதைச் சற்று கேள். குழந்தைக்குத் தூக்கம் வந்துவிட்டால் வலியெல்லாம் போய்விடும். கொஞ்சம் அபின் இருக்குமா வீட்டிலே? இருந்தால் எடுங்கள். வலியைக் காற்ருய்ப் பறக்கடிக்கிறேன்" என்ருர்.

நடந்தது இதுதான். தேடிப் பிடித்து அபின் கொண்டு வந்தார்கள். அதில் ஒரு சிறு உருண்டையைப் பலாத்காரமாக இரண்டு பேர்கள் பிடித்துக்கொண்டு என் வாயில் போட்டுத் தண்ணீர் விட்டுக் கீழே இறக்கிவிட்டனர். அபினுக்கும் கண் வலிக்கும் என்ன சம்பந்தம்? ஆனல் நமக்கு நன்மையைக் கோருபவர்களுடைய யோசனையை எப்படித் தட்ட முடியும்? அதனால் நான் மூன்று நாட்கள் சுய நினைவில்லாமலிருந்ததால் என் வீட்டிலுள்ளவர்களுக்கு என் கண்ணைவிட என் நினைவு வந்தால் போதும் என்ருகிவிட்டது. இதன் நடுவில் கண்ணைக் கவனிக்காததால் முடிவு என்ன ஆயிற்று தெரியுமா? கண்கள் வீங்கிப் போய்ச் செம்பருத்திப் பூ, பலா சம்பூவைப்போல் சிவப்பாகிவிட்டது. ஆறு மாதங்கள் கிராமத்திலிருந்து நகரத்திற்கும் நகரத்திலிருந்து ஆஸ்பத்திரிகளுக்குமாகப் போய் வந்தோம். இது இன்னொரு நன்மையைக் கோருபவருடைய யோசனையின் பேரில் செய்யப்பட்டது. மற்றும் பாருங்கள் சுவாமி, என்னுடைய அகண்ட பெரிய கண்கள் சிறு வயதில் தாமரையைப் போலிருந்ததாகச் சொல்லப்பட்டது. இன்று இவ்வளவு சிறியதாய்ப் போய்விட்டது. வெளியாரைப் பார்க்க முடியாதது ஒருபுறமிருக்க, வீட்டிலே என் மனைவியைக்கூட இதனல் விழித்துப் பார்த்தால் அவள் ஒன்றும் பயப்படுவதில்லை. எப்போதாவது கண்ணை உருட்டி விழித்துப் பார்த்து ஏதேனும் சொன்னல் உடனே அவள் "இருக்கட்டும், மிளகாய் விதையைப் போலிருக்கும் உங்கள் கண்ணைச் சற்றே பிறத்தியாரிடம் காண்பியுங்கள்" என்று சொல்லிவிடுவாள்.

நன்மையைக் கோருகிறவர்கள் என்னுடைய வாழ்க்கையிலுங்கூட விளையாடி இருக்கிருர்கள். நான் பள்ளி இறுதி

வகுப்புப் பக்கமாக உருண்டு வந்து கொண்டிருந்த பொழுது என் கெட்டவேளையின் பயனாக, காலமில்லாக் காலத்தில் என் தாய் காலமாகிவிட்டாள். நான் கேட்கிறேன் உலகத்தில் எத்தனை பாக்யசாலிகளுக்குத் தாயார் கடைசிவரை இருக்கிறாள் என்று. சிலருக்குப் பிறவியைக் கொடுத்தும் சில ருக்கு படிப்பு-எழுத்துக் கற்று வைத்தும், சிலருக்குக் கலியாணத்திற்கு முந்தியும் சிலருக்குக் கலியாணத்திற்குப் பிந்தியும் தாய் இறக்கிறாள். முக்கியம் இவ்வளவுதானே. எல்லோருக்கும் தாய் ஒருநாள் இறக்கிறாள். அப்படியே என் அம்மாவும் இப்படி ஒரு கட்டத்தில் இறந்து விட்டாள் என்றால் இதில் நடக்கக்கூடாத காரியம் என்ன நடந்துவிட்டது? ஐயோ அதை யேன் கேட்கிறீர்கள். ஊரிலுள்ள நன்மை கோருபவர்களெல்லாம் என் தந்தையைச் சுற்றிக் கொண்டனர். "ஒரு பெண்ணரசியில்லாமல் வீடு நடக்காது, பெரியவரே. உங்களுக்கு வயதாகிவிட்டது. பிள்ளையோ ஒரே ஒருத்தன். வீட்டில் அம்மா இல்லை. சகோதரி இல்லை. வீட்டிலே ஏனென்று கேட்க யாரும் இல்லை. பையன் எங்கே இருப்பான். என்னத்தைச் சாப்பிடுவான், நீங்கள் உங்கள் கண்ணெதிரில் ஒரு கால்கட்டைப் போட்டுவிடுங்கள். குறைந்த பட்சம் வீட்டிலே விளக்கேற்றி வேளா வேளைக்குச் சமைத்துப் போட்டுப் பார்த்துக்கொள்வாளல்லவா? இல்லையோவென்றால் உங்கள் வயதுக்கு பகவத் பஜனை செய்யவேண்டியதிருக்க, நீங்கள் சமயலுள்ளில் சமைக்கவும் பத்துப் பாத்திரம் தேய்த்து, வீடுபெருக்கிச் சுத்தம் செய்யவும் நேரிடும்" என்றனர். நானும் ஆயிரம் விதமாய் விரோதித்தேன். அழுதேன். உண்ணாவிரதம் செய்தேன். என் பேச்சு எடுபடவில்லை. ஒரு நாளைக்கு அந்தப் பிறர் நலம் பேணும் பெரியவர்களிருக்கிறார்களே அவர்கள் தாங்கள் பிடித்ததை நிறைவேற்றிப் பாட்டும் கூத்துமாக வயிற்றைத் துழாவிக்கொண்டு என்னை நாலு கால் பிராணியாகச் செய்தேவிட்டனர்.

என்னுடைய கஷ்டம் இத்துடன் முடியவில்லை. கலியாணமான பிறகு பையை மாட்டிக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பியதும், ஒரு நன்மையாளர் "உனக்கு வெட்கமில்லை. எது வரை தகப்பனுக்குப் பாரமாயிருப்பாய்? உன்னைப் படிக்கவைத்தாகிவிட்டது. கல்யாணமும் செய்து வைத்தாயிற்று. இப்பொழுது நன்றாகச் சாப்பிடு; சம்பாதி; ஏன் பாவம் பெரியவரின் உயிரைக் குடிக்கிறாய்" என்றார்.

இன்னொரு நல்லவர் பள்ளிக்கூடத்தில் போய் எனக்குக் கலியாணமான செய்தியைப் பரோபகாரத்தின் பொருட்டுத் தெரிவித்து விட்டு வந்தார். முடிவு இதுதான். என் தாய் எந்த ஒரு தன் பிள்ளையை டாக்டராகவோ, வக்கீலாகவோ, பேராசிரியராகவோ, இன்னும் என்னென்னவோ ஆக்கிப் பெருமையடைய வேண்டுமென்று கனவு கண்டு கொண்டே பரலோகம் அடைந்தாளோ, அந்தப் பிள்ளை

தன்னுடைய ஜீவனத்தை எட்டு ரூபாய் சம்பளத்தில் ஆரம்பிக்கும்படியாயிற்று.

அன்றிலிருந்து பிறர் நன்மையைக் கோருபவர்களின் நல்ல யோசனைகளில் என் நம்பிக்கையெல்லாம் போய்விட்டது. இப்பொழுது யாரேனும் சிரித்துக் கொண்டே வந்து எனக்கு நம்பிக்கை வரும்படியாக என் நலத்திற்காகச் சொல்ல வந்தால் எனக்கு 'அப்பா, இதில் ஏதோ விபத்து இருக்கிறது' என்று தோன்றுகிறது. இதே மாதிரி யாரேனும் என்னுடைய தீனதசையைப்பார்த்துக் கண்ணீர் வடித்துக் கொண்டே என்னிடம் ஏதேனும் உபதேசம் செய்ய வந்தால் எனக்கு முதலில் தோன்றுவது இதுதான். இந்தக் கண்ணீருக்குப் பின்னுல் கேலி மறைந்திருக்கிறது என்பது.

மனிதர்களுடைய நல்ல எண்ணங்களில் என்னுடைய நம்பிக்கை குறைந்து விட்டதாக நான் சொல்லவில்லை, ஆனுல் எப்பொழுது பிறர் நன்மையைக்கோருபவர்களுடைய போர்வைகளும், வயது, அறிவு இரண்டினுடைய விருத்தியுடன் கூடவே என் முன்னேற்றத்தில் இறக்கம் கொண்டு விட்டதோ அப்பொழுது என் மனத்தில் மக்கள் மற்றவர்களுடைய நன்மையை இந் நாட்களில் பூராவாகக் கோருவதில்லை என்கிற எண்ணம் வேரூன்றியிருக்கிறது. இன்றைய மனிதன் தனது நன்மையைத்தான் கோருகிருன். மேலும் தனது நலனுக்காக, அதை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அவன் மற்றவர்களுடைய நன்மையைக் கோருவதாக வேஷம் போடுகிருன். "இந்நாட்களில்தான் கோத்திரம் அல்லது தன் சகோதரன், பந்துக்களின் நலத்தைக் கோருபவர்கள்கூட இல்லையே. ஒரு வேளை இருந்தால் நான் அவர்களைத் தேடிக்கொண்டு இருக்கிறேன். யாருக்கு அம்மாதிரி மனிதர்கள் கிடைத்திருக்கிருர்களோ அவர்கள் பாக்கியசாலிகள். இந்நாட்களில் என் முழக்கம் இதுதான்—"என்னை என் நலங்கோருபவர்களிடமிருந்து காப்பாற்றுங்கள்." ✶

---

வாணிகம்–3

## எது இலாபம் ?

தஞ்சை மாவட்டத்தில் கிடைக்கின்ற நெல்லைக் கோவை மாவட்டத்தில் விற்பதும், கோவை மாவட்டத்தில் கிடைக்கின்ற நூலைத் தஞ்சை மாவட்டத்தில் விற்பதும் ஒரு வியாபாரி செய்யும் ஊழியமாகும். இந்த ஊழியத்திற்காக ஊதியம் அடைய அந்த வியாபாரிக்கு உரிமையுண்டு. அது ஒரு அளவிற்கு உட்பட்டிருந்தால், "இலாபம்" என்று பெயர். இல்லையானுல் அது "கொள்ளை" என்ருகிவிடும்.

கி. ஆ. பெ.

*Raw Silk Sarees*

*Printed Silk Sarees*

*Raw Silk Fabrics*

★

**BANARAS ART HOUSE**

**Pvt. Ltd.,**

**Opp. SCINDIA HOUSE, NEW DELHI**

★

*Manufacturers:*

**THE INDIAN TEXTILES Co. Pvt. Ltd.,**

**BANARAS**

# பழி ஓரிடம் பாவம் ஓரிடம்

தி. மாணிக்கவாசகம், பி. ஏ.

இராமாயண கதாபாத்திரங்களிலே மிகச் சிறந்தவன் பரதன். அவன் அழகாலும் குணத்தாலும் இராமனுக்கு ஒப்பானவன். அவன் பிறரைப் போல் பேசுவதிலே ஈடுபடாவிட்டாலும், ஓரிரு கட்டங்களிலே மட்டும் வந்துபோனாலும், அந்த மகா காவியமான இராமாயணம் முழுவதும் அவன் மணம் கமழ்கின்றது. இத்தகைய பெருந்தகையின் தாய் இன்று பழியுடன் வாழ்கின்றாள். இடரிலா முகத்தையுடைய கைகேயியை, அன்று முதல் இன்று வரை யாரும் அறிந்து கொள்ளவில்லை. கைகேயி, இராமனை ஏன் காட்டிற்கு அனுப்ப வேண்டும்? சிக்கலான கேள்விதான்; என்றாலும் அவளது உள்ளப் பண்பை எடுத்துக்காட்டுவது மிக மிக எளிது.

இராமன் பிறப்பதற்கு முன்பே, தசரதனுக்கு, ஒரு சாபமிருந்தது. ஒரு முனிவரின் மகனை யானை என்று எண்ணி அம்பு எய்து கொன்றுவிட்டான். இதையறிந்த முனிவர் அவனை நோக்கி "எவ்வாறு நான் என் மகனைப் பிரிந்து வாடுகின்றேனோ அதுபோல் உன் மகன் பிரிவால் நீ மடிவாய்" என்று சாபம் தந்து மடிந்தார். தசரதன் நெஞ்சத்திலே இது ஒரு பெரும் புண்ணைத் தந்துவிட்டது.

தசரதன் கேகயன் மகள் கைகேயியை மணந்து, வாழ்க்கை நடத்துகின்ற காலத்திலே, இந்த உண்மையை அவளிடம் கூறித் தன் மூத்த மகனின் 29-ஆம் ஆண்டிலே இச்சாபம் நிறைவேறும் என்றும் கூறினான். ஆற்றலுடைய கோசலையிடம் கூறமுடியாத ஒன்றை, மனத் தூய்மையுடைய கைகேயியிடம் கூறி ஆறுதல் பெற நினைத்தான் மன்னன். நல்வழியிலே செல்கின்ற உள்ளம் படைத்த கைகேயிக்கு ஐயமேற்பட்டது. நல்லவர்களுக்கு ஐயம் ஏற்பட்டால் உள்ளமே வழிகாட்டியாக நிற்கும் என்ற உண்மைக்கு ஏற்ப, அவளின் தூய உள்ளத்திலே ஓர் உறுதி ஏற்பட்டது. இருபத்தி ஒன்பதாவது பிராயத்தில் இறக்கவிருக்கும் இராமனை, என்றும் வாழ ஒரு நல்ல திட்டம் மனத்திற்குள் வகுத்துக் கொண்டு, மன்னனை நோக்கி "நாதா, இராமனைக் காக்கும் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள். அவன் இன்று முதல் என் மகன்" என்று கூறினாள். அன்று முதல், இராமன் தாய் கையில் வளராமல், தவத்தால் கேகயன் மகளால் வளர்க்கப்பட்டான். தான் பெற்ற மகனை, குணக்குன்றான பரதனைப் பற்றிய எண்ணமே இல்லாமல், இராமனைக் கண்ணின் கருமணி போலப் பாது

காத்துவந்தாள். குணத்தாலும், எழிலாலும் இராமனிலும் சிறந்த பரதன் மக்கள் மன்றத்திலே மதிப்புப் பெற்று, இராமனின் புகழுக்கும் மாசு ஏற்படுத்திவிடுவானே என அஞ்சி, அவன் திருமணத்திற்குப் பின், மாமன் வீடு செல்லும்படி செய்துவிட்டாள்.

இராமனுடைய 29-ஆம் ஆண்டுநிறைவு விழா. தசரதன் அவனுக்கு மணி மகுடம் புனைந்து பார்க்க வேண்டுமென்று எண்ணி, முக்காலம் உணர்ந்த வசிட்டரும் "நாளையே நல்ல நாள்" என்று கூறிய நாள். அன்று அயோத்தி மக்களும் பிறரும் தங்கள் தங்களுக்கே முடி வந்துவிட்டது என்று எண்ணிய நாள். அந்த நாள் ஒருத்திக்கு மட்டும் சோக நாடகத்தின் முதல் கட்டமாகத் தோன்றியது. அவள் தான் கூனி. பரதன் பாராள வேண்டும், இராமன் காடாள வேண்டும் என்று முடிவு செய்தாள். தொடர்ந்து அவள் நெடு நேரம் சிந்தித்தாள். மணித் துளிகள் பல சென்றன. நேரமோ இரவு ஒன்பதிற்கு மேலாகிவிட்டது. கைகேயியின் மாளிகைக்குச் சென்றாள். கருணை முகத்தில் வழிய, அமைதியுடன் தூங்கிக் கொண்டிருந்தாள் கைகேயி. தட்டி எழுப்பினாள். "இராமனுக்கு நாளை முடிசூட்டு விழா" என்றாள். "மகிழ்ச்சி, இதனைப் பெற்றுக்கொள்" என்று பரிசு கொடுத்தாள் தலைவி. ஆனால் கூனிக்கு ஆத்திரம் வந்தது. கன்யா சுல்கத்தால் பரதனுக்கே நாடாளும் உரிமை உண்டு என்று வாதாடினாள். பலனில்லை; முடிவாக அவளிடத்தில் கூனி சொன்னாள்: "புத்தி கெட்டவளே, உன் கணவன் நாளை இறந்துவிட்டால், நீ மூலையிலே கிடக்கவேண்டும். இராமனின் தாய் கோசலை உன்னை ஆட்டி வைத்துப் பாட்டுக் கேட்பாள்" என்றாள்.

"நாளை மன்னன் இறந்துவிட்டால்......" ஆம், 29-ஆம் ஆண்டு விழா இராமனுக்கு நடக்கின்ற காலத்திலே, புத்திர சோகத்தினால் மன்னன் மடிய வேண்டும் என்பதல்லவோ சாபம். அந்த நாள் நாளை என்பதை அறிந்தவுடன் பதறினாள்; புரண்டாள்; என்ன செய்வதெனத் தெரியாது மயங்கினாள். "நான் இராமனை எவ்வகையிலும் காப்பாற்றித் தருகிறேன். அவன் புகழுடன் வாழ வழி செய்வேன்" என்று அன்று கூறிய வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன. உயிரினும் மேலாக வளர்த்த மகன் இறந்தால், தன்னுடைய வாய்மையும், மரபும் போய்விடுமே எனத் துடிதுடித்தாள். பிறகு சாபத்தின் சொற்களை மனனம் செய்தாள். "உன் மகன் பிரிவால் நீ மடிவாய்" ஆம், முடிவு செய்துவிட்டேன். மகனைத் தந்தையிடத்தினின்று பிரித்து விடுவேன். மன்னன் இறந்தாலும் மகன் பிழைப்பான். இராமனுடைய வாழ்விற்காக தன்னுடைய புகழ், காட்டுவதில்லாக் கணவன், குடி முதல் சுற்றம் எல்லாவற்றையும் துறக்கச் சித்தமானாள். இராமனைப் பதினான்கு ஆண்டுகள் காட்டிற்கு அனுப்பி அவனுடைய உயிரைக் காப்பாற்றினாள். அன்று

14 ஆண்டுகள் ஆயுள் தண்டனையாக இருந்தது.

மழை பெய்யும் பொழுது குளிர்கிறது. கஷ்டத்தையும் தருகிறது. ஆனால் அந்த வான் மழையில்லாவிட்டால், வாழ்வு வளமடையாது. அதுபோலத்தான் கைகேயியும், பழியை ஏற்று, மகனைக் காப்பாற்றினாள். ஆலமே அமுதமாக உண்ட சிவ பெருமானின் பெருமையும் பெற்றாள்.

இதை அறியாது பலர் கைகேயியைக் குறை கூறுகிறார்கள். அவள் தன் மகன் பரதனை அறியவில்லை என்றும் கூறுகின்றனர். தன் மகன் மணி மகுடம் பூண்டு ஆட்சி செய்ய வெண்டுமென்று நினைத்திருந்தால், அவள் அவனை உடனே கூட்டி வந்திருப்பாள். ஆனால், அவள் தசரதன் இறந்த ஒரு வாரத்திற்குப் பின்னும், பரதனை அழைத்துவரும்படி கூறவில்லை. வசிட்டர் முதல், ஏவலாளர்வரை எல்லோரும், இராமன் காடு சென்றதையோ, தசரதன் இறந்ததையோ அவனிடம் கூறினால், சொன்னவர் உயிர் போய்விடும் என்பதை அறிவார்கள். ஆதலால் வசிட்டர் தீர ஆராய்ந்து, பரதனை வீடு திரும்பும்படி மட்டும் சொல்லி அனுப்பினார். இந்தத் துக்கச் செய்தியைக் கூறியவள் கைகேயி தான். உண்மையைக் கூறுவிட்டாலும் பரதனின் குணங்களை அறிந்தவளாதலால், "கொள்ளான் என் சேய்" என்ற உறுதிப்பாடுணர "நீ அரசை ஏற்றுக்கொள்" என்றாள். மறுத்தான் மகன். தாயின் உள்ளம் புளகாங்கிதம் அடைந்தது. பெற்ற போழ்திலும், பெரிது உவந்தாள்; சான்றோன் என்று அறிந்தபின், மகனின் மன உறுதியை வியந்தாள், பெற்ற மகனும் வளர்த்த மகனும் பாரில் புகழ் அடையப் போகிறார்கள் என்று மனம் மகிழ்ந்தாள். கணவன் இறந்த வருத்தம், மகன் பிரிந்த வருத்தம், எல்லாவற்றையும் மறந்தாள். உள்ள நிறைவு முகத்திலே பளிச்செனத் தோன்றியது. ஆனால் இன்று வரை நாம் அவளை அறிந்துகொள்ளவில்லை. பாவமும், பழியும் கைகேயியின் மேல் போடப்பட்டுவிட்டது. தனக்கென வாழாப் பெரியவர்களை உலகம் வாழ்த்தவில்லை. அதுபோல, கொள்கை முரண்பாடுடைய கைகேயியின் உறுதியை மக்கள் அறியவில்லை.

இம்மைக்குச் செய்தது மறுமைக்கு உதவும் என்று கூட நினையாத கடமை உணர்ச்சியும், உறுதியும் உடைய கேகயர் கோன் மகள் கைகேயியின் புகழை என்று நம் மக்கள் அறிவார்களோ அன்றுதான், இராமாயணத்தின் புகழும் பெருகும். போற்றுபவர் போற்றவும், தூற்றுபவர் தூற்றவும், ஏற்றதொரு செயலைச் செய்யும் பெருந்தகையாளான கைகேயி பரதனின் தாய் மட்டுமல்லள்; இராமனின் தாயும் ஆவாள். அவன் "தாய்" என்று கூறியவள் கொடியவள் என்றால் இராமனுக்கும் இழுக்காகும் என்பதை மறக்கக் கூடாது.

---



4596—7

# At the Fair

*"I saw a colourful sari at the Salem fair" says the man to his beloved. "The charming seller of the fascinating sari told me with pride that it was from her loom!"*

"சேலத்துச் சந்தையிலே—பட்டு
"சிங்காரச் சேலை கண்டேன்,
"எங்கள் தறிச்சேலை' என்றான்..
"பொங்கும் களிப்புடனே."



# வாழத் தெரிந்தவள்

'பாலகி'

பூச்சைப் படாம் விரிக்கப்பட்டதுபோல அழகாக வெட்டி விடப்பட்டிருந்த புல்தரையில் படுத்துக் கொண்டிருந்தேன். குளிர் காலமானதால் பகலவனின் கூர்மழுங்கிய ஒளிக்கதிர்கள் என்னுடலில் ஒரு சுகமான உணர்ச்சியை ஊட்டிக் கொண்டிருந்தன. தகரத்திலிருந்த சிகரெட்டுகள் ஒன்றன் பின் ஒன்ருகப் புகைக்கப்பட்டுச் சாம்பராகிக் கொண்டிருந்தன.

அன்று ஞாயிற்றுக்கிழமை. வாரம் முழுவதும் உழைப்பிலே உழன்று கொண்டிருக்கும் உலகமே உவந்து நோக்கும் ஓய்வு நாள். மனைவி, மக்களுடன் சினிமா, டிராமா, உல்லாசப் பயணம்—என்று யாவரும் மகிழ்வுடன் செல்லும் விடுமுறை நாள்.

ஆனுல் என்னைப் பொறுத்த வரையில் ஞாயிற்றுக்கிழமைக்கும் மற்ற நாட்களுக்கும் ஒரு வேறுபாடும் கிடையாது.

ஐம்பது ஆண்டுகளை விழுங்கிவிட்ட நான் என்றுமே எனது வாழ்வுப் பாதையைத் திரும்பிக் கூடப் பார்த்தது கிடையாது. ஆனுல் என்ன வியப்பு! என்னையறியாமலேயே என் மனக் கடல் பொங்கிக் கொப்புளித்துக் கடந்த கால நிகழ்ச்சிகளை நினைப்பூட்டுகிறது.

*　　*　　*

மனிதன் பிறந்த உடனேயே வாழ்வென்னும் நீண்ட நெடுஞ் சாலை வழியே மரணத்தை நோக்கித் தனது பயணத்தைத் தொடங்கிவிடுகிருன். இந்தச் சிறிய கால அளவிற்குள் அவனுக்கு எத்தனை பாசங்கள், பிடிப்புக்கள், விருப்பு, வெறுப்புக்கள் !

பிறந்தது முதலே வாழ்வுப் பாதையில் தனியனுக நடக்க ஆரம்பித்த நான் இன்னும் அப்படியேதான் நடந்து கொண்டிருக்கிறேன்.

நினைவு தெரிவதற்கு முன்பாகவே தாய் தந்தையரை இழந்துவிட்ட என்னை வளர்த்த தாய் வழிப் பாட்டியும் கண்களை மூடிவிட்டாள்.

திருச்சியில் எங்களுக்குச் சொந்தமாக இருந்த ஒரு வீட்டையும், சில ஏகரா நிலங்களையும் விற்று வந்த பணத்துடன், பி. ஏ. பட்டமொன்றைத் துணையாகக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தேன்.

அப்போது எனக்கு வயது இருபது. எண்பது ரூபாய்

ஊதியத்தில் ஒரு வேலையும் கிடைத்தது.

அப்போதுதான் கண்ணம்மா என் வாழ்வுப் பாதையில் இடைப்பட்டாள்.

நான் குடியிருந்த வீட்டுக்காரரின் மகள் கண்ணம்மா. கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவரும் கட்டழகி அவள். பருவப்பெண் பள்ளிக்குச் செல்வதையே பாவமாகக் கருதிய அந்த நாளில் கண்ணம்மா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். அதனால் என்னோடு தாராளமாகவும் பழகி வந்தாள். பழக்கம் நெருக்கமாக நாங்கள் ஒருவரை ஒருவர் காதலிக்க ஆரம்பித்தோம்.

பிற்போக்கு எண்ணங்கள் உடையவரான அவள் தந்தை எங்களது ஜாதகங்களின் பொருத்தம் காண எண்ணி எனது ஜாதகத்தின் நகலொன்றை ஒருநாள் வாங்கிச் சென்றார். எதிர்பாராத விதமாக அன்றிரவு கிராமத்தில் இருந்த அவரது தந்தை இறந்துவிட்டதாகத் தந்தி வந்தது. அதன் பலன்—

எனக்குக் கண்ணம்மாவைக் கொடுக்க முடியாது என்று நிச்சயமாயிற்று. நான் அதிர்ஷ்டமற்றவனும்!

நானடைந்த ஏமாற்றத்திற்கோர் வரையில்லை. கண்ணம்மாவைத் தனிமையிற் சந்தித்து 'ஓடி விடுவோம்' என்றேன். அவள் ஒப்பவில்லை. 'இயற்கையான ஒரு நிகழ்ச்சிக்குத் தவருன காரணம் கற்பித்து இப்போது உங்களை வேண்டாமென்று விட்டார்கள். இன்னும் சில நாட்கள் பொறுத்துக் கொள்ளுங்கள். நான் என் தந்தையிடம் மன்றாடிச் சம்மதம் பெற்றுக் கௌரவமாக உங்களை மணக்கிறேன்......' என்ருள் கண்ணம்மா.

'பசப்புக்காரி' என்று அவளைக் கடிந்துரைத்துவிட்டு இரவோடிரவாகச் சென்னையைவிட்டுக் கிளம்பிப் பல இடங்களுக்குச் சென்று கடைசியாகத் தில்லிக்கு வந்து சேர்ந்தேன்.

பிறகு உழைப்பு ஒன்றைத் தவிர வேறு எதையும் நான் அறிந்ததில்லை. அதன் பயனாக இன்று நான் இரண்டாயிரம் ரூபாய் ஊதியம் பெறும் ஒரு அரசாங்க அதிகாரி. காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை அலுவலகத்திலேயே இருப்பேன்.

சிகரெட்தான் எனது உற்ற நண்பன். எப்போதாவது ஆங்கிலப் படங்கள் காணச் செல்லுவேன்.

பார்ப்பவர் விரும்பும் பங்களா. பணிவிடைசெய்ய ஏராளமான பணியாளர்கள். எங்கும் சென்று வரக் கார். இவ்வளவும் இருந்தும் நான் தாமரை இலைத் தண்ணீர் போன்று உலகோடு ஒட்டாமலேயே இதுவரை வாழ்ந்துவிட்டேன்.

நான் எனது வாழ்க்கையின் ஒவ்வொரு படியாக உயர்ந்து வந்தபோது கணக்கற்ற பெண்கள் என் வாழ்வில் குறுக்கிட்டனர். சிலர் கண்ணம்மாவை விடப் பன்மடங்கு அழகு நிறைந்தவர்கள். நாகரிகம் மிகுந்தவர்கள். ஆனல் நான் யாரையும் மணக்கவோ, அல்

லது வேறு தொடர்புகள் வைத்துக் கொள்ளவோ விரும்பியதில்லை.

'ஸாஹேப், சாப்பிட வரவில்லையா?'

சமையற்காரனின் குரல்.

'மணி எத்தனை?'

'இரண்டு.'

உணவருந்தி முடித்த எனக்கு ஏதோ வெளியே செல்ல வேண்டும் போலத் தோன்றியது. காரை எடுத்துக் கொண்டு 'கன்னுட் பிளேசிற்கு' வந்தேன். 'ரிவோலி' தியேட்டரின் வாயிலில் ஒரே கூட்டம்.

பத்திரிகைகள் ஒருமுகமாகப் போற்றிய 'காதல் பலி' என்ற ஆங்கிலப் படம் அங்கு ஓடிக்கொண்டிருந்தது. மூன்றரை ரூபாய் டிக்கட் மட்டும் தான் கிடைத்தது.

படம் ஓட ஆரம்பித்தது.

என்ன விந்தை! கதை எனக்குப் புதிதே இல்லை. உள்ளங்களால் ஒன்றிய ஓர் இளைஞனும் ஒரு பெண்ணும் திருமணமெனும் திருக்கயிற்றினால் தங்கள் உடல்களைச் சேர்த்துக்கொள்ள முடியாது என்று தெரிந்ததும் ஒருவரையொருவர் அணைத்தவாறே நஞ்சுண்டு துஞ்சுகிறார்கள். என் கதையும் திரைக் கதையும் கிட்டத்தட்ட ஒன்று தான். ஆனால் முடிவு மட்டும் வேறு.

படம் முடிந்து வெளியே வந்தேன். மாலை மணி ஆறு. ஏற்கெனவே இருட்டிவிட்டது.

ஏதேனும் பானம் அருந்த எண்ணி அருகில் இருந்த உணவு விடுதிக்குள் நுழைந்தேன். அங்கும் ஒரே கூட்டம். நான் அமர்ந்திருந்த இடத்தில் இன்னும் இரண்டு பேர் உட்கார இடமிருந்தது.

'நாங்கள் இப்படி அமரலாமா?'

நிமிர்ந்து பாராமலே, 'ஓ, எஸ்' என்றேன்.

ஓர் இளம் பெண்ணும் ஓர் இளைஞனும் அமர்ந்தனர். இருவரும் பேசவாரம்பித்தனர். அவர்கள் தமிழ் நாட்டினர் என்று தெரிந்ததும் மெள்ள அவர்களை நோக்கினேன். என் கண்ணம்மாவையே உரித்து வைத்தது போன்றிருந்த அப் பெண்ணை வெறித்துப் பார்த்தேன்.

அந்த இளைஞன் கேட்டான்:

"ராதா! இன்று பார்த்த படத்தைப் பற்றி உனது கருத்து என்ன?"

அவள் கூறினாள்: "மோகன்! எனக்குக் காதல் கத்தரிக்காய் இவைகளில் சற்றும் நம்பிக்கை இல்லை."

"என்ன?" வியப்புடன் கேட்டான் மோகன்.

"உலகத்தில் விரும்பியவர்களுக்கு விரும்பியதெல்லாம் கிடைத்துவிடுவதில்லை. கிடைக்காத ஒன்றுக்காகக் கிடைக்கும் மற்றவைகளையும் புறக்கணித்து விடுவது மடமையாகும்......"

"உள்ளம் விரும்பியவனையோ விரும்பியவளையோ அடைந்தால் தானே பெண்ணோ, ஆணோ இன்பமாக இருக்கலாம்?"

"கிடைத்துவிடில் நல்லது தான். என் தாய் அடிக்கடி கூறுவாள்: என் தந்தையை

மணக்கு முன்னர் என் தாய் சந்திரசேகரன் என்ற இளைஞரைக் காதலித்தாளாம்......''

''சந்திரசேகரன்! அப்படியானல் எனது ஊகம் சரிதான். இவள் கண்ணம்மாவின் மகள் தான்......''

நான் இவ்வாறு எண்ணியவாறே நிமிர்ந்து உட்கார்ந்து அவள் தொடர்ந்து கூறியதைக் கேட்டேன்.

''......சந்தர்ப்ப வசத்தால் அவர்கள் திருமணத்திற்குத் தடையேற்பட்டு விட்டதாம். என் தாயிடம் வந்த சந்திரசேகரன் அவளைத் தன்னுடன் ஓடி வரும்படி அழைத்தாராம். 'அது தவறு. தாய் தந்தையரின் சம்மதத்துடன் நமது திருமணத்தை முடித்துக் கொள்ளுவதுதான் சிறந்தது,' என்று கூறினளாம் என் தாய். அவள் தன்னைக் காதலிக்கவில்லையோ என்று ஐயங்கொண்ட அவர் இரவோடு இரவாக எங்கோ ஓடிவிட்டாராம். சில நாட்கள் வரை பித்து பிடித்தவள் போலிருந்த என் தாய் தன்னையே தேற்றிக்கொண்டு தன் தந்தையால் தேர்ந்தெடுக்கப்பட்ட என் தந்தையை மணந்துகொண்டு வாழ்க்கை நடத்தினள். ஓடிப்போன சந்திரசேகரனைக் குறித்து அவள் சில சமயங்களில் வருந்தினலும் அவர் செய்தது தவறு என்றே இப்போதும் கூறுவாள்......''

நான் எழுந்துவிட்டேன் என்னல் உட்காரவே முடியவில்லை. வெளியே வந்து காரில் ஏறி வேகமாகச் செலுத்த ஆரம்பித்தேன்.

என்னுள்ளத்தில் ஏற்பட்டிருந்த புண் வடுவாகி விட்டிருந்தது. ஆனல் இப்போது பச்சைப் புண்ணுகி விட்டது. என்னல் வேதனையைத் தாங்கவே முடியவில்லையே?

என்னை மணக்க முடியாததால் நீ யாரையுமே மணக்காது தற்கொலை செய்துகொண்டிருப்பாய் அல்லது கன்னிகையாகவே காலம் கடத்தியிருப்பாய் என்று எண்ணி நானும் தனியாகவே வாழ்வை ஓட்டி விட்டேன். ஆனல் நீ அறிவு மிக்கவள். வாழத் தெரிந்தவள்!

இனி எனது வாழ்க்கைப் பிரயாணத்தில் துணை சேர எந்தப் பெண்ணும் தயங்குவாள். நான் இளமை இழந்து எழில் அழிந்த கிழவன். என் தவற்றின் விளைவை நான்தானே அனுபவிக்க வேண்டும்.

ஆரம்பித்தது போலவே இறுதி வரையில் தனியனுகவே காலத்தைக் கடத்தி விடவேண்டியதுதான் என் விதி. ✱

---

வாணிகம்—4

## யார் முதலாளி?

முதல் வைத்துத் தொழில் செய்பவன்தான் முதலாளி. கடன் வாங்கித் தொழில் செய்பவன் முதலாளியாகான். அவன் கடனாளி.

கி. ஆ. பெ.

HINDUSTAN LEVER

SERVES THE HOME

*Makers of quality*

*Soaps, Vanaspati and Toilet preparations*

HLL. 3-610

GRAMS :
"FAITH"

Estd : 1924

PHONE :
113

THE PREMIER JEWELLERY HOUSE
who first introduced the
GUARANTEE SYSTEM IN MADURAI

A. S. S. M.
SOMASUNDARAM CHETTIAR & CO.

MFG : JEWELLERS, GOLD & SILVERSMITHS
No. 124, SOUTH AVANIMOOLA STREET
MADURAI-1 (S. I.)

REGD. M.S. SEAL

GUARANTEE

*

மதுரையில் முதன்முதலாக உத்தரவாத
முறையை நிறுவிய வர்த்தக ஸ்தாபனம்

A. S. S. M.
சோமசுந்தரம் செட்டியார் & கம்பெனி
பவுன் நகைகள், வெள்ளிப் பாத்திர வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி
மதுரை-1 (S. I.)

# இயற்கை உணர்த்தும் பண்பாடு

பேராசிரியர், அ. மு. பரமசிவானந்தம்

மனிதன் எல்லாவற்றையும் வென்று விட்டதாகவும், தானே அனைத்தினும் மேம்பட்டவனாகவும், உலகத்தைக் கட்டியாளும் தகுதிபெற்றவனாகவும் தன்னைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டான். அதனாலேயே இன்று உலகில் எத்தனையோ மாறுபட்டங்களும் போராட்டங்களும் நடைபெறுவதைக் காண்கின்றோம். ஆனாலும் அவன் சற்று நின்று நினைத்துப் பார்த்தால், தன் வெற்றி உண்மையில் இயற்கையின் முன் பெற்ற தோல்வியே என்பதை உணர்ந்து கொள்வான். இன்றைய விஞ்ஞானம் அந்த உண்மையை நன்கு விளக்குகின்றது.

மனிதன் பிற உயிர்களினும் மேம்பட்டவன் என்று கூறுவது ஓரளவு உண்மைதான். என்றாலும் அவனினும் தாழ்ந்ததாகக் கருதப் பெறும் பல விலங்குகளும் பறவைகளும் புழு பூச்சிகளும் அவனுக்கு நாள்தோறும் எத்தனையோ உண்மைகளை உணர்த்திக் கொண்டே இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் மேலாக இயற்கையன்னை அடிக்கடி மனிதனைத் தட்டி எழுப்பிப் பலப்பல உண்மைகளைக் காட்டுகின்றாள். கடவுள் என்ற ஒரு பெரும் பொருள் மனிதனுக்கு மேலாக நின்று, அவனுக்கு வேண்டியவற்றைத் தகுதியும் நிலையும் பிற சூழல்களும் உணர்ந்து தந்து கொண்டிருக்கிறது என்பர் சமயத் தலைவர். கடவுள் பற்றற்றவரும்கூட இயற்கையில் நம்பிக்கை வைக்கின்றனர். அத்துடன் இயற்கையை எதிர்த்துப் போரிட முடியாத நிலையையும் உணர்கின்றனர். விஞ்ஞான உலகில் மனிதன் எவ்வளவுதான் முன்னேறி நின்றாலும், அந்த விஞ்ஞானமே இயற்கையின் ஆற்றலை அவனுக்கு உணர்த்தி அதை மனிதன் வெல்வது எளிதல்ல என்பதை விளக்கி வருகிறது. அத்தகைய இயற்கை மனித வாழ்வுக்குக் கற்றுத் தரும் பண்பாடு சிறந்த ஒன்றாகும்! மனிதன் அதை உணர்ந்தால்தானே!

நாம் வாழும் நிலம் என்றும் அமைதியாக இருப்பதில்லை. திடீர் திடீரெனப் பூகம்பங்களும், கடல் கோள்களும், பிற மாற்றங்களும் உண்டாகின்றன அல்லவோ! எதிர்பாராத பெரு மழையும், வெள்ளமும் உண்டாவதையும் காண்கின்றோமே! முறையாகப் பெய்ய வேண்டிய மழை நின்று, பயிர்கள் வாடி

வற்றலாவதும் அது போன்ற கொடுமைகளும், நாம் காணும் நிகழ்ச்சிகளே. இவைகளெல்லாம் ஏன் உண்டாகின்றன? ஆம்! இவையெல்லாம் மனிதனுக்கு இயற்கை உணர்த்தும் பண்பாட்டின் அடிப்படையை விளக்கும் பாடங்களேயாம். இவற்றின் நிலைகண்டு நாட்டு நிலையையும் உலக நிலையையும் ஒருவாறு உணர்ந்து கொள்ள இயலுமன்றோ! நாடாளும் நல்லவர்கள் முறை தவருது இருப்பார்களாயின் அவர்கள் வழி, நாட்டில் வாழும் உயிர்களும் வறுமையற்று இன்ப நிலையில் சிறக்கும். இல்லையாயின் அல்லல் பட்டு ஆற்ருது அழும் வகையில் பல கொடுமைகளை இயற்கை தோற்றுவித்து அறிவுறுத்தும். அதற்கும் திருந்தவில்லையாளுல் பெரும் போர்களும் ஊழிகளும் பேரழிவுகளுமேதாம். இவற்றையெல்லாம் எண்ணித்தான் போலும் சங்க காலப் புலவர் சிலர், இயற்கை மாறுபாட்டிற்கு மன்னரும் மக்களும் காரணமாகின்றனர் என்ற உண்மையை எடுத்துக் காட்டுகின்றனர்.

‘மாரி பொய்ப்பினும்
வாரி குன்றினும்
இயற்கை யல்லன
செயற்கையிற் ருேன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக்
கண்ணகன் ஞாலம்’

என்று வெள்ளைக்குடி நாகனுர் பாடிய பாட்டும் (புறம், 35)

‘எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழியநிலனே’
(புறம், 187)

என்று ஔவையார் பாடிய பாட்டும் இயற்கைக்கும் மக்கள் வாழ்வுக்கும் அவ்வாழ்வில் மலரும் பண்பாட்டிற்கும் உள்ள ஒற்றுமையை நன்கு புலனுக்கவில்லையா?

மனிதன் இயற்கையை வென்றுவிட்டான் என்று நாம் பேசிக் கொள்ளுகிருேம். ஆனல் அவ்வெற்றியின் நிலை என்ன? ‘கடலைக் கடக்கக் கப்பலைக் கண்டுபிடித்து விட்டோம். வானை நீந்த விமானம் கண்டு பிடித்துவிட்டோம். சந்திரனுக்கும் பிற உலகங்களுக்கும் போக வழி கண்டுவிட்டோம். எனவே இயற்கை எங்கள் சக்திக்கு அடங்கிவிட்டது’ என்று பேசுபவர்கள் நாட்டில் உள்ளனர். எனினும் அது அவர்தம் அறியாமையைத்தான் காட்டுகின்றது. அன்னையின் மடியில் தவழும் அருங் குழந்தை மெல்ல மெல்ல வளர்ந்து தத்தித்தத்தி அவள் தலையில் ஏறி நின்று கொண்டு, ‘அன்னை தனக்கு அடிமை ஆகிவிட்டாள்’ என்று நினைத்தால் எப்படியோ, அப்படித்தான் இந்த அறியா மனிதனின் நினைப்பும் அமைந்தது எனக் கொள்ள வேண்டியுள்ளது. இயற்கை அன்னையின் அடிமுடி அறிய முடியாத மனிதன் எங்கேயோ ஒன்றை அவ்வன்னையின் அருளாலேயே பற்றிக் கொண்டு, அவளை வென்று விட்டதாக எப்படி எண்ண முடியும்?

நிலம் மனிதனை வாழ வைக்கின்றது. தமிழ் நாட்டில், மக்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பாகுபடுத்தி அவற்றின்

சூழ்நிலைக்கு ஏற்பத் தம் வாழ்வை அமைத்துக்கொண்டு, செம்மை நெறி திறம்பாமல் சிறக்க வாழ்வதைக் காண்கின்றோம். அவ்வந் நிலத்தில் இயற்கை அன்னை, தன்னை அண்டி வாழும் மனிதனுக்கு வேண்டிய வாழ்வின் தேவைகள் அத்தனையையும் வழங்கவில்லையா? தன் மண்ணிடைப் பிறந்த ஒருவனை மற்றவர் கை நோக்கி வாழ விடவில்லை இயற்கை அன்னை. ஆனால் சோம்பேறி மனிதன் 'கானலை நீரென்றெண்ணிக் கடுவெளி திரியும் மானபோல்' கண்ட கண்ட இடங்களில் ஓடித்திரிந்து ஒன்றுக்கும் பயனற்று உலந்து போகின்றான். சிலர் இயற்கைக்குப் படிந்து போதல் தம் தன்மைக்கு இழுக்கு என அதை வெல்ல முயல்வர். அம்முயற்சி அவருக்கும் மற்றவருக்கும் நலம் தந்து, யாருக்கும் தீங்கிழைக்கா வகையில் அமைவதாயின் இயற்கையன்னை மகிழ்ந்து அவன் முயற்சிக்கு வெற்றியைத் தேடித் தருவாள். அன்றேல் அவன் உள்ளத்தில் வஞ்சனை மிகுமாயின், அவளே பொல்லாதவளாகி உலகையே அழித்து விட்டாலும் அழித்து விடுவாள். ஊழித்தீ அவள் உரு அல்லவோ?

இந்த உண்மைகளையெல்லாம் உணர முடியாத அவன் மேற்கொள்ள வேண்டிய பண்பாட்டை இயற்கை அன்னை உணர்த்துவாள். சிலர் மேடை மேல் பேசிவிட்டு எழுத்தெழுத்தாகப் பக்கங்களை நிரப்பிவிட்டுத் தனி வாழ்வில் மாறி வாழ்வதைக் காண்கின்றோம். இயற்கையின் பாடம் அத்தகையதன்று. தான் பாடம் சொல்லித் தருவது போலவே வாழ்ந்து காட்டுவாள் இயற்கை அன்னை. அவள் வாழ்ந்தும் கற்பித்தும் உலகுக்கு உணர்த்தும் பண்பட்ட பாடங்கள் பல. அவற்றை ஏட்டில் எழுத முடியாது. ஒன்றை மட்டும் இங்கே கண்டு அமைவோம்.

திருவள்ளுவனார் இந்த நிலத்தையும் அதன் செயலையும் அடிப்படையாக வைத்து மனிதனுக்கு ஒரு நல்ல அறிவு வரத்தக்க பண்பாட்டை உணர்த்துகின்றார். பண்பாட்டில் சிறந்தது 'தன்னை ஒறுத்தவனுக்கும் உதவுவது'; இதைக் கூறாத அறிஞர் இல்லை; காட்டாத சமயம் இல்லை. 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தலைத் தான் சால்பு என்றும் சான்றாண்மை என்றும் பண்பாடு என்றும் வள்ளுவரும் மற்றவரும் காட்டுகின்றனர். அந்த நிலத்தை உவமையாக்கி வள்ளுவர் கூறும்போது நாம் நம்மை அறியாமலேயே 'நிலமென்னும் நல்லாளா'கிய இயற்கை அன்னைக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை உணர முடிகின்றது; ஆம், அவளை வெட்ட வெட்ட நல்ல பலனைக் கொடுக்கிறாள். ஆழ உழுபவருக்கு அதிக விளைவை உண்டு பண்ணிப் பொன் கொழிக்கச் செய்கிறாள். வேண்டிய நீரைத் தருகிறாள். அது மட்டுமா? பொன்னையும், எண்ணெயையும், கரியையும், பிறவற்றையும் தந்து தன்னை வெட்டிய மனிதனின் வாழ்வை வளமாக்கி வைக்கிறாள். எல்லாவற்றிற்கும்

மேலாக, அம் மனிதன் வாழை யடி வாழையாய் வெட்டிய அதே மண்ணின்மேல் நின்று வாழ அருள் சுரக்கிருள். கடைசியாக அவன் வீழ்ந்தாலும் தன் மணி உதரத்தில் ஏற்று அமைதியைத் தருகின்ருள். இந்த நிலத்தின் பண்பாடு பற்றி யார்தான் வியவாதிருக்க முடியும்?

ஆம், அறிஞர் அனைவரும் அந்த உண்மையைக் கண்டு கண்டு வியக்கின்றனர். வள்ளுவர் வியந்தார். அவர் அந்த வியப்புடன் நின்று விடவில்லை. அதனை உட்கொண்டு 'நிலம் காட்டும் பண்பாட்டை' உலகுக்கு நல்ல முறையிலே எடுத்துக் காட்டியும் விளக்கிவிட்டார்.

'அகழ்வாரைத் தாங்கும்
நிலம் போலத்தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல்
தலை'

என்று அவர் பாடும்போது நிலமாகிய இயற்கை அன்னை எவ்வளவு பெருமிதம் கொள்வாள்! எனினும், அவள்மீது தோன்றி வாழும் மக்கள் அனைவரும் இந்த வள்ளுவர் காட்டிய நல்ல உண்மையை உணர்ந்து, அந்த நேரிய பாண்பாட்டைக் கடைப்பிடித்து, இகழ்வார்ப் பொறுத்து எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்துச் செயலாற்றி வாழ்வார்களாளுல் அவள் பெருமிதம் இன்னும் ஆயிரமாயிரம் மடங்காகப் பெருகும் என்று சொல்லவும் வேண்டுமோ?

---


# ஐடெக்ஸ் கண் மை

சாஸ்திரீய முறையில் தயாரிக்கப்பட்டது.
சிறு குழந்தைகள் முதல் எல்லோரும்
உபயோகிக்கலாம்.




## அரவிந்த் பிந்தி

குங்கும் சாந்து
ஆறு கலர்களில்
எங்கும் கிடைக்கும்

## அரவிந்த் லாபரட்டரீஸ்

P. B. 1415, மதராஸ்–33.

# THIRU AROORAN SUGARS LTD.

VADAPATHIMANGALAM
TANJORE DISTRICT
[MADRAS STATE]

*

*MANUFACTURERS OF*

## BEST QUALITY WHITE CRYSTAL SUGAR

*

*MANAGING AGENTS :*

**VENKATESA TYAGARAJAN (Private) LTD.**

EXPRESS ESTATE, MOUNT ROAD,
**MADRAS-2**

Telegrams : "FINESUGAR" Madras.

# ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் (பிரைவேட்) லிமிடெட்
## பொள்ளாச்சி

எங்கள் பஸ்ஸுகள் கோயமுத்தூர், மதுரை ஜில்லாக்களிலும், கேரள ராஜ்யத்தில் திருச்சூர் ஜில்லாவிலும், தினசரி சுமார் 12,000 மைல்கள் குறித்த நேரங்களில் ஓடி 30,000-க்கு மேற்பட்ட பொது மக்கள் பிரயாணம் செய்ய வசதியளிக்கிறது.

*

சென்ற 28 வருடங்களாகப் பொதுமக்களுக்குச் சிறப்பாகவும், திறமையாகவும் பணியாற்றிவரும் ஒரு ஸ்தாபனம்.

*

கம்பெனியின் வெள்ளி விழா 31–10–58, 1–11–58, 2–11–58 தேதிகளில் கொண்டாடப்பட்டது.

*

தொழில் நுணுக்கமும், திறமையும் கொண்ட 500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த ஸ்தாபனத்தில் பணி செய்கிறார்கள்.

*

**N. மகாலிங்கம்,** B.Sc., A.M.I.E., M.L.A.,
டைரக்டர்.

# ஜனநாயகியம்மன் தேர் உலா

திருலோக சீதாராம்

●

உதய சூரியன் தோற்றினன் கீழ்த்திசை
ஓங்கி டுந்திருக் கோயிலின் கோபுரத்(து)
உச்சி வெண்பிறை ஒண்சுடர் காந்துமாம்
ஒற்றை நாமணி ஓதிடும் செய்திகேள் :

துதிகொள் தெய்விகச் சீர்த்திகள் பாடியே
தூப தீபநி கேதனங் காட்டுவோம்
துய்ய மாமணிச் செஞ்சுடர் பாரதத்
தேய மார்ந்த விடுதலை யென்னுமோர்

புதிய கொள்கையின் பொற்றடந் தேரதோ
பொங்கி யாடிக் குலுங்கி எழுந்தது
போந்து நின்றுபல் லாண்டுகள் பாடுவோம்
புதுயு கச்சன நாயகி வெல்கவே !

(வேறு)

இமயநெடு மால்வரையி னின்று பொற்றேர்
எழில்பரத கண்டமெனும் இனிய நாட்டின்
அமைந்தபெரு வீதியெலாம் அதிரப் போந்த
அழகுதிருப் பவனிபுகழ் ஆர்ந்து கேண்மின்.

ஓங்கியெழும் முரசொலியும் அதிர்ந்த தாலோ
உற்றதொரு கட்டளையை உய்த்துக் கேண்மின்
பாங்கிலுறு பரிசனங்கள் பணிந்து போற்றப்
பாவாணர் வாழ்த்திசைக்கும் பதங்கள் கேண்மின்.

தேரோடும் வீதிகளில் முன்னரெல்லாம்
தியங்கி நலந்தேய்ந் தயர்ந்து திகைத்தார் இன்றோ
காராளும் கழனிகளில் கால்கள் ஊன்றிக்
கைத்தொழிலில் எத்திறமுங் கண்டு கொள்ளப்

பாரோங்கும் விஞ்ஞானப் பயிற்சி கண்டே
பாரதத்து மண்டலத்தார் பதமும் பெற்றார்
தேரேறிப் பவனிவரும் தேவ தேவித்
திருவார்ந்த விழாப் பெருமை தெரியக் கேளீர்.

வாய்மூடி அன்னியரின் வசப்பட் டேங்கி
வறுமையுடன் சிறுமையெலாம் பொறுத்துக் கொண்ட
தாயற்ற பிள்ளைகளாய்த் தவித் திருந்த
தனயர்களோ இன்றுபுதுச் செருக்குக் கொண்டார்

இமய வரம்பாகி நின்று செங்கோல் ஓச்சும்
இளையை திரு பாரதமா தேவி யெங்கள்
அமைந்த பெருவாழ்வு குடியரசாய் வந்து
அருள் செய்யும் தேர் இந்தத் தேசமெல்லாம் !

சென்ற வழி யெங்கெங்கும் செம்மை யார்ந்து
சிறப்புடனே கல்வி நலம் தொழில்கள் கண்டு
மன்றமெனும் உலகத்தில் மதிக்கப் பெற்று
மண்டு புகழ் கொண்டினிது வாழ வாரீர் !

(வேறு)

தேரின் மேலிவர்ந் தாள் சன நாயகித்
தேவ தேவியின் இன்னருட் புன்னகை
யாரும் நாமனை வோரும் இணைந்திடும்
இன்ப சோதி எழில் நகை யாகுமே.

# குற்றத்தின் நான்கு நிலைகள்

வி. செ. கந்தசாமி, பி.ஏ., எல்.எல்.பி.

மக்கள் சமூகமாகச் சேர்ந்து வாழத் தொடங்கியதும், தங்களுடைய நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்திச் சில கட்டுப் பாடுகளையும், விதிகளையும் அமைத்துக் கொண்டார்கள். இந்தக் கட்டுப்பாடுகளையும், விதிகளையும் செயல்படுத்தும் பொறுப்பைத் தன்னுள் ஒன்ருகக் கொண்டது ஆட்சி. மக்கள் கட்டுப்பாடாகவும், நீதியைக் காத்தும் ஒழுகத் துணை புரிவதும், அவர்கள் கட்டுப் பாட்டை மீறி நீதி தவறிய போது அதற்கான தண்டனையைத் தெரிந்து கொடுப்பதும் ஆட்சியின் கடமைகளுள் ஒன்ருகும். முன்னையதை உடன்பாட்டுச் செயல் என்றும், பின்னையதை எதிர்மறைச் செயல் என்றும் கூறுகிறேம். ஆட்சியின் இந்த எதிர்மறைச் செயலைத்தான் திருவள்ளுவர்,

"கொலையிற் கொடியாரை
   வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனேடு நேர்."

என்ருர். ஆயினும், ஆதிகாலந் தொட்டே எது குற்றம், குற்ற மிழைக்கும் கொடியவர் யார், மக்கள் கட்டுப்பாட்டை மீறி, நீதி தவறும் குற்றவாளிகளாக ஆவது எப்போது என்ற கேள்விகள் மனிதனுடைய மனத்தை அரித்துக் கொண்டே வந்திருக்கின்றன. இன்றும் இத்துறையில் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியான கொள்கையோ, அக் கொள்கையை ஒட்டிய சட்டமோ இல்லை. நாட்டுக்கு நாடு அவைகள் வேறுபடுகின்றன.

குற்றம் செய்வதில் நான்கு நிலைகள் உள்ளன. அவை: (1) விழைதல் (Intention); (2) தயாரிப்பு (Preparation); (3) எத்தனம் (Attempt); (4) செயல் முடிவு (Completion) என்பனவாம். சான்ருக, ஒரு கொலைகாரன் முதலில் ஒருவரைக் கொல்ல விழைகிருன்; பிறகு அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிருன். (உ. ம்.) துப்பாக்கியும் குண்டுமோ, கத்தி அல்லது பிற கருவிகளோ வாங்கிக் கொலைக்குத் திட்டமிடுகிருன். மூன்ருவதாகக் கொலை செய்ய எத்தனிக்கிருன். இறுதியாக அவன் தன் எத்தனத்தில் வெற்றி பெற்ருல், கொலைக்குற்றம் பூர்த்தி ஆகிறது.

முதலாவதாக உள்ள விழைதல் மனதை ஒட்டியது. சட்ட விற்பன்னரான சால்மாண்ட், "விழைதல் என்பது செயலைச் செய்வதற்கான உணர்வு அல்லது மன அமைப்பு" என்கிருர்.

செய்யப் போகும் செயலைப் பற்றிய அறிவும், அதைச் செய்ய வேண்டுமென்ற அவா வும் விழைதலில் அடங்கி இருக் கின்றன. செய்பவரின் மனத்தில் செயலின் தொடக்கம், அதைத் தொடர்ந்து நிகழும் நிகழ்ச்சி கள், இறுதியில் உண்டாகும் குறிப்பிட்ட விளைவு என்பன பற்றிய முன்கூட்டிய அறிவும், அதோடு அப்படிப்பட்ட விளைவை அடைய வேண்டு மென்ற அவாவும் இருக்கு மானல், அச்செயல் முழு விழை வுடன் செய்யப்பட்டதாகும். முன்கூட்டிய அறிவும், அவா வும் இல்லை என்ருல், அது முற் றிலும் விழைவின்றியதாகும். ஒரு செயல் ஓரளவு மட்டும் வேண்டப்பட்டதாக அல்லது விழையப்பட்டதாக இருக்க லாம். சான்ருக, திருடன் ஒரு வன் ஓடித் தப்பித்துக் கொள் வதைத் தடுக்க நான் அவன் காலில் சுடும்போது, குண்டு குறிதவறி அவனுடைய தலை யில் பட்டு அவன் இறந்தால், இச்செயலில் காயப்படுத்த வேண்டும் என்பது விழைந் தும் அல்லது வேண்டியும், அவ னைக் கொன்றது விழைவின்றி யும் செய்யப்பட்ட செயல்களா கும். ஆகவே ஒவ்வொரு செயலும் வேண்டியோ விழைந்தோ செய்யப்பட்டது என்பது இல்லை. அதேபோல விழைகின்றவை எல்லாம் செயல்படுவதுமில்லை.

பொதுவாக விழைவும் அதைப் பற்றிய அறிவும் தொடர்பு கொண்டிருக்கின்றன. ஒருவன் குறிப்பிட்ட ஒரு விளைவை விழையும்போது, அது குறிப்பிட்ட ஒரு செய லால்தான் விளையும் என்பதை அவன் அறிவான். ஒருகுறிப் பிட்ட விளைவு தன் செயலால் ஏற்படும் என்பதை ஒருவன் அறிந்திருந்தால் அவன் அந்த விளைவை விழைகிருன். ஆனல் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இது உண்மையாகாது. சான் ருக, ஒரு தளபதி, தன் படை வீரர்களை எதிரியின் அணி வகுப்புக்கு நேரே பாய்ந்து செல்ல ஆணையிடுகிருன்; அவர் களில் அநேகர் கொல்லப்படு வார்கள் என்பதை அத்தளபதி அறிவான். ஆயினும், அவன் அவர்களைக் கொல்ல அல்லது கொலை செய்ய விழைவதில்லை; ஏனென்ருல், அவர்கள் சாவை அவன் விரும்புவதிலை. இச் சான்றின் மூலம், ஒருவனுக்குத் தான் செய்யும் செயலினுல் ஏற் படும் விளைவைப் பற்றி விழைவு இல்லாதபோதுகூட அத்தகைய விளைவைப் பற்றிய அறிவு இருக்கிறது அல்லது அத் தகைய விளைவைப் பற்றி அவன் தெரிந்து இருக்கிருன் என்பதை அறிகிருேம். 'அ' என்பவர் தன் பகைவரான 'ஆ' என்பவரைச் சுடுகிருர். ஆனல் 'அ'வின் துப்பாக்கிக் குண்டு, 'ஆ' நிற்கும் இடம் வரை செல் லாது. தான் சுடுவதால் 'ஆ' வின்சாவு நிச்சயம் என்ருே அல் லது சாவு ஒருவேளை சம்பவிக்க லாம் என்ருே 'அ' வுக்குத் தெரி யாது. ஆயினும், இம்மேற் கோளில், சட்டப்படி, 'அ' வுக்கு 'ஆ' வைக்கொல்லுகின்ற விழைவு உண்டு என்று தீர் மானிக்கப்படும்.

திட்டமிட்டு ஒரு செயலில்

ஈடுபடும் ஒருவனின் மனத்தில், அச்செயலின் இயற்கையான, தடுக்கவொட்டாத பின் விளைவுகளைப் பற்றிய எண்ணம் தோன்றி இல்லாவிட்டாலும், அவற்றை அவன் விழைகிறுன், விரும்புகிருன் என்பதைச் சட்டம் உருவகித்துக் கொள்கிறது. சான்ருக, மனிதர்கள் உள்ள ஒரு கூட்டத்தை நோக்கி நான் சுடுகிறேன். என்னுடைய விழைவு அவர்களை அச்சப்படுத்துவதே அன்றி யாரையும் காயப்படுத்துவது அல்ல; என்ருலும் அவர்களில் சிலர் குண்டடிபடுகிருர்கள். இதில் என்னுடைய பிழை விழைந்து செய்ததாகும். சட்டம் இவ்வாறு தான் உருவகித்துக் கொள்ளும். ஏனென்ருல், மனிதர்கள் ஒரு கூட்டத்தை நோக்கிச் சுட்டால் அக்கூட்டத்தில் உள்ள சிலர் நிச்சயம் குண்டடிபடுவார்கள் என்பது சாதாரண அறிவுள்ள ஒவ்வொருவருக்கும் தெரியும். தெரிந்தே செய்யப்படும் ஒரு செயல், விழைந்தே செய்ததாகத்தான் சட்டத்தில் கொள்ளப்படும்.

குற்றம் செய்வதற்கு எவை எவை தேவையோ அல்லது எவை தேவை எனக் குற்றவாளி எண்ணுகிருனே அவற்றைப் பெற, வேண்டிய ஏற்பாடு செய்வது இரண்டாவது நிலை. ஆயினும், இந்த இரண்டு நிலைகளிேைடு மட்டும் செயல் நின்றுவிட்டால், அச்செயல் குற்றத்திற்குப் பாத்தியதை ஆகாது. சான்ருக 'அ' என்பவர் ஒருவரைக் கொல்ல விழைந்து அதற்காக நஞ்சு வாங்குகிருர். ஆனல், அந்த நஞ்சை மற்றவர் சாப்பிடும் உணவில் கலக்காத வரை, கொலைக்கான முயற்சி அங்கு இல்லை. ஆகவே, குற்றமான விழைவு கொள்வதனலேயே அல்லது அதையொட்டி ஆயத்தம் செய்வதனலேயே ஒருவன் தண்டிக்கப்படுவதில்லை. ஏனென்ருல் ஒரு புகழ் வாய்ந்த நீதிபதி குறிப்பிட்டது போல, ஒருவனின் மண்டை ஓட்டைப் பிரித்துப் பார்த்து, அவன் மனத்தில் என்ன விழைகிருன் என்பதை நாம் கண்டுபிடிக்க முடியாது. குற்றத்திற்கான பொறுப்பு மூன்ருவது, நான்காவது நிலைகளிலேயே எழுகின்றன.

குற்றம் இழைக்க வேண்டி ஏற்பாடு செய்வதற்கும், எத்தனிப்பதற்கும் இடையில் அதிக வேறுபாடு காண்பது கடினம். ஆனல், சால்மாண்ட் என்பவர், "எவ்விதத்திலும் குறை காண முடியாத ஒரு செயல் எத்தனம் ஆகாது; ஆகவே அது குற்றத்திற்குப் பாத்திரமாகாது" என்கிருர். ஆனல் எடுத்த எடுப்பிலேயே களங்கமுள்ளதாக உள்ள ஒரு செய்கை குற்றத்திற்குப் பாத்திரமாகும். (உ-ம்) கள்ள நோட்டு அச்சடிக்கும் விழைவுடன் அதற்கான சாயம் வாங்குதல்.

ஆனல் புரை மனதுடன் செய்யும் குற்றமான எத்தனம், பூர்த்தியான குற்றத்தைப் போலத் தண்டனைக்குரியதாகும். எந்தச் செயல், தடங்கல் எதுவும் குறுக்கிடாமல் இருந்திருந்தால் குற்றமாக உருவெடுத்திருக்குமோ அதுவே குற்றமான எத்தனமாகும். ஒருவன்,

குறிப்பிட்ட விளைவை விழைந்து, ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்தும், அவனுடைய கட்டுக் கோப்பில் அடங்காத சில சம்பவங்களால், அவன் தான் விழைந்த விளைவை அடைய முடியாமல் போயிருந்தாலும், அது குற்றமான எத்தனமேயாகும். ஏனெனில், எதிர்பாராததும், குற்றமிழைக்க விரும்பியவனின் கட்டில் அடங்காததுமான குறுக்கீட்டால்தான் குற்றம் நிகழவில்லையே தவிர, மற்றப்படி குற்றச் செயல் பூர்த்தியாகிவிட்டிருக்கும். இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்ருல், எத்தனமானது நடைமுறையில் குற்றமான விளைவை உண்டாக்க வல்லதாக இருந்திருக்க வேண்டும் என்பதே. குற்றம் முடிவுருமற் போனது செய்பவனின் விழைவைப் பொருத்தில்லாது, ஏதோ ஒரு புறச்சூழ் நிலையையோ அல்லது சம்பவத்தையோ பொறுத்திருக்க வேண்டும். சான்ருக, நான் ஒரு வீட்டைத் திருடுவதற்குத் தயாராகி, அதற்கென இரவில் சென்று, என் தலையை அந்த வீட்டுச் சுவற்றில் வைத்து தூக்க முயற்சித்தால், சட்டப்படி நான் "திருட எத்தனித்ததாகாது." ஏனென்ருல், வீடு திருடப்பட முடியாத ஒரு பொருள்; சாதாரணமாக அதைத் தூக்கி எடுத்துக் கொண்டுபோக முடியாது. எச்சந்தர்ப்பத்தில் புரை மனதுடன் செய்யப்படும் குற்றமான எத்தனம், பூர்த்தியான குற்றத்தைப் போலத் தண்டனைக்குரியதாகும் என்பதைப் பின்வரும் சான்ருல் அறியலாம். 'அ' என்பவர், 'ஆ' என்பவரைக் கொல்ல விழைந்து, 'ஆ' படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிருர் என்று தான் நினைக்கும் கட்டிலை நோக்கிச் சுடுகிருர்; ஏனென்ருல், அதே கட்டிலில்தான் 'ஆ' இதற்கு முன் வழக்கமாகத் தூங்கி வந்திருக்கிருர். ஆனல், தன்னைக் கொலை செய்வதற்கான எத்தனம் இருப்பதை முன்கூட்டியே அறிந்து, 'ஆ' அன்று இரவு ஒரு கட்டையைத் தன் கட்டிலில் போட்டு வைத்திருந்ததாலோ, அல்லது, வெளியே போய்விட்டதாலோ அவர் கொல்லப்படவில்லை. ஆயினும், இங்கே செய்தது கொலை செய்ய எத்தனித்த குற்றம். ஏனென்ருல், 'அ' சுட்ட துப்பாக்கிக் குண்டு, 'ஆ'வைச் சாதாரணமாகக் கொன்று இருக்கும். 'அ' தன்னுடைய கொலை செய்யும் எத்தனத்தில் தவறியது, 'ஆ' படுக்கையில் அன்று இல்லாமல் போனதால் தான். ஆனல் இந்தச் சூழ்நிலையை 'அ' உணர்ந்திருக்கவில்லை. அதோடு இச்சம்பவம் அவர் கருத்துக்கும் எட்டாத ஒன்று. இங்கே நாம் முக்கியமாகக் குறிக்க வேண்டியது என்னவென்ருல், 'அ' கட்டையை அல்லது காலிப் படுக்கையைச் சுட்டதன் மூலம் எவரையும் கொன்று இருக்க முடியாது என்ருலும், 'அ' குற்றவாளிதான். ஏனென்ருல், 'ஆ' படுக்கையில் இருப்பதாக நம்பி, அவரைக் கொல்ல வேண்டும் என்ற குற்றமான விழைவுடன், 'அ' சுட்டார்; ஆகவே 'அ' கொலை செய்ய எத்தனித்த குற்றவாளியாகிருர்.

இதேபோல, ஒருவர் ‘ஆ’வின் சட்டைப் பையிலிருந்து பணத்தைத் திருடுவதற்காக, அதில் கையை விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால், அப்போது அதில் பணம் இல்லாததால், அவரால் திருட முடியவில்லை. ஆயினும், இங்கே அவர் செய்தது திருட எத்தனித்த குற்றமாகும். ஏனென்றால், சட்டைப் பையில் வழக்கமாகப் பணம் இருக்குமாதலால் அவருடைய செயல், சாதாரணமாகத் திருட்டில் தான் முடிந்திருக்கும். பணத்தைப் பையிலிருந்து திருட எத்தனித்தவரின் கட்டுக்கோப்பில் அடங்காததும், கருத்தில் புலப்படாததுமான ஒரு சூழ்நிலையால்தான், திருட முடியவில்லை. ஆகவேதான் அவர்மீது திருட எத்தனித்த குற்றம் சாற்றப்படும்.

ஆகவே, குற்றமான ஒரு செயலைச் செய்ய விழைந்து, அதற்காக வேண்டிய ஏற்பாடுகளைத் தயாரித்துக் கொண்டு, அக்குற்றமான செயலைச் செய்ய எத்தனமும் செய்து, அதில் வெற்றியும் பெற்றால், குற்றம் பூர்த்தியாகிறது. ✶


with the compliments of

BRITANNIA

makers of

Better Biscuits

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

# "DEVI"

## 35 MM
## CINEMA PROJECTORS




***First of its kind***
***Manufactured in India***

**EXCELLENT PERFORMANCE**
**SIMPLE MECHANISM**
**ECONOMIC INVESTMENT**

***Backed by Guarantee for its Trouble-Free Service***

★

*CONTACT MANUFACTURERS:*

*Office:*
**DEVI FILMS PVT. LTD.,**
498, MINT STREET,
**MADRAS-3**

*Works:*
**DEVI FILMS PVT. LTD.,**
INDUSTRIAL ESTATE,
**GUINDY : : MADRAS-32**

*Branches at:*
BANGALORE, SECUNDERABAD, COIMBATORE,
SALEM, METTUR & BOMBAY


SMOKE SIMLA THE FILTER
TIPPED CIGARETTE WITH THE
TRUE TOBACCO TASTE
Discover the real pleasure of
smoking the
filter fresh
cigarette.
It's good—
it's smooth—
it's got the true
tobacco taste...
SIMLA
SIMLA
SIMLA
20 CIGARETTES
SIMLA
FILTER TIPPED
CIGARETTES
20
60 nP.
for 20
ISSUED BY THE IMPERIAL TOBACCO COMPANY OF INDIA LIMITED

# THE INDIAN OVERSEAS BANK LTD.

*Central Office*: 151, MOUNT ROAD, MADRAS–2

WITH BRANCHES IN INDIA, BURMA, CEYLON, HONGKONG, FEDERATION OF MALAYA, SINGAPORE & THAILAND AND WITH WORLD-WIDE AGENCY ARRANGEMENTS

**I. O. B.**

*Offers you*

**A COMPREHENSIVE BANKING SERVICE**

- **Expert advice** on trading problems and vital market information.
- **Personal Loans** for purchase of durable consumer goods, repayable in easy instalments.
- **Travellers' Cheques** handy as cash, safe as bank drafts, for care-free travel.
- **Gift Cheques**: multi-coloured gift cheques in attractive greeting jackets to suit every occasion—birthdays weddings, festivals.
- **Savings Accounts** now yield interest at 3% p. a., with-drawals by cheque allowed.
- **Recurring Deposits**: pay in small amounts and receive a large sum at the end.
- **Three-year Special Savings Certificates** issued in convenient denominations carrying a progressively increasing rate of interest.
- **Fixed Deposits** accepted from 3 days to 5 years at interest rates varying from 3% p. a. to 5% p. a.

*

*For further information please call at any of our local branches*:

(1) 'Malhotra Buildings' Janpath, New Delhi–1.
(2) 10223, Gurudwara Road, Karol Bagh, New Delhi–5.
(3) 1332, Chandni Chowk, Delhi–6.

# ரட்சை

ராஜம் ராமச்சந்திரன்

அந்தச் சிறிய வீட்டின் வாசற் படிக்கட்டில் பத்து வயதுச் சிறுமி ஒருத்தி உட்கார்ந்து கண்களில் ஏக்கம் நிறைந்த பார்வையோடு தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய சிறு கையில் ஓரணு விலையுள்ள ஒரு ரட்சைக் கயிறு கட்டிக் கொள்ள ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தது. ஆம்; அன்று ரக்ஷாபந்தன். வட நாட்டுப் பெண்கள் தங்கள் சகோதரர்களின் க்ஷேமத்தைக் கோரி அவர்களின் கரத்தில் ரட்சைக் கயிறு கட்டும் புனிதப் பண்டிகை. அந்த சகோதரர்களும் தங்கள் நலம் கோரும் உடன் பிறந்தவளுக்கு ஏதேனும் அன்புப் பரிசு வழங்குவர். சிறுமியின் நெஞ்சு தனக்கு ஒரு அண்ணன் இல்லாத குறையை நினைத்துத் துடித்துக்கொண்டிருந்தது. அவள் கண்களில் எந்த நேரமும் கீழே விழத் தயாராய் இரு நீர் முத்துக்கள் திரண்டிருந்தன. வீதியில் போகும் ஆண் பெண்கள் யாவரும் மகிழ்ச்சியே உருவாகச் சென்று கொண்டிருந்தனர். ஆடவர்களின் கரங்களில் பல விதமான ரட்சைக் கயிறுகள் பளிச்சிட்டன. துக்கத்தால் வாடியிருந்த சசி தன் தோழி ஆஷாவின் குரல் கேட்டுத் திரும்பினாள். இறத்த நிறமுள்ள பளபளக்கும் ஸல்வார், கம்மீஸ் அணிந்து, கைகளில் சாக்லெட் டப்பாவும் கத்தையாக ரூபாய் நோட்டுகளுமாகக் குதித்து ஓடி வந்த ஆஷா "ஏ சசி, இதோ பார், என் பெரியண்ணு கொடுத்த ஸல்வார்; சின்ன அண்ணுவாக்கும் இத்தனை ரூபாயும் கொடுத்தார்; கடைசி அண்ணு மட்டும் அடுத்த வருஷம் ஆபீசுக்குப் போவானும், அப்போது நிறையத் தருவதாகச் சொல்லி இந்த "டாபி" மட்டும் கொடுத்தான். என் குட்டித் தம்பிக்குக்கூட ரட்சை கட்டினேனுக்கும்" மூச்சு விடாமல் ஆஷா பேசியதையும் அவளுடைய குதூகலத்தையும் கண்டு சசிக்கு இன்னும் அழுகை வெடித்து வந்தது. ஸல்வாரைத் தொட்டுப் பார்த்தவள் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டாள். ஏ அப்பா! என்ன வழ வழப்பு! ஆஷாவுக்கென்ன, மூன்று அண்ணன்கள்! ஒரு தம்பி வேறு! தோழி ஓடிவிட்டதைக் கூடக் கவனியாது சசி சிந்தனையில் மூழ்கிவிட்டாள். "தன் அண்ணுவும் இப்பொழுது இருந்தால்? ஆஷாவுக்கு கிடைத்த மாதிரி தனக்கும் ஏகப்பட்ட பரிசுகள் கிடைக்கும். நல்ல ரட்சைக் கயிறு வாங்கியல்லவா கட்டுவாள் சசி. அண்ணுவின் சிவப்புக் கையில் முத்துக்கள் கோர்த்த கயிறு எத்தனை ஜோராக இருக்கும். இப்படி ஓரணுக் கயிறு வாங்கிக் கட்ட ஆளில்லாமல் இருப்பானேன்.

பாவம் அம்மா! பங்களாக்களில் இத்தனை துணி துவைத்து வேலை செய்தும் கயிறு வாங்க ஓரணு கொடுக்கக் கஷ்டப்படு கிருள். அண்ணு இருந்தால்...? அண்ணுவுக்கு சசிமேல் எத்தனை ஆசை! குண்டர்கள் லாகூரில் வீட்டை நெருப்பு வைக்கப் போவதை அறிந்து சசியை முதுகின்மேல் கட்டிக் கொண்டு சந்துபொந்தெல்லாம் ஒளிந்து வந்தானே! பாவி குண்டர்கள் நடு வழியில் அண்ணனைத் துப்பாக்கியால் சுட்டும் தன்னைக் காப்பாற்ற அடியில் கிடத்தி மேலே மறைத்துக் கொண்டு எத்தனை கஷ்டப் பட்டான்? எப்படியோ அம்மாவும் சசியும் தப்பி வந்தாயிற்று. அண்ணுதான் செத்துப் போனுன் என்ருல் ஒரு தம்பியாவது கிடைக்கக் கூடாதா; ஆஷா வீட்டுத் தம்பி மாதிரி?! அம்மாவைக் கேட்டால் இனிமேல் தம்பியுமில்லை, ஒன்றுமில்லை என்று அழ ஆரம்பித்து விடுகிருள். அப்பாவைக் குண்டர்கள் கத்தியால் குத்தியதிலிருந்து அழ ஆரம்பித்த அம்மா இன்னும் அழுகிருள். ஒருவேளை சசியிடம் ரட்சைக் கயிறுகட்டிக் கொள்ள யாருமேயில்லை யென்று அழுகிருளோ?'' இவ்வளவையும் நினைந்து சசி கடைசியில் விக்கி விக்கி அழலானுள்.

"ஏன் அழுகிருயம்மா?'' என்று ஒரு வாலிபன் கேட்டுக் கொண்டே எதிரில் நின்ருன். அவனுக்கு இருபது வயது இருக்கும். அழுத முகத்தோடு நிமிர்ந்து பார்த்த சசி அவனிடம் "எனக்கு......எனக்கு ஆஷாவுக்கு இருக்கிற மாதிரி ஒரு அண்ணுகூட இல்லையே! இந்தக் கயிற்றை யாருக்குக் கட்டுவேன்'' என்று தேம்பினுள்.

"ஏன் எனக்குத்தான் கட்டேன். நான் உன் அண்ணுவாக இருக்கிறேன் இன்று. ஆனுல் நான் மதருஸி! எனக்குக் கட்டுவாயோ நீ?''

மழை பெய்து கொண்டேயிருக்கும்போது திடீரென்று இடையே தோன்றும் சூரிய ஒளி போல், துக்கத்தால் சோம்பிய சசியின் வதனம் மகிழ்ச்சியால் ஒளிபெற, "மதருஸியானுல் என்ன அண்ணு! இந்த ரட்சையைக் கட்டிக் கொள்ள எனக்கு ஒரு அண்ணுதானே வேண்டும்'' என்றுகூறிக் கண்ணீர்த் துளிகள் பட்டுக் கசங்கியிருந்த அந்த ரட்சைக் கயிற்றை அன்புடன் அவன் கையில் கட்டி விட்டு அவன் பாதங்களைத் தொட்டாள். நெஞ்சு நெகிழ்ந்து போன வாலிபன் தன்னிடமிருந்த ஒரு லாக்கெட்டை அவளிடம் கொடுத்து "இந்தா இந்த வருஷத்துக்கு என்னுடைய பரிசு. இனி வரமுடிந்தால் சீக்கிரம் இதே ரக்ஷபந்தனுக்கு வருகிறேன்'' என்று கூறி அவளைப் பற்றிய வரலாறுகளையும் விசாரித்து அறிந்து கொண்டு சென்றுவிட்டான்.

ஆண்டுகள் கடந்துகொண்டிருந்தன. ஏழாண்டுகள் கழித்து ரக்ஷாபந்தனன்று சசியைத் தேடிவந்த இராகவன் அவளைத் தேடிப் பார்க்க மிகவும் சிரமப்பட்டான். வயதுப் பெண்ணைப் பற்றி அக்கம் பக்

கத்தில் விசாரித்தால் ஏதாவது தவருக எண்ணிவிடப் போகிருர்களே என்று தயங்கினுன். பழைய வீட்டில் அவள் இல்லாததால் ஒருவேளை வீடு மாற்றியோ அல்லது மணமாகியோ அவள் அந்த இடத்தைவிட்டுப் போயிருப்பாள் என்று சமாதானப் படுத்திக் கொண்டு சென்ருன்.

மேலும் இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஒருநாள் அந்த ஊருக்கு வந்தபோது பஸ் நிறுத்தத்தில் சசியை இராகவன் சந்தித்தான். அவளை உண்மையில் இராகவனுல் அடையாளம் புரிந்துகொள்ள முடியவில்லை. அவ்வளவு வாடிப் போயிருந்தாள். அவளாகவே அண்ணுவா ! என்று கேட்கவும் கழுத்திலுள்ள லாக்கெட்டையும் பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டியிருந்தது. இராகவனின் பல கேள்விகளுக்கும் விடையாக அவள் தன் விலாசத்தை எழுதிக் கொடுத்து விட்டுச் சென்றுவிட்டாள்.

மறுநாள் மாலை. அவள் தந்த விலாசத்துக்குச் சென்று சசியைச் சந்தித்தபோது கண்ணீர் வழியத் தன் துக்கக் கதையைத் தொடர்ந்தாள் அவள். "நீங்கள் வந்துவிட்டுப் போன ரக்ஷா பந்தனுக்குப் பிறகு என் வாழ்வில் பல மாறுதல்கள் வந்தன. பெரியவளான என்னை அதிக நாள் வீட்டில் வைத்திருக்க என் அன்னை விரும்பவில்லை. எனக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. அம்மா தன் தேக நிலையை உத்தேசித்துச் சீக்கிரமே என் கல்யாணத்தை நடத்தி விட்டாள். எப்படியோ கஷ்டப்பட்டுச் சேர்த்த பணத்தின் உதவியால் நல்ல இடமாகத்தான் பார்த்தாள். என் கணவர் பட்டப் படிப்புப் படித்துக் கல்கத்தாவில் வேலை பார்க்கிறவர். என் அழகுக்காகவே சம்மதித்தார். ஆனுல் முதல் நாளே என் வாழ்க்கை ஆரம்பிக்கப்படாமலேயே முடிந்து விட்டது."

"காரணம் என்ன சசி?"

"அந்தக் காரணத்தை உங்களிடம் எப்படிச் சொல்லுவேன்? சொன்னுல் உங்கள் மனம் மிகுந்த துக்கப்படும்!"

"பரவாயில்லை சசி! எதுவானுலும் சொல். உன்னுடைய இந்த நிலைமையைவிட வருத்தப்படக்கூடிய செய்தி வேறு உண்டா ?"

"அண்ணு! முதன் முதல் உங்களை அண்ணுக அடைந்த தினம் நீங்கள் கொடுத்த லாக்கெட்தான் காரணம். இதிலுள்ள தங்களுடைய உருவத்தை என் கழுத்தில் பார்த்துவிட்டு அவர் தவருகப் புரிந்து கொண்டார். என்ன சொல்லியும் என் வார்த்தையை அவர் நம்பவில்லை. அவர் என்னை ஒதுக்கிவிட்ட பிறகு என் தாயிடமே வந்து ஒரு பள்ளியில் ஆசிரியை வேலை ஏற்றுக்கொண்டேன். என்னைப் பற்றிய கவலையாலேயே அம்மா கண்ணை மூடிவிட்டாள். இப்போது ஏதோ இப்படியே காலம் தள்ளுகிறேன்."...

நெஞ்சிலே ஏதோ சிக்கிக் கொண்டது போலாயிற்று அந்தச் சகோதரனுக்கு. உண்மையான பாசத்தோடு, ஏக்கம் பிடித்து அழுத ஒரு சிறுமியின்

கண்ணீரைத் துடைக்கத் தான் கொடுத்த பொருள், அவளுடைய பிற்கால வாழ்க்கை வசந்தத்தைப் பாழாக்கவா பயன் பட்டது? "சசி உன் கணவரின் விலாசத்தைக் கொடு. என்னால் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்" என்று தழுதழுத்த குரலில் கேட்டான்.

"இதோ அவர் விலாசம்! அவருடைய போட்டோவும் கூட" என்று கைப்பையிலிருந்து எடுத்துச் சசி கொடுத்த போட்டோவைப் பார்த்த இராகவன் திடுக்கிட்டான். "அட சுரேஷ் அல்லவா இவன். இவனும் நானும் டில்லியிலேயே கல்லூரியில் படித்தோம்." சசி! இவன் என் நண்பன்தான். நீ கவலைப்படாதே. உன் வாழ்க்கையை வளமாக்க முயற்சிக்கிறேன்" என்று விடைபெற்றான்.

மறுநாளே இராகவனின் கடிதம் சுரேஷுக்குப் பறந்தது!

பிரிய சுரேஷ்,

கல்லூரியில் நாம் நண்பர்களா யிருந்ததை மறந்திருக்க மாட்டாய். ஒரு ரக்ஷாபந்தன் அன்று உனக்கென்று கொண்டு வந்த என்னுடைய லாக்கெட்டை வழியில் ஒரு சிறுமிக்குக் கொடுத்து விட்டேன் என்றபோது பரிகசித்தாய். அந்த லாக்கெட்டை உன் மனைவியிடமே பார்த்து விட்டு உன் நண்பன் மேலேயே அவநம்பிக்கை பட்டுவிட்டாயே. ஒரு ரக்ஷாபந்தன் நாளைத் தவிர மற்ற நாட்களில் உன் மனைவியை நான் சந்தித்ததே இல்லை. போயிருந்தால் அவளுக்கு மணமான செய்தி அப்போதே தெரிந்திருக்குமே. சாட்சிக்காக உன் மனைவி எனக்குக் கட்டிய ரட்சைக் கயிறு இத்துடன் வருகிறது. தென்னகத்தில் பிறந்த எனக்கு வடபுலத்துப் பெண் ரக்ஷாபந்தன் கட்டி அண்ணனாக என்னைப் பாவித்தாள். தேசிய ஒருமைப்பாடு காண அது போன்ற விழாக்களும் இப்படி ஒருவருக்கொருவர் பரஸ்பரம் காட்டும் கலப்பும் களிப்பும் வேண்டுமென்று எண்ணி நான் உன்னுடைய மனைவி கட்டிய ரக்ஷாபந்தத்தைக் கட்டி மகிழ்ந்தேன். இன்றோ ஒரு மதருசியின் படத்தைக் கழுத்தில் உன் மனைவி தாங்கியதைக் கண்டு நீ சந்தேகப்பட்டு அவளை ஒதுக்கி இருக்கிறாய். இது சரியா என்று யோசித்துப் பார்.

இப்படிக்கு,
இராகவன்.

ஒருமாதம் கழித்து ரக்ஷாபந்தன் தினம். இராகவனின் வீட்டின் முன் ஒரு டாக்ஸி வந்து நின்றது. மலர்ந்த முகத்தில் புன்னகை தவழ சசியும் அவள் கணவனும் அதிலிருந்து இறங்கி வந்தனர். கையிலே தயாராகக் கொண்டு வந்த விலையுயர்ந்த ரட்சைக்கயிற்றை இராகவனின் கரத்தில் கட்டிவிட்டுக் குனிந்து அவன் பாதங்களைத்தொட்டாள் சசி. இரு கண்ணீர்த் துளிகள் அவன் பாதங்களில் வீழ்ந்தன. ஒரு மெல்லிய கயிற்றால் அந்த வட நாட்டுச் சகோதரியும் தென்னாட்டுச் சகோதரனும் சகோதர பாசத்தால் கட்டுப்பட்ட காட்சியை சுரேஷும் ராகவனின் மனைவியும் அதிசயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். ✱




*Here are some reasons why you should read Swarajya founded by Khasa Subba Rau*

**In its pages you can listen to Sri Rajaji.**

**The most eminent journalists and thinkers in the country write for Swarajya. To read Swarajya is like receiving the benefit of a liberal education.**

**As it is without bias or malice of any kind, Swarajya is the most reliable guide to the understanding of current events.**

**It enriches your knowledge and gives you plenty to talk about of interest to others in good society.**

**It may be considered the educated man's insignia, the patriot's bible.**

**Sri Pothan Joseph, doyen among the journalists of India edits Swarajya.**

*Enrol yourself today as a regular Subscriber to Swarajya*

**Annual Subscription Rs. 7.50 - Half Yearly Rs. 4.00**

**Manager: SWARAJYA, KILPAUK, MADRAS-10**

YOU THE DISCERNING BUYER

AND

WE THE JEWELLERS OF CONFIDENCE

*

Quality & Guaranteed Materials, attractive Designs, Excellent Workmanship and Reasonable Prices are dominating factors in the choice of Jewellery. Besides these, a courteous attention and prompt delivery always satisfy the Discerning buyer. These are the qualities that have distinguished M/S. BAPALAL'S for over 50 years now as Jewellers of Confidence.

**Select BAPALAL'S with Confidence.**

*

BAPALAL & Co.

[Estd. 1910]

*DIAMOND MERCHENTS,*

*MFG. JEWELLERS, GOLD & SILVER SMITHS*

**Rattan Bazaar, MADRAS-3.**

'Phone: 32396 'Grams: NECKLACE

# பிரிவு

குமாரி வி. சுந்தரி

"லல்லி! என்னுடைய கடிகாரத்தை எடுத்துக் கொண்டு வா. மீனு! என்னுடைய 'ஹான்ட் பாக்' மேஜையின் மேல் வைத்திருக்கிறேன்! அதைக் கொண்டு வா! அப்படியே அதில் பாஸ், பர்ஸ், பேனு, பென்சில் எல்லாம் போட்டு விடு! லல்லி! அத்தோட ஒரு ரிப்பன்! நளினி! ப்ளீஸ், என்னுடைய "ஷூஸ்" எடுத்துண்டு வந்துடேன்! அம்மா! சீக்கிரம் பின்னும்மா! ஹேர் ஸிங், கர்சீப் ஹமாரா லாவ்! சித்தி, சாந்துக்குத் தண்ணி விட்டு வையுங்கோ! அப்படியே கொஞ்சம் பூப்பறிச்சுக் கோத்து வைச்சுடுங்கோ! சீக்கிரம்! சீக்கிரம்!"

வேறு ஒன்றுமில்லை! எங்கள் பத்மினி கல்லூரிக்குக் கிளம்புகிருள். எட்டரை மணிக்கு பஸ் பிடிக்க வேண்டும். மணி எட்டேகால் ஆகி விட்டது. தினமும் நான் எட்டேகால் மணிக்கே பத்மினி வீட்டிற்கு வந்து விடுவேன். என்னைக் கண்டவுடன்தான் பத்மினி பரபரவென்று கிளம்ப முற்படுவாள். முதலில் கூறியவாறு அலறுவாள். எல்லோரும் வாட்ச், ஷூ, ரிப்பன், சாந்து, பூ எல்லாம் ரெடியாக வைத்துக் கொண்டு மாட்டி விட்டால் எட்டரை மணிக்குத் தயாராகி விடுவாள்.

"மாமி! இனிமேல் நான் உங்கள் வீட்டிற்கு எட்டேகால் மணிக்கு வரமாட்டேன். எட்டரை மணிக்குத்தான் வருவேன். வந்தவுடன் பத்மினி ரெடியாக இல்லாவிட்டால், நான் விடுவிடுவென்று பஸ் ஸ்டாண்டிற்குப் போய் விடுவேன். எனக்கென்ன தலையிலெழுத்தா? ஒரு நாளைப்போல் இவளுக்கு சிச்ரூஷை செய்யவேண்டும் என்று?" என்று அலுத்தவாறு கூறினேன் நான்.

"நளினி! ப்ளீஸ் ஆரம்பித்து விடாதே. தினமும் உனக்கு முன்னுடி கிளம்ப வேண்டும் என்றுதான் பார்க்கிறேன். எப்படியோ லேட் ஆகி விடுகிறது. சரி, சரி, கிளம்பலாம் வா" என்று கூறிய பத்மினி என்னைத் தரதரவென இழுத்துக் கொண்டு வந்தாள். "எல்லாம் எடுத்துக் கொண்டு விட்டாயா? அப்புறம் பஸ் ஸ்டாண்டிற்கு வந்த பிறகு 'ஐயையோ! மறந்து விட்டேன்' என்று திரும்பி வருவாய்!" என்று எரிச்சலுடன் கூறினேன் நான். எடுத்துக் கொண்டிருந்த புத்தகங்களை ஒரு முறை

பார்த்த பத்மினி "பார்த்தாயா! டெஸ்ட் காபி எடுத்துக் கொள்ளவே மறந்து விட்டேன்!" என்று கூறியவாறு, கையில் இருந்த புத்தகங்களை என் கையில் திணித்தவாறு உள்ளே ஓடினாள்! அலுப்புடன் நிமிர்ந்தேன் நான். பத்மினியின் அம்மா என்னைப் பார்த்துச் சிரித்தாள். "நளினி! நீயானும் பீ. ஏ. மூன்றாவது வருடம் படிக்கிறாய். பி. ஏ. முடித்து விட்டுக் கல்யாணம் செய்து கொண்டு புருஷனுடன் போய் விடுவாய்! இவள் எம். ஏ. முடித்து புரொபஸர் ஆகிற வரைக்கும் அல்லவா நான் கஷ்டப்பட வேண்டும்?" என்று கூறிச் சிரித்தாள்.

"மாமி! இதோ பாருங்கள்! கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையோ இல்லையோ; இவளுடன் கஷ்டப் படாமல் இருக்கலாமே என்ற ஒரே எண்ணத்தில் நான் பி. ஏ. முடித்து விட்டு கல்யாணம் பண்ணிக்கொண்டு விடப் போகிறேன்" என்றேன் நான்.

இதற்குள் பத்மினி ஒரு வழியாக வந்தாள். 'டாட்டா' சொல்லி விட்டுக் கல்லூரிக்குக் கிளம்பினோம். 'டாட்டா' சொல்லாமல் எங்குமே செல்வது எங்களுக்கு வழக்கம் கிடையாது!

பத்மினி ஒரு விசித்திரப் பிறவி! படிப்பு! படிப்பு! இதைத் தவிர வேறு ஒன்றுமே அறியாதவள் அவள். பஸ்ஸில் படிப்பு, பஸ் ஸ்டாண்டில் படிப்பு, கல்லூரியில் படிப்பு, வீட்டில் படிப்பு! என்னுடன் பேசும் நேரம் தவிர, பாக்கிப் பொழுது படிப்புத்தான். படிப்புத்தான் அவள் மூச்சு! அதைத் தவிர அவளால் வேறு ஒரு காரியம் செய்ய முடியாது! எங்கேயாவது வெளியே போக வேண்டும் என்றால் மூக்கால் அழுகை தான்! "கல்யாணத்திற்குப் பெண்ணும் பிள்ளையும்தானேயம்மா முக்கியம், நான் எதற்கு வர வேண்டும்?" என்று கூறி விடுவாள்! சினிமா, டிராமா, டான்ஸ் இவையெல்லாம் என்னவென்றே அவளுக்குத் தெரியாது. 'அவளுக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்க வேண்டும்' என்று எல்லாப் பெற்றோர்களையும்போல் அவள் பெற்றோரும் விரும்பினர். ஆனால் கல்யாணம் என்றாலே, வரிந்து கட்டிக் கொண்டு, பெண் புலி போல் அவள் வருவதைப் பார்த்தால் யாருக்குத்தான் பயமாக இருக்காது? இவ்வுலகத்திலேயே அவளுக்கு மிக மிகப் பிடிக்காத விஷயம் என்னவென்றால், அது 'கல்யாணம்'தான்! "கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டியதுதான்; மெதுவாகப் பண்ணிக் கொண்டால் போதாதா? எதற்காக இவ்வளவு அவசரப்பட வேண்டும்?" என்று கேட்பாள். இதற்கு நடுவில் மஹாபாரதத்தையும் இராமாயணத்தையும் கொண்டு வந்து, சுலோகம் சொல்லி விவரிக்க ஆரம்பித்து விடுவாள். இப்படியான பத்மினிக்கு, படிப்புக்கு அடுத்தபடியாக எதையாவது பிடிக்கும் என்றால் அது இந்த 'நளினி' என்றுதான் கூற வேண்டும். கல்லூரியில் யாரையாவது சிநேகிதிகளைப் பார்த்

தால், சிரித்துப் பேச வேண்டும் என்று தோன்றவே தோன்ருது அவளுக்கு! ஆனல் எந்த மூலேயிலாவது நான் என் சிநேகிதிகளுடன் வருவதைப் பார்த்து விட்டாளானல் முகம் அன்றலர்ந்த தாமரை போல் மலர்ந்து விடும்! நான் அவளருகில் வரும்வரை பொறுக்க முடியாமல் என் அருகில் ஓடிவந்து பேசிவிட்டுப் பிரியா விடை பெற்று 'டாட்டா' சொல்லி விட்டுப் போவாள். ஒவ்வொரு வகுப்புக்கும் நடுவில் என்னேச் சந்தித்துப் பேச வருவாள். இத்தனேக்கும், அவளேவிட முற்றிலும் மாறு பட்டவள் நான்! படிப்பைத் தவிர பாக்கி எல்லாவற்றிலும் ஆசை! சினிமா, டிராமா, பாட்டுக்கச்சேரி...என்னே எங்கும் பார்க்கலாம். கதைப் புத்தகங்களே நான் கையில் எடுத்து விட்டேனுனல் பிரளயம் வந்தாலும் எனக்குத் தெரியாது.

நாங்கள் இருவரும் குணத்திலும், உருவத்திலும் எல்லாவற்றிலும் மாறுபட்டவர்களாய் இருந்தாலுங்கூட, இருவரும் ஒருவரையொருவர் மற்றவரிடம் ஒப்படைத்திருந்தோம். பத்மினியைப் பற்றி அவளுக்கே தெரியாத விஷயங்கள் எனக்குத் தெரியும். என்னேப் பற்றி எனக்குத் தெரியாத விஷயங்கள் பத்மினிக்குக் தெரியும். பத்மினியைப் புரிந்து கொள்ள நளினியையும், நளினியைப் புரிந்து கொள்ளப் பத்மினியையும் பகவான் படைத்திருக்கிருர் என்று திடமாக நம்பினேம். ஒரு சிறிய விஷயம் அவளிடம் கூறுவிட்டால் எனக்குத் 'தலே வெடித்து விடும். அவளுக்கும் அப்படித்தான். "பத்மினி! நீ இப்படிச் செய்வது தவறு" என்று நான் அவளேக் கண்டிப்பேன். "நளினி! எப்போது படிக்க ஆரம்பிக்கப் போகிருய்?" என்று என் படிப்பைப் பற்றி அவள் எனக்கு நினேவூட்டுவாள். என்னேவிட ஒரு வயது பெரியவளாகிய பத்மினி ஒரு ஆண் பிள்ளேயாகப் பிறந்திருந்தால், அவளே(னே)யே நான் மணந்து கொண்டு, இருவரும் ஈருடலும், ஒருயிருமாக வாழ்ந்திருப்போம்!!!

"நளினி! நீ கல்யாணம் பண்ணிக் கொண்டு போய்விட்டால் நான் என்ன பண்ணுவேன்?" என்று பிரமித்துப் போய்ப் பல தடவை கூறியிருக்கிருள் பத்மினி என்னிடம். "நன்ருகக் கஷ்டப்படு. அப்போதுதான் இந்த நளினியின் அருமை தெரியும் உனக்கு" என்று வேடிக்கையாகப் பதில் கொடுப்பேன் நான். எம். ஏ. முடித்து, டாக்டர் பட்டம் வாங்கி புரொபஸராகச் சில ஆண்டு காலம் இருக்க வேண்டும் என்ற ஒரு இலட்சியத்தைத் தவிரப் பத்மினிக்கு இந்த உலகில் வேறு ஒன்றுமே கிடையாது.

இப்படிப்பட்ட பத்மினி ஒரு நாள் மாலே என்னிடம் "நளினி! நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்ருள். கல்லாய்ச் சமைந்து நின்றேன் நான்!! அவளே தொடர்ந்தாள். "எனக்கோ, இன்னும் இரண்டு தம்பிகள் இருக்கின்ருர்கள். அப்பாவோ

மூன்று நான்கு வருடங்களில் 'ரிடையர்' ஆகி விடுவார். அவர்கள் இருவரும் படிக்க வேண்டுமென்ருல், நான் கல்யாணம் பண்ணிக் கொண்டால்தான் முடியும். நான் படித்துக் குப்பை கூட்டுவதைவிட, என் தம்பிகள் படிப்பல்லவா முக்கியம்?'' என்ருள். என்ஞல் இன்னும் பேச ஆரம்பிக்கவே முடியவில்லை. "என் தம்பிகள் படிப்பிற்காக, என் ஒரே லட்சியத்தை, உலகில் எந்த ஒரு கொள்கைக்காக நான் வாழ்கின்றேனே அதை விட்டு விட்டு, உலகத்திலேயே எனக்குப் பிடிக்காதிருந்த விஷயமாகிய கல்யாணத்திற்குச் சம்மதிக்க போகிறேன்''...இதைக் கூறும் போதே பத்மினியின் கண்களில் நீர் துளிர்த்தது. ...நான் அழுதே விட்டேன்!! பத்மினியின் கண்ணீரை என்ஞல் தாங்கவே முடியாது.

எம்.ஏ. சமஸ்கிருதம் முடித்து விட்ட பத்மினி திருமணத்திற்குத் தயாராஞள்! கல்யாணம் முடிந்துவிடும் என்று நினைத்துக் கொண்டிருந்த நான் எம். ஏ. யில் காலை வைத்தேன்? பத்மினி-பாஸ்கர் திருமணம் நிச்சயமாயிற்று. கல்லூரிக்கு ஒரு வாரம் முழுக்குப் போட்டேன் நான். எல்லாம் நான் தானே செய்யவேண்டும்? பத்மினியின் உயிர்த்தோழி அல்லவா நான்? கேலிக்கும் கலாட்டாவுக்கும் நடுவில் பத்மினியின் திருமணம் இனிதாக முடிந்தது! இந்த மாதிரி ஒரு சந்தோஷத்தை என் வாழ்க்கையிலேயே நான் அனுபவிக்க முடியாது என்பது நிச்சயம். பதினைந்து நாட்களில் பத்மினி கல்கத்தா கிளம்பிப் போகிருள் கணவருடன்! அவரும் இங்கே தான் இருந்தார்! அதாவது பத்மினியின் வீட்டிலேயே! இருவரும் புது வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்தனர். பத்மினிக்கு என் நினைவு இருந்தால்தானே? எனக்கும், கல்லூரியில் ஒரு வாரம் கோட்டை விட்டுவிட்ட பாடங்களைக் கவனித்துச் சரி செய்வதில் பத்து நாட்கள் பறந்து விட்டன.

ஒரு நாள் மாலை. பத்மினி, பாஸ்கர், நான் மூவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். "பத்மினி! வாழ்க்கை இப்போது எப்படி இருக்கிறது? கல்யாணம் என்ருல் குதிகுதியென்று குதிப்பாயே?'' என்று கேட்டேன் நான்.

''வேண்டாம் நளினி! இந்தக் கேள்விக்கு நான் பதில் சொன்ஞல் உன் அத்திம்பேருக்கு ஒரு வேளை கோபம் வந்தாலும் வரலாம். எதையும் சமயம் பார்த்துத்தான் கூறவேண்டும். பகவத்கீதையில் கூட, கிருஷ்ணன்......''

"ஐயோ! ஐயோ! போதும்! இன்னும் இந்த பகவத்கீதையையும், இராமாயணத்தையும் விடவில்லையா நீ? அத்திம்பேர்! ஜாக்கிரதை! ஏதாவது பிடிக்காத விஷயம் பேசினீர்களாஞல் சம்ஸ்கிருதத்தில் சுலோகம் சொல்லி விவரிக்க ஆரம்பித்து விடுவாள். பிறகு 'போர்' தான்! என்று நான் எச்சரிக்கை செய்து விட்டேன்.''

"கவலையே படாதே நளினி! சினிமாவுக்கும், பாட்டுக் கச்சேரிக்கும் அழைத்துக்கொண்டு

போய்ப் பதிலுக்கு நான் அவளை 'போர்' அடித்து விடுவேன்'' என்றார் பாஸ்கர்.

''தேவலையே! பத்து நாட்களில் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டீர்களே!'' என்று கலகலவென்று சிரித்தேன் நான்.

''அத்திம்பேர்! பத்மினிக்குக் கடிதம் எழுதவேண்டும் என்ற ஞாபகமே இருக்காது. எனக்குக் கடிதம் எழுத வைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு'' என்றேன் நான்.

''ஓ! கே! ஆனால், எனக்கென்னவோ, உன்னைப் பார்க்காமல் அவளால் பத்து நாட்களுக்குமேல் இருக்க முடியாது என்று தோன்றுகிறது. கடிதம் எழுதுவதற்குப் பதில், நேரிலேயே வந்து பேசிவிட்டுப் போய் விடுவாள்'' என்று கேலி செய்தவாறு சிரித்தார் பாஸ்கர். நானும் சிரித்தவாறு தலையைத் திருப்பிப் பத்மினியைப் பார்த்தேன். தலை குனிந்தவாறு பேசாமல் எழுந்து போய் விட்டாள் அவள். 'பிரிவு' என்ற சொல்லையே அவளால் தாங்க முடியவில்லை!

கடைசியில் அந்த நாளும் வந்தது! அதாவது பத்மினி பாஸ்கருடன் கல்கத்தாவுக்குக் கிளம்பும் நாள்! அதிகாலையில் ஆறு மணிக்குக் கிளம்ப வேண்டும். அவளுடன்கூடப் பேச முடியாமல் எனக்கு ஏதேதோ வேலை இருந்து கொண்டே இருந்தது. அவளுக்கும் அப்படித்தான். கிளம்பும் நேரமும் வந்தது. எல்லோரையும் நமஸ்கரித்து எழுந்த பத்மினி, பேசாமல் வாயிற்புறம் சென்று விட்டாள். அழுதழுது இரு கண்களும் சிவந்திருந்தன அவளுக்கு. அவளுடைய அறையிலிருந்து ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன் நான். டாக்ஸியில் எல்லா சாமான்களும் ஏற்றியாகி விட்டன. பாஸ்கரும் எல்லோருடனும் சொல்லிக் கொண்டார். பத்மினியும் அவரருகில் போய் விட்டாள். அழுவதால், எங்கே அவர்கள் இருவரையும் பார்க்க முடியாமல் கண்ணீர்த் திவலைகள் மறைத்து விடுமோ என்ற ஒரே எண்ணத்தில் அழுகையை அடக்கிக் கொண்டு நின்றேன் நான்.

''எங்கே நளினி?''—பாஸ்கரின் குரல்தான்! வாயைத் திறந்தால்தான், அழுகை வந்து

---

வாணிகம்—5

## எது நல்லது?

மட்டச் சரக்குகளை வாங்கிக் குறைந்த விலைக்கு விற்பது தகாது. மட்டச் சரக்குகளை வாங்கி அதிக விலைக்கு விற்பது தீது. அதையும் ''உயர்ந்த சரக்கு குறைந்தவிலை'' என்று கூறி விற்பது சூது.

உயர்ந்த சரக்குகளைத் தேடிப்பிடித்து அதிக விலை கொடுத்து வாங்கி, பலரும் காணும்படி வைத்து ''உயர்ந்த சரக்கு, அதிகவிலை'' என்று உரக்கக் கூறி விற்பதே நல்லது.

—கி. ஆ. பெ.

---



4596—9

விடுமே! பேசாமல் ஜன்ன லருகில் நின்றேன் நான். எல் லோரும் என்னைத் தேடினர். அதற்குள் பத்மினி "உஹூம்! போகலாம்" என்ருள், தொண் டையை அடைத்துக் கொண்டு பேச முடியாத நிலையில்! "அழகாத்தான் இருக்கு! ஏண்டீ? அவள் கிட்டே சொல் லிக்காமப் போவாளா? கூப்பிடு கிறேன் நான் அவளை! நளினி! நளினி!" மாமிதான் கூப்பிட் டாள்.

மனதைத் திடப்படுத்திக் கொண்டேன் நான். 'பத்மினி!' மெல்லிய குரலில் கூப்பிட் டேன்! எல்லோர் முகமும் ஜன்னலருகில் திரும்பின. பாஸ்கரும் திரும்பிஞர். பத் மினியும் தலையைத் திருப்பி என்னைப் பார்த்தாள். "போய் விட்டு வரியா? டாட்டா!" எப் படித்தான் கூறினேனே! "டாட்..." முழுவதும் முடிக்க முடியாதவளாய்க் கைகளை எடுத்து முகத்தில் வைத்துக் கொண்டு 'ஓ' வென்று அலறி ஞள் பத்மினி! உள்ளே ஓடிய நான் படுக்கையில் தொப் பென்று விழுந்தேன். வாய் விட்டுக் கதறினேன். பக வானே! பிரிவு என்று எதற் காக வைத்தாய்? என்னையும் பத்மினியையும் பிரித்ததில் உனக்கு என்ன இன்பம்? இன் பமாகச் சேர்ந்து இருப்பவர் களைப் பிரித்துத் துன்பத்தில் ஆழ்த்துவதுதானு உன் விருப் பம்? விக்கி விக்கி அழுதேன் நான்! என் புலம்பலுக்கும், அழுகைக்கும் எப்போது முடிவோ தெரியாது"...!! ✱


*FOR*

**THE HINDU**

(Air Mail Edition)

SPORT AND PASTIME AND LEADING TAMIL DAILIES, WEEKLIES AND MONTHLIES

✱

*Contact* :

**CENTRAL NEWS AGENCY**

**CONNAUGHT CIRCUS,**

**NEW DELHI**

TELEPHONE: 44762

*Now Available*

# FOTON

(Made in Poland)

## WITH BRIGHTER WHITE PHOTOGRAPHIC PAPER

*

***Fotopan Super***

ROLE FILM WITH EXTRA-ORDINARY LATITUDE OF EXPOSURE TO ENSURE SURE SNAPS

***Special Features***

1. Special foil sealed packing to ensure long keeping quality.
2. Vastly improved gradation to ensure rich contrast.
3. Whiter white base and available in all sizes and popular surfaces.

***Always available at all leading photographic shops***

*

*For particulars contact :*

**CHOKSHI BROTHERS PRIVATE LTD.**

Western India House,
P. M. Road, Fort, Bombay–1

66, Ganesh Ch. Avenue,
Calcutta–13

5/17, Mount Road,
Madras–2

# ரவீந்திரர் நூற்றுண்டு விழா

## சாகித்திய அக்காதெமி வெளியீடுகள்

1. **விநோதினி**
   டாகுரின் உன்னத நாவல் - த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்ப்பு ... [ரூ. 5]
2. **கவிதைத் திரட்டு**
   கவியரசரின் நூற்றெரு கவிதை முத்துக்கள் - த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்ப்பு. ... [ரூ. 5]
3. **கதைத் திரட்டு**
   குருதேவரின் கதைக் களஞ்சியத்திலிருந்து தேர்ந்தெடுத்த இருபது கதை மணிகள் - த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்ப்பு. ... [ரூ. 7]
4. **நாடகத் திரட்டு (முதல் தொகுதி)**
   ஜீவபலி, சித்திராங்கதை, பிரம்மசாரிகள் சங்கம் என்னும் மூன்று நாடகங்கள் - டி. எஸ். பார்த்தசாரதி மொழிபெயர்ப்பு. ... அச்சில்
5. **நாடகத் திரட்டு (இரண்டாம் தொகுதி)**
   தபால் ஆபீஸ், ராஜா, முக்ததாரா, செவ்வலரி என்னும் நான்கு நாடகங்கள் - டி. எஸ். பார்த்தசாரதி மொழிபெயர்ப்பு. ... அச்சில்
6. **கட்டுரைத் திரட்டு (முதல் தொகுதி)**
   தத்துவம், மதம், கல்வி, சமூகம், அரசியல் பற்றியவை- த. நா. ஸேனபதி மொழிபெயர்ப்பு. ... அச்சில்
7. **கட்டுரைத் திரட்டு (இரண்டாம் தொகுதி)**
   இலக்கியக் கட்டுரைகள், கடிதங்கள், சுய சரித்திரம், பிரயாணக் குறிப்புக்கள் முதலியவை - த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்ப்பு. ... அச்சில்
8. **குழந்தை இலக்கியம்**
   குழந்தைகளுக்கென்றே கவியரசர் எழுதியவற்றின் சுவையான திரட்டு. ... அச்சில்
9. **கவியின் கதை**
   லீலா மஜும்தார் - மொழிபெயர்ப்பு - த. நா. ஸேனபதி. ரவீந்திரரின் இளமை வாழ்க்கையிலிருந்து சுவையான பகுதிகள். ... ரூ. 0·50

விற்பனை உரிமை :

**கலைமகள் காரியாலயம், சென்னை-4.**

# நூல் நிலைய இயல்

ஸி. எஸ். கிருஷ்ணமூர்த்தி

நமது தேசம் விடுதலையடைந்த சில ஆண்டுகளாக, சிறியதும் பெரியதுமான நூல் நிலையங்களை இங்கும் அங்கும் காண்கிறோம். இந்த நூல் நிலையங்கள் எப்படி வகுக்கப்பட்டுத் தொடங்கி இயங்குகின்றன என்று ஆராயும்பொழுது, 'அவைகளின் நோக்கம் என்ன?' என்ற கேள்வி எழுகிறது. சாதாரணமாக நூல் நிலையங்கள் தன் வட்டாரத்திலுள்ள மக்களுக்குப் புத்தகங்களையும் தினசரி மற்றுமுள்ள பத்திரிகைகளையும் வாங்கிப் படிக்கக் கொடுத்து உதவ வேண்டுமென்றுதான் எண்ணுகிறோம். இது மிகவும் குற்றமற்ற எண்ணம் தான். ஆனால் எவ்வகையான புத்தகங்களும் பத்திரிகைகளும் வாங்க வேண்டும், யார் யாருக்கு வழங்க வேண்டும், எப்படி எப்படி வழங்க வேண்டுமென்ற கேள்விகளும் கூடவே எழுகின்றன. இக் கேள்விகளுக்குச் சரியான விடை இந் நூல்நிலையங்களின் அமைப்பிலும், நோக்கத்திலும் பரிபாலனத்திலும் அடங்கிக் கிடக்கின்றன.

நூல் நிலையமானது பொது நலனுக்கேற்ற ஸ்தாபனமாகும். ஜனங்களுக்கு வேண்டியதான பொழுது போக்கிற்கும், அறிவு வளர்ச்சிக்கும், ஆத்மீக வளர்ச்சிக்கும் ஏற்ற புத்தகங்களை வழங்குவது அதன் கடமையாகும். புத்தகங்கள் நூலாசிரியரின் கருத்துரைகளைப் பரப்பும் சாதனங்களாகும். அவைகள் தொன்மையான நம் மூதாதையர்களின் கருத்துக்களை நமக்கும் நம் சந்ததிக்கும், பொக்கிஷமாகக்காத்து அளிக்கின்றன. புத்தகங்கள் மனித வர்க்கத்திற்கு ஒப்பானவை. நமக்கிருக்கும் ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம் போல் புத்தகங்களுக்கும் உள்ளன. அவைகளிலுள்ள காகிதமும், முத்ராக்ஷரங்களும், அட்டை, நூல் முதலியனவும் ஸ்தூல சரீரத்திற் கொப்பாகும். அவைகளிலுள்ள கருத்துக்களையும், மொழியையும், நடையையும் சூக்ஷ்ம சரீரத்திற்கொப்பாகச் சொல்லலாம்.

உயிருடன் இருக்கும் நாம் நம் எண்ணங்களையும் கருத்துக்களையும் பிறர்க்கு எடுத்துரைக்க இயலும். புத்தகத்தில் தோய்ந்து உறைந்து போயிருக்கும் கருத்துக்கள் தாமாகவே தம்மைப் பிறருக்கு அறிவித்துக் கொள்ள முடியாதனவாய் இருக்கின்றன. அவற்றில் உறைந்திருக்கும் கருத்துக்களை உயிர்பெறச் செய்து பிறரை அடையச் செய்வதே உத்தமமான நூல் நிலையத்தின் குறிக்கோளாகும். நூல் நிலையமானது நிர்சலனமாக இருக்

கும் பொருள்களைத் துரித கதியில் சலனப்படுத்தும் மின்சாரப் பொறிக்கு ஒப்பாகும்.

சடல அல்லது அசேதன நிலையிலிருக்கும் கருத்துக்களை உயிர் நிலைக்கு மாற்றுவதை இலக்ஷியமாகக் கொண்ட நூல் நிலையங்கள், இந்த மாறுதலை அமுலுக்குக் கொண்டுவர வேண்டிச் சில விதிகளை மேற்கொண்டிருக்கின்றன. இவ்விதிகள் ஐந்து ஆகும். இவ்வைந்து விதிகளை உருவாக்கிய பெருமை அகில இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் நூல்நிலைய இயலின் பிதாவெனப் புகழ்பெற்ற பத்மஸ்ரீ டாக்டர். எஸ். ஆர். ரங்கநாதனைச் சாரும். இந்த ஐந்து விதிகளாவன :—

1. புத்தகங்கள் உபயோகத்திற்காகவே.

2. ஒவ்வொரு வாசகருக்கும் அவரவருடைய புத்தகங்கள்.

3. ஒவ்வொரு புத்தகத்திற்கும் அதனுடைய வாசகர்.

4. வாசகர்களின் நேரத்தைச் சேமி.

5. நூல் நிலையம் வளரும் சக்தியுடையது.

இந்த விதிகள் நூல் நிலையத்தின் செயல் முறையை விசாரணை செய்ய இன்றியமையாதனவாகின்றன. இந்த ஐந்து விதிகளின் விரிவுரையே நூல் நிலைய இயலின் சாரம்சமாகும். நம் கைவிரல்கள் ஐந்தும் பல்வேறு காரியங்களுக்கு உதவுவது போல், இந்த ஐந்து விதிகளும் நூல் நிலையத்தின் பல்வேறு துறைகளின் கிரமத்தை இயக்கிப் பொருத்த உதவுகின்றன. ✱


## ANNOUNCING

*The opening of*

**Dr. KHETARPAL'S DENTAL CLINIC**

EQUIPPED WITH DENTAL X-RAY

AT 6/8, W. E. A. AJMALKHAN ROAD,

(BY THE SIDE OF ROOPAK STORE)

NEW DELHI-5

## WHEN YOU TRAVEL BY RAIL

DO YOU CARRY JEWELLERY, PRECIOUS STONES, WATCHES, SILKS, SHAWLS, CAMERAS, MUSICAL INSTRUMENTS OR OTHER VALUABLE ARTICLES

*

If so, you are advised that when you entrust such articles to the care of the Railways for carriage and the value of such articles in any one package exceeds Rs. 300/-, you should

(1) declare their value in writing at the time of booking, and

(2) pay a percentage on the value so declared over and above the normal freight charges,

failing which the Railways will not accept liability for the loss, destruction, deterioration or damage of such articles. The articles named above and many others you will find listed as "Excepted Articles" in the Railways Time Tables and Guide.

The Station Master of the nearest station will give you detailed information if you contact him.

*

## NORTHERN RAILWAY

**லிப்கோ**

**வெளியீடுகள்**





# தசா புக்திகளும் ராமாயண பாராயணமும்

[ஸ்தோத்திர மாலையுடன்]



| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|
| சூரிய தசை | சந்திர தசை | குஜ தசை | ராகு தசை | குரு தசை | சனி தசை | புத தசை | கேது தசை | சுக்கிர தசை |

## விலை ஒவ்வொன்றும் ரூ. 2

---

# ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும்

[ஸ்தோத்திர மாலையுடன்] விலை ரூ. 3

உபந்யாஸக சக்ரவர்த்தி

சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள்

அன்புடனும் மகிழ்ச்சியுடனும் வழங்கிய ஆசியுரை :

"வெகு அழகான முறையில் குழந்தைகள், ஸ்திரீகள் யாவரும் பாராயணம் செய்யும்படி வெளியிட்டுள்ளனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரக்ஷையாக இருக்கும்.

ஸ்தோத்திர மாலை மட்டும்: ரூ. 1·30 (ஒவ்வொன்றிற்கும் தபாற் கூலி வேறு)

பதிப்பகத்தார் : **தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை–17**

---

புது தில்லியில் "லிப்கோ" புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**தில்லித் தமிழ்ச் சங்கம்,**

**பாராளுமன்றத் தெரு, புது தில்லி**

# தாரகபுர நாடகம்

"தூன்"

உலகத்தையே இப்போது திடீர் என்று பிடித்து ஆட்டிவைக்கும் நாடகப் பித்து தாரகபுரத்து வாசிகளை மட்டும் வெறுமனே விட்டு வைக்குமா? தாரகபுரம் அமெச்சூர் நாடக கம்பெனி ரிஷி கர்ப்பம் போல அவசரத்தில் அவதரித்து விட்டது.

கம்பெனியின் தலைவர் காளி தாசன். அவருக்கும் நாடகக் கலைக்கும் என்ன சம்பந்தம் என்றால் அவர் பெயர் உள்ள யாரோ ஒருவர் சில நாடகங் கள் எழுதியிருப்பதாக அவருக் குக் கேள்வி. தலைவர் என்றால் ஞானம் இருக்க வேண்டும் என்று ஒரு சட்டம் கிடையாதே. அந்த ஊரில் அவர் ஒரு பெரிய பணக்காரர். செலவுக்கு அவ ரிடம் பொருள் கிடைக்கும். செல்வாக்கால் டிக்கட்டுகள் விற் கும். வேறென்ன வேண்டும், செல்வந்தன் கிருபை தானே வேண்டும்!

இந்த நாடகக் கம்பெனியின் டைரக்டர் ஸ்ரீ பலபத்ரம். பள் ளிக்கூடத்தில் அவர் வாசிக்கும் போது பள்ளிக்கூட நாடகத்தில் இரண்டு வரிகள் பேசவேண்டிய பாத்திரமாகத் தான் நடித்திருப் பதாக அவர் சொல்லிக் கொண் டதே அவரை டைரக்டர் பதவிக் குப் பாத்திரமாக்கிவிட்டது.

ஊர் என்றால் எழுத்தாளர் என்று ஒருவர் இல்லாமல் இருக்க முடியாதே. கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், எழுத்தாளர் இல்லா ஊரை எட்டியே பார்க்க வேண்டாம் என்பது புது உரை அன்றோ? தின கோவிந்தம் அந்த ஊரை எல் லோரும் எட்டிப் பார்க்கும் பொருட்டுத் தோற்றுவிக்கப் பட்ட எழுத்தாளர். எழுத்தா ளருக்கு இருக்கவேண்டிய சகல இலக்கணங்களும் அவரிடம் அமைந்திருந்தன. தெருவில் வரும் பெண்களுக்கு எல்லாம் அவர் தொல்லை கொடுப்ப தில்லை. ஆனால் தெருவில் போகும் வண்டி, மோட்டார், சைகிள் முதலியவைகளுக்கு எல்லாம் தொல்லை கொடுப்பார் தினகோவிந்தம். நடக்கும் போதே அவருடைய கருத் தரங்கு பெரிய ஆபிராவிலிருந்து குறுகிய கேலிக்கூத்து வரை கற்பனை களேபரமாக எல்லா மாதிரியான நாடகங்களையும் நடத்தும். ஆகையால் மனிதன் குளித்து விட்டு வீடு திரும்பு கையில் குப்பைத் தொட்டியில் போய் முட்டிக்கொள்வார். வீட் டில் மனைவி உப்பு வாங்கிவா என்றால் மனுஷன் நினைவு மறதியாகப் பருப்பை வாங்கி

வருவார். யார் வீட்டுக்குத் தபால் வந்தாலும் ,வராவிட்டாலும் அந்த ஊரில் தினகோவிந்தம் வீட்டுக்குத் தினம் தபால் வந்து விழுந்துவிடும். இப்படித் தினம் பத்திரிக்கைகளிலிருந்து விஷயங்கள் வாழா வெட்டிகளாகப் பிறந்த வீடு புகுந்து விடுகின்றனவே என்று அவர் இலட்சியம் செய்து மனங் குலேந்ததே இல்லே. ஒன்று திரும்பி வந்தால் இரண்டு அனுப்புவார். தற்சமய வைதிக எடிட்டர்கள் ஒழிந்தால் தான் நாட்டில் லாரன்ஸும், இப்ஸனும் தலேகாட்ட முடியும் என்று தினகோவிந்தம் தன்னே மேனாட்டு நூல்களின் தலே சிறந்த ஆசிரியர்களுக்குச் சமனாக்கிக் கொண்டு மேலும் மேலும் எழுதுவார்.

டைரக்டர் பலபத்ரம், எழுத்தாளர் தினகோவிந்தத்தை ஒரு நாள் சந்தித்து ஒரு நாடகம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தினகோவிந்தமும் எழுதிக் கொடுக்கச் சம்மதித்தார்.

பலபத்ரம் நடிகர்களேப் பொறுக்கத் துவங்கினார். எக்ஸ்ரே எந்திரம் எலும்பை மட்டும் பார்ப்பது போல இப்போது பலபத்ரம் யாரைப் பார்த்தாலும் அவருக்குள் நடிப்புக்கலே தென்படுகிறதா என்று நோக்க ஆரம்பித்தார். கோவிலுக்குப் போனால் அவர் சாமியைப் பார்ப்பதில்லே. எத்தனே பேர் எத்தனே தத்ரூபமாகப் பக்தர்கள் போல நடிக்கிறார்கள் என்று கவனிப்பார். நாற்சந்திகளில் நின்று பாதசாரிகளின் நடையுடை பாவனேகளின் நயத்தைப் பதம் பார்ப்பார், தெருச் சந்திகளில் முகவெட்டுக்கு மார்க்குகள் போடுவார், ஆற்றுப் படித்துறையில் ஆரணங்குகளே ஆராய்ந்து பார்ப்பார்.

ஒரு வழியாக ஒரு டஜன் ஆள்களேச் சேகரித்து முடித்துவிட்டுத் தினகோவிந்தம் வீட்டிற்கு டைரக்டர் சென்றார். டைரக்டர் சென்றபோது தினகோவிந்தம் இல்லாளிடம் சச்சரவில் ஈடுபட்டிருந்தார். அவள் தன் கணவனிடம் திரும்பி வந்த கதைகளே ஊறப் போட்டுக் கடுதாசுப் பெட்டிக் கூடை செய்வதற்காக அறைத்துக் கொண்டிருந்தாள். அதைப் பற்றித் தான் அவர் ஏதோ மனேவியிடம் வாதாடிக் கொண்டிருந்தார். டைரக்டர் போய்ச் சேர்ந்ததும் அவரை வரவேற்று தினகோவிந்தம் எதிர்கொண்டு வந்தார். “இதோ பாரும் இன்னும் இருநூறு வருடங்களில் என்னுடைய கையெழுத்துப் பிரதிகளுக்கு வரப்போகிற கிராக்கியையும் மதிப்பையும் இவள் அறியாமல் கதைக் கடுதாசுகளேக் கல்லுரலில் போட்டு அறைத்துவிட்டாள். வான் கூ என்பவர் ஆயிரக்கணக்கான ஓவியங்களே எழுதினார். அவர் வாழ்நாளில் ஒன்றுகூட விற்கவில்லே. இப்போது ஒவ்வொன்றும் ஆயிரக்கணக்கான பவுன்களுக்கு விலேபோகிறது. அப்படி என் பிரதிகளும் போகலாமே” என்று தினகோவிந்தம் குறைப்பட்டுக் கொண்டார்.

குறைக்கு ஏற்ற அனுதாபத்தை முகத்தில் வரவழைத்துக் கொண்டு டைரக்டர் தான் வந்த காரியத்தை நினைவுபடுத்தினார். "நாடகம் தயாராகி விட்டதா?" என்றார் பலபத்ரம்.

"அதற்குள்ளாகவா?" என்றார் தினகோவிந்தம்.

"சொல்லி மூன்று மாதமாச்சே."

"கெத்தெயை (Goethe) தெரியுமா உங்களுக்கு?"

"கெத்தெயா. எந்த ஊர்க்காரர்?"

"வாழ்ந்தது போங்கள் நீர் டைரக்டராக ஆனது! கெத்தே என்பவர் ஜெர்மன் நாட்டில் ஒரு நாடக ஆசிரியர்."

"ஓ! அவருக்கு என்ன ஆச்சு?"

"அவர் பாஸ்ட்டஸ் என்று ஒரு நாடகம் எழுதினார். அதை எழுத ஐம்பத்தேழு வருஷமாச்சு, ஐயா, பிளாபர்னு (Flaubert) ஒரு பிரஞ்சு நாவல் ஆசிரியர்; ஒன்பது வருஷத்தில் அவர் ஒரு நாவல் எழுதினார். இப்ஸன் ஒரு நாடகம் எழுத இரண்டு வருஷமாகுமாம்."

"ஓய் பாண்டவாள் ஐந்து ஊர், ஐந்து குடிசைனு கேட்டாப்பலே கேட்கிறீரே. உம்ம கற்பனை கர்ப்பம் என்ன, யானை கர்ப்பமா? ம்......ஓய்"

"நாடகம் எழுதின நம்ம பேர் நிலையா இருக்கிற நாடகமா எழுதணும். தஸ் புஸ்னு அல்பாயுசு நாடகமா எழுதக் கூடாது."

"இறந்த பறவையை பாத்து மட மடன்னு இருபத்தினாலாயிரம் ஸ்லோகம் எழுதின கவி வாழ்ந்த நாடு இது. பிள்ளையார் கூட எழுத முடியாமத் தவிக்க வியாசர் பாரதம் பாடிய நாடு. ஒரு சொல்லைச் சொன்னவுடனே அந்தச் சொல்லை வைத்துக் கவி கொட்டிய நாடு," என்றார் டைரக்டர்.

"நான் ஒரு யுக்தி சொல்லறேன். இத்தாலி தேசத்திலே காமிடியா தெல் ஆர்டே (Commedia del' Arte) என்னும் ஒரு வித நாடகம் நடத்திண்டு வந்தார்கள். அதற்குக் கதை கிதை ஒண்ணும் வேண்டாம். நடிகர்களை, வேஷம் போட்டு மேடையிலே ஏத்திவிட்டு விடுகிறது. அவரவர்களே தங்கள் சாதுர்யப்படி வசனத்தை மேடையிலேயே மனதுக்கு வந்தபடி இட்டுக் கட்டிக்கொண்டு நடத்தி விடுவார்கள். சும்மா ஒரு பழைய பாட்டி கதை ஒன்றைச் சொல்லி விட்டு இதை இஷ்டப்படி நடியுங்கள் என்று சொன்னால் போதும். உங்கள் அவசரத்துக்கு இதுதான் கட்டி வரும்" என்றார் எழுத்தாளர், டைரக்டர் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளாமல். "உம்மை நம்பினால் அப்படித் தான் ஆகும். இப்படி நடிக்க ஆள் எங்கே".

"இந்தாரும் டைரக்டர். நான் மனைவி வேஷம் போட்டுக் கறேன். கணவன் வேஷம் போட்டுக்க ஒரு ஆள், மாமியார் வேஷம் போட ஒரு ஆள் பிடியும் அவ்வளவு தான். நாடகத்தை நாளைக்கே நடத்தி விட

லாம்'' என்று எழுத்தாளர் தைரியம் கூறினர்.

டைரக்டர் மண்டையைச் சொரிந்து நெற்றியை அமுக்கி விட்டுக் கொண்டார். கதை யில்லாமல் நாடகத்தை அவர் பொறுத்துக் கொண்டாலும் பொறுத்துக் கொள்வார், தன் டைரக்ஷன் இல்லாத நடிப்பை அவர் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும். நாடகம் நடக்கப் போகிறதென்று ஊர் முழுதும் புரளியாகி விட்டது. நடிகர்கள் தம் திறமையைக் காட்டத் தவியாகத் தவித்துக் கொண்டிருந்தனர். எழுத் தாளர் கற்பனை இன்னும் கருத் தரிக்கவே இல்லை. தலைவர் தன் திறப்பு விழாச் சொற்பொழிவை உருப்போட்டு விட்டார். சொற் பொழிவு மறந்து போவதற்குள் நாடகம் நடத்தப்பட வேண்டும் என்று அவர் துவஜம் கட்டி அடிக்கிருர். எழுத்தாளர் எழு தாமல் நடிப்பேன் என்று கழுத்தை அறுக்கிருர். நிதி திரட்டிவிட்டு நாடகம் இல்லை யென்றல் நகையாதா ஊர். என்ன செய்வார் பாவம் டைரக் டர் பலபத்ரம்!

தினகோவிந்தத்தின் யோச னைப்படி ஊரெல்லாம் அறிந்த ஒரு நாடோடிக் கதையை நாட கப் பொருளாக எடுத்துக் கொண்டார்கள். கதையை நடிகர்களுக்கு வாயால் ஒரு தடவை தினகோவிந்தம் சொன் ஞர். மேடையில் இந்தக் கதை சபைக்குச் சுவையாக இருக்கும் படி அவர் அவர்களது வச னத்தைத் தோன்றியபடி பேசி நாடகத்தை நடித்து முடித்துக் காட்ட வேண்டியது என்று ஏற் பாடாயிற்று.

நாடக இரவு. தோர்ச்சீலை களால் அலங்கரிக்கப் பட்ட மேடை காஸ் விளக்குகளால் பிரகாசித்தது. குறிப்பிட்ட நேரத்துக்குத் திரை இழுக்கப் பட்டுவிட்டது. சுயேச்சை சம் பாஷணை நாடகம் தொடங் கியது. பண்டிதர்கள் மொழியை இலக்கண விலங்கிட்டுச் சொற் களுக்கு நுண்பொருள் சிறை வாசம் செய்விக்காமல் பாமரர் முகத்தில் வளரவிட்டால் அது எவ்வளவு மேலாக இருக்கும் என்பதற்குச் சாட்சியாக நாடக சுயேச்சை சம்பாஷணை நெருப் புப் பொறி பறந்தது. கற்றவர் கற்பனைக்கு எட்டாச் சொற் கல வைச் சித்திரங்கள் உருவாயின. ஊர் கடலோர ஊர் ஆன தால் கைகொட்டல் ஆரவாரத் தைக் கேட்ட கடலே பொங்கி விட்டது. கட்டத்துக்குக் கட்டம் விறுவிறுப்பு பாய்ந்த நாடகம். பின்னல் கோலாட்டம் போல் சுவையான சிக்கல்களை விளை வித்தது. சிக்கல் குவியலின் விளைவால் வந்த உச்ச தருணத் தின் குவடு (Climax) சபை யின் உள்ளெழுச்சியை உந்தி விட்டது.

நாடகம் முடிந்ததும் எழுந்த கைதட்டலில் தலைவர் காளி தாசன் உருப்போட்டு வந்த சொற்பொழிவின் ஒரு சொல் கூட வெகுநேரம் வரை ஒருவர் காதிலும் விழவில்லை. காளி தாசத்துக்கு அடிக்கடி பேச வாய்ப்புக் கிடைப்பது அரிதான தால் கிடைத்த வாய்ப்பில் தன் ஞல் முடிந்த மட்டும் பேசித் தீர்த்து விடுவது என்று வந்

திருந்தார். ஆகையால் அரை மணி நேரம் கழித்துக் கரகோஷம் அடங்கிய பின்னும் அவர் பேசிக்கொண்டிருந்தார். இறுதியில் "எழுத்தாளர் தினகோவிந்தம் மனைவியாக வேஷம் போட்டுக் கொண்டு நடித்த நடிப்பு மிகவும் மெச்சத் தக்கது. அவருடைய மனைவி வெகு உத்தமியாக இருக்க வேண்டும். மேடையில் அவர் உத்தம பத்தினியாக நடித்ததற்கு அவர் தன் மனைவி தினம் காட்டி வரும் மேற்கோளாகவே இருக்கவேண்டும்" என்றார்.

தினகோவிந்தத்துக்குப் பொறுக்க முடியவில்லை. அவனுடைய நடிப்புக் கற்பனையை எதையோ பார்த்து காப்பியடித்ததாகத் தலைவர் மெச்சிய கோபம் ஒரு பக்கம், தன் மனைவியை விஷயம் தெரியாமல் மெச்சியது ஒரு பக்கம் இரண்டும் சேர்ந்து தினகோவிந்தத்துக்குச் சீற்றம் பிறந்தது.

"என் மனைவி இனிமேல் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று உதாரணம் காட்டவே நான் உத்தமியான மனைவி போல் நடித்துக் காட்டினேன். நடிப்பு என் சொந்தக் கற்பனை" என்றார் மேடையிலேயே நின்று கொண்டு தினகோவிந்தம்.

வீட்டிற்குப் போய் என்ன நடந்ததோ அவருக்கு; நேரில் பார்த்தவர் ஒருவரும் இல்லை! ஒருவாரம் தலைவர் காளிதாசன் வீட்டில் தான் அவருக்கு அமுது படையல் நடந்தது. ✱

---

வாணிகம்–6

## எது நாணயம்?

நாணயம் என்பது "பணம்". ஒரு வியாபாரத்திற்கு வேண்டியது மூலதனம். முதலின்றித் தொழில் நடவாது.

நாணயம் என்பது "நேர்மை." கெடு தவறுமல் நடப்பது. சொல்லியதுபோலச் சரக்குகள் இருப்பது. குறித்தபடி எடையும், அளவும் இருப்பது.

நாணயம் என்பது "நாக்கின் நயம்." இன்சொல், எந்த விடத்திலும், எந்த நேரத்திலும், எந்த மக்களிடத்திலும், எந்த நிலையிலும் இனிய சொற்களையே சொல்லிக்கொண்டிருப்பது.

இம்மூன்றும் நாணயமாம். இதில் எது ஒன்றை இழந்தாலும் வியாபாரி நாணயத்தை இழந்து விடுவான். நாணயத்தை இழந்தவனை வியாபாரம் இழந்துவிடும்.

—கி. ஆ. பெ.

விவசாய சேவைக்கு எங்கள்
தயாரிப்புகள் :

- அமோனியம் ஸல்பேட்
- N P K பெர்டிலைசர் மிக்சர்ஸ்
- அன் ஹைட்ரஸ் அமோனியா
- அமோனியம் பாஸ்பேட் (FACTAMFOS)

தொழில் துறை சேவைக்கு எங்கள்
தயாரிப்புகள் :

- சல்ப்யூரிக் ஆஸிட்
- ஸல்பர்-டை-ஆக்ஸைட்
- அமோனியம் க்ளோரைடு

★

**FACT**

*first in the field!*

பெர்டிலைசர்ஸ் & கெமிகல்ஸ்
திருவிதாங்கூர் லிமிடெட்

ரிஜிஸ்டர் ஆபீஸ் : ஏலூர்
உத்யோகமண்டல் P. O. ஆல்வாய்
கேரள ராஜ்யம்

# தேவாரப் பாடல்கள்

வி. ஆறுமுகம் பிள்ளை

'தேவாரப் பாடல்களைப் படியாதவர்கள் தமிழர்களாக இருக்க முடியாது' என்று ஸ்ரீலஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் ஓரிடத்தில் கூறியுள்ளார்கள். தேவாரத்தின் மீதுள்ள அளவு கடந்த பற்றுதலினாலும் ஆர்வத்தினாலும் அவ்வாறு சொன்னார்கள். தேவாரத்தைப் பற்றிக் கேட்டு அறியாத, படியாத தமிழன் இருப்பானேயானால் அது முழுதும் அவனுடைய குற்றமன்று. படித்தவர்கள் படியாதவர்களுக்குப் பல வகையாலும்–பள்ளிக் கூடம் முதலான இடங்களில்–முறையானபடி எடுத்து இயம்பாத காரணத்தால் அன்றி வேறல்ல.

சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதுவரகத்தைச் சேர்ந்த அமெரிக்கப் பெரியார் ஒருவர் கம்ப இராமாயணத்தைப் படித்துச் சுவைத்து "கம்ப இராமாயணத்தைப்பற்றி அறியாத தமிழர்களும் உள்ளார்கள் என்பதை அறிந்து வியப்படைகிறேன்" என்று ஒரு பொது மேடையில் சொன்னார்கள். கம்ப இராமாயணம் ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டதால் பிறநாட்டார் அதன் பெருமையை அறிவதற்கு முடிந்தது. அதேபோல நம் தமிழிலுள்ள பிற அரும்பெரும் காவியங்களையும் தேவாரத்தையும் பிற மொழிகளில் மொழி பெயர்த்துப் பிற நாட்டவரும் அறியும் வண்ணம் செய்வது நமது கடமையாகும். சைவத் திருமடங்களில் தேவாரத் திரட்டுக்களை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றனர். தருமையாதீனத்தில் தேவாரத்திற்கு உரை எழுதப்பட்டு வருகின்றது. ஆனால் பள்ளிகளில் தேவாரம் ஓதப்படுவதும், கற்பிப்பதும் அருகியே காணப்படுகின்றது. பள்ளி இளம் சிறுர்களுக்குத் தேவாரம், திருவாசகம், திருக்குறள் முதலியன பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படுமானால் தமிழரின் நிலை மிக உயரும் என்பதில் சந்தேகமே இல்லை.

தேவாரத்தினுள்ளே பொதிந்து கிடக்கின்ற கருத்துக் குவியல்களை எளிய முறையில் அவ்வப்போது நாளிதழ்கள் மூலமும் பிறவகைச் சாதனங்களாலும் வெளியிடுவதற்கு தேவாரப்பற்றுள்ள அறிஞர்கள் அடிக்கடி முயற்சி செய்யவேண்டும். அப்பொழுதுதான் தேவாரம் ஒவ்வொருவர் உள்ளத்தையும் தொட்டு அவர்களைத் தானாகவே மேன்மேலும் படிப்பதில் ஈடுபடச் செய்யும்.

தேவாரப் பாடல்களில் பற்பல நயங்களும் பொதிந்து கிடக்கின்றன. இந்த உலகமானது இன்பதுன்பங்களுக்கும்,

ஒளி இருள்களுக்கும், அறிவு அறியாமைகளுக்கும் இருப்பிடமாக இருக்கிறது. இத்தகைய கலப்பான வாழ்வில் மக்கள் பரிபூரண இன்பம் அடைவதில்லை. தனித்த இன்பத்தை, ஒளியை—புண்ணியத்தை—அறிவை மட்டும் விரும்புவது உயிர்களின் இயற்கை. ஆனால் துன்பம் இல்லாத இன்பமும், இருள் இல்லாத ஒளியும், பாவமின்றிப் புண்ணியமும், அறியாமை இன்றி அறிவும் சிறப்பதில்லை. அது நம் சிந்தனைக்குப் புலப்படுவதில்லை. ஆதலால் இரண்டுங் கலந்த வாழ்விலேயே இன்பம் உயர்ந்து சிறக்கின்றது. உயர்ந்து சிறப்பதற்கு மாத்திரம் இந்த நிலை ஏற்பட்டதா என்று பார்த்தோமானால் அதுவல்ல. இறைவன் பரம கருணாநிதி, மக்கள் அனைவரும் "என்றும் இன்பத்துள் இருக்க வேண்டும்" என்பதே அவர் திருவுள்ளம். அங்ஙனமிருந்தும் இன்பமயமாக உலகைப் படைக்காமல் கலந்த வாழ்வினதாய்ப் படைத்ததில் ஆழ்ந்த கருத்து இருத்தல் வேண்டும். அந்தக் கருத்து எதுவாக இருக்கலாம் என்று ஆராய்ந்தோமானால் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பாவிக்கின்ற தன்மையை அடையச் செய்ய வேண்டுமென்பதே அந்தக் கருத்து ஆகும். இந்த நிலை அடைந்தவன் உயர்ந்தோன் ஆவான். இப்பேர்ப்பட்ட உயர்ந்தநிலை அடைவதற்குச் சிறந்த எளிதான வழி என்னவென்றால் தோத்திரப் பாராயணத்தைக் கைக்கொள்ளுவதே என்று ஞானிகள் நமக்குக் காட்டியுள்ளார்கள்.

ஒவ்வொரு மொழியிலும் தோத்திரப் பாடல்கள் இருக்கின்றன. ஆனால் தமிழில் உள்ள தெய்வீகத் தோத்திரப் பாடல்களாகிய தேவாரம் போன்று வேறு எந்த மொழியிலும் கிடையாது. தமிழிலும் பல புலவர்கள் புலமை நிலையில் நின்று பாடிய தோத்திரங்கள் உலகத்தைப் பண்படுத்துவதற்கென்றே திருவருள் வயத்தால் அவதரித்து, சிந்தையைச் சிவமாக்கி, திருவருளோடு வளர்ந்து, சென்ற சென்ற இடமெல்லாம் திருவருளைக் கண்டு அது உள் நின்று உணர்த்த உரைக்கப்பெற்ற தோத்திரங்கள் சிறந்தன ஆகும். அவ்வாறு இறைவன் உள்நின்று உணர்த்த உரைக்கப்பெற்ற வாசகங்களாகிய பன்னிரு திருமுறைகள் மிக மிகச் சிறந்த தோத்திரங்கள். இப்பன்னிரு திருமுறைகளில் தலையாய முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என்ற சிறப்புப் பெயரால் சிறப்பிக்கப்படும். அதை 'அடங்கன் முறை' என்றும் சொல்லுவார்கள்.

சரித்திர வரலாற்றிலே வேற்றரசர்கள் தமிழ் நாட்டில் புகுந்து பின்னர் தமிழ் ஓரளவு புறக்கணிக்கப் பெற்றுச் சமண மதமும் புத்த மதமும் தமிழ் நாட்டில் பரவிய காலம் ஒன்றுண்டு. அது சமயம் தமிழ் மன்னர்களில் ஒரு சிலரும் சமண மதத்தைச் சார்ந்தனர். மக்களும் அரசனைப் பின்பற்றினர். சைவ, வைணவ சமயங்கள் தாழ்ந்திருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில், இறைவனுடைய திருவருளாலே சோழநாட்டில் பிறந்த திருஞான சம்பந்தரும், திருமுனைப்பாடி நாட்டவரான திருநாவுக்கரசரும்

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சைவந் தழைக்கத் தந்த தமிழே தேவாரம் ஆகும்.

இந்தத் தேவாரப் பாடல்களை ஏழு திருமுறைகளாக வகுத்துள்ளனர். அதில் முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தப் பெருமானால் பாடப்பட்டவை. அவர் மொத்தம் பாடியவை 16,000 பாட்டுக்கள். இன்று நம் கையில் கிடைத்துள்ளவை 4,158 பாட்டுக்களே. இதே போன்று திருநாவுக்கரசர் பாடிய அடுத்த மூன்று திருமுறைகளில் 49,000 பாட்டுக்களுக்கு இன்று கிடைத்தவை 3,066. சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பட்டவை 38,000 பாட்டுக்கள். இதில் நமக்குக் கிடைத்தவை 1026 பாட்டுக்களே ஆகும். இந்த 1026 பாட்டுக்களும் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன; ஆக தேவாரத்தில் இன்று நம் கையில் உள்ளவை 8250 பாட்டுக்களே ஆகும்.

தமிழனுக்கு அறவாழ்க்கை வாழ்வதற்குத் திருக்குறள் எவ்வளவு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கின்றதோ அவ்வாறு தேவாரப் பாடல்கள் நாம் தெய்வீக வாழ்க்கை நடத்துவதற்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

“ நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினள்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே ”

“என் கடன் பணி செய்து கிடப்பதே” என்று திருநாவுக்கரசர் வாழ்க்கையில் மக்கள் கொள்ளவேண்டிய குறிக்கோளை உணர்த்துகிறார். தேவார முதலிகள் மூவர் காலத்தில் தமிழ்நாடு இருந்த நிலை அந்த நாட்டு மக்கள் நாகரிகம், இறை வழிபாடு, திருக்கோயிற் பகுதிகள், தமிழர்களின் வள்ளன்மை, புலமை, பெண் மக்கள் சிறப்பு, அரசர்கள்பற்றிய செய்திகள், தமிழகத்தின் நீர்வள நிலவளங்கள், அந்தணர் ஒழுக்கம் புறச்சமயிகள் பழக்க வழக்கங்கள் முதலியவற்றை இத் தேவாரப் பாக்கள் மூலம் கண்ணுடியிற் காண்பது போலக் காணமுடிகிறது.

தேவாரத்தில் ஆங்காங்குக் காணப்படும் தனி இயல்புகள், இசை பற்றிய குறிப்புக்கள், இயற்கை வருணனை, இலக்கியச் சுவை, உபதேச மொழிகள் முதலியவைகளுக்கு ஒரு சில தேவாரப் பாடல்களினின்று இரண்டொரு வரிகளைக் காட்டுவது இங்கு பொருத்தமுடையதாகும். விளக்கமும் விரிவும் கூறி விரிப்பதை விட வரிகளைக் கூறி வாசகர்களை உணரவிட்டு விடுகிறேன்.

## அஞ்சாமை

“ மண்பாதலம்புக்கு மால் கடல் மூடி மற்று ஏழு உலகும்
விண்பால் திசை கெட்டு இரு சுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே”



4596—10

### அடைமொழிச் சிறப்பு

வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விரும்பினன் வெள்ளைநீ
கொற்றவன் தனக்கு மந்திரியாய குலச்சிறை. [றணியும்

நாவணங்கு இயல்பாம் அஞ்செழுத் தோதி நல்லராய் நல்லியல்பா
கோவணம் பூதிசாதனம் கண்டால் தொழுதொழுகுலச்சிறை. [கும்

மங்கையர்க்கு அரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி. [மடமானி

### இயற்கை வருணனை - இலக்கியச் சுவை

செய்யருகே புனல்பாய ஓங்கிச் செங்கயல் பாயச் சில மலர்த்தேன்
கையருகே கனிவாழையீன்று கானலெல்லாம்கமழ் காட்டுப்பள்ளி.

தாறுடை வாழையிற் கூழை மந்தி தகு கனியுண்டு மிண்டிட்டு
பாறிடப் பாய்ந்து பயிலும் ஆவூர். [இனத்தைப்

மதவேழம், அழைத்துத் திரிந்து அங்கு உறங்கும்
சாரல் அண்ணாமலை.

செறியிதழ்த் தாமரைத்தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச் சாமரை இரட்ட இள
அன்னம் வீற்றிருக்கும் மிழலை.

வண்டுபாட மயிலால மான்கன்று துள்ள வரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டு அலரும் கேதாரம்.

அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர்

### உபதேச மொழிகள்

இரப்பவர்க்கு ஈய வைத்தார், ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கு எல்லாம் கடுநரகங்கள் வைத்தார்.

ஊனத்திருள் நீங்கி வேண்டில் ஞானப்பொருள் கொண்டு
[அடிபேணும்.

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் பாழ்வோடு
தாழாது அறஞ்செய்மின்.

தேவாரத்தில் ஆங்காங்கு காணப்படும் பழமொழிகளில் சிலவற்றை இங்கு தருகிறேன்.

'கனியிருக்கக் காய் கவர்தல்'
'கரும்பிருக்க இரும்பு கடித்தல்'
'இன்பம் உண்டேல் துன்பம் உண்டு'
'புல் நுனைப்பனி வெங்கதிற் கண்டாற் போலும் வாழ்க்கை'

அருமை பெருமையான கருத்துக்களையும் அறிவுரைகளையும் உள்ளடக்கிய தேவாரப் பாடல்களை – நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய திருஞானசம்பந்தரும் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் அப்பர் சுவாமிகளும், இறைவனிடம் வன் சொற்கள் பேசிய வன்தொண்டரும் பாடி அருளிப்போன தெய்வப் பனுவலை - தமிழரனைவரும் கற்றுத் தேவார முறை வழிநின்று ஒழுகி உள நலமும் உடல்நலமும் பெற்று உய்வார்களாக.

வளர்க திருநெறிய தமிழ்
வாழ்க உலகமெலாம்.

British technical know-how and Indian craftsmanship combine to make India-built

PHILLIPS

and

Hercules

*the finest cycles you can buy*

T. I. Cycles of India, Madras
*Manufacturers of*
HERCULES & PHILLIPS Cycles

IWT/TIC/HP-1403

*Ours for quality*

RAMANUJAM'S
**Boarding & Lodging House**
12/4, W. E. A., Karolbagh,
NEW DELHI-5

# Nalli Chinnaswamy Chetty & Co.

SILK CLOTH MERCHANTS

**5/28 & 29, W. E. A., KAROL BAGH, NEW DELHI-5**
**(H. O.) T. NAGAR, MADRAS-17**

We are pleased to inform you that large stocks of Silk Sarees have arrived and we are sure that you will be able to choose your requirements from the fresh arrival. We request you to pay us a visit and select your requirements well in time.

MONDAY HOLIDAY

# இந்தியாவின் வண்ண நகரம்

**கண்ணம்மா சர்மா**

'ராஜஸ்தான்' என்றதும் நினைவுக்கு வருவது என்ன என்று ஒரு குழந்தையைக் கேட்டால் அது உடனே "ஒட்டகம்" என்று சொல்லும். ஒரு பெண்ணைக் கேட்டால்— "ராஜஸ்தான் புடைவை" என்பாள். ஓவியன் 'ராஜபுத் சித்திரங்கள்' என்பான். கைவேலை செய்பவன் "தந்த வேலைகள்" "பித்தளை சாமான்கள்" என்பான். தட்டான்களோ 'தங்க எனுமல் வேலை, ஜெய்ப்பூர் பச்சைகள்' என்பான். இப்படியாக ஒவ்வொரு வகையினருக்கும் விருந்தளிக்கும் சிறப்புக் கொண்டது ராஜஸ்தான். இந்தச் சொல்லுக்கு அரசர்களின் இருப்பிடமென்று பொருள்.

இது வெகு சமீப காலம் வரை சிறு சிறு சமஸ்தானங்களைக் கொண்ட ஒரு பிரதேசமாக இருந்தது. இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் ஸர்தார் படேலின் முயற்சியால் 22 சிற்றரசர்கள் தனித்தனியாக ஆண்டு வந்த சமஸ்தானங்கள் ஒன்று சேர்க்கப் பெற்று, 'ராஜஸ்தான்' என்ற தனிமாநிலம் ஆக்கப்பெற்றது. மேற்கிலும், வடமேற்கிலும் பாகிஸ்தான் எல்லையாக இருக்கிறது. ஆரவல்லி மலைகள் ராஜஸ்தானின் நடுவே ஊடுருவிச் சென்று அதனை வடமேற்குப் பிரதேசம், தென்கிழக்குப் பிரதேசம் என்னும் இரண்டு பாகங்களாகப் பிரிக்கிறது. வடமேற்கில் ஒரு பிரதேசம் பெரும் பாலைவனம். தென் கிழக்குப் பிரதேசம் அழகான மலைகளையும், வளமான பூமியையும் அடர்ந்த காடுகளையும் கொண்டதாகத் திகழ்கிறது. 33000 கிராமங்களைக் கொண்ட ராஜஸ்தானின் தலைநகரம் ஜெய்ப்பூர். இந்நகரத்தின் மூன்று புறங்களிலும் மலைகள் சூழ்ந்திருக்கின்றன. 20 அடி உயரமும் 9 அடி பருமனும் கொண்ட மதில் சுவர்கள் இந்நகரத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கின்றன. அதில் எட்டு வாயில்கள் உள்ளன. இவற்றுள் ஒன்றின் வழியாகத்தான் ஜெய்ப்பூர் நகரத்தை அடைய முடியும். இந்த எட்டு வாயில்களில் முக்யமானவை கிழக்கில் உள்ள 'சூரஜ்போல்', மேற்கில் உள்ள 'சாந்துபோல்', வடக்கில் உள்ள 'துருவப்போல்' என்னும் மூன்றும் ஆகும். 'போல்' என்றால் 'வாயில்' என்று பொருள். கதிரவன் உதிக்கும் திசையில் உள்ளதற்கு சூரியன் வாயில் என்றும், திங்கள் மறையும் திசையில் உள்ளதற்கு சந்திரன் வாயில் என்றும், வட

துருவம் இருக்கும் திசையில் உள்ளதற்கு துருவ வாயில் என்றும் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்த நகரத்தைத் திட்டமிட்டு உருவாக்கிய மகாராஜா ஜெயசிங்கிற்கு வான சாஸ்திரத்தில் உள்ள சிறந்த தேர்ச்சியும் நம்பிக்கையும் காரணமாகவே அவர் இவ்வாயில்களுக்கு இப்பெயரை இட்டிருக்கிருர். ராஜா ஜெயசிங் 13-ஆவது வயதிலேயே கட்சுவா அரசர்கள் ஆண்டுவந்த ஆமேயர் சிங்காதனத்தை அலங்கரித்தான். மலையின் மேல் கட்டப்பட்டிருக்கும் ஆமேயர் கோட்டை இவனுக்குப் பிடிக்கவில்லை. புராதன யுத்த முறைகளை அனுசரித்து வந்த தன்னுடைய முன்னேர் காலத்திற்கு இந்தக் கோட்டை அவசியமாய் இருந்ததென்றும், மாறுபட்டு வரும் யுத்த முறைகளுக்கு அது அவசியமில்லை என்றும் கருதினன் ஜெயசிங். எனவே மலையருகில் உள்ள விசாலமான பிரதேசத்தில் ஒரு புதிய நகரம் கட்ட விரும்பினன். ஐரோப்பாவிலிருந்து பல நகர அமைப்புப் படங்களைத் தருவித்துக் கண்டும் நம் நாட்டின், சிற்ப சாஸ்திரங்களைக் கற்றும் ஆராய்ந்து ஒரு புது நகர அமைப்பை நிர்மாணிக்க முடிவு செய்தான். 1727-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஜெய்ப்பூர் நகர நிர்மாணத்திற்கான அஸ்திவாரங்கள் தோண்டப்பட்டன. வான சாஸ்திர மேதைகளின் உதவியால் சிற்ப சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள நகர நிர்மாண அமைப்புத் திட்டப்படி ஜெய்ப்பூர் நகரமைப்பு வேலை தொடங்கி நடைபெற்றது. இந்நகரம் நீண்ட சதுர அமைப்பைக் கொண்டது. முக்கிய வீதிகள், வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கியும் செல்லும்படி அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால் பல சதுரங்களால் ஆனது இந்நகரம். இச்சதுரங்களை 'சவுவ் பாத்' என்று அழைப்பார்கள். முக்கிய வீதிகள் ஒவ்வொன்றும் சுமார் 110 அடி அகலம் உள்ளவை; இதர வீதிகள் சுமார் 85 அடி அகலம் கொண்டவை. அருகில் உள்ள மலையில் ஏராளமாகக் கிடைக்கும் ஒரு வித ரோஜா நிற செம்மண்ணினல் இந்நகரத்தில் உள்ள கட்டிடங்கள் பூசப்பட்டிருப்பதால் இதற்கு ரோஜா வண்ண நகரம் என்று பெயர். மேற்கு வாயிலில் கதிரவன் மறையும்போது கதிரவன் பொன்னெளி பட்டு இந்த ரோஜா நிறப் பூச்சுள்ள இந்நகரம் 'ஒரு இந்திர ஜாலமோ' என்ற எண்ணத்தைப் பார்ப்பவர்களின் மனதில் உண்டாக்குகிறது. ஜெய்ப்பூர் நகரம் நிர்மாணிக்கப் பெற்று 250 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. இருந்தும் அது இன்றும் தன்னுடைய விசால மாட வீதிகளுடனும் ரோஜா நிறப் பூச்சுள்ள கட்டிடங்களும் மாட மாளிகைகள், அரண்மனைகளுடனும் ஒரு பருவ நங்கை போல் இன்பக் காட்சி அளிக்கிறது.

ஜெய்ப்பூர் வீதிகளில் ராஜவம்சத்தைச் சேர்ந்த ராஜபுத்திரர்கள் கம்பீரத் தோற்றத்துடன் நடமாடுவதை இன்றும் நாம் காணலாம். நகரவாசிகள் பலவிதமான உடைகளில் காட்சி தருவார்கள். மேனுட்

டுப் பாணியில் உடை அணிந்தவர்களும், மஞ்சள், சிவப்பு வண்ணங்களில் பாவாடை தாவணி என்று ராஜஸ்தானுக்கே உரிய பாணியில் உடை அணிந்த கிராமியப் பெண்களும், சிவப்பு முண்டாசு கட்டிய ஆண்களும் வீதியின் இரு ஓரங்களிலும் நடைபாதைகளில் நடந்து செல்லும் காட்சியானது பல பல வண்ண ஜாலங்கள் நடமாடுவது போன்றிருக்கும். விருந்தோம்பலில் ராஜஸ்தானிகள் ஈடு இணையற்றவர்கள். விருந்தினர்களை அவர்கள் வரவேற்கும் முறையே மிகச் சிறப்பாக இருக்கும். "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று" என்ற வள்ளுவரின் வாக்கை மெய்யாகப் பின்பற்றுபவர்கள் இராஜஸ்தானிகள்.

இங்கு பார்க்க வேண்டியவைகள்: ஜெய்ப்பூர் நகரத்தை உருவாக்குமுன் இருந்த கச்சுவா அரசர்கள் இருந்த 'அமேர் அரண்மனை'; சமீப காலம் வரை ஜெய்ப்பூர் அரசர்கள் வசித்து வந்த அரண்மனை. அதில் உள்ள 'ஜந்தர் மந்தர்'; அரண்மனையின் ஒரு பகுதியில் உள்ள 'ஹவா மஹல்'; ஜெய்ப்பூரை ஆண்ட அரசர்களின் சமாதியான 'கெய்த்தோர்'. 'ஜந்தர் மந்தர்' அல்லது 'யந்தரா' என்பது ஒரு வான்நிலை ஆராய்ச்சிக்கூடம் (observatory). வான சாஸ்திரத்தில் அதிகப் பற்றுள்ள ஜெய்சிங் மகாராஜா தன் பெரும் பொழுதை இங்கு கழித்தார் என்று சொல்லப்படுகிறது. டில்லி, 'மத்ரா' உஜ்ஜய்னி, வாரணாசியிலும், இம்மாதிரி ஜந்தர் மந்திர்களைக் கட்டி அழியாப் புகழ்பெற்றவர் இந்த ஜெய்சிங் மகாராஜா. 'சீஷ் மஹால்' என்பது சிறு கண்ணாடிகளால் பொருத்தப்பட்ட அறை; அமேர் அரண்மனையில் இது இருக்கிறது. 'சீஷ் மஹாலின்' அறைக் கதவுகளைச் சாத்திவிட்டு ஒரு நெருப்புக் குச்சியைப் பற்றவைத்தால் இச் சிறு கண்ணாடித் துண்டுகள், அம்மாவாசை இரவில் மின்னும் விண்மீனைப்போல் மினுமினுக்கும். அரச வம்சத்தினர் அணிந்து வந்த அணிகள், ஆடைகள், ஆயுதங்கள் முதலியவற்றை அரண்மனையிலும், அங்குள்ள பொருட்காட்சியிலும் காணலாம்.

ஜெய்ப்பூர் நகரத்தின் சுற்றுப்புறத்தில் அரசர்களின் சமாதிகள் இருக்கும் இடம்தான் 'கெய்த்தோ' எனப்படுவது. நாகட்கெட் மலையின் அடிவாரத்தில் இது இருக்கிறது. வெள்ளைச் சலவைக் கற்களினால் எழுப்பப்பட்டுள்ள அழகான மண்டபங்களை 'சத்ரி' என்று அழைக்கிறார்கள். இதில் முக்கியமாக நம்மைக் கவரும் மண்டபங்கள் ஸவாய் ஜெய்சிங்கிற்கும், ஸவாய் ராம்ஸிங்கிற்கும் எழுப்பியுள்ள மண்டபங்களேயாம். ஜெய்ப்பூரை உருவாக்கிய ஸவாய் ஜெய்சிங்கின் 'சத்ரி' நுணுக்கமான வேலைப்பாடுடையதாக இருக்கிறது. சலவைக்கல்லில் செதுக்குவது கடினம். அதிலும், உருவங்களைச் செதுக்குவது இன்னும் கடினம். இந்த மண்டபம் எட்டுத் தூண்களின் மேல் எழுப்பப்பட்ட வட்ட வடிவ

மான கோபுரத்தைக் கொண்டது (Dome). கோபுரத்தின் உள் பாகத்தில் மகாபாரதத்திலிருந்தும், இராமாயணத்திலிருந்தும் சில காட்சிகள் வெகு அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. நாட்டியக் காட்சி தூண்களின் மேல் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு தூணில் காலிலே கஜ்ஜை கட்டிக் கொள்ளும் பாவனையில் ஒரு பெண், மற்ருெரு தூணில் மிருதங்கம் வாசிக்கும் பெண், மற்றத் தூண்களில் சிதார் வாசிக்கும் பெண், வீணை வாசிக்கும் பெண், சாரங்கி, ஜாலரா போட்டுக் கொண்டு ஒரு பெண், ஒரு தூணில் நடனமாது நாணத்துடன் முக்காட்டை நுனிவிரலால் தூக்கிப் பிடித்து நாட்டியமாடும் காட்சி, என 'ராஸலீலா' என்ற நடனத்தைச் சித்தரித்துக் காட்டியிருக்கிருன் சிற்பி. ஒவ்வொரு சிற்பத்திலும் செய்துள்ள நுணுக்க வேலைப்பாடு சலவைக் கல்லில் கூட இம்மாதிரிச் செதுக்க முடியுமா என்று நம்மைப் பிரமிக்க வைக்கிறது. சுமார் இரண்டடி உயரமுள்ள இவ்வுருவங்களின் கால் விரல்களில் அணிந்துள்ள ஐந்துவித மெட்டிகள் கூடக் காட்டப்பட்டிருக்கின்றன என்ருல் அந்தச் சிற்பியின் திறமையை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். இந்த மண்டபத்தின் அடிப் பாகத்தில் பதினறு காட்சிகள் செதுக்கப்பட்ட முக்குகள் (Panels) உள்ளன. இதற்கருகிலேயே இளவரசர்களுக்கான சிறிய சிறிய சலவைக் கல் 'சத்ரி'களும் உள்ளன. மையத்தில் இளவரசியின் 'சத்ரி'யும் அதைச் சுற்றி 'ப' வடிவத்தில் அமைக்கப்பட்ட பதின்மூன்று சிறிய 'சத்ரி'களும் பார்க்க வெகு அழகாக இருக்கின்றன. தற்போதுள்ள அரசரின் தந்தையான மாதவ சிங்கின் 'சத்ரி'யும் அருகிலேயே உள்ளது. இதன் அடிப் பாகம் சிவப்புக் கற்கலாலும் (Pink Sand stone) மேல் பாகம் சலவைக் கல்லினுலும் கட்டப்பட்டுள்ளது. இங்கு ஒரு மூலையில் அகண்ட ஜோதி வைக்கப்பட்டிருக்கிறது. இதனைக் கண்காணித்து வருவதற்கென்று தனி ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். இவ்வளவு அழகான ஒரு இடத்தை சாந்தி நிலவும் 'கெய்தோ' 'சத்ரி'களைப் பற்றிப் பிரயாணிகளுக்கு அதிகம் தெரியாது. உள்ளூர் வாசிகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டு போனுல்தான் பார்க்க முடியும். இதுபோல் இன்னும் சில அழகிய இடங்களும் இங்கு உண்டு, 'கால்டா', என்பது ஒன்று. இங்குதான் புராணங்களில் வரும் 'காலவ மகரிஷி' தவம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. ஜெய்ப்பூருக்கு இருபது இருபத்தைந்து மைல் தூரத்தில் 'பைராட்' என்று கூறப்படும் ஊர்தான் மகாபாரதத்தில் வரும் விராண நகரம் என்று சொல்லுகிருர்கள். இப்படி ஜெய்ப்பூரிலும், சுற்று வட்டாரத்திலும் கண்டு மகிழ்வதற்கேற்ற அநேக முக்கிய இடங்கள் உள்ளன. நீங்களும் ஒரு முறை போய்த்தான் நேரில் பாருங்களேன்.

---

# எனது கலை வாழ்க்கை

ஓவியமணி சி. கொண்டையராஜு

திரைப்பட நடிக நடிகையர்களின் வாழ்க்கை வரலாறுகளை எழுதுபவர்களும் அவற்றை ஆர்வத்துடன் படிப்பவர்களும் இன்று நாட்டில் அதிகமாயிருக்கின்றனர்.



திரைப்படத் தலைமுறைக்கு முந்திய நாடகத் தலைமுறை, அதற்கும் முந்திய தெருக்கூத்துக்காலம் முதல் வண்ணத்திரை ஓவியங்கள் எழுதுவதில் வாழ்க்கையைத் தொடங்கி இன்று இந்தியா முழுவதும் புகழும் ஓவியக்காரராகத் திகழும் ஓவியர் மணி திரு. சி. கொண்டைராஜு அவர்களை உலகுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று எண்ணி நாங்கள் அவரது வாழ்க்கைக் குறிப்புக்களைக் கேட்டோம். அவர் சொந்தமாகவே எழுதி அனுப்பிய இக்கட்டுரையை அப்படியே இங்கு பிரசுரிக்கிறோம்.

—ஆசிரியர்

ஓவியனின் வாழ்க்கை என்றால் இன்பதுன்பம் வந்து கொண்டே இருக்கும். இப்பத்திரிகையின் ஆசிரியர் அவர்கள் என் வாழ்க்கைக் குறிப்பைக் கேட்டபோது என் நினைவு சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னோடிச் சென்றது. அன்று வைத்தியத் தொழிலில் சிறப்புற்றிருந்த திரு. சி. குப்புசாமி ராஜு அவர்களுக்கும் அன்பும், அமைதியும் உருவான அலமேலு மங்கம்மாள் அவர்களுக்கும் 1899-ஆம் ஆண்டு சென்னை மலையப் பெருமாள் கோவில் தெருவில் நெ. 60 இல்லத்தில் ஏகபுதல்வனாகப் பிறந்தேன்.

"மகன்தந்தைக்கு ஆற்றும்
உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ்
சொல்"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை மெய்ப்பிப்பதற்குள் எனது பதினொன்றாவது வயதில் என் தந்தையார் அமரரானார். அக்காலத்தில் சென்னையில் சிறந்த ஓவியரும், புகைப்பட வல்லுநருமான எனது சிறிய தந்தையார் திரு. பி. ரங்கைய ராஜு அவர்களின்

பராமரிப்பில் நானும் என் தாயாரும் மயிலாப்பூர் முண்டகக் கண்ணியம்மன் கோவில் தெருவில் வாழ்ந்து வந்தோம். "தந்தையோடு கல்விபோம்" என்பதற்கேற்ப இரண்டாம் படிவத்துடன் என் கல்வி முற்றுப் பெற்றது. என் வாழ்க்கையின் திருப்பமாக 1915-ஆம் ஆண்டில் சென்னை அரசினர் ஓவியப் பள்ளியில் சேர்க்கப் பட்டேன்.

### மாநிலத்தில் முதல்

முறைப்படி ஓவியக்கலை பயின்று 1918-ஆம் ஆண்டு சென்னை மாநிலத்தில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றேன். ஓவியக்கலையில் எனக்கு ஆர்வம், தகுதி எல்லாம் இருந்த போதிலும் என்னை அறியாமலேயே என் மனம் தனிமையை நாடியது. ஆதலால் 1920-ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் (ரமண ஆச்சிரமத்தில்) சீடர்களோடு சேர்ந்துகொண்டு பிக்ஷை பெற்றுக் குருதேவருக்குச் சமர்ப்பித்து பிரம்மச்சரியம் பேணி வந்தேன்.

### அந்த நாள்

பகவான் ரமண ரிஷிகளின் படம் ஒன்றைப் பெரிய அளவில் ஒரு அன்பர் எழுதிக் கொண்டு வந்தார். அது சரியாக எழுதப் பெறாததால் பகவான் கருத்துக்கிணங்கவும், சீடர்கள் வேண்டுகோளுக்கு இணங்கவும் நல்ல முறையில் திருத்தித் தர நேர்ந்தது. சிறப்பாக இருந்த ஓவியத்தைக் கண்ணுற்ற பகவான் "ரமணர்" "இவ்வளவு கலைத்திறன் மிக்க உன்னால் உலகிற் குண்டாகக் கூடிய நலன் பல உள. ஆதலால் நீ வெளியேற வேண்டும்" என்று அன்புக் கட்டளையிட்டு ஆசி கூறினார்கள்.

### நாடகத் திரைகள்

இந்தச் சமயத்தில் திருவண்ணாமலையில் ஒரு நிதிக்காக வழக்கறிஞர்களும், அதிகாரிகளும் சேர்ந்து ஒரு நாடக சபா நடத்தி வந்தனர். அதற்கு நல்ல திரை ஓவியங்கள் எழுத வேண்டுமென்று ஆசிரமத்தோடு தொடர்பு பூண்டிருந்த நகராட்சி மன்றத் தலைவர் திரு. இராமசாமி ஐயர் என்னை அழைத்துச் சென்றார்.

அப்போதுதான் உயர்திரு டி. டி. சங்கரதாஸ் சுவாமிகளின் மதுரை ஒரிஜினல் ஸ்ரீ மீனலோசனி பால சற்குண சபா விழுப்புரத்தில் நாடகங்கள் நடத்தி வந்தனர். சுவாமிகளும் சபா உரிமையாளர் திரு. டி. என். பழனியப்ப பிள்ளையவர்களும் தங்களது சபையிலேயே என்னை ஓவியராக அமர்த்திக் கொண்டனர்.

### இலங்கையில்

தமிழ் நாட்டின் பல ஊர்களில் இந்த நாடகக்குழு வெற்றி முரசு கொட்டி இலங்கையில் பவனி வந்தது. ஈழத்திரு நாட்டிலும் எனது ஓவியக்கலைக்கு நல்ல ஆதரவு பெருகிவந்தது. நாடக அரங்கத்திற்குப் பணி புரிந்தது போக எஞ்சிய நேரங்களில் பள்ளிகள், கல்லூரிகள், அரசினர் அலுவலகங்கள் பல வற்றிற்குத் தனிப்பட்ட ஓவியங்கள் பல சிறந்த முறையில் வரைந்து வழங்கும் சிறந்த வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

### பிரதம சீடன் சுப்பையா

பகவான் இராமகிருஷ்ணருக்கு தனது ஆத்மீகக் கொள்கைகளைப் பரப்புவதற்கு விவேகானந்தர் அமைந்தது போல என் தொழில் நுணுக்கங்களையும், எண்ணங்களையும் பிரதிபலிக்க எனது பிரதம சீடனாகிய சுப்பையா 1930-ஆம் ஆண்டில் தனது பதினைன்காம் வயதில் என்னிடம் வந்து சேர்ந்தான். அன்றும் இன்றும் சீலமான வாழ்வுடன், குருவுக்கு மரியாதையும் செலுத்தி என்னுடன் இணை பிரியாமல் துணையாக நின்று கலைப்பணி புரிந்துவரும் இவனை எனது பிரதம சீடன் என்று உலகுக்கு அறிவித்துப் பெருமைப்படுகிறேன். மற்றும் என்னுடன் மீனாட்சி சுந்தரம், அருணாசலம், இராமலிங்கம் ஆகிய சீடர்களும் கலைப்பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தவிர இன்னும் சில சீடர்களும் என்னிடம் கலை பயின்று வருகிறார்கள்.

### ஸ்ரீ தேவி

1942-ஆம் ஆண்டில் நாடக சபை இலங்கைத் தீவிலிருந்து திரும்பியது. மதுரை, இராஜபாளையம் முதலிய இடங்களில் நாடகம் நடத்திய பின்பு கோவில்பட்டி வந்தபோது சபை கலைய நேரிட்டது. அப்போது அன்பர்கள் பலர் இங்கேயே தங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கோவில்பட்டியிலேயே தங்க நேரிட்டது. திருவனந்தபுரம் பிரபல நகை வணிகர் திரு. டி. எஸ். சுப்பிரமணிய ஆச்சாரி மதுரையில் என் ஓவியங்களைக் கண்ணுற்றுப் பாராட்டிக் கலைத்திறன் பெரிய அளவில் பரிமளிக்க வேண்டுமென்று எண்ணினார். அவர்களது நல்லெண்ணத்திற்குத் தெய்வத்தின் திருவருள் துணை நின்றது. அதன் பயனாக கோவில்பட்டியில் "ஸ்ரீ தேவி" ஆர்ட் ஸ்டுடியோ என்ற பெயரில் புகைப்பட நிலையம் தொடங்கி இன்று வளர்ந்து பல கிளைகள் துவக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கோவில்பட்டியில் ஸ்ரீ செண்பகவல்லி அம்பாளின் திருவருளைப் பரிபூரணமாக நம்பியதால் தேவியின் திரு உருவத்தைப் பல வண்ணத்தில் வரைந்து விளக்கேற்றி வழிபட்டுக் கலைப்பணி புரிந்து வருகிறேன்.

### இறை பணி

நாட்டில் நாத்திக உணர்ச்சி பரவி வருவதைக் கண்டு என் மனம் குமுறியது. இதனால் தெய்வீக உருவங்களை அதிகமாக வரைய வேண்டுமென்று எண்ணினேன். இதன் விளைவாக ஸாஸ்திர முறைப்படி தெய்வப் படங்கள் வரைந்து வழங்கலானேன். நல்லவர் உள்ளங்களில், நாட்டு மக்களின் உள்ளங்களில் இந்த உருவங்கள் அழியாத இடம் பெற்று வருவதைக் கண்டு நான் மிகவும் உற்சாகமாக இப்பணியில் இரவும் பகலும் ஈடுபடலானேன்.

அச்சுக்கலைக்குத் தமிழ்நாட்டில் தனிப் பெருமை தேடித் தந்த தொழில் நகரான சிவகாசி அச்சகங்கள் என் ஓவியங்களை நல்ல வண்ணங்களில் அச்சிட்டு எனக்குச் சிறப்புத் தந்தன. குறிப்பாக நேஷனல் லித்தோ அதிபர் திரு. அருணகிரி

நாடார் அவர்கள் எனக்குப் பேராதரவு தந்தார்கள்.

மணி விழா

என்பால் மிகுந்த அன்பும் அளவற்ற குரு பக்தியும் கொண்ட எனது பிரதம சீடன் சுப்பையா முன்னின்று ஏனைய சீடர்களுடன் 5-11-58-ல் எனது 60ஆவது ஆண்டு தொடக்க நாளை மணிவிழாவாக மிக விமரிசையுடன் இனிய முறையில் நடத்தித் தங்களின் அளவற்ற குருபக்தியை நிலைபெறச் செய்தார்கள்.

பொன்னுடை விழா

நெல்லை மாவட்ட வடக்கன்குளத்தில் 22-4-59-ல் எனக்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தனர். இந்த விழாவில் சென்னை மாகாணத் தமிழ் சங்கத் தலைவர் டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, கொழும்பு கலைமகள் கம்பெனி அதிபர் சங்கு சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

'ஓவிய மணி'

கோவில்பட்டியில் எனது அன்புக்குப் பாத்திரமான பல நண்பர்கள் சேர்ந்து எனக்கு மணி விழா நடத்தி "ஓவிய மணி" என்ற பட்டமும் வழங்கினுர்கள்.

"நான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்ற எண்ணத்துடன் தூய பிரம்மச்சரிய வாழ்க்கையோடு இந்த நாட்டுக்கும் கலைக்கும் திருப்பணி செய்துவருகிற எனக்குத் தில்லித் தமிழ்ச் சங்கத்தினர் பெருமை தர நினைந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஓவியக் கலைக்கு நல்ல ஆதரவு தரும் எல்லா அன்பர்களுக்கும் நன்றி செலுத்த நான் என்றும் கடமைப்பட்டவன்.

வாழ்க ஓவியக் கலை !

---

வாணிகம்–7

## எவன் அறிவாளி ?

எந்தச் சரக்கில், எந்தப் பொருளை, எப்படிக் கலந்து, எவ்வாறு பொருளீட்டுவது ? என்பதில் அறிவைச் செலுத்துபவன் அறிவாளியாகான். அவன் அறிவாளியாவானுனல், அவனைவிட ஆயுதங்களைக் காட்டிக் கொள்ளையடிப்பவன் அறிவாளியாகி விடுவான். எவ்வாறெனில், இவனது அறிவில் வஞ்சகம் கலக்காமல், ஆண்மை கலந்திருப்பதனுல்.

எதையாவது கலந்துதான் தொழில் செய்யவேண்டும் என விரும்பினுல் கல ! ஆனுல், அது பொருளில் கெட்டதையும் பட்டதையும் கலப்பதாயிராமல், தொழிலில், உண்மையையும் நேர்மையையும் கலப்பதாயிருக்க வேண்டும்.

கி. ஆ. பெ.

---